# உதயன்




www.onlineuthayan.com

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 323 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 28 ஞாயிற்றுக்கிழமை (14/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00


# இலங்கையின் அரசியல் தீர்வில் இந்தியக் கட்சிகள் ஒரே அணி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் சுஷ்மா தெரிவிப்பு

புதுடில்லி, ஒக்ரோபர் 14

இந்தியாவுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. ஆயினும் இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தில் இந்தியக் கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளன. இலங்கைத் தமிழருக்கு ஒரு நீதியான–கௌரவமான நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே அந்த நிலைப்பாடு. இலங்கைத் தமிழ் மக்களை இந்தியா கைவிட மாட்டாது. இந்தியாவில் ஆட்சிகள் மாறலாம்.

ஆனால், நாம் ஒரே அணியாக நின்று இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வோம் என்று இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதி அளித்துள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மாலை இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினர். சுமார் ஒருமணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போதே இந்திய எதிர்க்கட்சித் தலைவி மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 'உதய'னிடம் கூறினார்.

"இந்திய அரசுக்கு நாட்டுக்குள் பல பிரச்சினைகள் உள்ளன. அவை குறித்து இந்தியக் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்

பார்க்க பக்கம் 4

**5** நெல்சிப்-புறநெகும திட்டத்தின் கீழ் வேலணை துறையூரில் நவீன மீன்சந்தை ரூபா 80 லட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது.

**6** கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சியில் டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நேற்று முன்தினம் தொடக்கம் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

**9** மொபிரெல் நிறுவனம் சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கும் செயற்பாட்டிற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

## இலங்கைப் படைக்குப் பயிற்சி இந்தியாவுக்கே பெரும் பாதிப்பு

### பா.ஜ. மாநில தலைவர் கூறுகிறார்

சென்னை, ஒக் 14

இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் இந்தியாவுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்று பா.ஜ. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் பந்தலூரில் பா.ஜ. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. இதில் பங்கேற்க வந்த கட்சியின் மாநிலத் தலைவர் பொன். ராதா கிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இலங்கையில், இராணுவமே தேவையற்ற நிலையில், அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதன் மூலம் இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் பயிற்சி நிறைவு செய்த பின்னர், நம் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. எனவே இதனை மத்திய அரசு கைவிட வேண்டும்- இவ்வாறு பொன்.ராதாகிருஷ்ணனர் கூறினார். (த)

## தமிழகத் தலைவர்களையும் விரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கும்

கொழும்பு, ஒக்.14

தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட தமிழக அரசியல் தலைவர்களையும் விரைவில் சந்தித்துப் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐந்து நாள் இந்தியப் பயணத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் இன்று ஞாயிற்றுக் கிழமை நாடு திரும்புகின்றனர்.

இந்தக் குழுவினர் நாடு திரும்பியதும் கூட்டமைப்பின் அனைத்து நாடாளு

பார்க்க பக்கம் 4

## ஆறு நாள்களில் 51 பேர் டெங்கு நோய்க்கு இலக்கு

யாழ்ப்பாணம், ஒக்14

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாத்திரம் 10 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு கட்டுப்பாட்டு வாரமாகக் கடந்த வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் இவ்வாறு 10 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில்6 பேரும், பருத்

பார்க்க பக்கம் 4

## நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போர் வெற்றி நிகழ்வுகளை நிறுத்துக

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.14

நாட்டில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்று அரசதரப்புநாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர்கள் மேற்படி கோரிக்கையினை வெளியிட்டுள்ளனர். கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவே மேற்படி கோரிக்கையை முன்

பார்க்க பக்கம் 4

## யாழில் மின்னல் தாக்கி மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக்.14

மின்னல் தாக்கியதில் பாதிக்கப்பட்ட மூவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

பார்க்க பக்கம் 4

## கரையோரப் பகுதிகளை விடுவிக்கிறது கடற்படை

யாழ்ப்பாணம், ஒக்.14

சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் மீள்குடியமர்வுக்காக இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

பார்க்க பக்கம் 4

## இலங்கையில் சிறுவர் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் அவசியம்

### ஜனாதிபதியிடம் யுனிசெவ் வலியுறுத்து

கொழும்பு,ஒக் 14

நாட்டில் உள்ள சிறார்களின் நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கு அரசு என்ற வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை யுனிசெப் அமைப்பின் தெற்காசிய வலயப் பணிப்

பார்க்க பக்கம் 4

## 19ஆவது திருத்தச் சட்டத்தை சமர்ப்பிக்க தயராகிறது அரசு

கொழும்பு,ஒக் 14

அரசமைப்பில் திருத்தங்களைச் செய்ய அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசுக்கும், நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கும் இடையில் தற்போது நிலவி வரும் முரண்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கும் நோக்கில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

19ஆவது திருத்தச் சட்டமொன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு ஆயத்தமாகி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் இந்த சட்டத் திருத்தம்

பார்க்க பக்கம் 4

## சிமெந்து,கோழி இறைச்சி விலைகள் அதிகரித்தன

கொழும்பு,ஒக் 14

சிமெந்து மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் நேற்று சனிக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 50 கிலோ எடையுடைய சிமெந்து மூடையொன்றின் விலை 68 ரூபா தொடக்கம்

பார்க்க பக்கம் 4

## கிராமப்புறப் பாடசாலைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு தரம்-1 மாணவர் அனுமதி

### யாழ்.கல்வி வலயம் நடவடிக்கை

அச்சுவேலி, ஒக்.14

கிராமப்புறப் பாடசாலைகளின் தரம் ஒன்று மாணவர் அனுமதி அளவைப் பாதிக்காத வகையில் பிரபல பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நடைமுறையை இந்த வருடத்தில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக யாழ்.கல்வி வலயம் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் கட்டுப்பாடு இல்லாத நிலையில் தரம் ஒன்று மாணவர் அனுமதி மேற்கொள்ளப்பட்டதால் கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர் எண்ணிக்கை 10 க்கும் குறைந்த அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. இதனால் சில ஆரம்பப் பாடசாலைகள் காலக்கிரமத்தில் மூடவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதா

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் கட்ட இந்திய வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு பிரதேச செயலருக்கு உரியது

## ஜனாதிபதி விசேட செயலணி செயலர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 14

இந்திய வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவுக்கு முழுப் பொறுப்பும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்களையே சாரும். நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்கள் பயனாளிகள் தெரிவுக்கு உதவி செய்யலாமே தவிர இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பிரதேச செயலருக்கு உரியதே. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி விசேட செயலணியின் செயலாளர் திவாரட்ண.

இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீடமைப்புத் தொடர்பிலான கலந்துரையாடலொன்று வவுனியாவில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய அரசின் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்தில் யாழ். மாவட்டத்துக்கு 8 ஆயிரத்து 700 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தெல்லிப்பழை, மருதங்கேணி, சாவகச்சேரி பிரதேச செயலாளர்கள் பிரிவில் முன்னோடி வீட்டுத் திட்டமாக 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக முதல் கட்டத்திலேயே யாழ். மாவட்டத்தில் எஞ்சிய 12 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 2 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு, அந்தக் கிராமசேவையாளர் பிரிவில் இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பயனாளிகள் புள்ளியிடல் மூலமாகவே தெரிவு செய்யப்படவுள்ளனர். 10 அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறும் பயனாளிகள் இந்திய வீட்டுத் திட்டத்துக்கு பிரதேச செயலரினால் தெரிவுசெய்யப்படுவர்.

பயனாளிகள் தெரிவில் இந்திய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்கள் உதவி செய்யலாமே தவிர, இறுதித் தெரிவை பிரதேச செயலரே மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (10 -5)

# வாதரவத்தையில் தாலி அறுத்த சந்தேகநபர்கள் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஒக்.14

வாதரவத்தையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் அறுத்துச் செல்லப்பட்ட ஏழரைப் பவுண் நிறையுடைய தாலிக்கொடி நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டு நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை பாதிக்கப்பட்டவர்களும் பொது மக்களும் குறிப்பெடுத்து பொலிஸாருக்கு வழங்கியதையடுத்து விசாரணை மூலமாக இரண்டு பேரையும் அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்தனர்.

வாதரவத்தை உபதபாற் கந்தோர் அதிபரும், அவரது மனைவியும் மரணச் சடங்கு ஒன்றுக்கு சென்றுவிட்டு கடந்த வியாழக்கிழமை தமது வீடுநோக்கி மோட்டார் சைக்கிளில் வாதரவத்தை தகரம் பிள்ளையார் கோயிலை அண்மித்து சென்றுகொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அவர்களை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற நபர்கள் பெண்ணின் கணவரை கலால் உதைத்து கீழே வீழ்த்திவிட்டு கைத்துப்பாக்கியைக் காட்டி குறித்த பெண் அணிந்திருந்த ஏழரைப் பவுண் தாலிக்கொடியை அறுத்துச் சென்றிருந்தனர்.

எனினும் அவர்கள் தாலியைப் பறிகொடுத்தாலும் சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறிப்பெடுத்துக் கொண்டனர். தவிர பொது மக்களும் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஆயுததாரிகளின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை கவனித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. இலக்கங்களின் அடிப்படையில் விசாரணையை மேற்கொண்டபோது அந்த மோட்டார் சைக்கிள் நல்லூரைச் சேர்ந்த ஒருவருடையது என்பது தெரிய வந்தது. அவரிடம் விசாரணையை மேற்கொண்டனர்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளரிடம், அவரது உறவினர்களே இரவில் வாங்கிச்சென்று கொள்ளை முயற்சியில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் இருவரும் நல்லூர் மற்றும் கோண்டாவிலைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். (10-04-11)

# வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.14

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டிய நிகழ்வு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கமும் யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. நேற்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மாவட்ட இணைப்பாளர் லயன் ஸ்ரீபன் லெனால்ட்டும் கௌரவ விருந்தினர்களாக லயன் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும் கலந்துகொண்டனர். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வருடாந்தம் கொண்டாடப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்திலும் இந்த நிகழ்வு வருடாந்தம் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழமை. (10-4)

# 'அன்டிபயோடிக்ஸ்' மருந்து ஏற்றுவதை நிறுத்த உத்தரவு

கொழும்பு, ஒக்.14

காலி, கராபிட்டிய வைத்தியசாலையில் 9 வயது சிறுமியொருவருக்கு ஏற்றப்பட்ட அன்டிபயோடிக்ஸ் (பக்றீரியாவின் வளர்ச்சியைத் தடுக்கும் மருந்து) விஷமாகியதில் அச்சிறுமி உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதனையடுத்து அனைத்து வைத்தியசாலைகளிலும் குறித்த மருந்தை நோயாளிகளுக்கு ஏற்றுவதை நிறுத்துமாறு சுகாதார அமைச்சு தெரிவித்தது.

காலி, ஹின்பெந்தல பகுதியைச் சேர்ந்த கவீஷத ஜயோதா ஜயவர்தன என்ற சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தவராவார். குறித்த சிறுமிக்கு ஏற்றப்பட்ட செப்ட்ரியக்சோன் என்ற அன்டிபயோடிக்ஸ் மருந்து ஏற்றப்பட்டதைத் தொடர்ந்தே அச்சிறுமி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

வயிற்றுவலி காரணமாக கடந்த வியாழக்கிழமை குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், சிறுமிக்கு அன்றைய தினம் மாலை மேற்படி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்றுமுன்தினமும் அதே மருந்து இரண்டாவது முறையாக ஏற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து சிறுமி அதிக சுகவீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வைத்தியசாலையின் பணிப்பாளர், 'மேற்படி சிறுமிக்கு ஏற்றப்பட்ட செப்ட்ரியக்சோன் என்ற 'அன்டிபயோடிக்ஸ்' மருந்து விஷமாகியே அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். முதல் நாள் அவருக்கு அந்த மருந்து ஏற்றப்பட்டபோது அது விஷமாகியிருக்கவில்லை.

அதே மருந்தை அன்றைய தினம் மேலும் 10 குழந்தைகளுக்கும் ஏற்றியிருந்தோம். இருப்பினும் அவர்களில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அவர்கள் நலமாக இருக்கின்றார்கள். இருப்பினும் நாம் அந்த மருந்தை இனி ஏற்றுவதை நிறுத்திவிட்டோம்'' -என்றார். (த)

# வேலணைப் பிரதேசத்தில் கால்நடைகள் கவனம்

## நாளை மறுதினத்திலிருந்து சுயநடமாட்டம் ரத்து

யாழ்ப்பாணம், ஒக்.14

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் அலைந்துதிரியும் கட்டாக்காலி மாடுகளை உரிமையாளர்கள் நாளை 15 ஆம் திகதி திங்கட்கிழமை மாலைக்குள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் மறுநாள் 16 ஆம் திகதிவரை பொது வழிகள் - வீதியோரங்களில் நிற்கும் சகல மாடுகளும் பிடிகாரர் மூலம் பிடிக்கப்படும்.

இவ்வாறு வேலணைப் பிரதேச சபை தலைவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 நாள்களாக கட்டாக்காலி கால் நடைகளை கட்டுப்படுத்துமாறு வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய உப-அலுவலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஒலிபெருக்கி மூலமும் துண்டுப் பிரசுரம் மூலமும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதிவரை பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட பிடிகாரர் மூலம் கட்டாக்காலியாக திரிந்து பொது வழிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் சகல கால்நடைகளும் கட்டுப்படுத்தப்படும்.

பிடிக்கப்படும் கால்நடைகள் 3 நாள்கள் மட்டுமே பராமரிக்கப்படும்.

அந்த மூன்று நாள்களுக்குள் உரிமை கோரப்படாத சகல மாடுகளும் ஏலத்தில் விற்கப்படுவதுடன் யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கும், பிரதேச செயலரின் அனுமதி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (10)

# ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படா

கொழும்பு,ஒக் 14

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் எந்தவித தீர்மானமும் இல்லை எனப் போக்குவரத்து அமைச்சர்குமார வெல்கம தெரிவித்தார்.

ரயிலைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக பஸ்ஸின் மூலமாகப் பெறப்படும் வருமானம் குறைவடைந்துள்ளது.எனவே ரயில் கட்டணங்களை அதிகரிக்குமாறு பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(த)

## கிளாலிக்கு இ.போ.ச. பஸ் சேவை

வடபிராந்திய இ.போ.ச. பஸ் சேவை நீண்ட நாள்களின் பின் யாழ்ப்பாணத்திலிருந்து கிளாலிக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனை கோண்டாவில் சாலை முகாமையாளர் எஸ். குணபாலச்செல்வம் தெரிவித்தார்.

கிளாலிமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது .எனவும் இந்தச் சேவையால் குறித்த பிரதேச மக்கள் மிகவும் பயனடைவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# படைப்பாக்கல் திறன் மூலம் சந்ததியை உருவாக்குவோம்

## உளமருத்துவ நிபுணர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 14

ஒருவன் தனது படைப்பாக்கல் திறமைகள் மூலம் தனக்கும் தான் வாழும் சமூகத்துக்கும் ஏதாவது பயனுடையதாக செய்து கொண்டிருந்தால் புதியதோர் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். பழைய தலைமுறைக்கு இந்தக் கருத்து மாறாக இருந்தாலும் இளைய தலைமுறையினர் இதனை பொறுப்பான பணியாகக் கருத வேண்டும் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் உள மருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ்.சிவயோகன் தெரிவித்தார்.

''விரும்பத்தக்க மனிதராய் எம்மை நாமே செதுக்குவோம்'' என்ற தொனிப் பொருளில் மாகாணமட்ட உளநல நாள் விழா யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

உள நலம் என்பது அனைவருக்கும், அனைத்து மட்டத்தினருக்கும் பொதுவானது. ஒருவன் தனது பலம், பலவீனம் ஆகியவற்றை உணர்ந்து இயங்குதல், அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளை வெற்றிகரமாக கையாளுதல் என்பவற்றைக் கொண்டு அவனை நல்ல உள நலம் உடையவன் எனக் கருதிக் கொள்ள முடியும்.

மாணவ பருவத்தினரை சிறந்ததோர் முன் உதாரணமாக வளர்த்தெடுத்து ஆரோக்கியமான உளநல சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலயம் 'மாற்றம்' என்னும் குறும்படத்தினையும், கிளிநொச்சி கல்வி வலயம் 'சிகரம்' என்னும் குறும்படத்தினையும், யாழ். கல்வி வலயம் 'மறைக்காமல்' என்னும் குறும்படத்தினையும், வவுனியா மாவட்டம் 'பார்வைகள்', மடு கல்வி வலயம் 'துளிர்', வலிகாமம் கல்வி வலயம் 'மறுபக்கம்' ஆகிய குறும்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் முத்துராதா கிருஸ்ணன், கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், பாடசாலை அதிபர்கள், [illegible] ணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (10 -13)



முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த 2007 ஆம் ஆண்டு குறித்த கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் தற்போது குறித்த கிராமத்தை கடற்படையினர் தமது அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றியுள்ளனர். இந்த நிலையில் முள்ளிக்குளம் கிராம மக்களின் வீடுகளில் கடற்படையினரது குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய விதையை பயன்படுத்தி வேதாள வெங்காயச் செய்கை

அச்சுவேலி, ஒக்.14

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் வெங்காய விதையை பயன்படுத்தி நாற்று மூலம் வேதாள வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் வெங்காயச் செய்கைக்கான உற்பத்திச் செலவை 50 வீதத்தால் குறைப்பதோடு தரமான நல்ல அறுவடையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயத்திணைக்கள பாடவிதான அபிவிருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் வெங்காயச் செய்கை விதை வெங்காயக் குமிழ்களை பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த வருடம் உண்மை வெங்காய விதையை கொண்டு உருவாக்கப்பட்ட நாற்றுக்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

வெங்காய விதை மூலம் உருவாக்கப்படும் நாற்றும் 40 தினங்கள் மேடையில் பராமரிக்கப்பட்டு பிடுங்கி பண்படுத்தப்பட்டு தோட்டத்தில் மேடையிலோ பாத்தியிலோ நடுகை செய்யப்பட்டு 70 தினங்கள் நீர் பாய்ச்சப்பட்டு பராமரிக்கப்படும். பின்னர் அறுவடை செய்யலாம்.

இதன் மூலம் நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகாத தரமான விளைச்சல் கூடிய வெங்காயத்தை அறுவடை செய்யலாம்.

வெங்காயக் குமிழ் மூலம் செய்கை பண்ணப்படும் ஒரு கிலோ வெங்காயத்துக்கான உற்பத்திச் செலவு 32 ரூபாவுக்கு மேற்பட்டதாக இருக்கும். அதே வேளை விதை மூலம் செய்கை பண்ணப்படும் வெங்காயத்தின் உற்பத்திச் செலவு ஒரு கிலோவுக்கு 18 ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கலாம்.

40 கிராம் வெங்காய விதையை பயன்படுத்தி அமைக்கப்படும் நாற்று மேடையில் இருந்து பெறப்படும் நாற்று மூலம் ஆயிரம் கன்று மூன்றரைப் பரப்பு தோட்டநிலத்தில் பயிரிடலாம்.

வெங்காய விதையும் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வெங்காயம் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வெங்காய விதையின் விற்பனை விலை 12 ஆயிரம் ரூபா.

நல்ல முளைதிறன் கொண்ட வெங்காய விதை உற்பத்தி செய்யப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் உற்பத்தி கால நிலைக்கு ஏற்புடையது. விதை மூலம் வெங்காயச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-11)

## வாய்த் தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது

வலி. வடக்கு, ஒக். 14

தனிப்பட்ட குரோதம் காரணமாக அயலவர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் இறுதியில் கத்தி வெட்டில் முடிவடைந்த சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து கத்தியால் வெட்டியதாகக் கூறப்படும் சந்தேகநபரை கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம-86)

## சங்கிலி அபகரிப்பு

வலி. வடக்கு, ஒக்.14

பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியை ஒருவரின் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இருபாலை கட்டப்பிராய் பகுதியில் சுமார் மூன்று மணியளவில் இந்தத் துணிகரமான திருட்டு இடம் பெற்றுள்ளது.

நாளாந்தம் குறிப்பிட்ட ஆசிரியை பாடசாலை விட்டு பஸ்ஸில் வந்திறங்கி ஒழுங்கை வழியாக தனது வீட்டுக்குச் செல்வது வழமையாகும்.

இதே போன்று அன்றும் பாடசாலைவிட்டு பஸ்ஸில் வந்திறங்கி வீட்டுக்குச் செல்லும் வேளையில் ஒழுங்கையில் மோட்டார் சைக்கிளில் முகத்தை மூடி மறைத்த நிலையில் வந்த இளைஞர்கள் இருவர் சங்கிலியை இவ்வாறு அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

## இலத்திரனியல் கடையில் திருட்டு

வலி. வடக்கு, ஒக்.14

யாழ். நாவலர் வீதியில் உள்ள இலத்திரனியல் கடை ஒன்றில் இருந்து சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளன என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரால் முறையிடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு ஒரே தடவையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் நாளாந்தம் ஒரு மாத காலத்துக்கு மேல் திட்டமிட்ட முறையில் இடம் பெற்றுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விரைவில் குறிப்பிட்ட திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்படலாம் எனவும் யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (ம-86)

## செத்தல் மிளகாய் உற்பத்தியை அதிகரிப்புச் செய்யத்திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்.மாவட்டத்தில் செத்தல் மிளகாய் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சிறுபோகத்தின் போது 445 விவசாயிகளுக்கு தரமான மிளகாய் விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் கடந்த காலத்தில் செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பை விட இந்த முறை கூடுதல் விஸ்தீரணத்தில் மிளகாய்ச்செய்கை இடம்பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டில் 54 ஹெக்ரேயரிலும் இந்த முறை 89 ஹெக்டயரிலும் சிறுபோகத்தில் மிளகாய்ச் செய்கை இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் கால போகத்தில் 750 ஹெக்ரேயரில் மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளக் கூடியதாக 925 விவசாயிகளுக்கு மிளகாய் விதை வழங்கப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் சி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார். (ம-7)

## வெள்ள வாய்க்காலாக மாறிய வெள்ள வாய்க்கால் வீதி

யாழ்ப்பாணம், ஒக்.14

வெள்ள வாய்க்கால் வீதி வெள்ள வாய்க்காலாக மாற்றப்பட்டுள்ளது. வலி. வடக்கு பிரதேச ச்சபைக்கு உட்பட்ட தெல்லிப்பழைப் பிரிவில் அம்பனைச் சந்தியிலிருந்து வித்தகபுரம் சிவகுருநாதர் ஆலயத்துக்குச் செல்லும் வீதியை வெள்ள வாய்க்கால் வீதியென அழைப்பர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் குறித்த வீதி வெள்ள வாய்க்காலாக மாற்றப்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி திருத்தப் பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்தகாரர் இந்த வீதியை ஆழமாக தோண்டி வெள்ளம் வழிந்தோடும் வாய்க்காலாக மாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

> வீதி திருத்தப் பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்தகாரர் இந்த வீதியை ஆழமாக தோண்டி வெள்ளம் வழிந்தோடும் வாய்க்காலாக மாற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீதியை ஆழமாக்கும் பணி ஆரம்பமாகும் போது வீதியில் உள்ள குடியிருப்பாளர் எவ்வளவோ சொல்லியும் மொழி தெரியாதவர்களால் குறித்த விடயத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை மீண்டும் வீதியாகப் பயன்படுத்த புனரமைத்து வழங்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.(ம-9)

## கண்கிளினிக்குக்கு வந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வியாழக்கிழமை நடைபெறவிருந்த கண்கிளினிக்குக்கு வந்த 100 இற்கு மேற்பட்ட மக்கள் வைத்திய அதிகாரி வராததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மாதத்தின் இரண்டாவது வியாழக் கிழமைகளில் யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவிலிருந்து வைத்திய அதிகாரியினால் கண் சிகிச்சை கிளினிக் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த கிளினிக்குக்கு , தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி போன்ற பிரதேசங்களிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை கண் சிகிச்சை வைத்திய அதிகாரி வருகை தராததால் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். இது தொடர்பாக விசாரித்த போது:-

குறித்த வைத்திய அதிகாரி பிரசவ விடுமுறையில் நிற்பதாகவும் அவர் மீண்டும் கடமைக்கு வரும் வரை கிளினிக் நடை பெறாது எனவும் தெரிய வந்துள்ளது. சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் கண் நோயாளர்களின் நலன் கருதி மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு சுகாதார திணைக்களத்தினரை மக்கள் கேட்டுள்ளனர். (ம-9)

## இருவேறு சம்பவங்களில் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஒக்.14

காதல் தொடர்பு வைத்திருந்த சிறுமியும், கடைக்குப் பொருள்கள் வாங்கச் சென்ற யுவதியும் வெவ்வேறு நபர்களால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலேயே சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அந்தச் சிறுமி காதல் தொடர்பு வைத்திருந்த 25 வயது இளைஞனே இவ்வாறு துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொருள்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றிருந்த யுவதியை கடையில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கடந்த செவ்வாய்க் கிழமை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை அடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதாகவும் பெரேரா மேலும் தெரிவித்தார்.(ம-4-86)

## நெல்லியடி நகரப் பகுதிகளில் வடிகால் அமைக்கப்படவில்லை

### மழை அதிகரித்தால் சிரமம் என்கின்றனர் வர்த்தகர்கள்

வடமராட்சி, ஒக்.14

நெல்லியடி நகரப் பகுதியில் வடிகால் அமைக்கப்படாமையால் வர்த்தக நிலையங்களுக்குள் மழை வெள்ளம் புகுந்து அழிவை ஏற்படுத்தி விடும் என நகர வர்த்தகர்கள் பெரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நகரப் பகுதியில் வீதி அகலிப்புப் பணிகள் மந்த கதியில் நடைபெற்று வருகின்றன. அகலிப்புப் பணியால் வீதிகள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் வடிகால்கள் எவையும் அமைக்கப்படவில்லை.

தற்போது மாழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் கடுமையான மழை பெய்யும் போது வடிகால்கள் இன்மையால் மழைவெள்ளம் வர்த்தக நியைங்களுக்குள் புகும் நிலைமை உள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புப் பணிகளை நெல்லியடி நகரில் மேற்கொள்ளும் போது மழை வெள்ளங்கள் வெளிச்செல்ல நகரத்தில் வடிகால்கள் அமைக்கப்படவேண்டும். ஆனால் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-8)

## நிகழ்வுகள் இன்று

**பாராட்டு விழா**

பன்னாலை சேர் கனகசபை வித்தியாலய அதிபர் சிதம்பரப்பிள்ளை சிவராஜன் 'பிரதீபா பிரபா' விருது பெற்றமையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்வி பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கலந்து கொள்வார்.

**விளையாட்டு விழா**

புலோலி, காந்தியூர், வடமராட்சி முன்பள்ளி மழலைகளுக்கான விளையாட்டு விழா பிற்பகல் 1.30 மணிக்கு, சனசமூக நிலையத் தலைவர் க.உதயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உப அதிபர் அ.அரியரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (8)

**ஆசிரியர் தின விழா**

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் ஆசிரியர் தின விழா பிற்பகல் 3 மணிக்கு நடை பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் கலந்து கொள்வார்.

**புதிய கட்டடத் திறப்பு விழா**

கைதடி கலைநகர் துர்க்கா சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா காலை 9 மணிக்கு துர்க்கா சனசமூக நிலையத் தலைவர் க.தங்கராசா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்தநிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.ஸ்ரீதரன், ஈ.சரவணபவன் ஆகியோர்களும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் திரு சி.துரைராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சி இணைப்பாளரும், டிறிபேக் கல்லூரி அதிபருமாகிய திரு.க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக துர்க்கா நாடக மன்றத்தினரின் 'மாலைக்காக வாதாடிய [illegible]' [illegible] இரவு இடம்பெற இருக்கின்றது. (288)

## படுக்கையில் வைத்து பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஒக்.14

வெவ்வேறு இடங்களில் படுக்கையில் வைத்து இருவரைப் பாம்பு தீண்டியுள்ளது. கடந்த வெள்ளிக் கிழமை இரவு மிருசுவில் விடத்தற்பளையைச் சேர்ந்த இராமலிங்கம் இராஜரத்தினம் (வயது 62), சரசாலை மத்தியைச் சேர்ந்த பாலசுந்தரம் குலமணி (வயது 32) ஆகிய இருவரையுமே பாம்பு தீண்டியுள்ளது. இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து இந்தியா - இலங்கை பேச்சு

புதுடில்லி,ஒக்.14

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தியாவுக்குச் சென்றுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு சிவில்அணு ஒத்துழைப்புகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறியுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பிலான சகலவிடயங்கள் குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பறிமாற்றிக்கொண்டதாகப் பேச்சு முடிவில் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் மீண்டும் இது தொடர்பிலான பேச்சுக்களில் ஈடுபடுவதற்கும் இருதரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்போது குறிப்பாக சுகாதார, விவசாய மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக அணுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புகள் தோன்றியுள்ள நிலையில் அதன்மூலம் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்வது குறித்து இலங்கை கவனம் செலுத்தியிருக்கிறது.**

தென்னிந்தியாவின் தமிழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக இலங்கையில் தோன்றியுள்ள சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்காக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சிவில் அணு ஒத்துழைப்பு உதவியாக அமையும் எனவும் இந்தியத் தகவல் தெரிவிப்பதாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிர்ப்புகள் தோன்றியுள்ள நிலையில் அதன்மூலம் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்வது குறித்து இலங்கை கவனம் செலுத்தியிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.(த)

# 1500 தமிழ்ப் பொலிஸாருக்கு வெற்றிடம்

கொழும்பு,ஒக் 14

பொலிஸ் திணைக்களத்தில் தமிழ் மொழி தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் 1500 பேருக்கான பற்றாக்குறை இருப்பதாகத் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியறிவுள்ள அலுவலர்களின் வெற்றிடங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் தம்மிடம் அறிவித்ததாகவும், இந்த நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் விசேட தமிழ் மொழியறிவு பாடநெறிகளைப் போதிப்பதற்கும் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழியில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்து கொள்வதற்கும் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் போதுமான அறிவு அவசியம் என்பதால் இந்தத் திட்டத்தை வகுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழ் மொழி தொடர்பில் ஆர்வம் காட்டும் பொலிஸ் மா அதிபர் ஒருவர் இருக்கின்றமை தொடர்பில் தாம் பெருமிதமடைவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். (த)

## யாழில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கரந்தன் சந்தியில் மின்மார்க்கத்தில் திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறிசபேசன் (வயது-21) மற்றும் இராசவீதியில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களான அதே இடத்தைச் சேர்ந்த ச.நற்குணவதி (வயது-46), கி.சண்முகவடிவேல் (வயது-35) ஆகிய இருவருமே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். (10-4)

## 19ஆவது...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மேற்கொள்ளப்படவுள்ளது.

17ஆவது திருத்தச் சட்டத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவுக்கு ஜனாதிபதியின் அனுமதி தேவைப்பட்ட போதிலும், 18ஆவது திருத்தச் சட்டத்தில் அவ்வாறு அனுமதி அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்படி, மீண்டும் செயலாளரை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

## நாட்டில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வைத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த வசந்த சேனநாயக்கா, எரிக் வீரவர்த்தன கங்கண ஹேரத் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியையைச் சேர்ந்த ஹரின் பெர்ணான்டோ, நிரோஷன் பெரேரா, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த ஹுஸைன் பாருக் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இனிவரும் காலங்களில் வெற்றி நிகழ்வுக் கொண்டாட்டங்களை நடத்தக்கூடாது தற்போது புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறையினர் மீண்டும் சொந்த நாடு திரும்ப விருப்பம் கொண்டுள்ளனர். போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்தும் போது இரு இன சமூகங்களுக்கு இடையிலான இடைவெளி மேலும் அதிகரிக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போர் வெற்றியைக் கொண்டாடும் நிகழ்வுக்குப் பதிலாக போரில் தில் உயிர் நீர்த்தவர்களை நினைவுகூறும் நிகழ்வாக அனுஷ்டிக்க முடியும். இதன் மூலம் இனங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்க முடியும். மேலும் புலம்பெயர் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்த முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-5)

## ஆறு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 2 பேரும், யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதி மற்றும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து தலா ஒவ்வொருவருமாக நேற்று முன்தினம் மட்டும் 10 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரண்டு நாள்களும் 18 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். செவ்வாய்க்கிழமை 6 பேரும் புதன்கிழமை 11 பேரும் வியாழக்கிழமை 6 பேரும் வெள்ளிக்கிழமை 10 பேருமாக கடந்த ஆறு நாள்களில் 51 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். (10-4)

## சிமெந்து...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

85 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை. கோழி இறைச்சியின் கிலோவொன்றுக்கான கட்டுப்பாட்டு விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிமெந்து உற்பத்தி நிறுவனங்கள் மூடையொன்றுக்கு 100 ரூபா தொடக்கம் 185 ரூபாவாக விற்பனை விலைகளை அதிகரிப்பதற்கான கோரிக்கை முன்வைத்திருந்தன.

அதேபோன்று கோழியிறைச்சியின் கட்டுப்பாட்டு விலையை 60 ரூபாவாக அதிகரிப்பதற்கும் கோரப்பட்டிருந்தது.

எனினும், குறித்த பொருள்கள் மீதான கட்டுப்பாட்டு விலைகளை நியாயமான விகிதாசார அடிப்படையில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (த)

## இலங்கையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பாளர் கெரீன் ஹல்ஷொப் நேற்று முன் தினம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது சிறுவர்கள் தொடர்பில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

மக்களுக்குச் சிறந்த சுகாதார நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சிறார்களுக்கான போஷாக்கின்மையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

இதற்காகத் தமது அமைப்பும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளில் சிறுவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் மற்றும் சுகாதார முன்னெடுப்புகளை ஆராயும் விதமான கெரீன் ஹல்ஷொப் பயணங்களை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.(த)

## தமிழக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மன்ற உறுப்பினர்களும் கூடி ஆராய்ந்து தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திப்பது தொடர்பில் இறுதிமுடிவு எட்டப்படும் என கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 'உதய'னிடம் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகள் முடிவடைந்த நிலையில் தமிழகத் தலைவர்களையும் சந்திப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

நாடு திரும்பியதும் இதுகுறித்து ஏனைய உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்தி அதில் தமிழகத் தலைவர்களை சந்திப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அதன்பின்னர் தமிழகப் பயணம் திட்டமிடப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

தமிழகப் பயணத்தின்போது முதல்வர் செல்வி ஜெயலலிதா, கலைஞர் மு.கருணாநிதி உட்பட பல அரசியல் தலைவர்களைச் சந்திப்பதற்கு எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## கிராமப்புற...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கக் கவலை தெரிவிக்கப்பட்டது. இந்த வகையில் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள பல ஆரம்பப் பாடசாலைகள் மாணவர் எண்ணிக்கை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

கடந்த வருடம் நூற்றுக்கு மேற்பட்ட அளவில் மாணவர்களை தரம் ஒன்று வகுப்பில் அனுமதித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு இந்த வருடம் தரம் ஒன்று வகுப்பில் அனுமதிக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தவகையில் இரண்டு வகுப்புகளுக்கு ஏற்ற அளவில் மாணவர்களை அனுமதிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று அனுமதியில் பாடசாலைக்கும் பிள்ளையின் வதிவிடத்துக்கும் இடையே உள்ள தூர இடைவெளி, பிள்ளை இயல்பு நிலையில் பெற்றோரும் கண்காணிப்பில் பாடசாலை சென்று திரும்பும் வசதி என்பவற்றை அவதானித்து முன்னுரிமை அடிப்படையில் தரம் ஒன்று அனுமதியை வழங்குதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கிராமப் புற ஆரம்பப் பாடசாலைகளில் ஆசிரிய ஆளணி, வகுப்பறை கள நிலை மற்றும் வசதிகள் பொருத்தமான முறையில் சமச்சீரான நிலையில் பேணப்பட்டு வருவதால் பெற்றோர் தமது பிள்ளைகளை வதிவிடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் அனுமதித்து தமது நேரடிக் கண்காணிப்பில் பிள்ளைகளைப் பராமரிப்பது வரவேற்கத்தக்கது. பாடசாலையில் குறைபாடுகள், வசதியீனங்கள் காணப்படுமிடத்து வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அறிவித்தோ அல்லது நேரடியாகத் தொடர்பு கொண்டோ தெரியப்படுத்தலாம் என வடக்கு மாகாண கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி தெரிவித்தார். (த-11)

## கரையோர...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யாழ்.மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளை 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். இதில் சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் கரையோரப் பகுதி கிராமங்களும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் அன் றிலிருந்து இருந்தது.

இந்தநிலையில் போர் முடிந்து 3 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது இந்தப் பிரதேச பிரிவுகளில் கரையோரக் கிராமங்கள் கடற்படையினரால் விடுவிக்கப் படுகின்றன.

இது தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேற்படி பிரதேசங்கள் தொடர்பில் கலந்துரையாடல் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

இந்தநிலையில், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் பகுதியளவில் 3 கிராம சேவகர் பிரிவுகளிலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும் மக்கள் மீளக்குடியமர்வுக்காக இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் எனக் குறிப்பிட்ட கடிதம், வட மாகாண கடற்படைத் தளபதியின் கையெப்பம் இடப்பட்ட கடிதம் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இதுவரையில் மேற்படி பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட செயலகம் மேற்கொண்டதாகத் தெரியவரவில்லை.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் (ஜே/170) பொன்னாலை, (ஜே/172) சுழிபுரம் மேற்கு, (ஜே/174) சுழிபுரம் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் இதன் மூலம் 357 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளன. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் (ஜே/152) மாதகல் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு விடுவிக்கப்படுவதால் 276 குடும்பங்கள் மீள்குடியமரவுள்ளன.

மேற்படி விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொள்ளப் பலமுறை முயன்றபோதும் பயனளிக்கவில்லை. (10-5)

## இலங்கையின்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ளன. ஆயினும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியக் கட்சிகள் அனைத்துமே ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளன.

இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நீதியான, நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் இந்தியக் கட்சிகள் அனைத்தும் தெளிவாக உள்ளன. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. இது குறித்து இந்திய மத்திய அரசிடம் நாங்கள் பேசியிருக்கிறோம். தமிழர் பிரச்சினைக்கான தீர்வை விரைவுபடுத்த வேண்டும் என்று இலங்கை அரசுக்கு தொடர்ந்து அழுத்தங்களை வழங்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகின்றோம். நாங்கள் இலங்கைத் தமிழரை ஒருபோதும் கைவிட மாட்டோம். அவர்களுக்குத் தீர்வு கிடைக்க இந்தியா நிச்சயம் உதவும்.'' என்று சுஷ்மா சுவராஜ் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டதாக செல்வம் மேலும் கூறினார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தான் சந்தித்தபோது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது எனவும் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு அவரிடம் கோரியதாகவும், ஆனால் இலங்கை ஜனாதிபதி அதனை நடைமுறைப்படுத்தாதது தனக்குக் கவலையளிப்பதாகவும் சுஷ்மா குறிப்பிட்டதாக செல்வம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழர் பிரதேசங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்பு, புதிய படைமுகாம்கள் அமைக்கப்படுகின்றமை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்திய எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெளிவாக எடுத்துரைத்ததாக அடைக்கலநாதன் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# உயிர்க் கொல்லி நோய்த் தடுப்பில் சகல தரப்பினரதும் பங்களிப்புத் தேவை

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 315 பேர் உயிர்க்கொல்லி நோயான டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர், பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாதத்தின் முதல் வாரத்தில் குடாநாட்டில் சிறுஎண்ணிக்கையினர் மட்டுமே இந்நோய்த் தாக்கத்துக்கு ஆளாகினர் என்பது சுகாதார சேவைகள் பகுதியின் தரவு.

அவர்களில் ஒருவர் (சிறுவன்) உயிரிழந்தார். ஒரு வாரத்தில் மட்டும் இந்நோயினால் பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கை வீதம் அதிகரித்திருப்பது அதன் பரவல் அல்லது தொற்று மிக வேகம் கொண்டிருப்பதைத் தொட்டுக்காட்டுகிறது.

குடாநாட்டில் ஒரு சில நாள்களில் மாரிகாலம் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படத்தொடங்கிவிட்டன. ஆகையால், சுகாதாரப் பகுதி மற்றும் ஆஸ்பத்திரிகள் மட்டுமே டெங்கைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மற்றத்தரப்புகளும் மக்களும் ஏனோ தானோ எனச் செயற்படக்கூடாது.

இன்று அயல் கிராமத்தில் அல்லது பக்கத்துக் குறிச்சியில் இனங் காணப்பட்ட டெங்கு, உங்கள் கிராமத்தை அல்லது குறிச்சியைத் தாக்குவதற்கு ஒரு நாளே போதும்! நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மட்டும், இந்தப் பொல்லாத நோயினால் 10 பேர் பீடிக்கப்பட்டனர் என்பது உத்தியோகபூர்வமான புள்ளிவிவரம். அதுவும் ஒரு பிரதேசத்தில் என்றில்லாமல், நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கோப்பாய் என்று விசாலமாகப் பரவியுள்ளது.

இத்தனைக்கும், டெங்கு நோய்த் தொற்று உண்டாகாமல், பரவாதிருக்காமல் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து யாழ்.மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்தோடு, டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான வைத்திய மற்றும் சிகிச்சை சார் வழிமுறைகளை, எமது மாவட்டத்தில் இயங்கும் அரசாங்க மற்றும் தனியார்துறை வைத்திய சாலைகளுக்கு அறிவித்துள்ளார். ஒருவருக்கு டெங்கு நோய்த் தொற்று கண்டிருக்கலாம் என்று சந்தேகித்தால் அந் நோய்க்கான சிகிச்சை வசதிகள் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்புமாறு அதில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத் துறையினரால், இம்மாதம் எட்டாம் திகதி தொடக்கம் நேற்று சனிக்கிழமை வரை ஒருவார காலத்துக்கு டெங்கு நோய்த் தடுப்புச் செயற்பாடுகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரத்துறை சார்ந்த அலுவலர்களின் அக்கறையான செயற்பாடுகள், இந் நோய்த் தாக்கம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்கியுள்ளது. நோய்த் தொற்று இலகுவில் பரவக்கூடிய பல இடங்கள் இனங்காணப்பட்டு புகையூட்டல் மேற்கொள்ளப்பட்டது. கழிவகற்றல் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரப் பணியாளர்கள், பொலிஸார், பொதுமக்கள் டெங்குத் தடுப்புப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தமையைப் புள்ளி விவரங்கள் எடுத்தியம்புகின்றன. சம்பந்தப்பட்ட பகுதிகளின் பிரதேச செயலகங்களும் அவற்றின் பணியாளர்களும் காலமறிந்து அக்கறையுடன் செயற்பட்டதையும் தரவுகள் மூலம் அறியமுடிகிறது.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற டெங்குத் தடுப்பு நடவடிக்கைகளில், மாநகர சபை மற்றும் நகரசபைகள், பிரதேச சபைகளின் பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு அமையவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது கவலைக் குரியதாகும்.

குறிப்பாகக் கழிவகற்றும் பணியில் அவை ஒழுங்கு சீராகச் செயற்படுவதில்லை; ஏனோ தானோ என்று செயற்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இது விடயத்தில் பொலிஸார் வழக்குத் தொடர நிர்ப்பந்திக்கப்படும் நிலை பரவலாகக் காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளும் அடங்கும். டெங்கு ஒழிப்பு வாரத்தில் மட்டும் கழிவு அகற்றலில் ஈடுபடும் தரப்புகள் கூடப் பின்னர் சோர்ந்து போகின்றன அல்லது ஒதுங்கிக்கொள்கின்றன என்று மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, கழிவகற்றல் பணிகளை ஒழுங்காகச் செய்வதற்குரிய ஆளணி, வாகன வசதிகளை ஏற்படுத்துவதற்குப் போதிய நிதிவளம் இல்லையென்று உள்ளூராட்சி சபை நிர்வாகங்கள் சுட்டிக்காட்டு கின்றன.

எவ்வாறாயினும், மக்களின் உயிர்களைக் காவு செய்யும் தொற்று நோயைத் தடுப்பதற்கும் அது சார்ந்த பணிகளுக்கும் தம்மால் இயன்ற அளவில் நிதி ஒதுக்க அவை முனைய வேண்டும். அபிவிருத்திப் பணிகளுக்குரிய ஒதுக்கீடுகளை ஓரளவில் குறைத்தேனும் மக்கள் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களின் போது, அவை சார்ந்த நிவாரணப் பணிகளை அவசரகால அத்தியாவசிய சேவைகளாகக் கருதி அரசாங்கம் செயற்படுவது உண்டு. இது அனைத்துலக மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதும், நடைமுறையில் உள்ளதுமாகும். அதேவகையில் பொல்லாத தொற்று நோய்களால் மக்களின் உயிர்களுக்கு ஆபத்து வராமல் தடுக்கும் பணியும் அவசர கால நடவடிக்கையாகக் கணிக்கப்பட்டு, கருதப்பட்டுச் செயற்படுவதற்கு மக்கள் பிரதிநிதிகளின் சபைகள் மற்றும் அமைப்புகள் முன்வர வேண்டும்.

மக்களை பெரும் எண்ணிக்கையில் அள்ளிச் செல்லும் நோய்களைத் தடுப்பதில் மக்களுக்கும், அந்தந்தப் பிரதேச வாசிகளுக்கும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபைகளின் உறுப் பினர்களுக்கும், வைத்தியத்துறைசார் மற்றும் சுகாதாரத்துறை சார் தரப்பினருக்கும் சம பங்குண்டு.

அதில் வாதப் பிரதிவாங்களுக்கோ, வசதிக்கு ஏற்றமாதிரி கன்னை பிரிவதற்கோ கிஞ்சித்தும் இடமில்லை. மக்கள் நலன் நாடி உழைப்பதாக அல்லது சேவையாற்றுவதாகக் கூறும் அல்லது கொள்ளப்படும் எல்லோருக்கும் இது பொருந்தும். வெறும் பதவிகளும் ''லேபல்''களும் மக்களின் உயிர்களுக்கு முன்னால் பொருட்டல்ல. இதனைச் சகல தரப்பினரும் மனங்கொள்ள வேண்டும்.

# 80 லட்சம் ரூபா செலவில் வேலணை துறையூரில் சந்தை

## அடிக்கல் வெள்ளி நடப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.14

நெல்சிப்- புறநெகும திட்டத் தின் கீழ் வேலணை துறையூரில் நவீன மீன்சந்தை ரூபா 80 லட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடத் தொகுதி அமைப் பதற்கான அடிக்கல்லை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் நட்டு வைத்தார்.

வேலணை பிரதேச சபையின் தலைவர் தலைமையில் அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந் தினர்களாக வேலணை பிரதேச செயலர் திருமதி ம.சதீஷன், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், சனசமூக அபிவி ருத்தி அதிகாரி பா.பாலசுப்பிரம ணியம், ஒப்பந் தகாரர் தி.தனதீபன் , உப தலைவர் சி.கார்த்திகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதியில் அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் பிரதேச சபைத் தலைவர் நன்றி தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த வாரமள வில் புங்குடுதீவு மடத்துவெளி சந்தை அமைக்கும் பணி ஆரம் பிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

புங்குடுதீவு மடத்துவெளி புனரமைப்பு பணிகளை உடன் துரிதப்படுத்துமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ மாவட்ட பொறியியலாளர் எஸ்.ஸ்றெயிலிதரனை கேட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# சம்பா செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

அச்சுவேலி, ஒக்.14

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் ''சம்பா'' பயிர்ச் செய்கை யில் ஈடுபட விரும்பிய விவசாயி களுக்கு 175 புசல் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கப்பட் டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான அபிவி ருத்தி அதிகாரி இராமலிங்கம் சௌந்தரராசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

சம்பா விதை 140 புசலும், கீரிசம்பா விதை 35 புசலும் விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. சம்பாச் செய்கை ஆயிரத்து 400 பரப்பு நிலத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பரீட்சார்த்தமாக மறவன்புலவு, சாவகச்சேரி, செம்பியன் புலவு, மிருசுவில், சங்கத்தானை, சண்டி லிப்பாய், வரணி, இயற்றாலை பகுதிகளில் சம்பாச் செய்கை நடைபெறுகிறது.

சம்பா அரிசியின் பாவனை அளவு யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வருவதும் தரமான சம்பா அரிசிக்கு நாட்டரிசியிலும் பார்க்க அதிகரித்த விலை கிடைப் பதும் சம்பா பயிர் செய்கையின் பக்கம் யாழ். மாவட்ட விவசாயி களை ஆர்வம் கொள்ளச் செய் துள்ளது .- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-11)

# உள்ளூராட்சி வாரத்தில் ஊடகவியலாளர் கௌரவிப்பு

உள்ளூராட்சி வாரத்தை முன் னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் உள்ளூர் ஊடகவி யலாளர் மற்றும் எழுத்தாளர்களைக் கௌரவிக்கவுள்ளனர். இந்த நிகழ்வு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நகராட்சி மன்றக் கேட்போர் கூடத் தில் மன்றத் தலைவர் இ.தேவச காயம்பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ளதாகக் கூறப்பட்டது.

உள்ளூராட்சி வாரத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகளாக கல்வி மற்றும் நூலக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக ஊடகவியலாளர்களும் எழுத்தாளர் களும் கௌரவிக்கப்படவுள்ளதாக மன்றச் செயலாளர் சு.புத்திசி காமணி தெரிவித்துள்ளார். (ம-9)

# டிறிபேக் கல்லூரி முத்தமிழ் விழா திங்கள்

தென்மராட்சி, ஒக்.14

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்ட பத்தில் கல்லூரி அதிபர் க.அருந் தவபாலன் தலைமையில் நடை பெறும்.

விழாவுக்கு முதன்மை விருந் தினராகத் தென்மராட்சி கல்வி வலய மாணவர் அபிவிருத்திப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகில தாஸ் கலந்துகொள்வார். (ம-9)

# சுகாதாரப் பணியாளர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு உயர்வு

தென்மராட்சி, ஒக்.14

மத்திய, மாகாண சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் வைத் தியசாலைகளில் கடமை புரியும் சுகா தாரப் பணியாளர்களுக்கான சீருடைக் கொடுப்பனவுகள் இந்த ஆண்டு தொடக்கம் உயர்த்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சுற்றறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வருடம் ஒன்றுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் மலேரியா, யானைக் கால் நோய்த் தடை பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர், பூச்சியியல் உதவியாளர், பாடசாலை பற் சிகிச் சையாளர் ஆகியோர்களுக்கு தலா 9 ஆயிரம் ரூபாவும் மிருகநோய்த் தடை மருந்தேற்றுபவர், சுகாதாரச் சாரதி, மிருக பிரிவுக் கட்டுப்பாட் டாளர் ஆகியோர்களுக்கு தலா 8 ஆயிரம் ரூபாவும் வழங்க வேண்டும் எனவும் அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-288)

# வைப்பிலிட்ட பணத்தை மீளப் பெறமுடியாது இளைஞர் சேவைகள் மன்றம் திண்டாட்டம்

வலி. வடக்கு, ஒக். 14

சுன்னாகம் பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தில் வைப்பிலிட்ட பணத்தை மீளப் பெறமுடியாமை யால் இளைஞர் சேவைகள் மன்றத் தில் வீட்டுத் திட்ட வேலைகள் பாதிப்படைந்துள்ளதாக இளைஞர் சேவைகள் மன்ற அலுவலர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆயினும் குறித்த இளைஞர் சேவைகள் மன்றத்துக்குப் புதிய நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டமைக்கான அறிக்கையுடன் புதிய நிர்வாகிகள் கிராமிய வங்கிக்கு வருமிடத்து அந்தப் பணத்தை வழங்குவதில் தடை ஏதும் இல்லை என்று சுன்னா கம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ். குமார வேல் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றத்தின் கணக்கு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுற வுச் சங்க கிராமிய வங்கிக் கிளை யில் பேணப்பட்டு வருகின்றது.

> இதனடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வீட்டுத் திட்டத்துக்கென எழுதப்பட்ட காசோலை குறித்த வங்கிக் கிளையில் வைப்பில் இடப்பட்டது.

இதனடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வீட்டுத் திட்டத்துக்கென எழுதப் பட்ட காசோலை குறித்த வங்கிக் கிளையில் வைப்பில் இடப்பட் டது.

அந்தப் பணத்தை பெறச் சென்றவேளை அந்தக் கணக்கில் இருந்த பணம் எடுக்கப்பட்டு வேறு தேவைகளுக்குப் பயன் படுத்தப்பட்டுவிட்டது என்றும் மீண்டும் பணம் கிடைக்கும் போதே வழங்க முடியும் என்றும் வங்கியில் கடமையாற்றும் ஊழி யர் ஒருவரால் தெரிவிக்கப்பட் டுள்ளது என்று மன்ற நிர்வாகிகள் கூறினர்.

இதன் காரணமாக வீட்டுத் திட்டப் பணிகள் பாதிக்கப்பட்டுள் ளன என்றும் அவர்கள் கூறினர்.

இந்த விடயம் குறித்து சங்கத் தின் தலைவர் எஸ். குமாரவேலி டம் தொடர்பு கொண்டு கேட்ட போது,

குறித்த இளைஞர் சேவைகள் மன்றத்துக்குப் புதிய நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட் டுள்ளதாகவும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டமைக்கான அறிக்கையுடன் மன்றத்தின் புதிய நிர்வாகிகள் கிராமிய வங்கிக்கு வருமிடத்து அந்தப் பணத்தை வழங்குவதில் தடை ஏதும் இல்லை.- என்று கூறினார். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் தீவிரமாக இடம்பெறும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

கிளிநொச்சி,ஒக்.14

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து கிளிநொச்சியில் டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நேற்று முன்தினம் தொடக்கம் முன்னெடுத்து வருகின்றன.

டெங்கு துரிதமாகப் பரவி வரும் நிலையில் டெங்கு நோய் விழிப் புணர்வு வேலைத் திட்டத்தின் மூலம் 'டெங்கு அற்ற கிளிநொச்சியை உறுதிப் படுத்துவோம்'. என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

இதில் பொது மக்களுக்கான விழிப்பு ணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், சிரமதான நடவடிக் கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

கிளிநொச்சி பொது சுகாதார பரிசோதகர்கள் டெங்கு பரவக்கூடிய இடங்களை இனங்கண்டு அடையாளப் படுத்தி கரைச்சிப் பிரதேச சபையினருக்குத் தெரியப் படுத்தும் போது அவ்விடங்களில் டெங்கு பரவக் கூடிய சூழ்நிலையை நீக்குவதற்கான சிரமதான நடவடிக்கைகளும் பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் கிளிநொச்சியில் டெங்கு பரவக்கூடிய இடங்களைப் பொதுமக்களும் இனங்கண்டு அவ்விடங்களை சுத்தப்படுத்துவதோடு உயிர்க் கொல்லி டெங்கு நோயை இல்லாமல் செய்து டெங்கற்ற சூழலை உருவாக்குவதற்கும் வீணான டெங்கு நோய் உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்குமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு உதவுமாறும் கரைச்சிப் பிரதேச சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(க-426)

## வவுனியா பொது நூலகத்தில் பார்வையற்றோர் பகுதி திறப்பு

வவுனியா,ஒக்.14

வவுனியா நகரசபை பொது நூலகத்தில் அமைக்கப்பட்ட பார்வையற்றோர் பகுதிக்கான திறப்பு விழாவும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகரசபை பொது நூல் நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'வெள்ளைப் பிரம்பு தினம்' தொடர்பான ஒஹான் நிறுவனப் பணிப்பாளர் வி.சுப்பிரமணியம், வவுனியா வைத்தியசாலை தலைவர் வைத்தியகலாநிதி ஐ.ஜி.சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா நகரசபைச் செயலாளர் வி.வசந்தகுமாரும் நன்றியுரையை வவுனியா நகரசபை பொது நூல்நிலைய பிரதம நூலகர் திருமதி பாமினி உருத்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இறுதியில் விழிப்புலனற்றவர்களுக்கு அரிமாச் சங்கத்தால் அன்பளிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

(ம-400)

## டெங்கு குறித்து விழிப்பாய் இருங்கள்

முல்லைத்தீவு,ஒக்.14

நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப் படுவதால் முல்லைத்தீவு மக்களையும் விழிப்பாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும் தமது சுற்றுப் புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர்.

நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து அவற்றைத் துப்புரவு செய்வதுடன், நுளம்புகளின் பெருக்கத்துக்கு உதவும் பொருள்கள், குப்பை கூழங்களை உடனடியாக அழித்து விடுமாறும் சுகாதாரப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.(க-500)



சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை ஏற்பாடு செய்திருந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தின்போது சுகாதார வைத்திய அதிகாரி ப. சத்தியலிங்கம் உரையாற்றுகிறார். ஊர்வலத்தில் நகரசபைத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்களும் நகரசபை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ம-421)

## வவுனியாவில் சுயதொழில் ஊக்குவிப்புக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கொடுப்பனவுகள்

வவுனியா, ஒக்.14

வவுனியா பிரதேச செயலகத்தில் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கென விண்ணப்பித்த பயனாளிகள் சிலருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெற்றதாக மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

மேலும் பின்வரும் பெயர் விவரங்களையுடையோருக்கு இந்தக் கொடுப்பனவு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் சுய தொழில் ஊக்குவிப்புக்கென விண்ணப்பித்த பயனாளிகள் பின்வருவோருக்கு ம்தலாம் கட்ட கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது என மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இவர்களின்பெயர் விவரம் வருமாறு:-

தவசீலன் சிவதர்சினி- 83, படிவம் 1, சேமமடு. முனியாண்டி குருநாதன்- 16, சரஸ்வதிபுரம், கல்மடு, அற்புதராசா பிற்றா- 16 விநாயகபுரம், வவுனியா, சிவராசா சதுர்சினி- செல்வநகர், செக்கட்டிபுலவு, துவஹீர பத்திலா- 2ம் ஒழுங்கை, வேப்பங்குளம், யதுகரன் லலிதா- சமயபுரம், வவுனியா, கந்த சாமி கெங்காதேவி -தம்பனைக்குளம் வீதி, நெளுக்குளம், இரத்தினராசா விக்னேஸ்வரி- பூவரசங்குளம், வவுனியா, நு.நந்தினி- 6ஆம் ஒழுங்கை தெற்கிலுப் பைக்குளம், சிவகுமார் லட்சுமிதேவி- முதலாம் ஒழுங்கை, குட்செட் வீதி, வவுனியா, விஜயகுமார் நாகேஸ்வரி- 5ஆம் ஒழுங்கை தரணிக்குளம், சிவராசா யோகமலர்- நாகர் இலுப்பைக் குளம் புதிய வீட்டுத்திட்டம், சிவபாலன் பவளவேணி-7ம் ஒழுங்கை, கணேசபுரம், வவுனியா, இராசரட் ணம்- தவமலர் 6ஆம் ஒழுங்கை வேப்பங்குளம், வவுனியா, ஜஸ்டின் ஞான சோதி- வீட்டுத்திட்டம், மறவன்குளம், வவுனியா, குணசேகரன் பத்மினி- காத்தார் சின்னக்குளம், வவுனியா, கோ.விக்னேஸ்வரி எல்லப்பர்- மருதங்குளம் வவுனியா, மேரி அனற்றீசா அமலதாஸ்- வீட்டுத் திட்டம், நாகர் இலுப்பைக்குளம்.

இவர்கள்தமக்குரிய கொடுப்பனவுகளை வவுனியா பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் செல்வி. நந்தினி தர்மலிங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-400)

## நிகழ்வுகள் இன்று

### கருத்தாடல்

வவுனியா,ஒக்.14

கைவிடப்பட்ட கிராமமான நனையன்குளம் கிராமம் தொடர்பான கருத்தாடல் 3 மணிக்கு வவுனியா நகரசபை பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அருணா செல்லத்துரை தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கிராமம் தொடர்பான விவரங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

இதேவேளை அருணா செல்லத்துரையின் தலைமையில் வவுனியாப் பிரதேசத்தின் மேற்கு மூலை, கிழக்கு மூலை ஆகிய பிரதேசங்களில் காணப்படும் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-400)

### முன்பள்ளி ஆசிரியர் தின விழா

கிளிநொச்சி,ஒக்.14

கிளிநொச்சி கல்வி வலயத்துககுட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முன்பள்ளி ஆசிரியர் தினவிழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிள்ளைப்பருவ விருத்திப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விழாவில் முதன்மை விருந்தினர்களாக முன்பள்ளி ஆசிரிய பெருந்தகைகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-405)

## கலைஞர் குழந்தையின் கலைப்பணியை பாராட்டி நயப்புமலர் வெளியீடு

மன்னார், ஒக்.14

முருங்கனைச் சேர்ந்த கலைஞர் குழந்தையின் கலைப் பணியைப் பாராட்டி நயப்பு மலரொன்று வெளியிடப்பட்டுள்ளது.

செ.செபமாலை என்ற இயற்பெயரைக் கொண்ட கலைஞர் குழந்தை, தமது கலை வாழ்வில் பல்வேறு சாதனைகளைப் புரிந்ததோடு ஏனைய கலைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இருந்து வருகின்றார். இந்த நிலையில் அவரின் கலைப் பணியைப் பாராட்டி அவருடனான தமது அனுபவங்களை அவரது கலையுலக நண்பர்கள், சககலைஞர்கள், அறிஞர் பெருமக்கள் இணைந்து எழுத்தில் பதிவு செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே 'கலைத்தவசி' என்ற பெயரில் கலைப்பணி நயப்பு மலராக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மலரின் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு அருட் தந்தை தமிழ்நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் கலந்து கொண்டார்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ். திருமறைக் கலாமன்ற பதில் இயக்குநர் ஜே. ஜே. ஜோன்சன் ராஜ்குமார் வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது கலைஞர் குழந்தையின் கலைப்பயணத்தில் இணைந்து பயணித்த கலைஞர்கள் சிலரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முருங்கனைச் சேர்ந்த நாடக நடிகர் செ.சீமான் 'அரங்க வேந்தன்' என்ற பட்டத்தையும், முருங்கனைச் சேர்ந்த மிருதங்கக் கலைஞர் செ. இயேசுதாசன் 'லயவேந்தன்' என்ற பட்டத்தையும், ஆவணத்தைச் சேர்ந்த செ. வேதநாயகம் 'ஒப்பனைச் செம்மல்' என்ற பட்டத்தையும் பெற்றனர்.

அமரர்களான முருங்கனைச் சேர்ந்த ப. அந்தோனிப்பிள்ளை, காத்தான் குளத்தைச் சேர்ந்த ஆசிரியர் சீ.இம்மானுவேல் ஆகியோரும் விசேட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம். சியான், அமதிகளின் யாழ். மாகாண முதல்வர் எம். போல் நட்சத்திரம் அடிகளார், யாழ்.பல் கலைக்கழக கிறிஸ்தவத் துறைத் தலைவர்பேராசிரியர்ஞா.பிலேந்திரன் அடிகளார் பேராசிரியர் அகஸ்ரின் சூசை, நானாட்டான் பிரதேச செயலாளர் க.அ.சந்திரஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம் ஆகியோரும் நானாட்டான் பிர தேச சபைத் தலைவர் ஏ.ரீ. அன்புராஜ் லெம்பெட்டும் கலந்துகொண்டனர்.

இம்மலரின் தொகுப்பு முயற்சியையும் விழா ஏற்பாடுகளையும் அருட்திரு அன்புராஜ் அடிகளார் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(க-12)

## கிளிநொச்சி கல்வி வலயத்தில் உலக உளவள தினம்

கிளிநொச்சி, ஒக்.14

கிளிநொச்சிக் கல்வி வலயத்தினால் உலக உளவள தினம் கொண்டாடப்பட்டுள்ளது. உலக உளவள தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவு மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி மு.ப 9.30 மணியளவில் கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் சி.இதயராஜா தலைமையில் உளநல நாள் நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சிவதாஸன் கலந்து கொண்டார், சிறப்பு விருந்தினராக ஜீ.ரீ.இசற் நிறுவன நிபுணத்துவ ஆலோசகர் சிவசாந்தி தம்பையா கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் கையில் சுடர் ஏந்தியவாறு விழா மண்டபத்தை அடைந்தனர். தொடர்ந்து வரவேற்புரையினை கிளிநொச்சி வலய வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஆனந்தசிவம் நிகழ்த்தினார். தலைமை உரையினை தொடர்ந்து கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர் க.முருகவேல், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் ஆகியோர் உரை நிகழத்தினர். தொடர்ந்து பாடசாலை மாணவர்களதும் ஆசிரியர்களதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாடசாலைகளில் நடைபெற்ற உளநல நாளை முன்னிட்டு மாணவர்களிடையே நடைபெற்ற ஆக்கங்கள் மற்றும் சஞ்சிகைகள் விழா மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க-405)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## ஒப்பந்தகாரர்கள் தேவை


மகா நிறுவனத்தால் A- 32 வீதி, நாவற்குழியிலிருந்து கேரதீவு துறைமுகம் வரைக்கும் உள்ள பாதை மெருகூட்டலுக்கு ஒப்பந்தகாரர்கள் தேவை.

★ வீதி இரு மருங்கிலும் புற்கள் பதித்தல்: 4000 $m^2$
★ வீதியின் நடைபாதையில் கற்கள் பதித்தல்: 4000 m

தொடர்பு: 021 3202 227
magacp4 @gmail.com

மகா என்ஜினியரிங் பிறைவேற் லிமிட்டட்,
கோயிலாக் கண்டி, நாவற்குழி, யாழ்ப்பாணம்.
(24138)(6-7-45)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், பிரதிஅதிபரும், பிரபல சத்திர சிகிச்சை நிபுணர்
**டாக்டர் ரவிராஜ்**
அவர்களின் மாமனாரும் ஆகிய

**அமரர் செல்லப்பா முத்துக்குமாரசமி**

அவர்கள் கடந்த (10.10.2012)புதன்கிழமை கெழும்பில் அமரத்துவமடைந்த செய்தி அறிந்து எமது ஆழ்ந்த துயரைக் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வைத்தியர்கள், நிர்வாகம் ஊழியர்கள், நியூமெடிக்கெயார் வைத்தியசாலை, சாவகச்சேரி.**
(சி/9400)

## மரண அறிவித்தல்கள்



**செல்லத்துரை பாக்கியம்**

அரியாலையை வசிப்பிடமாக கொண்ட செல்லத்துரை பாக்கியம் நேற்று (13.10.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57/37திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (சி/4143) (15-14)

*தகவல்:*
*பிள்ளைகள்.*

# செல்லர் துருநாயகம்



குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் துருநாயகம் நேற்று 13.10.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லர்-முத்தம்மா தம்பதியரின் அருமைமகனும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து லூர்த்தம்மாவின் அன்புக்கணவரும் கொன்சி (U.S.A),சுதா (U.K), புவனம் (U.K), பட்டு (கனடா), டக்ளஸ், குட்டிப்பட்டு (டென்மார்க்), காலஞ்சென்ற விஜயன் மற்றும் பைலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை தந்தையும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் தவம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யேசுராசா லைலா, பெரியடயஸ், றூபி, சிவராஜா நோபட், குட்டி, ஆர்த்தி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் நடராசா, துரைராசா, றீற்றா, பேபி மற்றும் சரசு (இத்தாலி), எலிசபெத் (U.K) மருசலின் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெபர்சன், ஜெபர்சினி, சுபாசினி, ரேணுகாவினி பிறிடா, ரினோ, சிந்துகா, தஞ்சோ, தனுஜா டெரின்சன், மயூரன், ஜெருசன், வில்லியம், கீர்த்தனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15-10-2012) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குருநகர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(24151) (6-7-10)

## மேஜர் சந்தன இடமாற்றம்

கொழும்பு,ஒக் 14

இராணுவ நீதிமன்ற விசாரணையின்போது குற்றம் நிருபிக்கப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரி மேஜர் சந்தன பிரதீப் இராணுவப் புலனாய்வுப் படைப் பிரிவிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் நிழல் படைப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறுகல் நிலை தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தின்போது, மேஜர் சந்தன பிரதீப் தனக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தித் தொழில் அதிபர் ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்கினார் என மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தெற்குப் பகுதிக்கான இராணுவப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியாக மேஜர் சந்தன பிரதீப் செயற்பட்டு வந்தார். (த)

## மண்ணில் புதையுண்டு சிறுமி சாவு

பலாங்கொடை, வலேகொட பிரதேசத்தில் மண்மேடொன்று சரிந்து விழுந்ததில் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வீட்டின் பின்புறத்தில் தனது தாயுடன் சேர்ந்து மண் அகற்றிக் கொண்டிருந்த வேலையில் மண்மேடு சரிந்து விழுந்ததால் மண்ணில் சிறுமி புதையுண்டுள்ளார். மண்ணில் இருந்து மீட்கப்பட்டு சிறுமி உடனடியாக பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் சிறுமி உயிரிழந்துள்ளார்.

தற்போது சடலம் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)

**பொதுக் கூட்டம்**

கல்வியங்காடுகிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சகல நிர்வாக உறுப்பினர்களையும் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ம-5)

## டயஸ் லேணர்ஸ்

01.10.2012 தொடக்கம் 31.10.2012 வரை சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பதிவு செய்யும் அனைவருக்கும் 10% கட்டணக்கழிவு வழங்கப்படுகிறது.

இல. 189, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே 0212219442
0777942312
(24157) (15-14)

## அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

"இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குத் தீர்ப்புகள்"

**கருத்தரங்கு**

*சட்டத்தரணிகளுக்கும் இந்து ஆலயமுகாமையாளர்களுக்கும் பயன் தரவல்ல நிகழ்வு*

இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குத் தீர்ப்புகள் நிர்வாகம் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை (20.10.2012) காலை 8.45 தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை யாழ்ப்பாணம், நல்லூர், கோயில் வீதி இல. 211/17 இல் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற பிராந்திய பணிமனையிலுள்ள இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறும்.

திரு. கனகநாயகம் கனக-ஈஸ்வரன் (ஜனாதிபதி சட்டத்தரணி) தலைமையிலான வளவாளர்கள் குழு விரிவுரைகளும் விளக்கங்களும் தருவர்.

பதிவுக் கட்டணம் ரூபா 500/= (கருத்தரங்கு ஆவணங்கள், மதிய சைவ உணவு மற்றும் தேநீர் உட்பட) ஆலயங்களின் பிரதிநிதிகளிடமிருந்து சகாயக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்படும்

மேலதிக விவரங்களுக்குத் தயவு செய்து தொடர்பு கொள்க:-

அகில இலங்கை இந்து மாமன்றம் இல. 91/5, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி. 011-2434990. 0712 723456

யாழ். பணிமனை: இந்து கலாசார நிலையம், இல. 211/17, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி. 021-2221075.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி 17-10-2012**
(சி/4141)(3.14.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 22.06.1972 — இறப்பு 16.09.2012

நிகழும் நந்தனவருடம் புரட்டாதி மாதம் 16.09.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த அன்புத் தெய்வம்.

**அமரர் ஆசைப்பிள்ளை ரூபதாஸ்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 14.10.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு. (23817)(8.14)
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



*செல்வி இராசையா சறோயினி (சறோ)*

கீரிமலை வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசையா சறோயினி நேற்று (13.10‸2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா மற்றும் அழகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், இந்திரன் ஐயா (நாககன்னி ஆலயப் பூசகர்), இராசாத்தியம்மா, இராசேஸ்வரி, விமலா, வசந்தா, சாந்தினி, ஜெயந்தினி, கணேசரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைராசா, நவரட்ணம் (இத்தாலி) ஆகியோரின் மருமகளும் நடேசு நேசம்மாவின் பெறாமகளும் தனபாலசிங்கம் காலஞ்சென்ற புஸ்பராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனுராஜ், தனுசியா, தனூபன், நிர்மலா, நிஷாந்தினி ஆகியோரின் அன்பு சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாககன்னி அம்மன் ஆலயம்**
**கீரிமலை வீதி, சித்தன்கேணி.** (24155)(6.9.14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு வீடு தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு 3,4,5 ஆம், குறுக்குத் தெருக்கள், சின்னக்கடை, கொய்யாத்தோட்டம், கொழும்புத்துறைவீதி உட்பட்ட பிரதேசத்தில் உடன் வீடு தேவை.

தொடர்பு : 077 9826 015

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
61, Kachcheri - Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliance jaffna@yahoo. com
(நக்கா வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டடம்)

(24083) (45-6-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்

**திரு. அங்கஜன் இராமநாதன்**

அவர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் வேலையில்லா பிரச்சினையினை தீர்க்கும் முகமாக 27.09.2012 அன்று எமக்கான அரச நியமனத்தினை பெற்றுத் தந்தமைக்காக எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது சேவை தொடரவும் வாழ்த்துகின்றோம்.

**சேவைய உதவியாளர் நியமனம் பெற்றோர்.**

(24071)(6.7.8)

## தேவை

உடன் தேவை. வீட்டுப்பணிப் பெண்கள் சம்பளம் 35,000/= உதவியாளர்கள் ஆண்கள் 27,000/= விபரங்களுக்கு - 077 4193 321

## வாகனம் விற்பனைக்கு

LC - xxxx என்ற தொடரிலக்கமுடைய 14½' நீளம் கொண்ட Mitsubishi hender

T.P : 077 7746535

(24128) (6.7.8)

## வான் விற்பனைக்கு

DOLPIN 253 xxxx இலக்கமுடைய வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 4293 446

(F/4135)(5-6-45)

## தேவை

திருநெல்வேலியில் புதிதாகத் தொடங்கவுள்ள உணவகம் ஒன்றுக்கு சமையல் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 2619 590

(சி/4132)(6-7-45)

## காணி விற்பனை

சென். யோசப் வீதி, ஏளன்புரம் கொழும்புத்துறையில் 2½ பரப்பு காணியில் சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 9893 061, 077 9333 317
ஜென்சின் லூட்ஸ்மரியா.

(24126)(6-7-45)

## பால் குளிரூட்டும் இயந்திரங்கள் விற்பனைக்கு

நவீன தொழில் நுட்பத்தில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, சுத்தம் செய்வதற்கு சுலபமாக வட்ட வடிவிலமைந்த, புத்தம் புதிய 500 லீற்றர் கொள்ளளவுள்ள பால் குளிரூட்டும் தாங்கிகள் விற்பனைக்கு உண்டு. ஏனைய கொள்ளளவுள்ள தாங்கிகளையும் பால் பதவிடும் இயந்திரங்களையும் ஓடர் செய்து பெற்றுகொள்ளலாம்.

★ஒரு வருட உத்தரவாதம், விற்பனைக்குப் பிந்திய சேவை, ஆலோசனைச் சேவைகள் ஆகியன உண்டு.

வெற் வோர்ல்ட் ரிறைவேற் லிமிட்டட்,
28, கிரேகரி ரினேஸ், தெகிவளை.
தொ.பே. 077 3300 802, 011 2717 359
தொலைநகல்: 011 2716 359

(சி/2005)(6-7-45)

## மரத் தளபாடம் விற்பனைக்கு

கொக்குவிலில் பழைய முதிரை, தேக்கு மரத்தினால் செய்யப்பட்ட அலுமாரி, கட்டில், கதிரை மற்றும்பொருள்கள் (மின் Electrical) விற்பனைக்குண்டு.

T.P : 077 0059394

(24118) (6.7.8)

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோயிலில் இருந்து 1½ கிலோ மீற்றர் தூரத்திலும் யாழ்.கல்வி வலயத்துக்கு அருகில் இல. 151, பிரதான செம்மணி வீதி ஓரமாக இரண்டு (02) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771851803 (22658) (2-6-25)

## பதவி வெற்றிடம்

1. Instructor (MSO, DTP)
2. Accounts Clerk
3. Sales Rep

விண்ணப்பங்களை 16.10.2012 முன் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்: 4409

C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி84134)(6-7-8)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த

(1) 1980 செவ்வாயற்ற 30 பாவம் BSc., MSc அரச உத்தியோகத்தர்,
(2) 1982 லக்கினத்தில் செவ்வாய் 18 பாவம் - வங்கியாளர்,
(3) 1983 செவ்வாயற்ற 37 பாவம் &Msc பொறியியலாளர்
(4) 1982 2இல் செவ்வாய் 12 பாவம் -அரச உத்தியோகத்தர்
(5) 1978 12 இல் செவ்வாய் 42 பாவம் -வங்கி உதவி முகாமையாளர்
(6) 1980 செவ்வாயற்ற 20 பாவம் -MBBS வைத்தியர்

இன்னும் பல அரச உத்தியோகத்தர்களுக்கும் வெளிநாட்டு மணமகன்களுக்கும், மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்பு:

**நாகபூசணி திருமண சேவை**

125, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 9306, 0771387596, 0755546000
Fax: 021 222 9306
E-mail: nakapoosanywedding@gmail.com

(24100) (6-7-10)

## வெளிநாட்டு பொருள்கள் மலிவு விலையில்

LAPTOP + TAP, கை மணிக்கூடு
Hom . Cinema set, Projector -
டிஜிற்றல் CAMERA - ITALY CEYCLE
RADIO. D.A.B. CD. என்பன
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
மல்ரிபாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 3001 763, 021 7912 783

(23992) (45.7.8)

## A/L பௌதிகவியல்/ இணைந்த கணிதம் தமிழ் /ஆங்கில மொழிகளில் 2013, 2014, 2012 A/L repeat

பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்து அனுபவம் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியரால் 20 வருட வினாத்தாள் உட்பட ஏராளமான பயிற்சிகளுடன் மேற்படி பாடங்கள் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு: ஆசிரியர்
R.பாலசுப்பிரமணியம் BSc (cy) DipEd
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
T.P-0776648751, 0775178727

(23210) (15-14)

## உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்த பன்னீராண்டு நினைவலைகள்



அமரர்
கணபதிப்பிள்ளை யோகலிங்கம்
ஜனனம்:
05.11.1948

செல்வி
யோகலிங்கம் தமிழரசி
ஜனனம்:
23.05.1975

அஸ்தமனம்: 26.09.2000

திதி: சதுர்த்தசி

கொடிய ஷெல் அரக்கனின்
கோரத் தாண்டவத்தில் - நீவிர்
பறந்தோடிச் சென்று பன்னீராண்டும் - ஆனதுவோ?
நல்லீசன் தாளில் நலமாக நீவிர் இருக்க
எந்நாளும் இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

சந்தை வீதி, கொடிகாமம். குடும்பத்தினர்.

(24123) 45.6.7

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.02.1936

மறைவு
26.09.2011

**பஞ்சவர்ணம்பிள்ளை**
**கிருஷ்ணமூர்த்தி**

(தேவி அச்சகம், ஸ்தாபகர் மூர்த்தி விளம்பரசேவை)

திதி : சதுர்த்தசி 14.10.2012

எங்கள் அன்பான அப்பாவே எமைப்பிரிந்து ஓர் ஆண்டு
கடந்தாலும் எம் நெஞ்சினில் நீங்கவில்லை
உங்கள் நினைவுகள் எப்போதும்
ஓய்வு விடாது எமக்காக உழைத்து
உன்னதமாக காலங்கள் பூமியிலே நீங்கள்
வாழ்ந்த காலங்கள் இனிமையாக எம்மை
அரவணைத்து அறிவுரை கூறிய காலங்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாது அப்பா

இன்று (14.10.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

உங்கள் நினைவுகளுடன் உங்களது
ஆத்மா சாந்தியடைய மாரியம்மனை பிரார்த்திக்கும்
அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8273

(24067)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க மொபிரெல் நிறுவனம் நடவடிக்கை




மொபிரெல் நிறுவனம் சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கும் செயற்பாட்டிற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. மொபிரெலினால் மேற்கொள்ளப்படும் இத்தகைய அனுசரணை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்து கட்டமைக்கவும், அதன் சிறுவர் சிநேகபூர்வமான தூரநோக்கினையும், சிறுவர்களுக்கான பாதுகாப்புச் சூழல்களையும் விருத்தி செய்யவும் உதவும்.

மொபிரெல் ஆரம்பகட்டமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 24 மணித்தியால அவசர அழைப்புச் சேவையான Child line- 1929 இனை மேம்படுத்தவுள்ளது.

பின்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அழைப்பு நிலையத்தினை, பயிற்சித் திட்டங்களுக்கூடாகவும், அதன் உட்கட்டமைப்புக்களை மேம்படுத்துவதன் மூலமும் வலிமையுள்ளதாக்கும்.

மேலும், சாட்சியமளிக்கும் சிறுவர்கொண்ட பாதுகாப்பு இல்லங்களை அமைப்பதற்குரிய நிதியினைப் பெற்றுக் கொள்ள பல நடவடிக்கைகளை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சார்பாக மொபிரெல் முன்னெடுத்துச் செல்லவுள்ளது.

''எமது சிறார்களையும், அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பது முக்கியமானது. அவர்களின் பாதுகாப்பு, எமது பொறுப்பாகும். அவர்கள் தமது முழு ஆற்றலினை அடைவதை நாம் உறுதி செய்தல் வேண்டும். சிறுவர் வதை, சிறுவர் தொழில் புரிதல் என்பன பாரதூரமான பிரச்சினைகளாகும். அவற்றை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

மொபிரெலில் சேவையாற்றும் நாம், எமது தேசிய கையடக்கத் தொலை பேசிச் சேவை வழங்குநர் என்னும் ஆணைக்கு அப்பாற் சென்று, எமது நோக்கமாகிய நாம் எவ்வேளையும் கவனம் செலுத்துகிறோம் என்பதற்கு ஏற்ப, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கருத்திட்டத்திற்கும், பணிகளுக்கும் எமது முழு ஆதரவினையும் வழங்குகின்றோம். என மொபிடெலின் தலைவரான நிமல் வெல்கம குறிப்பிட்டார்.

# தொழில் முயற்சியாளர்களுக்கு ஜனசக்தி விருது




இலங்கையின் மிகப் பெரிய காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான ஜனசக்தி, இலங்கை வர்த்தக சபையுடன்(FCCISL) இணைந்து எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள "Sri lankan Entreprneur of the year 2012" நிகழ்வில் உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களுக்கு அனுசரணையையும், விருதுகளையும் வழங்கவுள்ளது.

இந்த உயர் தேசிய விருதின் மூலம் உள்நாட்டு வியாபார சமூகம் தங்களது முயற்சியாண்மை மனப்பாங்குகளை வெளிப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை செலுத்தவும் முடியும். இந் நிகழ்வின் அனுசரணையாளர் என்ற ரீதியில் ஜனசக்தி நிறுவனமானது FCCISL உடன் இணைந்து தொழில் முயற்சியாளர்களின் சாதனைகளுக்கு அங்கீகாரம் வழங்கவுள்ளது.

ஜனசக்தி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவுகளின் பொது முகாமையாளர் செஹாரா டி சில்வா கருத்து தெரிவிக்கையில் ''ஜனசக்தி நிறுவனமானது தொழில் முயற்சியாண்மையுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு குறித்துப் பெருமையடைகிறோம். ஜனசக்தி நிறுவனம் உள்நாட்டு வியாபாரத்தில் தனக்கெனத் தனியான இடத்தினைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

சிறிய, நடுத்தர நிறுவனமாகத் தொடங்கிய ஜனசக்தி, தற்போது வியாபாரத் துறையில் 7 பில்லியன் வருமானத்தை கொண்டுள்ளதுடன், சந்தையில் அதிகளவில் செலுத்திய மூலதனத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தொழில் முயற்சியாண்மை என்பது சவால்களை எதிர்கொண்டு வியாபார வாய்ப்புகளைப் பெற்றுச் சந்தையில் நிலைபெறுதலை குறிக்கும். இவ்வருடம் 18 ஆவது வருட பூர்த்தியை கொண்டாடவுள்ள ஜனசக்தி, தமது வெற்றியை மீட்டிப்பார்க்கவுள்ளதுடன், அதை ஏனைய வியாபார நிறுவனங்களும் பின்பற்ற முடியும்.

ஜனசக்தி நிறுவனமானது தேசத்திற்கு 17 வருடங்களாக சேவையாற்றியுள்ளதுடன், இலங்கையின் காப்புறுதித் துறைக்கு பெருமளவில் பங்காற்றி வருகிறது.

இலங்கையில் பலம்வாய்ந்த வர்த்தக நாமமாக ஜனசக்தி காணப்படுவதுடன், நோக்கத்தின் அடிப்படையில் "Simply the best in all we do" என்ற கோட்பாட்டின் கீழ் சிறந்த சேவையினை வழங்கி வருகிறது என தெரிவித்தார்.

# எயார்ரெல் வழங்கும் நொக்கியா ஸ்மார்ட் போன்




எயார்ரெல் நிறுவனம் 41 MP sensor உடன் கூடிய புதிய Nokia 808 Pure View ஸ்மார்ட் போனை அறிமுகம் செய்துள்ளது.

இதில் Carl Zeiss வில்லைகள், Dolby வசதியுடனான ஹெட்போன்கள், Dolby Digital Plus தொழில்நுட்பம் போன்றவை உள்ளடங்கியிருக்கின்றன.

இதன் அறிமுகத்தோடு விசேட போட்டியும் நடத்தப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள எயார்ரெல் விற்பனை நிலையம் அல்லது அங்கீகாரம் பெற்ற Softlogic விநியோகத்தரிடம் இருந்து புதிய ஸ்மார்ட் போனைக் கொள்வனவு செய்யும் சகல எயார்ரெல் வாடிக்கையாளர்களும் போட்டியில் பங்கேற்கலாம்.

இதன் கீழ், எயாட்ரெல் ஸ்மார்ட் போனுடன், இலவச குரல், SMS, தரவுகள் ஆகியவை அடங்கிய விசேட முன்/பின் கொடுப்பனவுத் தொடர்புடன் கூடிய பொதியும் வழங்கப்படும்.

இந்தப் பொதியைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் இயல்பாகவே போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். இதன்மூலம், கையடக்கத் தொலைபேசி கொள்வனவுக் கட்டணம் முற்றாக நீக்கப்படும்.

இந்தப் போட்டியின் பெயர் 'கிளிக் செய்யுங்கள், வெல்லுங்கள்' என்பதாகும். இதில் பங்கேற்கும் வாடிக்கையாளர்கள் 2012 ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் புதிய Nokia 808 Pure View ஸ்மார்ட் போனைப் பயன்படுத்தி ஒரு ஸ்தலத்தையோ, காட்சியையோ படம்பிடித்து, அந்தப் படத்தை Airtel Lanka வின் Face book பக்கத்தில் தரஏற்றம் செய்ய வேண்டும்.

# இலங்கையில் IBM அறிமுகப்படுத்தும் Pure Systems மற்றும் Mx 4 முறைமைகள்

இலங்கை நிறுவனங்கள் கூடுதலான செயற்திறன், வேகம், எளிமை, கட்டுப்பாடு ஆகியவற்றுடன் இயங்க வழிவகுக்கும் விதத்தில் தகவல் தொழில்நுட்பம் மீதான எல்லையற்ற மற்றும் சிறப்பான அணுகுமுறையைப் பெறுவதற்கு IBM நிபுணத்துவ ஒருங்கிணைப்பு முறைமைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்த நிறுவனம் தனது சகல துறைகளிலும் பகுப்பாய்வு ஆற்றல்களை விஸ்தரித்து, இலங்கையின் வாடிக்கையாளர்களுக்கு அறிவுசார்ந்த கணினிப் பயன்பாட்டை யதார்த்தமாக்கும் வகையில் புதிய சேர்வர் தீர்வுகளையும் அறிமுகம் செய்கிறது.

2013இல் சேர்வர்களை கையகப்படுத்தல். வலுவூட்டல், முகாமைத்துவம் ஆகிய முயற்சிகளுக்காக நிறுவனங்கள் 247 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழிக்கக் கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செலவினங்களின் பெரும்பாலான பகுதி முகாமைத்துவ செலவினங்களில் இருந்து ஒதுக்கப்படவுள்ளது. இது தகவல் தொழில்நுட்பத்திற்கான செலவினங்களில் 69 சதவீதத் தொகையாகும். IBM இன் நிபுணத்துவ ஒருங்கிணைப்பு முறைமைத் தொகுதியானது Pure Systems என்றழைக்கப்படுகிறது.

இது பௌதிக மற்றும் கட்புல மூலங்கள் அடங்கலாக சகல தகவல் தொழில்நுட்ப மூலங்களையும் ஒருங்கிணைப்பதற்காக IBM முன்னெடுத்த எதிர்பாராத நடவடிக்கையின் பலனாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, 2 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி, சுவீகரிப்பு முதலான செயற்பாடுகளின் பலாபலனாகும்.

# SLIIT உடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்கிடுங்கள்



இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையமான SLIIT இளம் தலைமுறையினரை தகவல் தொழில்நுட்ப நிபுணர்களாக மாற்றும் எண்ணத்தில் புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, இலங்கையில் தகவல் தொழில்நுட்ப உயர் கல்வி விருதுகளை வழங்கும் நிறுவனமாக SLIIT திகழ்வதோடு, மாணவர்களுக்கு பரந்துபட்ட கல்வி வாய்ப்புகளையும் வழங்குகிறது.

இக் கல்வி நிலையமானது மாணவர்களின் திறமைகளுக்கு ஏற்ப சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வியினை இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தொடர்வதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

SLIIT கல்வி நிலையமானது அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்படுகிறது.

''உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மாணவர்களின் எதிர்காலக் கனவினை நிறைவேற்றிக் கொள்வதற்கான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது எமது இலக்காகும்'' என SLIIT கல்வி நிலையத்தின் தலைவர் பேராசிரியர். எஸ்.கருணாரத்ன தெரிவித்தார்.

SLIIT இன் கணினிப் பிரிவில் நடத்தப்படும் இப் பாடத்திட்டம் ஊடாக மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையை வழங்குவதுடன், போட்டியான வேலைச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய வகையிலான தேர்ச்சியினையும் வழங்குகிறது என்று அவர் மேலும் கூறினார்.

SLIIT நிறுவனமானது தேசிய ரீதியில் 16,000 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை உருவாக்கியுள்ளது என SLIIT கல்வி நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர். லலித் கமகே தெரிவித்தார்.

# மைக்ரோசொவ்ட் நிறுவனம் வழங்கும் Windows 8 Upgrade பக்கேஜ்

இம்மாதம் வரவுள்ள Windows 8 Upgrade தொகுப்பை எதிர்பார்த்திருக்கும் பாவனையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்க மைக்ரோசொவ்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 2013 ஜனவரி 31 வரை ஹோம் பேசிக் அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவைச் சேர்ந்த வின்டோஸ் 7 கொள்வனவு செய்யும் பாவனையாளர்களுக்கு 14.99 அமெரிக்க டொலர்களுக்கு Windows 8 Upgrade பெக்கேஜைப் பதிவிறக்கம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை மைக்ரோசொவ்ட் வழங்குகின்றது.

அண்மையில் வெளியான புதிய நடவடிக்கை Windows 8 Preview யை மைக்ரோசொவ்ட் தமது பாவனையாளர்களுக்கு வழங்குகின்றது.

இதன்மூலம் Windows 8 இல் அமைந்துள்ள ஆரம்பத் திரையை தேவையானவாறு மாற்றும் வசதி, மேம்படுத்தப்பட்ட மல்டி கணினித் திரை உதவி, Windows Store மூலம் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளும்போது புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அனுபவம், புதிய family safety ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

Windows 8 கிடைக்கும் live tiles வேகமாக எதிலும் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பதை பாவனையாளர்களுக்கு வழங்குகின்றது.

இலகுவாக்கப்படும் personalize முறைமூலம் ஈமெயில், கலண்டர், புகைப்படத் தொகுப்பு ஆகியவற்றுடன் இணைந்துகொள்ளும் அதேவேளை செய்தி, விளையாட்டு, வரைபடம், கால நிலை, நிதி ஆகிய துறைகளை சேர்ந்த புதிய தொடர்புகளையும் ஏற்படுத்தலாம்.

இத்துடன் இணைந்து காணப்படுகின்ற Internet explorer 10 இணையத்தளத்துடன் மிக வேகமாக இணைந்துகொள்ளக்கூடிய வகையில் உள்ளது.

இதனை Upgrade செய்வதற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட www.windowsupgradeoffer.com இணையதளத்தில் பிரவேசித்து இச்சலுகையைப் பதிவு செய்துகொள்ளும் சந்தர்ப்பம் பாவனையாளர்களுக்குக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 85

# இனப்பெருக்கத் தொகுதி மற்றும் குருதியினூடாகக் கடத்தப்படும் நோய்கள்

தற்போதைய சூழ்நிலையில் குருதி, இனப் பெருக்கத் தொகுதி மற்றும் ஊசிகள் மூலம் கடத்தப்படும் நோய்களின் தாக்கத்துக்குட்படுப வர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இந்தநோய்கள் கடத்தப்படும் முறைகள், நோய் அறிகுறிகள், நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப் படுத்தும் வழிமுறைகள் பற்றி பொது மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

2005 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அறிக்கையின் படி உலக சனத்தொகையில் 15-49 வயதுக்குட்பட்டவர்களில் ஒவ்வொரு ஆண் டும் 448 மில்லியன் பேர் புதிதாக இனப்பெருக்கத் தொகுதியினால் கடத்தப்படும் நோய்களின் தொற் றுக்கு ஆளாகின்றனர். இலங்கையில் இனப்பெருக் கத் தொகுதியூடாகக் கடத்தப்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

உலக சனத்தொகையில் ஒவ்வொரு ஆண்டும் 2 பில்லியன் பேர், ஈரல் அழற்சி வைரசின் தொற் றுக்கு இலக்காவதோடு, ஒவ்வொரு ஆண்டும் 600,000 பேர் கெப்பரைரிஸ் B (Hepatitis B) வைரசினால் ஏற்படுத்தப்படும் ஈரலழற்சி நோயினால் இறக்கின் றனர். ஒவ்வொரு வருடமும் 150 மில்லியன் பேர் கெப்பரைரிஸ் C (Hepatitis C) வைரசின் தொற்றுக்கு இலக்காவதோடு ஒவ்வொரு ஆண்டும் 350000 பேர் Hepatitis C வைரசினால் ஏற்படுத்தப்படும் ஈரல் நோய்களினால் இறக்கின்றனர்.

**நோய்கள் கடத்தும் முறைகள்**

இனப்பெருக்கத் தொகுதி மூலம் கடத்தப்படும் நோய்கள் பிரதானமாக உடலுறவின் போதே ஒருவரிலிருந்து மற்றையவருக்கு கடத்தப்படுகிறது. அவற்றுள் HIV மற்றும் சிபிலிஸ் வைரசுக்கள் இழையப்பரிமாற்றம், குருதிப் பரிமாற்றம் மூலமா கவும் பிறப்பின் போதோ கருவுற்றிருக்கும் போதோ தாயிலிருந்து குழந்தைக்குக் கடத்தப்படுகின்றது.

Hepatitis B வைரசானது நோய்த் தொற்றுடைய குருதி வேறொருவருடைய குருதியை அடைவதன் மூலமும், வியர்வை, கண்ணீர், உமிழ்நீர், சுக்கிலப் பாய்பொருள்,யோனிவழி சுரப்புக்கள், மாதவிடாய் குருதி, தாய்ப்பால் மூலமாகவும், தொற்றுடையவருக்கு பயன்படுத்திய ஊசி, சத்திரசிகிச்சை உபகரணங்கள், பாதுகாப்பற்ற குருதிப்பரிமாற்றம், பச்சை குத்துதல், மகப்பேற்றின் போது தாயிலிருந்து குழந்தைக்கும், பாது காப்பற்ற உடலுறவின் மூலமும் கடத்தப்படுகின்றது.

கெப்பரைரிஸ் C (Hepatitis C) வைரசானது நோய்த் தொற்றுடைய குருதி வேறொருவருடைய குருதியில் கலப்பதன் மூலமும், பாதுகாப்பற்ற குருதிப் பரிமாற்றம் மற்றும் தடுப்பூசி ஏற்றும் முறை, ஊசி மூலமான போதைவஸ்துப் பாவனை, மகப்பேற்றின் போது தொற்றுடைய தாயிலிருந்து குழந்தைக்கு, பாதுகாப்பற்ற உடலுறவு மூலமாகவும் கடத்தப்படுகிறது.

**நோய் அறிகுறிகள்**

இனப்பெருக்கத் தொகுதியினால் கடத்தப்படும் நோய்களுக்குரிய அறிகுறிகள்:

1.சிறுநீர் கழிக்கும் போது நோவு/எரிவு ஏற்படுதல்
2.அடிவயிற்றில் வலி ஏற்படுதல்
3.ஆண் அல்லது பெண் இனப்பெருக்க உறுப்பிலிருந்து திரவம் வெளியேறுதல்
4.உடலுறவின் போதான வலி
5.விதையில் வலி ஏற்படுதல்
6.அசாதாரணமான மாதவிடாய் குருதிப்பெருக்கு
7.இனப்பெருக்க உறுப்பு மற்றும் மலவாசலில் அரிப்பு ஏற்படல்

**ஈரலழற்சி நோய்க்கான அறிகுறிகள்**

1.உணவின் மீதான நாட்டம் குறைதல்
2.களைப்பு
3.இலேசான காய்ச்சல்
4.தசை மற்றும் மூட்டுவலி
5.வாந்தி அல்லது வாந்தி ஏற்படுவது போன்ற உணர்வு
6.வயிற்றுவலி

**நோய்களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

இனப்பெருக்கத் தொகுதியினூடாக கடத்தப் படும் நோய்களுக்கான தடுப்பு முறைகள்

1.பாதுகாப்பான உடலுறவைப் பேணுதல்- தொற் றற்ற துணையுடன் உடலுறவைப் பேணுதல்
2.உடலுறவின் போது ஆண், பெண் உறைகளை (Condoms) உபயோகித்தல்
3.தடுப்பூசிகளை உபயோகித்தல்-தடுப்பூசி மூலம் Human papilloma கெப்பரைரிஸ் B (Hepatitis B) வைரசினாலான தொற்றைத் தடுக்க முடியும்.
4.நோயறிகுறிகள் உள்ளவர்கள் மட்டுமல்லாது, நோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமுள் ளவர்களும் மருத்துவ ஆலோசனையை நாடுதல் வேண்டும்
5.வினைத்திறனான மருத்துவ ஆலோசனை களை வழங்கும் வகையில் சுகாதார சேவைகளை விரிவுபடுத்துதல்
6.நோயுள்ளவர்களுக்கு ஆதரவு மற்றும் உளவளத்துணை ஆலோசனைகளை வழங்குதல்.

**கெப்பரைரிஸ் (Hepatitis) வைரசினால் கடத்தப்படும் நோய்களுக்கான தடுப்பு முறைகள்.**

1. Hepatitis வைரசினால் ஏற்படும் தொற்றுக்கள் சம்பந்தமான பூரண அறிவையும், விழிப்புணர் வையும் மக்களுக்கு ஏற்படுத்துதல்.
2.ஈரல் அழற்சி வைரசிற்கு எதிரான தடுப்பூசி களை ஏற்றுதல்.
3.பாதுகாப்பான முறையில் ஊசி ஏற்றுதல்.
4.பாதுகாப்பான முறையில் உடலுறவு கொள் ளுதல் மற்றும் உடலுறவு கொள்ளும் போது பாது காப்பு பொறிமுறைகளைப் (Condoms) பயன்படுத் துதல்.
5. ஊசி மூலமான போதை வஸ்து பாவனை யைத் தடுத்தல்.
6.பாதுகாப்பான குருதிப்பரிமாற்றம் பற்றிக் கவனம் செலுத்துதல்.
7.ஆரம்பத்திலேயே நோய்த்தொற்றினை இனங் கண்டு சிகிச்சை வழங்குதல்.
8.நோய்த்தொற்று உடையவர்களிலிருந்து மற்றவர்களுக்குத் தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற் கான நடவடிக்கைகளை எடுத்தல்.

**செல்வி.ஜெ.ஜெனனி, செல்வி.கே.பவித்திரா, செல்வன்.எம்.ஆர்.முனாஸ்.**
மருத்துவபீட மாணவர்கள்.

# முகப்பருக்களைக் குறைக்க



முகத்தின் அழகைக் கெடுப்பதில் முகப் பருக்களும் முக்கிய இடத்தை பிடிக் கின்றன. இளம் வயதினரிடையே இது ஒரு முக்கிய பிரச்சினையாகவும் இருக்கி றது. சிலருக்கு மாறாத வடுக்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. பொதுவாக முகப்பருக்கள்.

1. எமது தோலின் கீழ் காணப்படும் நெய்சுரப்பிகளால் சுரக்கப்படும்- Sebum எனும் திரவப் பொருள் அதிகமாக சுரக்கும் போது முகப்பருக்கள் தோன்றும் வாய்ப்பு உண்டு. சுரக்கப்படும் அளவை பொறுத்து பருக்களின் அளவும் வேறு படும்.

2. இலிங்க ஓமோன்கள் இளம் பருவத்தில் அதிக மாகச் சுரப்பதாலும் பருக்கள் இப்பருவத்தில் அதிகமாக தோன்றும்.

3. எமது தோலில் காணப்படும் பக் ரீரியாக்கள் தோலின் கீழ் உள்ள நெய் சுரப்பிகளில் தொற்றுக்களை ஏற்படுத் துதல்.

4. சிலருக்கு பாரம்பரிய காரணிகள் செல்வாக்கு செலுத்துதல்.

5. எமது சருமத்தை பிரகாசமாக்கப் பயன்படும் அழகு சாதனப் பொருள்கள் உதாரணம் Tars, Chlorinated Hydrocabons போன்ற பொருள்கள்.

6. அதிக வெப்பம்.

7. முகத்தில் அதிகளவில் எண்ணெய் இருப்பது இதனால் அழுக்குகள் படிந்து அப்படியே சருமத்தில் தங்க வைத்து விடுகின்றன. இதனால் தோலின் துளைகளில் அடைப்புகள் ஏற்பட்டு பருக்கள் ஆக மாறிவிடுகின்றன.

8. மலச்சிக்கல்.

9. சுற்றுப்புறச் சூழல் மாசுபடுதல். போன்ற பல காரணங்களால் முகப் பருகள் ஏற்படுகின்றன.

எனவே முகப்பருக்களைக் குறைக்க நாம் கடைப்பிடிக்க வேண்டியன சில.

★ ஒரு நாளைக்கு 5-6 முறை முகத்தை சுத்தமாக கழுவுதல். எண்ணெய் பசை அதிகமாக உள்ள சோப்புக்கள் பாவித் தலைத் தவிர்த்தல்.

★ அதிகளவு நீர் அருந்துதல்.

★ பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைவகைகளை உணவில் அதிகமாக எடுத்தல்.

★எமது தோலுக்கு பாதுகாப்பு அளிக்க கூடிய விற்றமின் A, விற்றமின் E, நியாசின் நாகம் உள்ள உணவுப் பொருள் களை எடுத்தல்.

★ சருமம் வரண்டு போகாமல் இருப் பதற்கு கிளிசரின், Olive oil பாவித்தல்.

★ உடலைக் குளிர்ச்சியாக வைத்தி ருக்க கூடிய உணவுகள் பானங்கள் எடுத்தல்.

★ நீராவி முகத்துக்கு பிடித்தல்.

★ பருக்கள் தோன்றினாலும், அவற் றைக் கிள்ளவோ, நசுக்கவோ, உடைக் கவோ கூடாது. இதனால் வடுக்கள் வருவதற்குரிய வாய்ப்புக்கள் உண்டு. வைத்தியரிடம் காட்டி ஆலோசனை பெறுதல் அவசியம்.

★ காற்றோட்டமான சூழலில் வசித்தல்.

★ தீவிரமாக இருப்பின் வைத்திய ஆலோசனை பெறுதல்.

**யோ.சிவாகரன்**
**வைத்தியர்**
**யாழ்.போதனா வைத்தியசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

44 கோண் பிஸ்கட் உற்பத்தி செய்யக்கூடிய மெசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 8285 872

(24043)(6-7-45)

## ஆசிரியர் தேவை

மருதனார்மடம், உடுவில் பகுதியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு தரம் 01-05 வரை கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை.

தொடர்பு : 077 5922 236, 077 2263 899

(24085)(6-7-45)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP XO-XXXX இலக்கமுடைய 8000 KM ஓடிய Pulser 150 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

நிறம்: சிவப்பு&கறுப்பு (புதியவகை)

தொடர்புகளுக்கு: 075 24 84 550

வீசிங் மாற்றப்படும் அல்லது புர்த்தி செய்து தரப்படும்

(24209)(6.7)

## காணி விற்பனைக்கு

தொட்டிலடி சந்தியிலிருந்து பண்டத்தரிப்பு செல்லும் பிரதான வீதியில், தொட்டிலடி சந்தியிலிருந்து 01Km தூரத்தில் 14 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு : 021 3007 161

(பி.ப. 6.30 தொடக்கம் இரவு 9 மணிவரை)

(24111)(6-7-45)

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் ரைக்டர் திருத்தும் நிறுவனத்திற்கு மெக்கானிக் மற்றும் கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. முழு விபரத்துடன் கீழ் வரும் விளம்பர இலக்கத்திற்கு உங்கள் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கவும்.

(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)

விளம்பர இல.4408,
C/o. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4092) (45-6-7)

## கணிதம் -MATHS

தரம்-9,10,11 மாணவர்களிற்கு தமிழ்/ ஆங்கில மூலமான வகுப்புக்கள் தனியாகவோ/ குழுவாகவோ கற்பிக்கப்படும். தரம் -11 மாணவர்களிற்கு துரித மீட்டலுடன் கடந்த கால வினாக்கள் செய்து காட்டப்படும்.

தொடர்பு: 077 613 9307

(24110)(5-6-7)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு ஏ-9 வீதியில் இருந்து 300m தூரத்தில் 25½ பரப்பு தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 0646 218,077 6687 714

(24117)(2.6)

## Inter Language Co-Operation Center

**சிங்கள மொழி பேசுவதற்கான ஐந்து நாள் பாடநெறி.**

அரச ஊழியர்களுக்கும் சிங்களம் கற்க விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். வகுப்புகள் வார இறுதியில் (சனி,ஞாயிறு) 50 மணித்தியாலங்கள்.

பாடநெறி நடைபெறும் இடங்கள்:

★ யாழ்ப்பாணம் ★முல்லைத்தீவு
★கிளிநொச்சி ★ வவுனியா

பாடநெறிக் கட்டணம் ரூபா 2000/= பாடநெறியின் இறுதியில் நடத்தும் நேர்முகப் பயிற்சியில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பாடநெறியை கற்க விரும்புபவர்கள் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி: பதிவாளர்
I-L.C.C
14, கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி. (23838)(5 6 7)

தொ.பே.: 077 635 9662,

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் 2¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிணறும், நான்கு பக்கமும் மதில்களும் உண்டு.

தொடர்பு:- 0776146434

(23995)(5.6.7)



## ஆண்மை குறைவால்

குழந்தைகள் இல்லையே என்ற கவலையா?
வீரியம் அதிகரிக்க,
குழந்தை பாக்கியம் பெற

ஆலோசனைக்கு அழையுங்கள் 0750 252 141

(சி/3986)(6-7)

## காணி விற்பனைக்கு

சங்கானை,பிரான்பற்று வீதி, நிகரை வைரவர் கோயிலுக்கு அருகில் 11 பரப்பு காணி மேல்வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. சங்கானை பஸ்நிலையத்தில் இருந்து (150 யார் தூரம்)

தொடர்பு:
077 6096 327, 077 6529 303,
077 6513 783 - க. நல்லநாதன்.

(சி/4109) (45-6-7)

## விற்பனையாளர் தேவை

பிரபல K.V. Printers புத்தக விற்பனை நிலையத்துக்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை.

A/L சித்தியடைந்தவர்கள் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. ஆரம்ப சம்பளமாக ரூபா 8000/= வழங்கப்படும் அதன் பின் அதிகரிக்கப்படும்.

(30 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 386, மணிக்கூட்டு வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே. 077063 3116

(24122) (45.6.7)

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபைக்குட்பட்ட மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் சகல வசதிகளுடனும் வாகனத் தரிப்பிடத்துடனும் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு : 078 8966 635,077 0250339

(24093)(6-7-45)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1977 இல் பிறந்த 2 ஆம் இடத்துசெவ்வாயும், குருவும் உள்ள சொந்தமாக வியாபாரம் செய்யும் வரனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : 077 1693 478

(24090)(6-7-45)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1975 அத்தம் 15 பாவம் U.K. Citizen (Oil Company Manager) மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: அம்பிகை திருமண சேவை
077 0783832

ambikai 305@yahoo.Com

(24101)(6-7-45)

## கார் விற்பனைக்கு

Hs - x x x x இலக்க
Porton wera
கார் விற்பனைக்குண்டு
P/S, P/W, P/M, A/W, A/C
விலை. 680 000/=

தொடர்பு : 077 2378 053

(24093)(6-7-45)

## வைத்தியம்

உடைவு முறிவு, மூட்டுக்கள், மூட்டுவாதம், பக்கவாதம்,. தசைநெரிவு நாள்பட்ட நோவு விசேஷமாக முள்ளந் தண்டு சம்பந்தமான நோய்களுக்கு சித்த ஆயுள் வேத முறைப்படி சிகிச்சைகள் அளிக்கப்படும். நாள்கள்: ஒவ்வொரு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை. பதிவுகளை முன்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு : 077 6544338

இடம் : யாழ். சிவன் கோயிலடி வைத்தியசாலை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(கோப்பாய் A.G.A காரியாலயத்திற்கு முன்பாக)

வைத்தியர் : Dr.சோமசுந்தரம், T.விஜயன் Reg No:8688

(23144)(6-7-8)

## வேலைக்கு ஆள்கள் தேவை

புடைவை நிலையத்தில் வேலை செய்யக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. பழகவிரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(நேரில் தொடர்பு கொள்ளவும்)

லைடன் புடைவையகம்.
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(24087)(6.7.8)

## IELTS

A1 B1 B2

Knowledge University Sri Lanka

October/27th Exam in Jaffna Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

(சி/3850)(6-7)

## October 24, விஜயதசமி அன்று வித்தியாரம்பம்.

## BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| Play Group | Montessori | Pre School |
|---|---|---|
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

**கற்பித்தல் முறை:**

★ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method

★ தமிழ் கட்டாய பாடம்.

★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்

★ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.

★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

**பாலர் பாடசாலை வளாகங்கள்**

| | |
|---|---|
| நல்லூர்: 140, கோயில் வீதி. | நீர்வேலி: 1வது மைல் கல் இராச வீதி |
| கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| சுன்னாகம்: Lakshmi Cottage புதிய நீதிமன்றம் அருகில் K.K.S வீதி | புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம் மந்திகை |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

- **Certificate in English** — இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
- **Diploma in English** — G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
- **ESOL A1, A2** — Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
- **IELTS** — உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

★ Pre Foundation
★ Foundation
★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

(சி/4077)(6-7)

## BRITISH BUSINESS COLLEGE

140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

## KALAIMAGAL INTERNATIONAL COLLEGE, KOKUVIL

NOTHING IS IMPOSSIBLE

**ஆங்கில மொழி மூல முழுநேர தனியார் பாடசாலை.**

இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை.

★Play group முதல் G.C.E (A/L) வரை.

★Play group முதல் Grade - 5 வரை Oxford பாடத்திட்டமும் Grade- 6 முதல் G.C.E (A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் கற்பிக்கப்படுகின்றது.

★தமிழ், சமயம் போன்ற பாடங்கள் தமிழிலும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்திலும் சிங்களம்/ French விருப்பத்திற்குரிய பாடமாகவும் கற்பிக்கப்படும். கல்விக் கொள்கை.

மேற்படி கல்லூரிக்கான 2012-2013 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதால் கீழ் வரும் எமது கல்லூரியின் கிளைகளில் உங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 25 NOVEMBER 2012**

★ Church Lane, Kokuvil east, Kokuvil.

★ Nunavil east, Kandy Road, Chavakachcheri.

★இந்து அ.த.க. பாடசாலை ஒழுங்கை வல்வெட்டி. (இந்து அ.த.க. பாடசாலை அருகில்)

★ இல. 234, சில்வா வீதி, வட்டக்கச்சி.

★வங்களா வெளி, வேலணை. (தபாற் கந்தோர் அருகில்)

★ மார்க்கற் லேன், தண்ணீரூற்று, முள்ளியவளை.

★ கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய் (பிள்ளையார் ரான்ஸ்போட்)

★ டிப்போ றோட், மார்க்கற் பின்புறம், கிளிநொச்சி.

★ ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி.

★ தம்பசிட்டி றோட், பருத்தித்துறை.

★ புலோப்பளை றோட், பளை.

மேலதிக விவரங்களுக்கு :- 021 492 3238, 021 492 3235
077 297 5058, 077 490 4286

(24068)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
மாணவி
**சுருதிகா சரவணகுமார்**
அவர்கள் 2012 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பாராட்டுவதுடன் அவர் கல்வியிலும், வாழ்க்கையிலும் சிறந்து மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ சாந்தையர் மட விநாயகரின் அருள் வேண்டி வாழ்த்தி இத்தருணத்தில் இவருக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

Best Wishes
வாழ்த்துவோர்: தாத்தா. அம்மம்மா. அப்பம்மா. மாமாமார். அத்தைமார். சித்தி
369/1; K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (24084)(6.7.8)



# Repairing

* LED/LCD T.V DVD Car Set, Hi - Fi Set
* Digital Camera
* Mobile Phone
* Washing machine, Refregerator
* Computer Trouble Shooting

அனைத்து வகையான இலத்திரனியல் பொருள்களும் ஒரே இடத்தில் மிக சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.

**JAYAM ELECTRONICS**
339, K.K.S. Road, Jaffna (மனோகரா தியேட்டருக்கு அருகில்)
021 4921950 (சி/3880)(6.7.8)



## தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புக்கள் உடன் வாருங்கள்

எங்கள் பிரதான தொழிற்சாலை மூலம் ஜாம், பிஸ்கட், டொபி, டயர், கோடியல், தேயிலை, பால்மா, நுளம்புச் சுருள், பீங்கான் உற்பத்தி மற்றும் குளோஸ் உற்பத்தி பகுதியில் 100 ற்கும், லேபல் ஒட்டுதல் பிரிவுக்கும், தரம் 6 முதல் A/L வரை பயின்ற 17 முதல் 55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். நண்பர்கள் குழுவாக ஒரே இடத்தில் தொழில் புரியலாம். வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் விசேடமாக இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.
**சம்பளம் 38000/- முதல் தொடர்புகளுக்கு: 071 3460295**

உங்களுடைய திறமைக்கேற்ப சம்பளம் வாருங்கள், எங்களுடன் சேருங்கள். துறைமுகம், தனியார் வேல்டர் சாரதிகள், உதவியாளர், விமான நிலைய கிளினிங் கேட்ரிங் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகிய பிரிவுகளுக்கு 18 முதல் 55 வரை சேவையாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். JCB Forkilf ஸ்கே வெயிட்டர், வீல்லேடர் உதவியாளர் தேவை. சம்பளம் 18,000 முதல் 50,000/- வரை இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள்.
**தொடர்புகளுக்கு: 0713460295**
(20924) (6-7-10)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1941 - 04 - 07
மறைவு 2011 - 09 - 26

அமரர்
**கணபதிப்பிள்ளை செல்வராசா**
திதி : சதுர்த்தசி (14.10.2012)

எம் குல விளக்கே...
ஆண்டு ஒன்று ஆனதப்பா
ஆறவில்லை எம் சோகம்
ஒன்றல்ல ஆயிரம்
ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு
வானுலகம் சென்றாலும்
அரனடியில் இருந்து
ஆசி கூறுங்கள் அப்பா.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முத்துமாரி அம்மன் வீதி,
மட்டுவில் வடக்கு.
சாவகச்சேரி.

என்றும் உங்கள்
நினைவில் வாடும்
குடும்பத்தினர்.

(21547) (6,7,10)


## இந்து ஸ்வயம் ஆரம்பக் கூட்டம்

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவு கிளையின் ஆரம்பக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி ஆவரங்கால் சிவ சக்தி மணி மண்டபத்தில் நடைபெற்றது. சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனன தினத்தைக் கொண்டாடுவது, மதமாற்றம் செய்யப்படுவதை தடுப்பது, இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் திருடப்பட்டு கடத்திச் செல்லப்படுவதை தடுத்து நிறுத்தல், மத வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கான வழிபாட்டு உரிமையை வலியுறுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. நிகழ்வில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். (3)

## பொது உளச் சார்பு பரீட்சைக்கு விண்ணப்பிக்கவும்

ஊவா வெல்லச பல்கலைக்கழக கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான "பொது உளச்சார்பு" பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்குத் தோற்றுவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். ஊவா வெல்லச பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களும், பொது உளச்சார்பு பரீட்சைக்குத் தோற்றி அதில் பெற்றுக்கொள்ளும் உயர்புள்ளி அடிப்படையிலேயே மாணவர் தெரிவு நடைபெறவிருப்பதால் சகல தமிழ் மாணவர்களையும் தவறாது பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு ஊவா வெல்லச தமிழ்ப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் சமூகம் அறிவித்துள்ளது.(3-11)

## அங்கத்தவர்களுக்கு இலவச சேவை

கொடிகாமம்தென்மராட்சி பலநோக்குகூட்டுறவுச் சங்கக் கிளையில் ரூபா 100 செலுத்தி அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் வீடுகளில் நிகழும் வைபவங்களுக்கு கதிரைகள் இலவசமாக வழங்குவதாக மேற்படி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எஸ். தேவகுமார் தெரிவித்தார். மேற்படி அங்கத்தவர்களின் வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நிகழ்வுகள் என்றாலும்கூட அவைகள் இலவசமாக [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (122-3)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 47½ கிரகபாவம் உடைய பிரான்ஸ் இல் வசிக்கும் (P.R உண்டு. இந்தியாவிற்கு வரலாம்) மணமகனுக்கு உள்நாட்டில்/வெளிநாட்டில் வசிக்கும் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 021 2059080
(24115)(6-7-8)



## FORD COUNSEL - EN 1168
(போர்ட் கொன்சல்)

யாழ்ப்பாணம் தீவு பகுதிகளில் (Kytes) இறுதியாக 1989 இல் பதிவு செய்யப்பட்ட. EN 1168 என்ற பதிவு இலக்கத்தை உடைய FORD COUNSEL (போர்ட் கொன்சல்) வாகனத்தை பற்றிய ஏதாயினும் தகவல் தெரிந்தவர்கள் கொட்வின் பெரேராவை தொடர்பு கொள்ளவும்.
(+94) 11 4041234, 11 2863117, 2875647, 0777 327153
(சி/3996)



## மீண்டுமோர் சந்தர்ப்பம்

# டுபாய்/ அபுதாபி

உடனடி வேலைவாய்ப்பு
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

ஐக்கிய அரபு நாட்டில் உள்ள பிரபல G4S நிறுவனத்தில் கீழ்காணும் வெற்றிடத்திற்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

| ஆங்கிலம் பேசத் தெரிந்த, உயரம் 5' 6" உடைய | Nos. | BASIC SALARY |
|---|---|---|
| SECURITY GUARDS | 100 | AED 2000 |

SLBFE Charges : Govt. Approved Charges only — 1 AED = Rs. 36/-

**Benefits / Conditions :** தங்குமிடம் மற்றும் உள்ளூர் பிரயாண ஒழுங்கு, மருத்துவம் - கம்பனியால் ஒழுங்கு செய்யப்படும். வேலை நேரம் தினமும் 9 மணித்தியாலங்கள் 1 மணித்தியால விடுகை மற்றும் 03 மணித்தியால OT. இன்சூரன்ஸ் - UAE சட்டங்களுக்கு அமைவாக கம்பனியால் வேலை செய்யும் காலங்களில் ஒழுங்குசெய்யப்படும். 02 வருட சேவை ஒப்பந்தம். இரண்டுவருடத்திற்கு ஒருமுறை திரும்பி வர விமானச் சீட்டு, கிழமையில் 01 நாள் விடுமுறை, ஏனைய விதிமுறைகள் UAE சட்டத்திற்கு அமைவானதாகும்.

வெளிநாட்டு முகவர்களால் நேர்முகப் பரீட்சைகள்
**17 மற்றும் 18 ஒக்ரோபர் 2012**
(காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை)

AL/Advt/2491/35/12

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட், சுயவிபரக்கோவை, கல்விச் சான்றிதழ்கள், முன்னனுபவச் சான்றிதழ்கள் மற்றும் 12 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

**AL - AZAB Travels (Pvt) Ltd**
No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக)
Tele : 011 266 9995 / 0777 20 15 15 / 0717 335 335
E-mail : alazabtravels@gmail.com
L. L. No. 2491
(சி/3994)



சர்வதேச தரம் வாய்ந்த முழுமையான தொலைதொடர்பாடல் சேவைகளை இலங்கையிலுள்ள வர்த்தக மற்றும் வதிவிட வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் தொலைதொடர்பாடல் நிறுவனமே லங்கா பெல் ஆகும். தமது சேவைகளை டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் தனிசிறப்புமிக்க இணையத்தளம், தொலைபேசி மற்றும் தரவு சேவைகளை நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தரமுயர்த்தி வழங்குவது லங்கா பெல் நிறுவனத்தின் சிறப்பம்சமாகும். லங்கா பெல் தற்போது 1.3 மில்லியன் வாடிக்கையாளர் தளத்தினை கொண்ட இலங்கையில் இரண்டாவது மிகப்பெரிய நிலையான தொலைபேசி சேவை வழங்குனராக திகழ்கிறது.

தமது ஊழியர் மற்றும் வாடிக்கையாளர்கள் லங்கா பெல் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக இச்சாதனை வளர்ச்சியை நாம் பெற்றோம். தமது வாடிக்கையாளர்களின் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்து தொடர்பாடலில் சிறந்த தொழில்நுட்ப ஆற்றல் மிக்க நிறுவனமாக திகழ தமது ஊழியர் அணியை மேலும் பலப்படுத்த நிறுவனம் நாடுகிறது. நாடளாவியரீதியிலான எமது விஸ்தரிப்பு காரணமாக தொலைதொடர்பாடல் சேவையை அதன் அதிஉன்னத மேன்மை தரத்திற்கு கொண்டு செல்லக்கூடிய உறுதி, அர்ப்பணிப்பு, திறமை உள்ளவர்களை இணைத்து கொள்ள எதிர்பார்கின்றது.

## நேர்முகத் தேர்வு

2012 ஒக்டோபர் 16 காலை 10.00 மணி தொடக்கம் 12.00 வரை மற்றும் பி.ப 2.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

யாழ்ப்பாணம் கிளை : 127, கூட்டுறவு சங்க கட்டடம். காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
வவுனியா கிளை : 50-ஏ, 2 ஆவது குறுக்குத் தெரு, வவுனியா
கிளிநொச்சி கிளை : சிங்கர் பிளஸ், ஏ9 வீதி, கிளிநொச்சி

(1) விற்பனை பிரதிநிதிகள்

* தொழில்சார் பொறுப்பு
  - குறித்த விற்பனை இலக்கினை எய்தல்
* தகுதி மற்றும் முன் அனுபவம்
  - தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி
  - க.பொ.த சாதாரணதரத்தில் சித்தி
  - உயர் கல்வி மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
  - குறித்த துறையில் முன்அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும் ஆனால் கட்டாயமல்ல
  - பாடசாலையில் இருந்து விலகியவர்களும் விண்ணப்பிக்கலாம்

(2) தொழில்நுட்பவியலாளர்

* தொழில்சார் பொறுப்பு
  - CDMA மற்றும் Wimax வாடிக்கையாளர் உபகரணங்களை பராமரித்தல்
* தகுதிகளும் அனுபவங்களும்.
  - க.பொ.த சாதாரணதரத்தில் கணிதபாடம் உட்பட சித்தி
  - வாகன சாரதி அனுமதிப்பத்திரம். சொந்தமாக மோட்டார் சைக்கிள் இருப்பது மேலதிக தகைமையாகும்.
  - தகுதிவாய்ந்த தொழில்பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழ் மேலதிக தகைமையாகும்
  - தேவைப்படின் நெகிழ்வான நேரங்களிலும் பணியாற்றும் திறன்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு பல வரப்பிரசாதங்கள் அடங்கிய கவர்ச்சிகரமான ஊதியம் ஒன்று காத்திருக்கிறது.

லங்கா பெல்
www.lankabell.com
(சி/3991)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடைகளில் அச்சுக் கலைப் பயிற்சி
## FABRIC PRINTING TRAINING

அரிய சந்தர்ப்பம்- வவுனியாவில்

நீங்கள் அணியும், ஆடைகள், சாறிகள் மற்றும் துணிகளில் இலகு முறையில் குறைந்த முதலீட்டில் வீட்டில் வைத்தே டிசைன்கள் பிரிண்டிங் செய்யும் முறையை தென்னிந்திய புகழ் அர்ச்சனா அக்கடமியின் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் அன்ரோ டினேஸ் B.A,D.S.Tech.(S.India)செய்முறை பயிற்சியளிக்கிறார்.
இம்மாதம் ஒக்ரோபர் 20,21 (சனி,ஞாயிறு), சான்றிதழ் வழங்கப்படும்.

பிரவீணன் என்ரபிரைசஸ்
35, கந்தசாமி கோயில் வீதி, வவுனியா.
விபரம் பதிவுகளுக்கு: 077 728 3192, 077 890 4131,071 586 3151
(திங்கள் Vijay TV இல் காலை 9.30 இக்கு இந்த நிகழ்ச்சியை பார்க்கலாம்)
(23574)(5,6,7)

---

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
டாக்டர்கள் சிபார்சு செய்வது
100% சுத்தமான
**றோயல்**
**குளுக்கோஸ்**

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ்
வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்
என்று கேட்டு வாங்குங்கள்

Packed by:
*Royal Industries, colombo -13*
Hot line: 077 727 7670




ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா** 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567 சத்திரச் சந்திக்கு அருகில்.
(சி/3725)(5,6,7)

---

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை பட்டிகடவையில்
9 பரப்பு பனங்காணி
விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
**தொடர்பு: 077 6903 287, 077 1698 487**
(23839)(45-6-7)

---

## தவறிவிட்டது

வேப்பங்குளம் வவுனியாவைச் சேர்ந்த குணசேகரம் நிரோஷன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (892761469 V ) கண்ணாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.
**தொடர்பு: 077 0501 853**
(24116)(6-7-45)

---

## வீடு வாடகைக்கு தேவை

இரண்டு பேர் உள்ள சிறிய குடும்பத்திற்கு யாழ். நகருக்கு அருகில் (குறைந்தது 5 Km தூரத்திற்குள்) வாகன தரிப்பிடத்துடன் வீடு வாடகைக்கு தேவை.
வாடகை 6,000.00 எதிர்பார்க்கப்படுகின்றது.
**தொடர்பு: 077 362 1388**
(2420)(6-7-45)

---

## COMPUTER COURSES

Diploma in Computerized
**Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B

Diploma in
**Video Editing** — Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in
**AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in
**Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0243 |
| சுன்னாகம் | KKS வீதி, ஜெட் மோட்டோர்ஸ், NSB அருகில். Tel. :021-224 1970 |

(சி/4107)(5,6,7)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
**10.04.1985**
உதிர்வு
**06.10.2010**

அமரர்
## சுப்பிரமணியம் யதீஸ்
(பிரபா)

கால வெள்ளத்தில் கோல விழிகள்
கரைந்து போனது
நீளமென நாம் நினைத்த
நிம்மதி தொலைந்து போனது
ஆண்மகன் நீ என்றிருக்க
பாதியிலே சென்றுவிட்டாய்
ஈராண்டு போய்விட
சோகங்கள் தீராமல்
உன் நினைவுடன் நாம்

அம்பாள் வீதி,
மல்வம், உடுவில்.

குடும்பத்தினர்.
(24035) (6,7,10)

---

GlaxoSmithKline

**சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலி கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.**
இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது






பற்களில் எனாமல் கீழே உள்ள மென்மையான பகுதியாகிய டென்ரின் வெளிப்படுவதால் பற்களில் கூர்உணர்ச்சி தோற்றுவிக்கின்றது. சென்சொடைன் பற்களின் அடிப்பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இருதடவைகள் பல்துலக்குவதால் கூர்உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

50 கிராம் - ரூபா 220 100 கிராம் - ரூபா 420

· தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இரு தடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்

---

## விற்பனைக்கு


யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில், 4 பரப்பு காணித்துண்டும் 6 பரப்பு காணித்துண்டும், யாழ். கொட்டடி சிவன் பண்ணை வீதியில் 6½ பரப்பு காணித்துண்டு நான்கு பக்க மதிலோடும், யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக மணிக்கூட்டு வீதியில் 2½ பரப்பு காணித்துண்டும், 4½ பரப்பு காணித்துண்டும், யாழ்ப்பாணம் அராலி கடற்கரைக்கு அண்மையில் 33 பரப்பு தரவைக்காணியும் மற்றும் 160 பரப்பு தரவையும் வயல் காணியும், யாழ்ப்பாணம் K.K.S. வீதியில், தபால் நிலையத்துக்கு அண்மையிலும் தனியார் பஸ்நிலையத்துக்கு முன்பாகவும் 7½ பரப்பு காணித்துண்டும் உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாவிற்கு அண்மையில் 12 அடி அகலமும் 86 அடி நீளமும் கொண்ட இரு மாடி கடை உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0777232535**

(24112) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## All kind of Mobile phone's Unlocking



சுவிற்ஸர்லான்ட், நோர்வே, சுவீடன், பிரான்ஸ், கொரியா, கனடா, UK, USA, etc (I Phone 3GS, 4, 4S, 5) மற்றும் (HTC, Nokia (SL), Sony ericsson, Samsung, Blackberry உட்பட அனைத்து புதுவகையான Phone கள் unlock செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
S.M.M. Zuhair (Razmi)
**R & R Telecom**
127, MPCS Building, K.K.S. Road, Jaffna.
072-2441441


## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
22.10.1954

ஆண்டவன் அடியில்
26.09.2000

### திருமதி கலைமணி இராசதுரை

அம்மா அம்மா எங்கள் தெய்வமே!
அவனியில் பார்போற்ற வாழ்ந்த தெய்வமே!
அன்பாக எமைவளர்த்த அம்மாவே
ஆறுதல் கூற யாருமின்றி அநாதையாகவிட்டு
ஒரு நொடியில் எங்கு சென்றீர்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாது எம் துயரம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்

குடமியன் வரணி. (சி/4110)(6.7.8) குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

பழைய ஓடுகள், கதவுகள் மற்றும் நிலைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 7763 248

(23980)(6-7-45)

## வீடு வாடகைக்கு

மேல் மாடி வீடு, நகர மத்தியில் இருந்து 1Km இற்குள் வாடகைக்குண்டு. 10 அறைகள், விசாலமான வீதி, வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

(240571)(6-7-45) தொடர்பு : 077 7813 646

## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நல்லூர், யாழ்ப்பாணம், அச்சுவேலி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் அமைந்த வீடுகள் வாடகைக்கு தேவை.

தொடர்பு :077 4035 146, 077 7009 653

(சி/4078)(6-7-45)

## விற்பனைக்கு

நெல்லியடி யாழ். வீதியில் நெல்லியடி சந்தையிலிருந்து 150 மீற்றர் தூரத்தில் திருமகள் ஒழுங்கையில் 40 மீற்றர் தூரத்தில் 4 பரப்புக் காணி சுற்றிவர மதில், 3 அறைகள், ஒரு குளியல் அறை, மலசல கூடம், சமையல் அறை, HALL கொண்ட லிண்டர் மட்டத்தில் கட்டப்பட்ட கட்டடமும், நல்ல தண்ணீர்க் கிணறும் (தொப்பிக்கட்டு சீர் செய்யவேண்டும்) விற்பனைக்குண்டு. காணியில் "விற்பனைக்கு" என்ற விளம்பரப் பலகை கட்டப்பட்டிருக்கின்றது. எந்த நேரமும் பார்வையிடலாம்.

தொடர்பு :
பாஸ்கரன் - நெல்லியடி
021 2262 119

(23842)(6-7-45)

## வேலையாள்கள் தேவை

சங்கானையில் இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கும் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றிற்கும் பின்வருவோர் வேண்டப்படுகின்றனர்.

1. களஞ்சிய காப்பாளர்
2. விற்பனைப் பையன் (Sales Boy)
3. தொலைத்தொடர்பு நிலையத்தில் பணியாற்றுவதற்கான பெண்பிள்ளைகள்

அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/4126) (6.7.6) T.P:-0759480490, 0776728444

## பணிநிலை வெற்றிடங்கள்



எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டட வேலைத் தளங்களில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

01. நீர்க் குழாய்ப் பொருத்துநர் (PLUMBER)
02. ஒட்டுநர் (WELDER)
03. மின் தொழிலாளர் (ELECTRICIAN)
04. உழவு இயந்திர சாரதி (TRACTOR DRIVER)
04. பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD)



மேற்குறிப்பிட்ட துறைகளில் முன் அனுபவம் உள்ளவர்கள் சுயவிவரம் தகுதிச் சான்றிதழ்களுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுடன் உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும்.

(24094) (6,7,10)


முகாமையாளர்
V.V. இராமநாதன் & Co
ஆஸ்பத்திரி சுற்றுவட்ட வீதி,
வவுனியா.

கிளை முகாமையாளர்
V.V. இராமநாதன் & Co
23, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.


*எழும்பிப் பிரகாசி – ஏசாயா 60:1*

# தேவ பணியில் 40 ஆண்டுகள்

## 14.10.1972 - 14.10.2012



## போதகர் ஜொசாயா ஷமீந்திரநாத் பிலிப்

### தலைமைப் போதகர்

### சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்

ஆண்டவரின் அழைப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து ஆண்டவரின் அருட்பணியை கடந்த 40 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றி உண்மையுள்ள தேவனுடைய ஊழியனாய் திகழும் எம் அன்பு மேய்ப்பருக்கு எம் இதயபூர்வ வாழ்த்துக்கள்!

40 ஆண்டுகள் கர்த்தரின் பணியை நிறைவேற்ற கிருபை ஈந்த கர்த்தருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை எதிர்வரும் 26.10.2012 அன்று காலை 9.30 மணிக்கு சீயோன் தேவாலயம் – யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

(23936)

**மூப்பர்கள், போதகர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள்,**
**சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்செய்கைக்கு அச்சுறுத்தலாகும் வாழை வெண்மூட்டுப்பூச்சி

க. தனபாலசிங்கம்
பாடவிதானஉத்தியோகத்தர் (பயிர் பாதுகாப்பு)
விவசாயத் திணைக்களம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 945 ஹெக்ரெயரில் வாழைச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கதலி, கப்பல், ஊர் இதரை, கொழும்பு இதரை ஆகிய பழத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாழை இனங்களும் சாம்பல், மொந்தன், வெண்மொந்தன், அபிஷேக மொந்தன் ஆகிய கறிவாழை இனங்களும் அடங்கலாக விவசாயிகளால் 20 இற்கும் மேற்பட்ட வாழை இனங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. இலை, மடல், காய், பழம் எனப் பலவகைப் பயன்களையும் தருகின்ற வாழை யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணப்படும் பழப்பயிர்களில் முதன்மையான இடத்தைப் பெற்று முக்கியத்துவம் பெறுகின்றது. 565 விவசாயக் குடும்பங்கள் வாழைச்செய்கையைப் பிரதான வருவாய் தரும் தொழிலாக மேற்கொள்கின்றன. செய்கை பண்ணப்படும் விஸ்தீரணத்தின் 80 சதவீதம் வர்த்தக ரீதியிலான வாழைச்செய்கையே மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு ஹெக்ரெயரில் சராசரி 35 மெற்றிக்தொன் விளைவு பெறப்படுகின்றது. வாழைச் செய்கையின் மூலம் வருடமொன்றுக்கு ஏறத்தாழ 28350 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைக்கின்றது.

கப்பல் வாழைகள் பூஞ்சண நோய்களின் தாக்கத்துக்கும் வைரஸ் நோய்களின் தாக்கத்துக்கும் இலகுவாக உட்படுவதால் கப்பல் வாழையைக் குறைவான விஸ்தீரணத்திலேயே விவசாயிகள் செய்கை பண்ணுகின்றனர். முன்னர் பனாமாவாடல், பிறக்ற் மொசாக் வைரஸ் , குருக்கன் , சிக்காடோக்கா , குருத்தடைப்பு ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்ட வாழைச்செய்கைக்கு வெண்மூட்டுப்பூச்சி அண்மைக்காலங்களில் அச்சுறுத்தலான ஒரு பூச்சிப்பீடையாக உருவெடுத்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூச்சிப் பீடையின் வெவ்வேறு இனங்கள் பப்பாசி மற்றும் அனைத்து அலங்காரத் தாவரங்களிலும் கட்டுப்படுத்த முடியாத ஒரு பூச்சிப் பீடையாக உருவாகி வருகின்றது.

**பூச்சியின் தன்மை**

வாழை வெண்மூட்டுப்பூச்சியானது சூடோ கோக்கஸ் இலிசேயி போர்ச்சீனியஸ் (Pseudococcus elsae borchseniu) என்னும் விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்படுகின்றது. வெண்மூட்டுப்பூச்சிகள் குறுகிய வால்களைக் கொண்டவை என்றும், நீண்ட வால்களைக் கொண்டவை எனவும் பிரிக்கப்படுகின்றன. குறுகிய வால் கொண்டவை முட்டைகளை இட்டு இனம் பெருக்குகின்றன. நீண்ட வால் கொண்டவை அணங்குகளை உருவாக்குகின்றன. இவை அடிவயிற்றின் நுனியில் நான்கு இழைகளைக் கொண்டவை. இழைகள் இவற்றின் உடல் நீளத்திற்கு சமமானவையாக இருக்கும். முதிர்ச்சி அடையாத படி நிலைகள் பொதுவாக எல்லா இனங்களுக்கும் ஒரே மாதிரியானவை. உடலில் இருந்து சுரக்கப்படும் மெழுகாலான படையினால் உடல் மூடப்பட்டிருக்கும்







**முட்டைகள்**

குறுகிய வால் கொண்ட வெண்மூட்டுப்பூச்சிகள் 300 - 600 முட்டைகளை அடிவயிற்றின் அடியில் உள்ள பஞ்சு போன்ற மெழுகுப்பையில் கொண்டிருக்கும். தண்டில் இருந்து கிளை உருவாகும் கக்கங்கள், இலைகள் மற்றும் தாவரப்பகுதிகளில் முட்டைகளைக் காணலாம்.

**அணங்கு**

முட்டைகள் பொரித்து அணங்குகள் வெளிவந்ததும் தாவரத்தில் உணவு தேடும். அணங்குகள் தட்டையான உடலமைப்பைக் கொண்டவை. இளம் மஞ்சள் நிறமானவை, நீள்வட்ட உடலில் 06 கால்கள் கொண்டவை. ஒரு தடவை உணவு உட்கொள்ள ஆரம்பித்ததும் வெள்ளை நிற மெழுகினை உற்பத்தி செய்து உடலை மூடிக் கொள்வதுடன் ஏறத்தாழ 36 கால் போன்ற முளைகளை உடல் விளிம்பில் உற்பத்தியாக்குகின்றன. அணங்குகள் 3கவசங்கழற்றல் நிலைகளைக் கொண்டவை. பெண்பூச்சிகள் இறுதிக் கவசங்கழற்றலின் பின் நிறைவுடலியாகின்றன. ஆண்பூச்சிகள் கூட்டுப்புழு நிலைக்குச் செல்கின்றன.

**கூட்டுப்புழு**

ஆண்பூச்சிகள் மட்டும் கூட்டுப்புழுவாகும். ஆண் அணங்குகள் முழு வளர்ச்சி அடைந்ததும் வெள்ளை நிறக் கூட்டினால் தமது உடலை மூடிக்கொள்கின்றன. அதில் இருந்து ஆண் நிறையுடலியாக மாறும்.

**நிறையுடலிகள்**


பெண் செம்மஞ்சள் நிறம். நீள்வட்டவடிவமானது. 2.8 மி.மீ நீளமானது. 1.5மி.மீ அகலமானது. வாழ்வு காலம் முழுவதும் சிறகற்றவை. முட்டை உற்பத்தி இறுதி1அல்லது2வாரங்களில்நடக்கும். அதன்பின்பெண்பூச்சி இறந்துவிடும். ஆண் நிறையுடலிகள் சிறியன. சுறுசுறுப்பானவை. 2 சிறகு கொண்டவை. பூச்சிகள் போல் பறக்கக் கூடியன. கலவி செய்தவுடன் இவை இறந்து விடுகின்றன. நிறையுடலிகள் ஆறுதலாக ஊர்ந்து இடம் பெயரும்.

**வாழைகளில் எங்கே காணலாம்?**

போலித்தண்டின் இறுதியாக உள்ள மடல்களினுள்ளும் சீப்புக்கள் குலையுடன் இணையும் நெருக்கமான இடுக்குகள், பழக்குலைகள் பழத்தினடியில் உள்ள பூ உதிர்ந்த பின் உள்ள தழும்புகள், பொத்தி மடல்கள் ஆகியவற்றிலும்கூட்டம்கூட்டமாகக்காணப்படுவதை அவதானிக்கலாம்.



போலித்தண்டிலுள்ள இறுதி மடலினுள்



சீப்புக்கள் குலைத்தண்டுடன் இணையும் நெருக்கமான இடுக்குகளில்...

**தாக்கம் எவ்வாறு இருக்கும்?**

வெண்மூட்டுப்பூச்சிகள் குத்தியுறிஞ்சும் வாயுறுப்பைக் கொண்டவை. இவை தொடர்ச்சியாக சாற்றை உறிஞ்சும் போது தாவரத்தினுள் செலுத்தப்படும் நச்சுப் பதார்த்தத்தினால் வளர்ச்சி பாதிக்கப்படும். வைரஸ் மற்றும் நோயாக்கிகள் கடத்தப்படும். தாவரப்பகுதிகளில் நிறமற்ற ஒட்டும் தன்மையற்ற திரவத் துளிகள் காணப்படும். இவற்றில் சூட்டி மோல்ட் என்னும் பூஞ்சணம் தொற்றி விருத்தியடைவதால் தொற்றல் ஏற்பட்ட பகுதிகள் கறுப்பு நிறமாக இருக்கும். வாழைக்குலைகள் விருத்தியடையாது. சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படும். சந்தைமானமிருக்காது. வாழை உறிஞ்சிகள் பலவீனமடைந்து இறந்துவிடும்.

**பரவுதல்**

1.இப்பீடைகள் சிறியனவாகையால் காற்றினால், மழையினால், பறவைகளால், விலங்குகளால், எறும்புகளாலும் மனிதனின் உடைகள் வாகனங்கள் மூலமும் கொண்டு செல்லப்படும்.

2.இவற்றின் முட்டைகளின் மீதும் மெழுகுப்படை இருப்பதால் உபகரணங்களில் ஒட்டிப் பரவும்.

3.தொற்றல் ஏற்பட்ட வாழைகளை வேறிடங்களிற்கு எடுத்துச் செல்லல்.

4.தொற்றல் ஏற்பட்ட வாழைகளை அழிக்காது விடல்

**வாழையில் வெண்மூட்டுப்பூச்சியை அழிக்க முகாமைத்துவம் செய்யும் வழிமுறைகள்**

1.குலைகளில் வெண்மூட்டுப்பூச்சிகளை அவதானித்தால் உயர் அமுக்கத்துடன் நீரைப் பீச்சிக் கழுவவும். நிலத்தில் வீழ்ந்த வெண்மூட்டுப்பூச்சிகள் எறும்புகள் மூலம் காவப்படாமல் இருக்க வாழையைச்சுற்றி தியாமெதொக்சாம், போன்ற நாசினிகளில் ஒன்றை விசிறி விடவும். (வீட்டுத் தோட்டம் எனின் நாசினிகளை நிலத்திற்கு விசிறுவது உசிதமானதல்ல.ஏனைய முகாமைத்துவ முறைகளை அனுசரிக்கவும்.)

2.குலைகளில் [illegible] துண்டு துண்டாக [illegible] உலர்ந்ததும் எரித்து விடவும். இதனால் வாழை மடல்கள், அடிப்பகுதிகள், இலைமடல்களினுள் இருக்கும் முட்டைகள், அணங்குகள், நிறைவுடலிகள் அழிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.களைகள் பூச்சிப்பீடைகளின் மாற்று விருந்து வழங்கியாகும் ஆதலால் தோட்டத்தின் எல்லைப்புறங்களைக் களைகள் இன்றித் துப்புரவாக வைத்திருக்கவும்


**மாற்று விருந்து வழங்கிகள்**

தேமா, துளசி, பாதீனியம் ,மல்லிகை. மூக்குத்திப் பூண்டு, அகத்தி, கங்குன். பலா, கிளிசீரிடீயா, எக்ஸ்சோறா, முசுண்டா, பொன்னாங்காணி, வல்லாரை, அழகுத்தாவரங்கள்

4.பழுத்த இறுதி இலைகளை வெட்டும் போது இலை மடல்களை ஒட்ட வெட்டி விடவும். இதனால் வெண்மூட்டுப்பூச்சிகள் மடல்களுக்குள் தொற்றுதல் தவிர்க்கப்படும்.

5.குலைகளில் ஒரு சீப்பில் தொற்றல் அவதானிக்கப்பட்டதும் அதனைக் குலையில் இருந்து அகற்றி எரித்துவிடவும்.

6 .குலைகளுக்குப் பொலித்தீன்உறையிடவும்.



7. வடிகால்களை அமைத்து மேலதிக நீரை வழிந்தோடச் செய்யவும். இதனால் கலங்களில் கலச்சாற்றின் நிரம்பலைக் குறைத்து உறிஞ்சலைக் குறைக்கலாம்.



8.தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும்



9.அதி தீவிரமான தாக்கம் அவதானிக்கப்படுமிடத்து வர்த்தக ரீதியிலான தோட்டங்களுக்கு கீழ்க்காணும் பூச்சிநாசினிகளில் ஒன்றை விசிறவும். வீட்டுத்தோட்டங்களுக்குப் பூச்சி நாசினி விசிறுவதைத் தவிர்க்கவும்.

பூச்சிநாசினிகள் ஆபத்தானவையாதலால் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவும்.

தயாமெதொக்சாம் (அக்ரெறா) 25 வீதம் நனையக் கூடிய குறுணல் 2 கிராம் - 1லீற்றர் நீரில்

இமிடாக்குளோபிறிட் 200 கி/லீற்றர் எஸ்.எல். 1மி.லீ-1லீற்றர் நீரில்

ஆசெற்றாமிபிறிட் (மொஸ் பிலான்) 20 வீதம் நனையக்கூடிய தூள் 1 கிராம் -1லீற்றர் நீரில்.

## நடமாடும் சேவை

வடமராட்சி, ஒக்.14

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் 'நடமாடும் சேவை' நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து, மாலை 4 மணிவரை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்மூலம் காலம் கடந்த பிறப்பு, இறப்பு, இந்தியாவில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பு, பிரஜா உரிமை தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு பயன் பெற முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார். (3)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட யா/ ஞானாசாரியார் கல்லூரி தரம் 1சி பாடசாலையில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1,தரம் 2-1 ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 19 ஆம்திகதிக்கு முன்னர் மாகாணக்கல்வித்திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# சாவகச்சேரி நகரசபையில் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிப்பு

தென்மராட்சி, ஒக்.14

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஏழு நாள்கள் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் நகராட்சி மன்ற வளாகம், நகர்ப்பகுதி வடிகால்கள், வீதிகள் துப்புரவு மற்றும் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், சபை எல்லைக்குட்பட்ட சிறந்த உணவு கையாளும் நிலையங்களும் தெரிவு செய்யப்படவுள்ளன.

இரண்டாம் நாள் செவ்வாய்க்கிழமை சபை அலுவலர்களுக்கான அலுவலக முகாமைத்துவ கல்வி தொடர்பான போட்டிகளும், சபை எல்லைக்குட்பட்ட சிறந்த சனசமூக நிலையங்கள் தெரிவும், நூலக முப்பரிமாண விளக்கம், சிறந்த நூலகம் தெரிவு, மாணவர் வாசகர்களுக்கிடையிலான கட்டுரை, கவிதை, சித்திரம், பேச்சு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. அத்துடன் புத்தாக்கக் கண்காட்சியும், நகரசபை எல்லைக்குள் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் புதன்கிழமை நகர சபை உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் இணைந்து வட்டார ரீதியாக சோலை வரி பற்றிய விழிப்புணர்வும், நிலுவைகள் அறவிடும் நிகழ்வும் இடம்பெறும்.

நான்காம் நாள் வியாழக்கிழமை சந்தை, விளையாட்டு மைதானம், மயானம் போன்றவற்றின் அபிவிருத்தி தொடர்பிலான முன்னெடுப்புகள் சபை உறுப்பினர்களுடன் இணைந்து மேற்கொள்ளல், கிராம அலுவலர் பொது மக்கள் பங்களிப்புடன் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி, நுணாவில் மீசாலை நூலகங்களில் பழ மரக் கன்றுகள் நடுதல், சுற்றாடல் தொடர்பான பயிற்சிப் பட்டறை என்பன நடைபெறும்.

ஆறாம் நாள் சனிக்கிழமை துவிச்சக்கர வண்டி உரிமம், வளர்ப்பு நாய்களுக்கான இலக்கத் தகடுகள் வழங்கலும், அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகத்தர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கள், நடத்தப்பட்ட போட்டிகளுக்கு பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளதாக நகரசபைத் தலைவர் சி.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (9)



காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் உளநல வாரத்தை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில்,,காரைநகர் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சப்ராப் மயுகீன், பாடசாலை அதிபர் க. நேத்திரானந்தன் தரம் 1 மாணவர்கள் வெளியிட்ட 'மகிழ்வகம்' கையெழுத்து சஞ்சிகையினைப் பார்வையிடுவதைக் காணலாம். (3-250)

## சிரமதானப் பணி

அளவெட்டி, ஒக்.14

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிரமதானப் பணி நடைபெற்றுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் காணப்பட்ட பற்றைகள், செடிகள், மண் திட்டுக்கள், நீர்வழிந்தோடும் பகுதிகள் என்பன இந்தச் சிரமதானப் பணி மூலம் சுத்தமாக்கப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எம். உமாசங்கர் தலைமையில் இடம்பெற்றது. இந்தச் சிரமதானப்பணியில் மாவிட்டபுரம் கெமுனுவாச் படையணியைச் சேர்ந்த படைத்தளபதிகள், பாதுகாப்பு படையினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிரமதானப் பணிக்கான வாகன, தளபாட உபகரணங்களை வலி.வடக்கு பிரதேச சபையினர் வழங்கி உதவினார்கள்.

பிரதேச சபை வலி. வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் கழிவுகளைச் சேகரித்து வைப்பதற்கு என ஏழு கழிவு சேகரிக்கும் பெரிய வாளிகளை வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்தார். தமது சபை உழவு இயந்திரம் மூலம் தினமும் கழிவுகளை அகற்ற ஒழுங்கு செய்துள்ளதாவும் அவர் தெரிவித்தார். (3-36)

## மாகாண மட்ட வணிகப் போட்டி

வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கான வணிகப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன என மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட, பன்னிரண்டு வலயங்களிலும் நடைபெற்ற வலய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (405-ரி)

## புறநிலைக் கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகினால் நடத்தப்பட்ட அடிப்படைக் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்பாடலுக்கான ஆங்கிலம், மனித உரிமைகள் என்பவற்றுக்கான கற்கை நெறிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகவுள்ளன என இணைப் பாளர் தெரிவித்துள்ளார். ( 3)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.



**இடபம்:** பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். எதிர்ப்புகள் அடங்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் நிம்மதி கிட்டும்.



**மிதுனம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்.



**கடகம்:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த அசதி, சோர்வு, கோபம் என்பன நீங்கும். நிறைவுபெறாத பணிகள் முடிவடையும். உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.



**சிங்கம்:** எதையும் திட்டமிட்டு செய்யப் பாருங்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பற்றி குறைகூற வேண்டாம்.



**கன்னி:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியமாக இருக்கவேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தைத் தவிர்க்கவும்.

நாளை

புரட்டாதி - 29 திங்கட்கிழமை 15.10.2012

திதி: அமாவாசை மாலை 06.30 வரை

நட்சத்திரம்: அத்தம் மு.ப 10.18 வரை

சுபநேரம்: 12.02- 01.32 வரை

ராகுகாலம்: 07.32- 09.02 வரை



**துலாம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பர்.



**விருச்சிகம்:** சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாக பேச தொடங்குவார்கள். வியாபாரத்தை அதிகரிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.



**தனுசு:** வர வேண்டிய பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். மனநிம்மதி கிட்டும் நாள்.



**மகரம்:** வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்து போவது நல்லது. கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.



**கும்பம்:** சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.



**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்கள் உங்களைக் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் [illegible] கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 4 | | 7 | |
| | 9 | 1 | | | 7 | | | |
| | | 3 | | | 5 | | | 4 |
| 6 | | 2 | 8 | | | 9 | 5 | 7 |
| | | 4 | | | | 2 | | |
| 5 | 3 | 7 | | | 9 | 4 | | 1 |
| 3 | | | 7 | | | 6 | | |
| | | | 4 | | | 7 | 2 | |
| | 2 | | 9 | 5 | 6 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 2 | 1 | 8 | 6 | 3 | 4 | 5 |
| 1 | 4 | 8 | 7 | 3 | 5 | 6 | 9 | 2 |
| 6 | 5 | 3 | 4 | 2 | 9 | 8 | 7 | 1 |
| 5 | 1 | 7 | 6 | 9 | 4 | 2 | 3 | 8 |
| 2 | 6 | 4 | 8 | 1 | 3 | 7 | 5 | 9 |
| 8 | 3 | 9 | 2 | 5 | 7 | 4 | 1 | 6 |
| 3 | 7 | 1 | 5 | 6 | 2 | 9 | 8 | 4 |
| 9 | 8 | 6 | 3 | 4 | 1 | 5 | 2 | 7 |
| 4 | 2 | 5 | 9 | 7 | 8 | 1 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் கம்பனிக்கு மேசன்களும், கூலியாள்களும், உழவு இயந்திரங்களும் (tractors) உடனடியாகத் தேவைப்படுகின்றன.

தொடர்பு:
வீ.வீ. கருணாரட்ணா & கம்பனி
12A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். 0711712003

(24135)(3.6.7)

## வான் விற்பனைக்கு

HR- xxxx டொல்பின் டுவல் ஏசி சுப்பர் GL உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0778393896

(24134)(3.6.7)

## கண்ணீர் அஞ்சலி



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் லண்டனில் வாழ்ந்துவந்தவருமான

**நாகலிங்கம் சண்முகம்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரமநாதன், சோமசுந்தரம், கயிலநாதன், புஷ்பநாதன், இராஜநாயகம், தனவேந்தன் குடும்பத்தினர்.

ஆனைக்கோட்டை. (24121)(3.6.7)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வைத்தியசாலைக்கு அருகில் 4 பரப்பு காணியில் 5 அறைகள் கொண்ட வீட்டுடன், 5 பலா, 12 தென்னை, 4 மாமரம் அடங்கலாகவும், வைத்தியசாலை, கோயில், பாடசாலை, சுப்பர் மார்க்கட் பேன்றவற்றிற்கு அண்மித்ததாகவும் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777349357

## Study in GEORGIA (Europe)

Minimum qualification G.C.E. (O/L)

Hotel Management Rs. 350,000/-
(Duration 1 year) Course Fee

No IELTS No Interview No Bank Balance

flex Institute — Step Towards a Bright Future (A Subsidiary of Flex Graphic)
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

## காணி உடன் விற்பனைக்குண்டு

சந்தனமாதா வீதி (நல்லூர் பிரதேச சபைப் பிரிவுக்குட்பட்டது) 2ம் ஒழுங்கை இல 20/9ல் அமைந்துள்ள 3பரப்பும் 13 குழியும் கொண்ட வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு 011-2585801 / 0776909284

## காணி உடன் விற்பனைக்குண்டு

19,வில்வந்தெரு ஒழுங்கை, கொழும்புத்துறையில் அமைந்துள்ள 3பரப்பும் 8-1/2 குழியும் கொண்ட சதுரக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு 011-2585801 / 0776909284

## வேலை என்பது தேடுவோருக்கு தேவையானது!

உங்கள் திறமைக்கு வேலை என்ன வேண்டும் என்று யோசிக்க வேண்டாம். வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம், தகைமை:- சாதாரண O/L அனுபவம் தேவையில்லை, உடன் தொடர்பு கொள்ளவும். பயிற்சி தரப்படும்.

0778 213 839
0114 986 066
0721 986 382

## காணி விற்பனைக்கு

இல. 71/21. புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள 2-1/2 பரப்பு வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு.
Between 10-5 தரகர் தேவையில்லை.

தொடர்பு - 0771606332

## M.B.B.S INTAKE

For 2012 / 2013

Study in a SLMC / WHO recognized Commonwealth State Medical University

HURRY !!! Limited Seats AVAILABLE Register NOW

Admission Now Open Submit Application Immediately Only Local Fees Apply

அழையுங்கள் - ஹரோல்ட் லியோன்
0777348049 / 0757213200

Global Education Training & Services (GETS)
Email : getslanka@gmail.com | getslanka@sltnet.lk
Web : www.getslanka.com

## மரண அறிவித்தல்

### சிவனையா கனகமணி



இராமலிங்கம்வீதி, முடமாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனையா கனகமணி 12.10.2012 வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் மற்றும் சிவனையாவின் அன்பு மனைவியும், கமலாதேவி, பற்குணசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், அபூர்வசிங்கம், யோகராணி (ராணி), யோகேஸ்வரி (வவா). ரதீஸ்வரன், ராஜ்மோகன் (மோகன் மெக்கானிக்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்னராசா, ஜெய பாஸ்கரன் (குமார் மெக்கானிக்), தவமணி, ரேவதி, புஸ்பநந்தினி (கண்ணா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.10.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

448, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(24131) (6-7-10)

தகவல்: குடும்பத்தினர் (அன்னராசா)

## அமெரிக்க விஸா லொத்தர்

50,000 வீஸாக்கள் லொத்தர் மூலம் விண்ணப்பிக்க வேண்டுமா? விண்ணப்பிப்பதில் பிரச்சினையா? தமிழ் கைநூல் தேவையா?

Call : 077 581 1106
BBS NETTING@yahoo.com

## வாடகைக்கு

வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள NO.08 Lodge இல் குளியல் அறைகளுடன் கூடிய மற்றும் சாதாரண அறைகளும் நாள் மற்றும் மாதாந்த வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0112504281

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுடும்பம் 74 ஆம் ஆண்டு. அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அரசாங்கத்தில் வேலை செய்யும் 79 இற்கும் 84 வரை நிறமான மெலிந்த மண பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
072 6444217, 072 9106007
E-mail: darvinlanka@yahoo.com

## Study in Overseas

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, UKRAINE, RUSSIA, FRANCE

Start your Higher Studies with Career Guidance

Australia At Charlton Brown College
- Intake : Nov / Jan
- Selected Courses only
- Job will be offered After Studies

10% Discount for First 20 Students
- With OR Without IELTS
- Bank Balance Assistance
- Law Tuition Fee
- Part Time Job
- Career Guidance

Next Intake : NOVEMBER

Forward your CV to : info.reliance.edu@gmail.com

Reliance Overseas Education Consultancy
No:14, 1/1, 37th Lane,
Wellawatta, Colombo - 06.
Tel: 0117 90 99 00
Miss. Zaarah 0778 858 358

## கார் விற்பனைக்கு உண்டு



14 SRI xxxx இலக்கம் உடைய Peugeot Car, Sky Blue Colour Dehiwela விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773603582

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அப்புத்துரை



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அப்புத்துரை 12.10.2012 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-ஆச்சிமுத்து தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற வடிவேலு-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தேவி பராசக்தியின் அன்புக் கணவரும், ரதி, விஜி (பிரான்ஸ்), காலஞ் சென்ற ரதீஸ்வரன் (கோபி) மற்றும் பிரியந்தி, ஜிலோஜினி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரன் (இலங்கை), ஆனந்தராஜா (பிரான்ஸ்), சுதேஸ் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாக்கியம், ராசபூபதி, நாகம்மா, தங்கராசா, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகமலர், சரவணபவன், சுகுமார் ஆகியோ ரின் அன்பு மைத்துனரும், மிதுஷன், ஐஸ்வரியன் (இலங்கை), அபினேகா, ஸ்டிபன் (கண்ணா), பிரியன்னா (பிரான்ஸ்), கிசாளன், கபிஸ் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி. (24119) (6-7-10)

தகவல்: குடும்பத்தினர்.

## ELATE இன்

ஒரு லட்சம் ரூபா பணப்பரிசுடன்...

யாழ்குடாநாட்டில் முதன் முறையாக புதிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்கப்படுத்தும் நிகழ்வாக

**Elate இன் கண்டுபிடிப்பாளர் தேடல்-2012**

என்ற மாபெரும் தொழிநுட்ப கண்காட்சி நடைபெற உள்ளது.

இதற்காக பெரிய அளவிலான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

★ இப் போட்டி கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் புதிய கண்டுபிடிப்பாளர்கள் (பாடசாலை மாணவர்கள், தனிநபர்கள்) அனைவரும் எம்முடன் 25.10.2012 க்கு முன் தொடர்புகொள்ளவும்.

★ வெற்றியாளர்களுக்கு

| | |
|---|---|
| முதல் பரிசு | 100,000/= |
| இரண்டாவது பரிசு | 50,000/= |
| மூன்றாவது பரிசு | 25,000/= |

★ இந்த மாபெரும் கண்காட்சியில் பங்கு பற்ற விரும்பும் வியாபார நிறுவனங்களும் எம்முடன் தொடர்புகொண்டு தங்கள் வியாபாரத்தை இவ்வரிய நிகழ்வில் விருத்தியடையச் செய்யலாம். எமக்கு 25.10.2012 க்கு முதல் தொடர்பு கொள்ளவும்



தொடர்பு : 0774384353

(24132) (6.7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு – 12 – 05 – 1989

உதிர்வு – 31 – 08 – 2012

## அமரர்
# தில்லைப்பதி தயாகரன்
### (தேவி படமாட உரிமையாளர்-யாழ்ப்பாணம்)

கால வெள்ளத்தில் கோல விழிகள்
கரைந்து போனது
நீளமென நாம் நினைத்த
நிம்மதி தொலைந்து போனது
ஆண்மகன் நீ என்றிருக்க
பாதியிலே சென்றுவிட்டாய்
45 நாள்களும் போய்விட
சோகங்கள் தீராமல்
உன் நினைவுடன் நாம்

கடந்த 31.08.2012 அன்று எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புச் செல்வத்தின் 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும் இன்று (14.10.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடை பெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சோலைபுரம், கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(24133) (6,7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் முதியோர் தின விழா

வவுனியா கோவில் குளம் அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் அறங்காவலர் சபையால் பரிபாலிக்கப்படும் அருளகம் சிறுவர் இல்லம், சிவன் முதியோர் இல்லம் என்பன இணைந்து சர்வதேச சிறுவர் மற்றும் சர்வதேச முதியோர் தினங்களை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கோவில் குளம் சிவன் முதியோர் இல்லத்தில் நடத்தவுள்ளனர்.

சிவன்கோவில் ஆலய அறங்காவலர் சபையின் செயலாளர் ஆ.நவரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திரவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் சிவபாலசுந்தரன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன், சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் இராமமூர்த்தி, சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் கி. விஸ்வரூபன், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மு.மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

விசேட விருந்தினர்களாக வவுனியா நகர சபைத் தலைவர் மு.கனகையா, வவுனியா பொது வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் ப. சத்தியமூர்த்தி, மனநல வைத்திய அதிகாரி சி.சிவதாஸ், சட்டத்தரணி க. தயாபரன், மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி என்.லூட்ஸ், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெ.கெனடி, சிறுவர் பாதுகாப்பு சபையின் இணைப்பாளர் ச. செல்வகுமார், சிறுவர் - பெண்கள் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர் ப.சுமணவீர ஆகியோர் கலந்து கொள்வர்.(ம-400-ரி)


## யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்(வ-து) இருபாலை வீதி, கோண்டாவில்

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிகளுக்கு விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் ரூபா 10.00 செலுத்தி பெற்று பூர்த்தி செய்து 30.10.2012 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இட துபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

01. பதவி - பொது முகாமையாளர்
சம்பளக்குறி இல - 101/09
சம்பள அளவுத் திட்டம் - 10950 -130×10 -140×10 -13650
(66/2006 இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 வருட கால அனுபவம் அல்லது க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி யுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 04 வருட சேவையாற்றிய அனுபவம்.

02. பதவி - களஞ்சியப் பொறுப்பாளர்
சம்பளக்குறி இல - 202/12
சம்பள அளவுத் திட்டம் - 10200 -90×10 -100×10 -12100
(66/2006 இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர்13 ஆவது சம்பளத்திட்ட களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறை களஞ்சிய முகாமை யாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட அப் படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தி.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர்(சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.(சாதாரண தரம்) எண் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பொது நிபந்தனைகள்.

1). 30.10.2012 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக் மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2). யாழ். மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்த மையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

3). கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தால் விதிக்கப்படும் ரொக்கப்பிணையும் ஆதனப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

4). ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர் இரண்டு வருடகால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.

5). கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தும் நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6). தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக் கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப் பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.

7). விண்ணபத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு, ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்ட ஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதைத் தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களின் மூலப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(சி/4139)(5-6-7) தலைவர்.


## குற்றச் செயல் நடைபெறும் யாழ். ரயில் நிலையப் பகுதி

வலி.வடக்கு, ஒக்.14

யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பகுதி குற்றச் செயல்கள் நடைபெறும் பகுதியாக மாறி வருவதாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக மது அருந்தும் இளைஞர்களின் தங்குமிடமாகவும் சூதாட்டம் இடம்பெறும் இடமாகவும் மாறிவருகின்றது என்று தெரிவிக்கின்றனர்.

இத்தகைய குற்றச் செயல்கள் இடம்பெறும் நிலையில் அயலவர்கள் எவரும் ரயில் நிலைய வளாகத்தினுள் செல்வதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதற்கும் மேலாக இந்தப் பகுதியில் வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து தங்கியிருந்து பிச்சை எடுப்பவர்கள், சாத்திரம் சொல்பவர்கள் எனக் கூறப்படும் ஒரு பகுதியினரும் தங்கியுள்ளார்கள்.

குறிப்பிட்டோர் குடும்பமாகக் கைக் குழந்தைகள், சிறுவர்களுடன் இங்கு தங்கியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

(ம-86)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி கல்வி வலயத்தில் விஞ்ஞான பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி இளைப்பாறிய திருமதி ஹேமலதா கந்தசாமிக்கு வலய ஊழியர் நலன்புரி சங்கத்தினால் அண்மையில் வலய கேட்போர் கூடத்தில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

சங்கத் தலைவர் ஆ.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான பீ.முத்துலிங்கம், ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், கணக்காளர் செ.செந்தூரன் நிர்வாக அலுவலர் திருமதி லோ.யசோதரன் உட்பட பலர் சேவையினைப் பாராட்டி உரை நிகழ்த்தினர். (9)

## சமயப் போட்டிகள்

காரைநகர், ஒக்.14

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தால் காரைநகர் பிரதேச மாணவர்களின் சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, சைவ சமய பரீட்சை என்பவற்றை நடத்த உள்ளது.

தரம்- 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கான சமயபாடப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெற உள்ளதாக பரீட்சை இணைப்பாளர் வே.முருகமூர்த்தி தெரிவித்துள்ளார். உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தி [illegible] பெற்றது. (ம-250)


## Diploma in English

ஆங்கிலம் இனிமேல் தடையில்லை

★ இக் கற்கை நெறியானது மிகக் குறுகிய காலத்திற்குள் சரளமாக ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க உங்களை தயார்படுத்துகிறது.
★ அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்.
★ குறைந்த கட்டணம் மற்றும் இலகு தவணை கொடுப்பனவு வசதி.
★ நவீன வகுப்பறைகள்.
★ உலகத் தரம் வாய்ந்த சான்றிதழ்



பதிவுகள் ஆரம்பம்
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

PRINCE CITY CAMPUS
No. 275, Clock Tower Road, Jaffna.
Tel: 021 492 3855, Hotline: 0775 949 272
Find us on Facebook www.facebook.com/pcclanka

## Sadaharitha PLANTATIONS LTD — பதவி வெற்றிடம்

ISO 14001 CERTIFIED

சதாஹரித்த குழுமம் 2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, பெருந்தோட்டச் செய்கை, நீர்ப்பாசனம்,விவசாயம், ஏற்றுமதி, நுகர்வுப் பொருள்கள்(FMCG)போன்ற துறைகளில் அதீத வளர்ச்சிகண்டு, நாடு முழுவ தும் 25000 இற்கும் மேற்பட்ட உச்ச திருப்தியடைந்த வாடிக் கையாளர்களைக் கொண்டு, 2500 ஏக்கர் நிலப்பரப்பில் மரங்களை நடுகை செய்து பராமரித்து வருவதோடு, சிறந்த மரவளர்ப்பு மற்றும் இயற்கையைப் பாதுகாப்பதற்குமான அதியுயர் சான்றிதழான ISO 14001&2004, தரச் சான்றிதழையும், அரச அங்கீகாரத்தையும் கொண்ட குழும நிறுவனமாகும்.

இந்நிறுவனம் யாழ்ப்பாணக்கிளைக்குரிய துடிப்புள்ள ஆளணியை திரட்டிக் கொள்வதற்காக கீழ்க்காணும் வெற்றிடங்களை கவர்ச்சிகரமான சம்பளத்துடன் நிரப்பவுள்ளது.

1.Assistant Sales Manager - 02 persons
2. Senior Sales Executive - 04 persons
3. Sales Executive - 08 persons

25 வயதிற்கு மேற்பட்டவராகவும் காப்புறுதி, நிதி, நுகர்வோர் சேவை(FMCG), சந்தைப்படுத்தல் துறைகளில் 02 வருடங்களுக்கு குறையாத முன்னனுபவமும், தலைமைத்துவமும், நற்பண்பும், தன்னம்பிக்கையும் உள்ளவராயின் விரும்பப்படும்.

4.Business Promotion Officer

18-25 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகைமை அடிப்படையில் பதவிகள் தீர்மானிக்கப்படும்.

அனுகூலங்கள்
1. மாதாந்த சம்பளம் (Basic Salary)
2. கொடுப்பனவுகள்(Allowance)
3. Bonus
4. EPF,ETF

தகைமையுடையவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையை (CV) கீழ்க் காணும் முகவரிக்கு 07 நாள்களுக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

Manager,
Sadaharitha Plantation Ltd.,
320, Main Street, Jaffna,
T.P.No.:021 567 3673/ 077362 6230
EMail: ram@sadaharitha.com Web:www.Sadaharitha.com

(23999)(5-6-7)

### பசுமாடு விற்பனைக்குண்டு

நல்லின 20L பால் கறக்கக் கூடிய பால் மாடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789133549
(24138)(3.6)

### வாகனம் விற்பனைக்கு

LH-30 ஹய்ஸ் (HIRAS) 50
Sri- xxxx விலை - 590000/=
தொடர்பு: 0771538126, 0217200894
(24136)(3.6)



Best Wishe

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கானை அம்பிகாவத்தை வீதியைச் சேர்ந்த

### தங்கவேலாயுதம் பிருந்தாபன்

அவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு உதவிப் பிரதேச செயலாளராகப் பதவி உயர்வு பெற்று பணியாற்றுவதையிட்டு மனமகிழ்வோடு மேலும் பல பட்டங்கள் பெற்று சேவையில் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பா.ஜெயபாலன்-மேனகா, பிள்ளைகள்.
ஆ.குணசேகரம், திலகராணி(சோபனா), பிள்ளைகள்.
கி. திருக்குமரன்(நண்பன்)



(24000)(5.7.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் சென்ற அணியில் வடக்கு வீரர்கள் ஐந்து பேர்

யாழ்ப்பாணம்,ஒக்.14

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான அண்மையில் இடம்பெற்ற முரளி வெற்றிக்கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சற்றுப் போட்டித் தொடரில் பங்கு கொண்டு திறமைகளை வெளிப்படுத்திய 14 வீரர்களைக் கொண்ட தெரிவு அணி சிங்கப்பூருக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. இந்த அணியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 5 பேர் இடம்பிடித்தனர்.

இதில் யாழ். மாவட்டத்தில் இருந்து ரியூடர் (சென். பற்றிக்ஸ் கல்லூரி) எட்வெட் எடின்(யாழ்.மத்திய கல்லூரி), கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கணேஸ் லக்சிதரன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பிரயகுரு சுதனன்( முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ) வவுனியா மாவட்டத்தில் இருந்து கோணேஸ்வரன் ஹரிப் பிரணவன் ( வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகிய ஐந்து பேரும் சிங்கப்பூர் சென்றுள்ள அணியில் பங்குபற்றியுள்ளனர்.

இலங்கையில் இருந்து சென்றுள்ள அணிக்கு பயிற்றுநராக குமார் சங்கக்காராவும், விளையாட்டுத் தூதுவராக முத்தையா முரளிதரனும் சென்றுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை சிங்கப்பூர் கிரிக்கெட் கழக அணியுடன் 20/20 ஆட்டத்தில் பங்கு பற்றினர். இன்று ஞாயிற்றுக்கிழமை லங்கா லயன்ஸ் கழகத்துடனான 20/20 ஆட்டத்தில் இவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

(த-23)

## அன்ரனிஸ் முதலிடம்



யாழ்ப்பாணம், ஒக்.14

தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு

முதலாமிடம்- ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி

இரண்டாமிடம்- புங்குடு தீவு மகாவித்தியாலயம்

மூன்றாமிடம் - வேலணை மத்திய கல்லூரி

(த-23)

## வடமாகாணம் ஆறாம் இடம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் வடமாகாண அணி 178 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

வடமாகாண அணி இந்த வருடம் 5 தங்கம், 4 வெள்ளி, 9 வெண்கலம், 6 வர்ண விருதுகளுடன் மொத்தம் 24 பதக்கங் களைப் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் 178 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

2010 ஆம் ஆண்டு 81 புள்ளிகளுடன் 8 ஆம் இடத்தையும், கடந்த வருடம் 93 புள்ளிகளுடன் 7 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்ட வடமாகாண அணி இந்த வருடம் 178 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது (5)

## நேற்றும் இரு பதக்கங்கள்



கி.மடோன்எல்விஸ்



ஆர். செந்தூரன்

யாழ்ப்பாணம்,ஒக்.14

இலங்கை கல்வி அமைச்சினால் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் இறுதிநாளான நேற்றும் சனிக்கிழமை இரண்டு வெண்கலப் பதக்கங்களை வடமாகாணம் தனதாக்கியது.

அம்பாந்தோட்டை டி.ஏ. ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்றுவரும் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் இறுதி நாளான நேற்று 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கி.மடோன் எல்விஸ் 15.3 செக்கன்களில் ஓடி வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். செந்தூரன் 1.86 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்துடன் வர்ண விருதையும் பெற்றுக் கொண் டார்.

(த-23)

# கசூரினா கடலில் நீச்சல் போட்டி




யாழப்பாணம்,ஒக்.14

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனம் நடத்திய நீச்சல் போட்டியில் குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் செல்லமரக்காயர் பிரதீபன் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

காரைநகர் கசூரினா கடற்பகுதியில் இடம்பெற்ற இந்த நீச்சல் போட்டியில் பத்துக்கு மேற்பட்ட நீச்சல் வீரர்கள் பங்கு பற்றினார்கள்.

கடலில் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் தூரத்தை 25 நிமிட நேரத்தில் நீந்தி பிரதீபன் முதலாம் இடத்தை பெற்றுச் சாதனையாற்றினார்.

பாஷையூர் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த எஸ். றோக் சார்லின் மற்றும் பி. அருள் றொக்ஷன் ஆகிய இருவரும் இந்தப் போட்டியில் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை வென்றனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நீச்சல் பிரிவு பொறுப்பதிகாரி எம்.பி. ஆர். ஹேரத் அவர்களின் முன்னிலையில் இந்த நீச்சல் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் எ. எமிலியாம்பிள்ளை, மாவட்ட கடற்றொழில் நீச்சல் வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.வேல்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் வெற்றி பெற்று நீச்சல் வீரர்களுக்கு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் சிறப்பு விருது மற்றும் பரிசு வழங்கப்படவுள்ளன.

(த-17)

## வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக். 14

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட் டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு -

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் இடம்பெற இருந்த ஆட்டம் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணி மைதானத்துக்கு சமூகம் கொடுக்காததால் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் ரேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடம் பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. (த-23)

# ஜனாதிபதி வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டம் அடுத்த மாதம்



வலி.வடக்கு, ஒக்.14

இலங்கை ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டப்போட்டிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் சகல மாவட்டங்களின் கரப்பந்தாட்டச் சங்கங்களுக்கும் இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதல் சுற்று பிரதேச செயலக பிரிவு ரீதியாகவும், இரண்டாம் சுற்று மாவட்ட ரீதியாகவும் மூன்றாம் சுற்று மாகாண ரீதியாகவும் இறுதிச் சுற்று தேசிய மட்ட ரீதியாகவும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கரப்பந்தாட்ட கழகங்கள் தமது விண்ணப்பங்களை மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்கும்படி இலங்கை கரப்பந்தாட்ட சமமேளனத்தினால் அறிவிக் கப்பட்டுள்ளது.

(த-86)

## பள்ளிமுனை லூசியா சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.14

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகளைப் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தி வருகின்றன.

இந்த வகையில் மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் மன்னார் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 3:0என்ற கணக்கில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்திச் சம்பியனாகியது. ( த-23)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப.3 மணி

நக்கீரன் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழகம்.

பி.ப.4 மணி

நாவாந்துறை சென். நீக்கி[illegible] விளையாட்டுக்கழகம் எதிர் [illegible] விளையாட்டுக்கழகம் (த-23)

# கரவெட்டி பனை தென்னைசங்கம் கயிறிழுத்தல் போட்டியில் வெற்றி



யாழ்ப்பாணம்,ஒக்.14

சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் அனுமதியுடன் நடத்திய கயிறிழுத்தல் போட்டியில் கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தை தட்டிக் கொண்டது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களிடையே இந்த கயிறிழுத்தல் போட்டி இடம்பெற்றது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தை பெற்றது. வடமாகாண பனை தென்னை கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் என்.கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிக்கு யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் தினம் ஒரு பரிசு

**உதயனின் தினம் ஒரு பரிசுப் போட்டிக்கான வெற்றியாளர்கள் தெரிவுக்கான குலுக்கல் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.**

# இலங்கை அணிக்குத் தேவை உளவியல் நிபுணர்

உலக 'ரி-20' தொடரின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ள நிலையில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு உளவியல் நிபுணரொருவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்து ஆராயப்பட வேண்டும் என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் அசந்த டிமெல் தெரிவித்துள்ளார்.


தொடரை நடத்திய நாடான இலங்கை இறுதி ஆட்டம் வரை மிகச்சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் தோல்வியடைந்திருந்தது.

இலங்கை அணி சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தொடர்களில் இறுதியாகத் தகுதி பெற்ற 4 இறுதி ஆட்டங்களான 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம், 2009 ஆம் ஆண்டு உலக 'ரி-20' தொடர், 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம், இந்த ஆண்டின் உலக 'ரி-20' தொடர் ஆகியவற்றில் தோல்விகளைச் சந்தித்துள்ளது.

இதனால் இலங்கை அணியின் இறுதி ஆட்டங்களை வெல்லக்கூடிய ஆற்றல் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் கருத்துத் தெரிவித்த அசந்த டிமெல், இலங்கை அணிக்கு உளவியல் நிபுணரொருவரை இணைப்பது குறித்து ஆராயப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இன்றைய நாள்களில் சில நாடுகள் தங்களுக்கென அணிகளை உள ரீதியாக மேம்படுத்தக் கூடியவர்களைக் கொண்டிருப்பதன் காரணமாக, இலங்கை அணியும் அது குறித்து ஆராய வேண்டிய தேவையுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆனால் இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் அதற்குரிய நிதி வசதிகள் காணப்படுகின்றனவா என்பது இன்னொரு விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகளின் பகுதிநேரப் பந்துவீச்சாளர்களை அடித்தாடியிருக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், பகுதி நேரப் பந்துவீச்சாளர்களைச் சரியாக விளையாடியிருக்கவில்லை எனத் தெரிவித்தார். (5)



டேவிஸ் (ரைர்ரான்ஸ் அணி)

# ரைர்ரான்ஸ் முதல் வெற்றி

சம்பியன் லீக் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ரைர்ரான்ஸ் அணி 39 ஓட்டங்களினால் வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

சம்பியன்ஸ் லீக் தொடர் தென்னாபிரிக்காவில் நேற்று ஆரம்பமானது. முதலாவது ஆட்டத்தில் ரைர்ரான்ஸ் மற்றும் பேர்த் சொக்கேர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பேர்த் சொக்கேர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரைர்ரான்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் றுட்லோப் 59 பந்துகளில் 89 ஓட்டங்களையும், டேவிஸ் 38 பந்துகளில் 54 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பேர்த் அணியின் சார்பில் பந்து வீச்சில் றிமிங்ரொன் 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 164 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பேர்த் சொக்கேர்ஸ் அணி ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை தொடர்ச்சியாக இழந்ததால் 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்று 39 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் மிர்ச்செல் மார்ஷ் மாத்திரம் இறுதி வரையில் ஆட்டமிழக்காமல் 41 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ரைர்ரான்ஸ் அணி சார்பில் டீ வில்லியர்ஸ் 16 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாகவும் அவரே தெரிவானார். (5)

# பெறுபேறுகள் மோசமானவை அல்ல

அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணியிடம் தோல்வியடைந்த பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகள் மோசமானவையல்ல எனவும், பாகிஸ்தான் அணி திருப்திகரமாகவே செயற்பட்டது எனவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப் தெரிவித்துள்ளார். அத்தோடு பாகிஸ்தான் அணிக்குத் தனது ஆதரவையும் அவர் வழங்கியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும் போது இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற பலமான அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கே தகுதிபெற்றிருக்கவில்லை என்பதை உணர வேண்டும் என அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் அணி திருப்திகரமான அளவில் பெறுபேறுகளை வெளிப்படுத்தியதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான், இலங்கை அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டம் இடம்பெற்ற ஆடுகளம் சிறப்பானதல்ல எனத் தெரிவித்த ஷாகா அஷ்ரப், அந்த ஆடுகளத்தை சர்வதேசக் கிரிக்கெட் சபையே விமர்சித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகளை வைத்துப் பார்க்கும் போது இந்தியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற பலமான அணிகள் அரையிறுதி ஆட்டங்களுக்கே தகுதிபெற்றிருக்கவில்லை என்பதை உணர வேண்டும்.**

பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ரான் நஷீர் போதியளவு திறமைகளை வெளிப்படுத்தாத போதிலும், இந்தத் தொடர் முழுவதும் அவருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட என்ன காரணம் எனக் கேட்கப்பட்ட போதிலும், அணித்தேர்வு என்பது தேர்வாளர்களினதும், அணி முகாமையினதும் பொறுப்பு எனவும், அவர்களினது பணியில் தான் குறுக்கிடுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகள், திறமை வெளிப்பாடுகள் குறித்து ஆராயப்படும் எனவும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவித்தார். (5)

# டெக்கான் உரிமம் ரத்து

சரியான நேரத்தில் வங்கி உத்தரவாத தொகை ரூ. 100 கோடியை கொடுக்காத டெக்கான் அணியின் உரிமம் ரத்தானது. இதனால், இந்த அணி ஐ.பி.எல். தொடரில் இனி மேல் பங்கேற்க முடியாது.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பில், இடம்பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி, 2009 இல் கிண்ணத்தை வென்றது. அடுத்து பெரிய அளவில் சாதிக்காததால் கடனில் மூழ்கியது. வீரர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியவில்லை.

அணியை ஏலம் மூலம் விற்க முடிவு செய்யப்பட்டது. 2008 இல் ரூ. 428 கோடிக்கு வாங்கப்பட்ட இந்த அணியை, ஆந்திராவின் பி.வி.பி. வென்ச்சர்ஸ் நிறுவனம் ரூ.900 கோடிக்கு கேட்டது. இந்த தொகை போதாது எனக் கூறி, டெக்கான் நிர்வாகம் ஏலத்தை ரத்து செய்தது. இதனால், ஐ.பி.எல். நிர்வாக கவுன்சில் கூடி டெக்கான் அணியை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. இதை எதிர்த்து டெக்கான் நிர்வாகம் மும்பை உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

**புதிய கெடு**

இது குறித்து விசாரிக்கும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தக்கார், இரு தரப்பும் மூன்று மாதங்களுக்குள் தங்களுக்கு இடையிலான பிரச்சினையை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். தவிர, ரூ. 100 கோடி வங்கி உத்தரவாதத் தொகையை, டெக்கான் நிர்வாகம் அடுத்த 10 நாள்களுக்குள் (ஒக்ரோபர் 12, மாலை 5.00 மணி) இந்திய கிரிக்கெட் சபையிடம் (பி.சி.சி.ஐ.,) கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அணியின் உரிமத்தை ரத்து செய்தது செல்லும், என்று தீர்ப்பு வழங்கினார்.

**திடீர் திருப்பம்**

இதை, ஒக்டோபர் 15 வரை நீடிக்க வேண்டும் என்ற டெக்கானின் கோரிக்கையை, நீதிமன்றம் ஏற்க மறுத்தது. தொடர்ந்து, நிதிச் சிக்கலில் இருந்து மீள முடியாத நிலையில் டெக்கான் அணியை மீண்டும் விற்க முடிவு செய்யப்பட்டது. மும்பையை சேர்ந்த கமலா லேண்ட்மார்க் என்ற 'ரியல் எஸ்டேட்' நிறுவனம், வெளியில் சொல்லப்படாத தொகைக்கு நேற்று முன்தினம் டெக்கான் அணியை வாங்கியதாக செய்திகள் வெளியாகின.

**ஒப்பந்தம் ரத்து**

இதனிடையே, நேற்றுமுன்தினம் மாலை 5.00 மணிக்குள், வங்கி உத்தரவாதத் தொகை கொடுக்கப்படவில்லை. இதையடுத்து டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் உரிமம் ரத்தானது. இதுகுறித்து பி.சி.சி.ஐ., உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், ஐ.பி.எல். கட்டுப்பாட்டுக் குழுவில், டெக்கான் அணியை நீக்குவது என்று, ஏற்கனவே முடிவு செய்தோம். இது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, என்றார்.

**சம்பளம் எங்கே**

அடுத்த ஐ.பி.எல். தொடரில் புதிய அணியை சேர்க்க பி.சி.சி.ஐ. புதிய கேள்வி அறிவித்தலை அறிவிக்க தயாராகி வருகிறது. அதேநேரம், கடந்த தொடரில் டெக்கான் அணிக்காக விளையாடிய வீரர்கள் சம்பளத்தை எப்படி பெறுவது என்று, வழி தெரியாமல் விழிக்கின்றனர். (5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் ஆடும் அரசியல்..

■ ஜெரா

இங்கு கடந்த வாரத்தில் பதிவிடப்பட்ட சில முகநூல் (பேஸ்புக்) குறிப்புக்கள் தரப்படுகின்றன.

பதிவு 1:- "நல்ல விடயம் நடந்திருக்கு. கொக்கரிப்பவர்களின் கொட்டம் அடக்கப்பட்டது. ஆறு வருடங்களுக்கு மேலாக நான் துடுப்பாட்ட போட்டிகளை ரசிப்பதில்லை, ஏனெனில் அளவுக்கு அதிகமாக அரசியல் கலந்து விளையாட்டின் இரசனையை கெடுத்தே விட்டது. அதுவும் இலங்கையை பற்றி சொல்லத் தேவையில்லை... இன்று எனது கிராமத்தில் இலங்கையின் தோல்வியை முன்னிட்டு வெடி கொளுத்தி மகிழ்கிறார்களாம். நான் இல்லாது போய்விட்டேனே என்ற கவலைதான் எனக்கு."

பதிவு 2:- மிக மிக சிறப்பாக விளையாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 2012 உலகக் கிண்ணத்தை வென்றது, வாழ்த்துக்கள். இலங்கை அணியின் தோல்வியை உலகே பார்த்துக் குதூகலிக்கும் நேரத்தில் நாமும் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றோம். என்ன அழகு எத்தனை அழகு இலங்கை அணி தோல்வி அடைந்து செல்லும் அழகு. இலங்கைக்கு உலக் கிண்ணம் கிடைக்கவே கிடையாது, இலங்கை அணி ரசிகர்கள் போய்த் தூங்குங்கள் கனவிலாவது வெற்றியைக் காண்பீர்கள், இலங்கை அணியின் தோல்வி வாழ்க வளர்க. இலங்கையணி தோல்வி அடைந்து செல்லும் காட்சியை மீண்டும் மீண்டும் பார்க்க பார்க்க மிக மிக மகிழ்ச்சியாக உள்ளது.

பதிவு 3:- மேற்கிந்திய தீவுகளுடன் மோதிய இலங்கை அணி படுதோல்வியடைந்த சம்பவம் வரலாறு காணாத மகிழ்வை ஏற்படுத்துகின்றது. மூவின மக்களுக்கும் சம அந்தஸ்து, வாய்ப்பு கொடுக்காத இலங்கை அணி இனிமேலும் படுதோல்விகளையே சந்திக்கும்.

பதிவு 4:- சில நண்பர்கள் கூறுகின்றனர், விளையாட்டு வேறு, அரசியல் வேறு, தமிழர் பிரச்சினைகள் வேறு என்று இவர்களது மடைமையை எண்ணி வேதனைப்படுகிறேன். இவர்களால் ஒரேயொரு உண்மையை ஏற்கமுடியாதுள்ளமையே ஆத்திரம் கொள்ள வைக்கின்றது. என்னவெனில் இலங்கையரசு விளையாட்டைக்கூட தனது அரசியல் பிரசாரமாக கடைப்பிடிக்கின்றமையையும் இலங்கைக் கிரிக்கெற் அணியைச் சேர்ந்தவர்கள் அடிமனதில் தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகள் பற்றிய சாதகமான கருத்து நிலைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதோடு அவர்கள் மத்தியிலுள்ள சிங்கள பௌத்த மேலாதிக்க வாதம் என்பவற்றை எமது முட்டாள் தமிழ் ரசிகர்கள் சிலர் உணராதமையும் தான் இவர்களுக்கு உதைகொடுக்கத் தோணுது.

இங்கே மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றி என்பது எமக்கு முக்கியமல்ல. ஆனால் விளையாட்டை வைத்து பன்னாடுகள் மத்தியில் அரசியல் சித்துக் காட்ட நினைத்த இலங்கை அரசின் அணி படுதோல்வியடைந்தமையே எமக்கு தீராத களிப்பை ஏற்படுத்தியுள்ளது. வடக்கில் ஆங்காங்கே பட்டாசு வெடிக்கும் சத்தம் கேட்கின்றது. தெற்கில் பலரது முகத்தில் ஈ ஆடவில்லையாம். ஹையோ ஹையையோ பாவம்டா சாமி. புத்தம் சரணம் கச்சாமி! இலங்கை அணி மரணம் மிச்சாமி!

**கிரிக்கெட் அரசியல்**

வெற்று சந்தோசங்களுக்காக மட்டும் அறிமுகமான கிரிக்கெட் இன்று இலங்கையில் எடுத்திருக்கும் அரசியல் அவதாரத்தின் அண்மைய பிரதிபலிப்புக்கள் தான் இவை. இருபதுக்கு இருபது போட்டிகளில் இந்த நாட்டு அணி மோசமான தோல்வியைத் தழுவியமையை அடுத்து இலங்கை அரசியலினதும் கிரிக்கெட்டினதும் ரசிகர்கள் இவ்வாறானதொரு பதிவிடலைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த வசவுகளுக்கு இலங்கை அரசியலில் தொடர்ந்தும் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் வன்முறைகளும், அரசியல் உரிமை மறுப்புமே பிரதான காரணம். உலகமே வியந்து பார்க்கும் ஓர் அணியை விரோத அணியாகப் பார்க்க வைப்பதும் அதுவே. அந்தளவுக்கு இந்த நாட்டு அரசியலும், விளையாட்டும் பின்னிப் பிணைந்துவிட்டன. அந்தச் சிக்கலை இனி சிக்கெடுக்க முடியாவிட்டாலும், கிரிக்கெட்டை அரசியலிலிருந்து மீட்டெடுக்க முடியும். ஆனால் அதற்கான சமிக்ஞைகளும் தற்போதிருக்கின்ற நிலையில் மிகக்குறைவே.

**அரசியல் கலந்த போட்டி**

கடந்த வருடம் நடந்து முடிந்த உலகக்கிண்ண போட்டிகளின்போதும் இலங்கை அணி இவ்வாறானதொரு தோல்வியையே சந்தித்தது. அதற்கும் அரசியல் சாயம் பூசி பிரச்சாரப்படுத்த இலங்கை அரசு தயாராக இருந்த நிலையில், மிகப் பெரும் அவமானத்தை சந்தித்தது. அதனைத் தொடர்ந்து இலங்கை அணிக்குள் அதிரடியாக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அரசியல் கலக்கப்படாதவை என்று குறிப்பிடமுடியாது.

இவ்வாறு இலங்கை அரசு முன்கூட்டிய தயார்படுத்தலுடன் உலகக் கிண்ணப் போட்டியையும் அணுகியதால் பெரும்பான்மைத் தமிழர்களும் அதனை அரசியல் கண்ணோட்டதுடனேயே நோக்கினர். இந்திய அணியுடன் சுவாரஸ்ய மோதலை இலங்கை அணி எதிர்கொண்டிருந்த தருணத்தில், ரசிகர்கள் பலர் இலங்கை அணி தோற்பதைக் கொண்டாடத் தயாராகியிருந்தனர். இன்னும் பலர் இந்த வெளிப்படையான அரசியல் கலப்பினால் இந்திய ரசிகர்களாயினர்.

இவ்வாறான கூட்டு விருப்பிற்கு அமைவாக இலங்கை அணி அபாரத் தோல்வியைத் தழுவவே யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் பட்டாசுகள் வெடித்தன. அதனையும் ஜீரணிக்க முடியாத படைத்தரப்பு என்ன செய்ததென்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

**அவிழ்ந்ததா வேட்டி?**

இந்த முறையும் அதேநிலைதான். இலங்கை அணி வெற்றி பெறும் என்ற அதீத நம்பிக்கையினால் மஹிந்த ராஜபக்ஷ அரங்கு அரசியல் சாயப் பூச்சினால் அலங்கரிக்கப்பட்டது. இன்னமும் இருண்ட கண்டத்தின் ஒரு பகுதியாகவும், கிரிக்கெட்டின் ஊடாக மட்டுமே இப்படியொரு நாடு உலக வரைபடத்தில் இருக்கின்றது என விளம்பரம் தேடிக் கொண்ட நாடாகவும் இருக்கின்ற மேற்கிந்திய தீவுகளும், இலங்கை அணியும் மோதிக் கொண்டன.

அதனைப் பார்க்க மஹிந்த ராஜபக்ஷ தனது வழமையான பாணியில் வந்திருந்தார். ஆனால் மற்றைய அணி சார்பாக யாரும் வந்ததாகத் தெரியவில்லை. எதிர்பார்க்காத வகையில், சகல வசதிகளோடும் களமிறங்கிய இலங்கையணி மேற்கிந்தியத் தீவிடம் சாய்ந்தது வருண



பகவானின் ஆசியுடன்.

மஹிந்தருக்கு வந்த கடுப்பில் இடை நடுவில் எழும்பிப் பறந்தார். நல்லகாலம் வேட்டி அவிழவில்லை. அந்தக் கணத்தில் தொலைதூரத்திலிருந்து தொலைக்காட்சியில் போட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் மைதானத்தில் நிலவிய அரசியலை தெளிவாக அவதானித்தனர்.

**முகநூலில் கொண்டாட்டம்**

போட்டி தொடங்கும் முன்னரே பெரும்பான்மையான தமிழ் ரசிகர்கள் இலங்கை அணி தோற்க வேண்டும் என்பதை எதிர்பார்த்தனர். வடக்கில் தமது வெறுப்பை வெளியில்காட்டிக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் மனதுக்குள் முணுமுணுத்தனர். தமக்கிடையே பெப்சி போத்தல்களுக்காக பந்தயம் கட்டிக் கொண்டனர். எதிர்பார்த்தது போலவே தோல்வியும் வந்தது. ஆனால் வெளிச்சம் காட்டிக் கொண்டாட முடியவில்லை. முகநூல்களில் தமது சந்தோசத்தை ஆரவாரித்தனர். இலங்கை அணிக்கு எதிராக பதிவிடும் ஒவ்வொரு ஆண் முகநூல் நண்பர்களுக்கும் அதிக 'லைக்'குகளும், 'கொமன்ட்ஸ்'களும் கிடைத்தன. அவ்வளவுக்கு இலங்கையணிக்கு எதிரான மனோபாவம் கட்டமைக்கப்பட்டிருந்தது.

**தோல்விக் கொண்டாட்டம்**

தமிழக ரசிகர்கள் இலங்கையின் தோல்வியை உணர்வு பூர்வமாகக் கொண்டாட தயாராகியிருந்தனர். தோற்றால் மொட்டை போடுவேன் என கடவுளுக்கு நேர்த்திக்கடன் வைத்த உணர்வாளர்களையும் காணக்கூடியதாக இருந்தது. மறுநாள் மொட்டை போட்டுக்கொண்ட விநோதங்களும் நடந்தன. புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் தோல்வியை சுதந்திரமாகக் கொண்டாடினர்.

கிரிக்கெட்டின் தாயகமான பிரிட்டனில் தமிழர்களின் இந்தத் தோல்விக் கொண்டாட்டத்தைப் பார்த்து வெள்ளைக்காரர்களே அதிசயித்துப் போயினராம். அனைவரும் தோல்வியைக் கண்டு துவண்டு அழும்போது இந்த நண்பர்கள் மட்டும் தமது சொந்த நாடு தோற்கையில் இப்படிக் கொண்டாடுகிறார்களே! ஏன் இது? என்று லண்டனில் உள்ள தமிழர் கடைகளில் வெள்ளைக்காரர்கள் விசாரித்திருக்கின்றனர். காரணத்தை அறிந்ததும், தாம் அறிமுகப்படுத்திய சோம்பேறிகளின் விளையாட்டு இவ்வாறு அரசியல் அந்தஸ்தைப் பெற்றிருப்பதை நினைத்து பெருமிதப்பட்டுத்தான் இருப்பர்.

**விடாது துரத்தும் அடிமைத்துயர்**

உண்மையில், பிரித்தானியர்களால் கிரிக்கெட் அறிமுகம் செய்யப்படும் போது அதற்கு இவ்வாறானதொரு மதிப்பு இருக்கவில்லை. உலகம் முழுவதும் கொள்ளையடித்த செல்வத்தில் வாழ்வை அனுபவிக்கும் வெள்ளையர்கள் தமது பொழுதைக் கழிக்கவே, ஆசிய நாட்டவர் விளையாடும் கிட்டிபுல்லிலிருந்து கிரிக்கெட்டை உருவாக்கினர்.

அவர்களின் விளையாட்டு இலகுத் தன்மைக்காகவே அவ்வாறான வடிவத்தை அமைத்துக் கொண்டனர். ஆசியாவைத் தமது காலனியாதிக்கப் பிடியிலிருந்து நழுவவிடும்போது, நவகாலனியாதிக்க யுகமொன்றை ஆரம்பித்து விட்டுப் போயினர். தமக்கு அடிமைகளாயிருந்த நாடுகளும், மக்களும் ஒரு கணத்திலும் பிரிட்டனை மறந்து வாழக்கூடாது என்பதற்காக அவ்வாறானதொரு திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்தனர்.

அதில் முதன்மையானவை பிரிட்டனின் கிரிக்கெட்டும், அமெரிக்காவின் 'கொக்கோகோலா'வும். இவையிரண்டும் இன்று ஆசிய சமூகங்களுக்கு மிகவும் அவசியமானவை. இந்த இரண்டு நவகாலனியாதிக்கப் பொருள்களும் இந்த பிராந்திய நாடுகளின் பட்டிதொட்டிகளை நிறைப்பவை. நாகரிகமடைந்த சமூகமொன்றை அளக்கும் அளவுகோல்களாக இவை மாறிவிட்டன.

**கடைசிச் சாபம்**

ஆனால், இவையெதையும் தெரியாமலும், தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் அப்பாவி ஆசிய மனங்கள் இதற்குப் பின்னாலேயே அலைகின்றன. ஆங்கிலேயர்கள் வேறொரு தேவைக்காக விட்டுச் சென்ற கிரிக்கெட் இன்று அதையும் கடந்து அதிசய சக்தி பெற்றதாக இந்தச் சமூகங்கள் மத்தியில் மாறிவிட்டது. குறிப்பிட்ட ஒரு தொகுதியினரை மட்டும் செல்வந்தராக்கும் விளையாட்டாகவும், அதிக சனத்தொகையை உழைப்பற்றவர்களாக்கும் விளையாட்டாகவும் மாறிவருகின்றது.

விளையாட்டு சக மனிதர்களிடையே சகிப்புத் தன்மையையும், ஒற்றுமையையும் உருவாக்கும் சாதனம் என்பதற்குப் பதிலாக, அதிக வேதனமும், வேதனையும் தரும் விடயமுமாக மாறிவிட்டது. அதனை இன்னும் ஆழப்படுத்தி விடுவதில் கிரிக்கெட்டோடு இணைந்து கொள்ளும் அரசியல் மிக முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. இது ஆசிய சமூகங்களுக்கு கடைசியாய் விழுந்த சாபம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியுமொரு அவலம்



கற்சிலை மடுப் பாடசாலையில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டகையொன்று காற்றால் சேதமடைந்து தற்போது இந்த நிலையில் காணப்படுகின்றது.

## இறைவனுக்குத் திருவூஞ்சல்




கற்சிலைமடு விநாயகர் ஆலயத்துக்கு திருவூஞ்சல் ஒன்று பொறியியலாளர் கே.சச்சிதானந்தத்தால் வழங்கப்பட்டுள்ளது. (க-500)

## எஞ்சியது இலாபம்



இறுதிப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் இரும்புகளைச் சேகரித்தவாறு மோட்டார் சைக்கிளில் ஒருவர் சாவகாசமாகப் பயணிக்கின்றார். (க-6)

## நீருக்கான போராட்டம்



அக்கராயன் மத்திய பகுதியிலுள்ள வீடொன்றில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி இடம்பெறுகின்றது. (க-18)

## போற்றப்பட வேண்டியவர்கள்



கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 14 மாணவர்கள் ஆசிரியர்களுடன் (க-400)

## இப்படியுமொரு சிரமம்




கிளிநொச்சி கனகபுரம் இரண்டாம் பண்ணை வீதியின் புனரமைப்புக்கெனக் குவிக்கப்பட்டுள்ள கிரவல் மண் போக்குவரத்துச் சிரமங்களை ஏற்படுத்தி வருகின்றது. (க-400)

## பற்றாக்குறைக்கு முடிவு



கிளிநொச்சி தருமபுரம் இல-1 அ.த.க.பாடசாலைக்கான புதிய மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. (க-405)

## தொடரட்டும் சாதனை



வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆசிரியர்களுடன் (க-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
(23967)(3.14) அழையுங்கள்- 0779086737
**GUNAA BEST PC**

German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. அடுத்த புதிய வகுப்புக்கள் 18.10.2012 அன்று ஆரம்பம்.
தொடர்பு: 10 Palaly Road, Jaffna.
miss. Kajenthini 0771604823 (24180)(3.14)

## காணி பராமரிப்பாளர் தேவை

வேலணையிலுள்ள சாட்டி கடற்கரைக்கு அருகிலுள்ள காணியைப் பராமரிப்பதற்கு விவசாய அனுபவமுள்ள நடுத்தர வயதுடையவர் தேவைப்படுகின்றார்.
தகுதியுடையவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு: 0777696443** (24041)(3.14)

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691 (20772) (15-14)

## காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

தலையாழி வீதி, வண்ணார் பண்ணை கிழக்கில் 4 1/3 பரப்பு காணியுடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
**தொடர்பு: 0758648204** (23552)(3.14)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் 'மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
**004747944944**
**mathusena@yahoo.com** (23606)(15-6)

## காணி விற்பனைக்கு

வேலணை சாட்டி கடற்கரையை அண்டிய 8 ஏக்கர் (177 பரப்பு) காணி உடன் விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0776048646** (24153)(3.14.6)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

1½ மாதம் நிரம்பிய நல்லின ஜேர்மன் செல்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
யாழ். அக்கூரியம்
941, தட்டாதெரு சந்தி, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (சி/4150)(3.14)

## சல்லிகள் விற்பனைக்கு

தரமான கருஞ் சல்லிகள் (½'', ¾'', 1'', 1½'', 4'', 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
**தொடர்பு- 0771467561** (சி/3034)(3.14.6)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு உரும்பிராயில் அமைதியான சூழலில் நான்கு அறைகள், நான்கு கோல், இரண்டு சமையல் அறைகள், இணைந்த குளியலறை, இரண்டு wash Room வாகனத்தரிப்பிடவசதிகளுடன் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்ட சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள், அரச ஊழியர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0212227685, 0716278421
முகவரி: இராமலிங்கம் நடராசா கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (23976)(3.6.7)

## சாரதி தேவை

மன்னாரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பாரவூர்தி வாகனம் செலுத்தக்கூடிய நல்லொழுக்கமுடைய சாரதி தேவை.
* தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
**தொடர்பு: 0775006769** (24005)(3.14)

## German Language Academy

ஜேர்மன் டொச் மொழிகள் இலகுவழியில் ஜேர்மனியில் கற்று வந்த ஆசிரியரால் மிக சிறந்த முறையில் பல வருடங்களாகப் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஆசிரியர் ஆவார். கடந்த 27.09.2012 நடந்த பரீட்சையில் பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.
* ஜேர்மன் A1 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.
**German Language Academy**
**No.7, Palaly Road, Jaffna.**
**0779707322** (23971)(3.14)

## கடை வாடகைக்கு

யாழ். மாநகரசபை கட்டடத் தொகுதிக்கு முன், கஸ்தூரியார் வீதியிலுள்ள கடை (மேல்மாடி) வாடகைக்கு உண்டு. (நகைக் கடைகள் விரும்பத்தக்கது.) மேலதிக விவரங்களுக்கு 0772487487 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சி/4146)(3.14)

## கட்டடத் தொகுதி வாடகைக்கு உண்டு

யாழ். மத்திய நகரப்பகுதியில் நான்கு மாடி கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட 3x 2750 சதுர அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு மேலதிக தொடர்புகளுக்கு
0772487487 (சி/4147)(3.14)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது
Nov/Jan Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள் (C/4117)

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## Study, Work& Live in UK

எவ்வித முற்பணமும் இல்லாத வீசாவை பெற்றுக்கொண்டபின்னரான பணப்பரிமாற்றம்.(*full package*)

இவ்வாறான முறையில் கடந்த சில மாதங்களில் 15மாணவர்கள் சென்றுள்ளார்கள் அவர்களில் சிலர் ........

AVARANKAAL PUTTUR KARAINAGAR

CHUNNAKAM


கல்லூரிக்கட்டணம் மற்றும் sponsor ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவுசெய்கின்றது.

City & Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்று தரச்சான்றினைப் பெற்ற மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் ESOL A1, B1 வகுப்புகள் நடைபெறுகின்றன.

சனி, ஞாயிறு ( 9.30am-5.30pm வரை)

WEC World Education Consultancy — City& Guilds Approved Center
SANGATHTHANAI. CHAVAKACHCHERI.
CONTACT:077-9265447

## விழி நீர் சொரியக் காணிக்கை

யாழ். இந்துக் கல்லூரியின் தவப்புதல்வர்களாக அன்னையின் மடியில் தவழ்ந்து, நல் ஆசான்களாகத் திகழ்ந்து இறைபதமெய்திய எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஆசிரியமணிகள்

அமரர் வீ.சிவசுப்பிரமணியம்,
அமரர் செ.முத்துக்குமாரசுவாமி
ஆகியோரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் சொந்தங்களின் ஆறாத்துயரில் நாமும் நனைகிறோம்.


அமரர் வீ.சிவசுப்பிரமணியம்


அமரர் செ. முத்துக்குமாரசுவாமி

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் (C/4133)

# பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!
## ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்
# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**Tel : 0752145355**

**14.10.2012 முதல் 20.10.2012 வரை**

07 தினங்கள் மட்டுமே!

**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்**
**பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.



பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.
பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்
குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது. (24092)
வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.




**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ ரியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிலந்திகள் ஆயிரம் வகை

சிலந்திகளைப் பார்த்திருக்காத சுட்டிகளே இருக்க முடியாது. உங்கள் வீடுகளை நூலாம் படைகளின் கூடாரமாக்கும் சிலந்திகளும் உண்டு. கடித்து உயிரையே பறித்துவிடும் சிலந்திகளும் உண்டு. சிலந்திகளிலும் ஆயிரம் வகை.

வீட்டுச் சிலந்தி- வீட்டுச் சிலந்திகள் இருள் அடைந்த இடங்களை அதிகம் விரும்பும். வீட்டுக் கூரையிலோ, ஜன்னல் பக்கமோ வலை கட்டும். நிறைய பூச்சிகளைப் பிடிக்க முடியும் என்பதால் இந்த இடங்களை தேர்ந்தெடுக்கிறது. வலையைக் கட்டி முடித்ததும் ஓர் ஓரமாக அமர்ந்து பூச்சிகள் வருவதற்காகக் காத்திருக்கும். பெரிய பூச்சிகள் மாட்டினால் அவற்றின் மேல் அதிக அளவு நூலைப்போட்டு பிடித்துக்கொள்ளும்.

பிளாக் விடோ - கறுப்புக் கண்ணாடி போல் உடலுள்ள சிலந்தி இது. ஆண் சிலந்திக்கும் பெண் சிலந்திக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. பெண் சிலந்திகள் ஆண் சிலந்திகளை விடச் சற்றுப் பெரியவை.

பெண் சிலந்திகளின் வயிற்றுப் பகுதியில் ஒரு சிவப்பு வட்டம் இருக்கும். ஆண் சிலந்திகளுக்கு இருபுறமும் சிவப்பு மற்றும் வெள்ளையில் கோடுகள் காணப்படும்.

பொதுவாக இவை தனிமை விரும்பிகள். வலையில் சின்ன அதிர்வு ஏற்பட்டாலும் ஓரமாக பதுங்கிக்கொள்ளும். இந்த வகை சிலந்திகளின் கடி விஷமுள்ளது. ஆனால், ஆரோக்கியமானவர்களை ஒன்றும் செய்யாது. பெண் சிலந்திதான் கடிக்கும். ஆண் கடிக்காது.

தோட்டச் சிலந்தி - தோட்டங்களிலும் புல்வெளிகளிலும் வாழும். கறுப்பு மற்றும் மஞ்சள் கோடுகளுடன் காணப்படும்.

நடுப் பகுதியில் சற்று அதிக வலிமையாக இருக்கும்படி வலை கட்டும். அந்த இடத்தில் பெண் சிலந்தி அமர்ந்து கொள்ளும். ஆண் சிலந்தி பெண் சிலந்தியைச் சுற்றி வலையை மேலும் பெரிதாக்கிக்கொண்டே போகும். இவற்றுடன் தங்கக்கம்பிச் சிலந்தி, பச்சைச் சிலந்தி, கரோலினா உல்ஃப் சிலந்தி, பாலைவனச் சிலந்தி போன்றனவும் உள்ளன. ஆண் சிலந்திகள் 10-11 ஆண்டுகள் வாழும். பெண் சிலந்திகள் 25 ஆண்டுகள் வரை வாழும்.




விரைவாக முன்னேற அபிவிருத்திக் கடன்



- தேவைக்கு ஏற்ற கடன் தொகை
- மிகக்குறைந்த வருடாந்த வட்டி
- அதிகூடிய மீளச்செலுத்தும் காலம்
- தவணைப் பணம் இன்றி வட்டியை மட்டும் மீளசெலுத்தக்கூடிய சலுகைக்காலம்
- 220ற்கும் அதிகமான வங்கிச் சேவை நிலையங்கள்

வியாபார உலகில் ஸ்திரத்தன்மையுடைய வங்கியுடன் கைகோர்த்துக்கொள்ளுங்கள்

கொமர்ஷல் வங்கி உங்கள் கருத்துக்களை செவிமடுக்கவும், பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கவும் ஆவலுடன் காத்திருக்கிறது உங்கள் தேவைகளை எம்மிடம் கூறுங்கள் நாம் உங்களிடம் வருகிறோம்...

| | | | |
|---|---|---|---|
| மாலிக்க | - 077 7717950 | றிபாஸ் | - 077 7717916 |
| சுசந்த | - 077 7717925 | யகத் | - 077 7717915 |
| கமல் | - 077 7717952 | | |

கடன் மட்டுமல்ல... வியாபாரத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும்...

COMMERCIAL BANK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் எவ்வாறு உருவாகிறது?

நாம் நினைத்திருப்போம் மலர்களிலிருந்து நேரடியாகத் தேனீ தேனை உறிஞ்சிக் கொண்டு வந்து தேன் கூட்டில் அடைக்கிறது என்று. ஆனால் உண்மை அது வல்ல.

மலர்களிலிருக்கும் குளுக்கோஸை உணவாக அருந்திய பிறகு , தேனியின் வயிற்றிலிருந்து சுரக்கும் ஒரு வித திரவமே தேன். இது அறிவியல் பூர்வ உண்மை.

★ தேனிலுள்ள சத்துக்கள்

200 கிராம் தேனில் 1 1/4 லீற்றர் பால் மற்றும் 1 1/2 கிலோ மாமிசம் ஆகியவற்றில் எத்தனை

சத்துப் பொருள்கள் உள்ளனவோ அதற்கு இணையான சத்துப் பொருள்கள் தேனில் உள்ளன. இதிலிருந்தே தேனின் மகத்துவத்தை நாம் அறியலாம்.

அதாவது ஒன்றரை கிலோ மாமிசம், மற்றும் ஒன்றே கால் லீற்றர் பால் அளவுக்கு 200 கிராம் தேனில் சத்துக்கள் அடங்கியிருக்கிறது. இது ஆச்சர்யம் கலந்த உண்மை.

★ யார் யாரெல்லாம் பருகலாம்?

தேனை யார் யாரெல்லாம் பருகலாம் என்ற விதிமுறையெல்லாம் கிடையாது. சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை அனைவரும் தேனை பருகலாம். நோய் வாய்ப்பட்டவர்களும் பருகலாம். பிணி தீர்க்கும் மருந்துதான் தேன். அந்தக் காலங்களில் மூலிகை மருத்துவத்தில் தேனைதான் அதிகம் பயன்படுத்தியிருக்கின்றனர். கொடுக்கப்படும் மருந்தை உடலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதில் தேனின் பங்கு அதிகம். இதனால் தான் தேனோடு மற்ற மருந்துகளை உண்ணக்கொடுப்பர்.

தேன் சாப்பிடுவதால் இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபின் அதிகரிக்கிறது. குடல்புண்கள், தடிமன், இருமல், இருதய நோய்கள் போன்றவை குணமடைகிறது. மேலும் அஜீரணம், சீதபேதி போன்ற நோய்களுக்கு இது அருமருந்தாகும்.

வயிற்றைச் சுத்தப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகிறது. இதிலுள்ள பொட்டாஷியம் மூட்டு வலியைப் போக்குகிறது.



வயதான பெரியவர்கள் அளவுடன் தேனை சாப்பிட்டு வர நீண்ட காலம் உடல்நலக் கோளாறில்லாமல் வாழ முடியும். குழந்தைகளுக்கு தேனை இரண்டு தேக்கரண்டி அளவுக்கு உணவில் கலந்து கொடுப்பதால் அவர்களுக்கு ஏற்படும் மலச்சிக்கல், வயிற்று உபாதைகள் அனைத்தும் நீங்கிவிடும்.

★தூக்கத்தைத் தூண்டும் தேன்

குழந்தைகளுக்கு இரவில் படுக்கப் போகும் முன் ஒரு கரண்டி அளவு தேனைக் கொடுத்தால், அதுவே தூக்கத்தை தூண்டும் மருந்தாகவும் செயல்படுகிறது. இதனால் குழந்தையின் வளர்ச்சி அதிகரிக்கும். தேன் தேனீக்கு மட்டுமல்ல மனிதனுக்கும் சிறந்த உணவாகவும், மருந்தாகவும் செயல்படுகிறது.

இருதயம், நுரையீரல், இரைப்பை ஆகிய உறுப்புகளை வலுப்படுத்தும். அத்தோடு இரத்த நாளங்களிலும், குடலிலும் சேரும் அழுக்குகளை அகற்றி கழிவுகளை வெளியேற்றும் ஆற்றல் கொண்டது.

★ தேன் சிறுநீர் அடைப்பை நீக்கும்

★ தேன் மலச்சிக்கலை குணப்படுத்தும்

★ கபத்தால் ஏற்படும் இருமல் போன்ற நோய்களுக்கு தேன் ஒரு சிறந்த நிவாரணி.

★இளம்சூடான பாலில் சிறிதளவு தேன் கலந்து பருகினால் உறக்கம் உங்களைத் தழுவும்.

★ பெரும்பாலான மருத்துவ முறைகளில் தேன் ஒரு முக்கிய மருந்துப்பொருளாக சேர்க்கப்பட்டிருக்கும்.

★தேனைப் பற்றிய ஒரு சில பயன்மிக்க தகவல்கள்

1. தேனை பழச்சாறுடன் கலந்து சாப்பிட்டால் நல்ல சக்தி கிடைக்கும்.

2. மாதுளம் பழச்சாறுடன் கலந்து சாப்பிட புது இரத்தம் உருவாகும்.

3. எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து சாப்பிட இருமல் குணமாகும்.

4. இஞ்சியுடன் தேன் கலந்து சாப்பிட பித்தம் தீரும்.

5. ஆரஞ்சுப் பழத்துடன் தேன் கலந்து சாப்பிட நல்ல தூக்கம் வரும்.

6. ரோஜாப்பூ குல்கந்தில் தேன் கலந்து சாப்பிட உடல் சூடு தணியும்.

7. நெல்லிக்காயுடன் தேன் கலந்து சாப்பிட இன்சுலின் சுரக்கும்.

8.கரட்டுடன் தேன் கலந்து சாப்பட இரத்த சோகை நீங்கும்.

இவ்வளவு பயனை அளிக்கும் தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் பற்றிய ஒரு சில தகவல்களையும் தெரிந்துகொள்வோம்.

★தேனீக்கள் பற்றிய சிறப்புத் தகவல்கள்

1. மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் திறன் படைத்தது தேனீக்கள்.

2. புயல் வருவதை முன்கூட்டியே உணரும் சக்தி தேனீக்கு உண்டு.

3. தேன் எடுக்கப் போகாத தேனீ ஆண் தேனீ.

4. ஒரு கிலோ தேனுக்கு ஆறு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் பூக்களை தேனீக்கள் சந்திக்கின்றன.

5. தேனீக்களின் எச்சமே நாம் சுவைக்கும் தேன்.

6. ஒரு தடவை கொட்டியவுடன் தேனீ தனது கொடுக்கை இழந்துவிடும்.

7. தேனீ ஒரு சைவ உண்ணி.

8. ஐந்து கண்களைக் கொண்டது தேனீ. எனவே, தேனீயின் பார்வை மிகக் கூர்மையாக இருக்கும்.

9. தேனீக்களுக்கு இறைட்டைகள் இரண்டு.

10. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வகையான தேனீக்கள் உண்டு.

11. தேனீக்கள் வாழும் கூடுகள் அதனுடைய தேன் மெழுகினால் ஆனவையே.

12. தேனீக்கள் மூன்று வகைப்படும். ஆண் தேனீ, வேலைக்காரத் தேனீ, இராணித் தேனீ.

13. ஏராளமான நுண்ணறைகள் கொண்டது தேன்கூடு. மூன்று வகை தேனீக்களும் தனித்தனி அறைகளிலேயே வாழும்.

★தேனீ நடனம்.

★வேலைக்காரத் தேனீக்கள் தேன் இருக்கும் இடத்தை அறிந்து வந்து மற்றத் தேனீக்களுக்கு நடனமாடித் தெரிவிக்கின்றன. இதை தேனீக்கள் நடனம்என்கிறோம்.

1. ஒரு சொட்டுத் தேனை சேகரிக்க தேனீக்கள் பதினாறு மைல்தூரம் கூட பறந்து செல்கிறது.

2. மரத்தின் கிளை, கரடு முரடான பாறை இடுக்குகள் ஆகியவை தனக்கு ஏற்ற உறைவிடமாக(இருப்பிடமாக) தேனீக்கள் தேர்ந்தெடுக்கின்றன. தேனீக்களில் ராணித் தேனீயே அனைத்து முட்டைகளையும் இடுகின்றது.

3. தேனீயின் உடலில் 12 வளையங்கள் உள்ளன.

4. தேனீ நிமிடத்துக்கு அதிக பட்சமாக 400 முறை இறக்கையை அசைக்கும்.

5. எறும்பு இனத்தைச் சேர்ந்தது தேனீ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேற்றுக்கற்றாளை மகத்துவம்

"குமரியை உண்டால், குமரியை வெல்ல முடியும்" என்கிறது சித்த மருத்துவம். குமரி என்பது சோற்றுக்கற்றாழையின் மற்றொரு பெயர்.

"அலோவேரா" சோப்பு, ஷாம்பூ... எல்லாம் சோற்றுக் கற்றாழை மூலம்தான் உற்பத்தி செய்கிறார்கள். தரிசு நிலத்தில் விளையும் இந்த செடிக்கு ஏகப்பட்ட மருத்துவ குணங்கள் உள்ளன. கற்றாழை ஜெல்லை (சோறு) சுத்தமான நீரில் 7 முறை கழுவி சுத்தம் செய்து, தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர உங்கள் இளமை என்றும் ஊஞ்சலாடிக் கொண்டே இருக்கும்.

உடலில் கஸ்தூரி மணம் வீசும். சருமம் வறண்டுபோகாமல் ஈரப்பதத்துடன் ஜொலிக்கும். கற்றாழை ஜெல்லை பசு மோரில் கலந்து குடித்து வர உடல் சூட்டினால் முகத்தில் வரும் பருக்கள், வெயிலால் தோலில் ஏற்படும் அலர்ஜி மற்றும் கருந்திட்டுக்கள் மறைந்து போகும். இதன் ஜெல்லை முகத்தில் தேய்த்துக் கழுவி வந்தால் முகம் அப்பழுக்கில்லாத பளிங்கு போல் ஜொலிக்கும். கற்றாழை மடலைக் கீறி சாறெடுத்து, அதை தேங்காய் எண்ணெயுடன் கலந்து 40 நாள் வெயிலில் வைத்து இதை தலைக்கு தொடர்ந்து தேய்த்து வாருங்கள். தலை முடி நன்கு செழித்து வளரும்.

என்ன இல்லை சோற்றுக் கற்றாழையில் சோற்றுக் கற்றாழைக்கு சித்த மருத்துவர்கள் கொடுத்திருக்கும் மதிப்பே தனிதான். மூலிகைகள் உலகத்தில் ராஜ மரியாதையுடன் வலம் வரும் இந்த சோற்றுக் கற்றாழை அதற்கு முற்றிலும் தகுதி உடையதுதான். எளிதாக கிடைக்கக் கூடிய இந்த மூலிகை ஏராளமான மருத்துவக்குணங்களை கொண்டது.

தீய சக்திகள், கண் திருஷ்டி இவைகளை அண்டவிடாது என்ற நம்பிக்கையின் காரணமாக வீட்டின் முன்புறம் வளர்க்கப் படுகிற அல்லகட்டித் தொங்க விடப்படுகிற இந்த செடி மாட்டுத் தொழுவங்களில் கால்நடைகளுக்கு உண்ணிபற்றாமலிருப்ப தற்காகவும் தொங்க விடப்படுவது உண்டு.

கற்றாழையின் சோற்றைத் தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊற வைத்துக் குளிக்க தலையில் ஏற்படும் பொடுகு, சிரங்கு குணமாகும்.

சோற்றுக் கற்றாழை மடலை இரண்டாகப் பிளந்து உள்ளே சிறிதளவு வெந்தயத்தை வைத்து மூடி விடவும். இரண்டு நாள்கள் கழித்து ஊறிய அந்த வெந்தயத்தை எடுத்து தேங்காய் எண்ணெயில் போட்டு அதை தேய்த்து குளிக்க நரை முடியும் கறுப்பாகும்.

வாடிச் சருகான கற்றாழை மடலை தீயில் கருக்கி, தேங்காய் எண்ணெயோடு கலந்து தீப் புண்களில் மீது பூசி வர விரைவில் புண்ஆறும்.

கற்றாழை மடலில் சிறு துண்டு எடுத்து இரண்டாக பிளந்து சோற்றுப் பகுதியை தீயில் வாட்டி உடல் பொறுக்கும் சூட்டில் அடிப்பட்ட இடத்தில் இதை வைத்து ஒத்தடம் கொடுக்க வலி, வீக்கம் மட்டுமல்ல இரத்தக் கட்டும் மாறும்.

இச் செடியின் மடலில் உள்ள சோற்றை எடுத்து தண்ணீரில் நன்கு அலசி அதை சாப்பிட்டு வர குடல் புண், மூல நோய் மாறும். மலச் சிக்கல் தீரும்.

மஞ்சள் காமாலை நோய்க்கும் சோற்றுக் கற்றாழை மருந்தாக பயன்படுகிறது. தவிர கூந்தல் தைலம், அழகு சாதனப் பொருள்களில் இது சேர்க்கப்படுவதால் பொருளின் தரமும், வீரியமும் மட்டுமல்ல மருத்துவதன்மையு ம் அதிகரிக்கிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த செலவில் கூடிய பயன்

தாய்வானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முதற்தரம் வாய்ந்தது

ஹோட்டல் மற்றும் உணவு விடுதிக்கான
**GAS RICE STEAMER**



30 Kg அரிசிக்கு 850g Gas / 15 Kg அரிசிக்கு 600g Gas

ஒரே இயந்திரத்தில் சோறு, இடியப்பம், இட்லி இன்னும் பல

ஹோட்டல் மற்றும் உணவு விடுதிக்கான
**POTATO PEELER**



இரண்டு நிமிடத்தில் 10 Kg உருளைக்கிழங்கு உரிக்கலாம்

ஒரு நாளைக்கான வேலை ஒரு மணித்தியாலத்தில்

ஹோட்டல் மற்றும் உணவு விடுதிக்கான
**VEGETABLE CUTTER**



2 நிமிடத்தில் 10 kg வெட்டலாம்

கொத்து ரொட்டி உட்பட அனைத்து மரக்கறி வகைகளையும் வெட்டலாம்

**U.K. ENTERPRISES**

Camway Plaza, #214/4B, Srimath Bandaranayaka Mawatha, Colombo -12, SRI LANKA
T.P. : 0094112439069 Fax : 0094112439068
தேவா :- 0774787138
குமார்:- 0777916021
e-mail : ukenter@sltnet.lk

# TRI-WHEEL TRUCK (DIPPER)

## த்ரீ வீல் ட்றக் டிப்பர்



- ★ 2.8 லீட்டருக்கு (டீசல்) 100 Km பாவனை.
- ★ 20 HP. இயந்திர வலு கொண்ட என்ஜின்.
- ★ 1320Kg நிறைகொண்ட அனைத்துவிதமான பொருட்களையும் ஏற்றி இறக்குவதற்கான வசதி கொண்ட இலகு வாகனம்.
- ★ Hydraulic வசதி கொண்ட டிப்பர் வாகனம் (Hydraulic Dipper)
- ★ அனைத்து உதிரிப்பாகங்களும் உடன் கிடைக்கும்.

அனைத்து சுயவருமான முயற்சிகளுக்கும் !

அனைத்து கட்டட நிர்மாண வியாபாரத் தேவைகளுக்கும் !

நியாயமான விலையில் Rs. 490,000/= + VAT



*Sole Importers :*
**MPL Agro Group**
# 214/4B, Srimath Bandaranayaka Mw, Colombo - 12.
Tel : 0112 439069 Fax: 0112 439068
தொடர்புகளுக்கு:–
தேவா – யாழ்ப்பாணம் – 0774787138
குமார் – யாழ்ப்பாணம் – 0777916021

# LOW Labour High Performance

## குறைந்தளவு ஊழியர்களுடன் அதிக வேலை

MINI MOBILE BATCHING MACHINE
RD - MIXER
ஐரோப்பிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட இந்திய தயாரிப்பு



- ★ நீராற்றலால் இயக்க முடியும்
- ★ காற்றடிக்கக் கூடிய 4 சக்கரங்கள் Jack உடன்
- ★ 120 லீற்றர் கொள்ளவுடைய நீர் வெளியேற்றக்கூடிய வசதி
- ★ நீர்ப் பம்பி
- ★ எலெக்ரிக் ஸ்ராட் டீசல் எஞ்சின் எலெக்ரிக் மோட்டர்
- ★ 12 வோல்ட் DC பற்றரி, self start, நிறை/பாரம் குறிகாட்டி வசதி கொண்டது.
- ★ ஒரே தடவையில் 03 சிமெந்து பைக்கற் வீதம் நாள் ஒன்றுக்கு 500

10/7 HYDRAULIC MIXER (300 Ltr)



- ★ ஒரு தடவையில் ஒரு பைக்கற் சிமெந்து கலவை செய்யலாம்
- ★ 03 மனித வலுக்கள் மட்டும் போதுமானது.

*Sole Importers :*
**MPL Agro Group**
# 214/4B, Srimath Bandaranayaka Mw, Colombo - 12.
Tel : 0112 439069 Fax: 0112 439068
தொடர்புகளுக்கு:–
தேவா – யாழ்ப்பாணம் – 0774787138
குமார் – யாழ்ப்பாணம் – 0777916021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HNB The Green Pledge

# பசுமைப் புரட்சி

## சூழல் உணர்வின்றி HNB யுடன் இணைந்து ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் 19வரை இலக்ரோனிக் கழிவுகளை அகற்றிவிடுங்கள்

உங்கள் இலக்ரோனிக் கழிவுகளை (ஈ வேஸ்ட்) சரியான வழியில் அகற்றிவிடுங்கள். ஒக்டோபர் 15ஆம் திகதிக்கும் 19க்கும் இடையில் நாடளாவிய ரீதியிலுள்ள HNB யின் 244 வாடிக்கையாளர் நிலையங்களுள் எந்தவொரு வாடிக்கையாளர் நிலையத்திலுமுள்ள பசுமைத் தொட்டிக்குள் அவற்றை இடுவதன் மூலம் அகற்றிவிடுங்கள்.



## ஈ வேஸ்ட் என்றால் என்ன?

ஈ வேஸ்ட் என்பது இலக்ரோனிக் கழிவாகும். சுருக்கமாக சொல்லப்போனால் அச்சிடப்பட்ட சர்கியூட் போர்டுகளை கொண்ட எந்தவொரு இலக்ரோனிக் சாதனமும் பாவனைக்காலம் முடிவடைந்து செயற்படாது போயிருக்குமானால், அவைகளே E-வேஸ்ட்டில் அடங்குபவை. ஈ-வேஸ்ட்டுகள் மூலம் மனித உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாயுக்களை வெளியிடுவதோடு நீர்த்தேக்கத்தையும் சென்றடைவதனால், மனித சமுதாயத்திற்கே பெரும் பாதிப்பை உருவாக்குகின்றன.

HNB பசுமைப் புரட்சி என்றால் என்ன? HNB பசுமைப் புரட்சி என்பது, ஹற்றன் நஷனல் வங்கியானது, திங் கிறீன் பிரைவட் லிமிட்டட்டுடன் இணைந்து நமது சூழலை பாதுகாப்பதோடு, நாம் பாதுகாப்பாக வாழும் சூழலை ஏற்படுத்த முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடாகும். இச் செயற்பாடானது மத்திய சூழல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, HNB பசுமைப் புரட்சியின் ஆரம்பத் திட்டமாகும்.

நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில்: உங்கள் வீட்டிலோ அலுவலகத்திலோ உள்ள இலக்ரோனிக் கழிவுகளை இலங்கையின் எப்பாகத்திலுமுள்ள HNB யின் 244 வாடிக்கையாளர் நிலையத்திலுமுள்ள எந்தவொரு வாடிக்கையாளர் நிலையத்திலும் ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கும் 19 க்குமிடையில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிக்குள் ஒப்படைத்து அவற்றை அழித்து விட உதவி செய்யுங்கள்.

நாம் சேகரிக்கும் ஈ-கழிவுகள்: கணனி தொடர்பான சாதனங்கள், தனிப்பட்ட இலக்ரோனிக் சாதனங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் (தொ.பேசி,கையடக்க தொ.பேசி) மற்றும் புரொஜக்டர்கள், பற்றுச்சீட்டு (பில்) சாதனங்கள், தொலை நகல் சாதனங்கள், நகல் பிரதி எடுக்கும் சாதனங்கள், செய்தி பரிமாற்று சாதனங்கள், ஒலி/ஒளி (ரிசிவேர்ஸ்/டெக்கோடர்ஸ்) பரிமாற்று சாதங்கள் போன்ற ஏனைய இலக்ரோனிக் சாதனங்களாகும்.

Think Green

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும். Hatton National Bank PLC – PQ 82
ஃபிச் ரேட்டிங்: **AA-(lka)**
HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, ரி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

HNB
HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பேசும் செடிகள்!

செடிகள் காற்றில் ஆடுவதைப் பார்த்திருப்பீர்கள். அவை அவ்வாறு ஆடுவதன் மூலம் ஒன்றுக்கொன்று பேசுகின்றன என்ற அதிசயத் தகவலைக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

தாவரங்கள் ஒலிக்கு 'ரெஸ்பான்ஸ்' காட்டுவது மட்டுமல்ல, தாங்களே சில ஒலிகளை வெளியிடவும் செய்கின்றன என்கிறார்கள் இவர்கள். இந்த ஆய்வை மேற்கொண்ட பரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அதிசக்தி வாய்ந்த ஸ்பீக்கர்களைப் பயன்படுத்தினர். அதன்மூலம் சோளப் பயிர்கள் தமது வேர்ப் பகுதியிலிருந்து வெளியிட்ட 'கிளிக்' ஓசையைக் கேட்டனர். காற்றில் செடிகள் தமது விருப்பம் ஏதுமில்லாமல் இயல்பாக ஆடுவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவை அப்போது தொடர்ந்து உரையாடிக் கொண்டு இருக்கின்றனவாம்.

தாவரங்கள் ஏற்படுத்தும் அதே அலைவரிசையிலான ஒலியைத் தொடர்ந்து ஏற்படுத்திய போது, தாவரங்கள் அதை நோக்கி வளரத் தொடங்கியிருக்கின்றன. எக்ஸெட்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வெளியிடும் தகவல் இன்னும் வியப்பை ஏற்படுத்துகிறது.

அதாவது, முட்டைக்கோஸ் தாவரமானது ஒருவித வாயுவை வெளியிட்டு, வெட்டுக்கிளிகள், செடிகளை வெட்டும் கத்திரிகள் குறித்து பிற தாவரங்களை எச்சரிக்கின்றனவாம்.

மனிதர்களின் காதுகளுக்குக் கேட்காத ஒலி மொழியில் செடிகள் பேசிக்கொள்கின்றன என்பதற்கு இவ்வாறு உறுதியான ஆதாரம் கிட்டியிருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்து வரும் விலாங்கு



பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். பார்ப்பதற்கு பாம்பைப் போலவே தோற்றமளிக்கும் கடல் விலாங்கு மீன்கள்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அதிகமாக வாழும் பல கடல் வாழ் உயிரினங்களில் ஒன்று கடல் விலாங்கு மீன். சுவை மிக்க மீன் வகையாக இருப்பதால் உலக அளவில் இதனை விரும்பி வேட்டையாடுகின்றனர். ஆனால் ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் இவற்றைப் பிடிப்பதில்லை என்பதால் பவளப் பாறைகளின் இடுக்குகளில் இவை கூட்டம், கூட்டமாக வாழ்கின்றன.

ஆங்குயில் பார்ம்ஸ் என்ற விலங்கியல் பெயரைக் கொண்ட இவ்வினங்களில் சுமார் 800 வகைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. குளங்களில் வாழும் விலாங்கு மீன்களைப் போலவே கடலில் வாழும் விலாங்கு மீன்களும் தோற்றமளிக்கின்றன. கடலில் வாழும் இந்த இனமோ சுமார் 5 சென்றி மீற்றர் முதல் 4 மீற்றர்வரை நீண்டதாகவும் பாம்புகளைப் போல் உருவத்தை உடையதாகவும் இருக்கின்றன.

உருவத்தில் மிகவும் பெரியதாகவுள்ள முரே விலாங்கு மீனின் எடை சுமார் 25 கிலோவரைகூட இருக்கும். இதன் முன் பகுதியிலும் வால் பகுதியிலும் துடுப்புகள் இருந்தாலும் அவையும் பக்கவாட்டில் வளைந்து உடலோடு உடலாக ஒட்டியிருக்கும்.

இத்துடுப்புகளே விலாங்கு மீன்கள் இடம் பெயரவும் உதவியாக இருக்கின்றன. ஆழமற்ற கடல் பகுதிகள், மணல், சகதி நிறைந்த இடங்கள், பாறைகள் மற்றும் பவளப் பாறைகளின் இடுக்குகளிலும் பொந்துகளிலும் கூட்டம், கூட்டமாக வாழ்கின்றன. இவற்றில் சில வகைகள் மட்டும் கடலில் 13ஆயிரம் அடி வரையுள்ள ஆழத்திலும் வாழ்கின்றன. ஆங்குலிடே என்ற குடும்பத்தை சேர்ந்த விலாங்கு மீன் நல்ல தண்ணீரிலும் வாழும் தன்மையுடையது. முட்டையிட்டு குஞ்சு பொரிக்க கடலில் இருந்து ஆற்றுக்கு வந்து குஞ்சு பொரித்தவுடன் மீண்டும் கடலுக்குத் திரும்பிவிடும்.

இதன் முட்டையிலிருந்து வெளிவரும் லார்வாக்கள் கடலின் மேற்புறத்தில் மிதந்து கொண்டே பனித் துளிகளையும் கடல் நுரையையும் சாப்பிடும். பின்னர் கண்ணாடி போன்ற புழுவாக மாறி துள்ளிக் குதிக்கவும் நீந்தவும் கற்றுக் கொள்கின்றன. பின்னர் படிப்படியாக உருமாறி தாயைப் போலாகியவுடன் கடலின் அடிப் பகுதிக்குச் சென்றுவிடுகின்றன.

அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஐரோப்பா, நியூசிலாந்து, இத்தாலி, ஹொங்காங், நெதர்லாந்து, சுவீடன் உள்ளிட்ட வெளிநாடுகளில் இந்த விலாங்கு மீன்களைக் கொண்டு சுவை மிக்க உணவுப் பதார்த்தங்கள் செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதன் சுவைக்காகவே சில நாடுகளில் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு நட்சத்திர ஹோட்டல்களுக்கு உணவுக்காக அனுப்பிவைக்கப்படுகின்றன. இதன் சுவைக்காக அதிக அளவில் வேட்டையாடப்படுவதால் அழிந்துவரும் உயிரின வகைகளில் சிவப்புப் பட்டியலில் இடம் படித்திருக்கிறது. சிறுத்தை போன்ற புள்ளிகளையுடைய விலாங்கு மீன், முரே விலாங்கு மீன் ஆகியன கடலுக்குள் நீந்தி செல்வோரைப் பயமுறுத்தும் மீன்களாகவும் இருக்கின்றன. இம்மீன்கள் நீளமாக இருப்பதால் உடலை வளைத்துக் கொண்டு குழிகளிலும், பாறைகளிலும் மறைந்திருந்தாலும் தலையை மட்டும் வெளியில் நீட்டி வாயை திறந்து வைத்துக் கொண்டேயிருக்குமாம்.

HERO HONDA

Pleasure
என்றால் ஹீரோ ஹொண்டா

- சிறந்த ஜப்பான் ஹொண்டா தொழில்நுட்பம்.
- 35 வருட நம்பகத்தன்மை மற்றும் சிறப்பினை கொண்ட வரையறுக்கப்பட்ட ஸ்டெ்போட் மோட்டர்ஸ் (தனியார்) நிறுவனம்
- நாடெங்கும் பரந்திருக்கும் அனுபவமிக்க சேவையாளரைக் கொண்ட சேவை வலையமைப்புகள்.




ரூபா. 178,482 (+வரி)

நீங்கள் ப்ளெஷர் ஸ்கூட்டரை கொள்வனவு செய்யும்போது HERO HONDA இலச்சினை உள்ளதா என கவனத்திற்கொள்ளவும்.

வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்

Pleasure

உயர்ந்த வட்டி பாதுகாப்பு

16.25% வருடாந்தம்

15.11% வ.வ.வீ %

2 வருட நிலையான வைப்புக்கு முதிர்ச்சியில் வட்டி

CF எக்ஸல்

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ % | முதிர்ச்சி | வ.வ.வீ % |
|---|---|---|---|---|
| மாதம 01 | - | - | 12.50% | 13.24% |
| மாதங்கள் 03 | 11.50% | 12.13% | 13.00% | 13.65% |
| மாதங்கள் 06 | 12.50% | 13.24% | 13.50% | 13.96% |

CF நிலையான வைப்பு

| காலம் | மாதாந்தம் | வ.வ.வீ % | முதிர்ச்சி | வ.வ.வீ % |
|---|---|---|---|---|
| மாதங்கள் 09 | 12.75% | 13.52% | 14.00% | 14.24% |
| மாதங்கள் 12 | 14.00% | 14.93% | 15.00% | 15.00% |
| மாதங்கள் 18 | 14.25% | 15.22% | 15.50% | 14.95% |
| மாதங்கள் 24 | 14.50% | 15.50% | 16.25% | 15.11% |
| மாதங்கள் 36 | 13.50% | 14.37% | 16.00% | 13.96% |
| மாதங்கள் 48 | 13.50% | 14.37% | 16.50% | 13.51% |
| மாதங்கள் 60 | 13.50% | 14.37% | 17.50% | 13.40% |

* குறிப்பிட்ட வட்டி வீதத்திலும் பார்க்க மேலதிகமாக 0.5% வட்டி, முத்த பிரஜைகளுக்கு

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்

0112315091/2 அல்லது அண்மையிலுள்ள எமது கிளைகளுக்கு நேரடியாக விஜயம் செய்யுங்கள்.

சென்ட்ரல் பினான்ஸ் வாடிக்கையாளருக்கான பிரத்தியேக நன்மைகள்
நாடளாவிய ரீதியில் 500க்கு மேற்பட்ட வர்த்தகர்களிடமிருந்து உங்கு லோயல்டி அட்டைக்கு 45மு வரையிலான விலைக்கழிவு

CF சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

2011ன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் உரிமம் அளிக்கப்பட்டது.
வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாக 1957ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ந் திகதி நிறுவப்பட்டது.

A- (lka) பிட்ச் மதிப்பீட்டுடன் கூடிய ஒரு நிதி நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைக் குறையைப் போக்கும் பால்

பால் குடித்தால் எலும்பு, பற்களின் வளர்ச்சி சீராக இருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ள நிலையில் பாலானது பார்வை குறைபாட்டைச் சரி செய்யும் என்று சமீபத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. பிறந்த குழந்தைகள் முதல் பெரியவர் வரை பால் அருந்தாத நபர்களே இல்லை. இத்தகைய பாலானது கண் பார்வை குறைபாட்டைச் சரிசெய்யும் என்று நியூயோர்க் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரில் அமைந்துள்ள பவலோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஏமி மில்லன் என்பவர் இது தொடர்பான ஆய்வை மேற்கொண்டார். அப்போது பெண்கள்தான் அதிகமாக பார்வை குறைபாட்டால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் 50 வயதினை நெருங்கும் பெண்கள் இக்குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்தது. அவர்களால் படித்தல், வாகனம் ஓட்டுதல், முகத்தை அடையாளம் காணுதல் போன்றவற்றைக் கூட காண முடியாத அளவுக்குப் பாதிக்கப்படுகின்றனர்.

இதற்குக் காரணம் பெண்களிடம் விட்டமின் டி அளவு உடலில் குறைவாக இருப்பதே என்று ஆய்வில் தெரியவந்தது. ஆகவே அதனை சரி செய்ய பால், வெண்ணெய் ஆகியவற்றை அதிகம் சாப்பிட்டால் இதனைத் தவிர்க்கலாம். ஏனெனில் பாலில் விட்டமின் டி அதிகமாக உள்ளது. எனவே பால் மற்றும் அதிலிருந்து பெறப்படும் வெண்ணெய் போன்ற உணவு பொருள்களை உண்பது கண் குறைபாட்டை தவிர்க்க பெரிதும் உதவுகிறது என ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேலும் முளைகட்டிய தானியங்களையும் சாப்பிடலாம். முளைக்கட்டிய தானிய வகைகளில் விட்டமின் சி அதிகமாக உள்ளது. தானிய வகைகள் அதிகம் உட்கொண்டால் பார்வை நன்கு தெரியும்.

காலை நேர வெயிலில் உடற்பயிற்சி செய்தால் உடலுக்கு மிகுந்த நலம் தரும். ஏனெனில் விட்டமின் டி உற்பத்தியில் தோல் முக்கிய பணியாற்றுகிறது. மீனில் இருந்து பெறப்படும் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகள் கண்களுக்கு சிறந்தது. விட்டமின் சி நிறைந்த உணவுகளான மீன், முட்டை, பால் காய்கறி வகைகள் தானியங்கள் போன்றவற்றை உணவில் சேர்த்து கொள்வதன் மூலம் கண்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பெரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குழும நிறுவனமானது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒரிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

12 மாதங்களுக்கு +16.5% கவர்ச்சிகரமான வட்டி

(வ.மொ.வ.வீ. 16.5%)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
இல. 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய.
தொலைபேசி: 5880880. தொலைநகல்: 2865606
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602


# யானை மீன் அரிய உயிரினம்

கடலில் வாழும் விநோத உயிரினங்களில் ஒன்றுதான் யானை மீன். இதன் வாய்த் தாடை யானையைப் போன்ற தோற்றம் உடையதாக இருப்பதால் இதற்கு யானை மீன் என்று பெயர்.

கலோரிங்கஸ் மில்லி என்ற விலங்கியல் பெயருடைய இந்த மீன், பார்ப்பதற்கு கணினியில் கிராபிக்ஸில் உருவாக்கப்பட்டது போலவே இருக்கும். உலகிலேயே மிகவும் கடினமான சதைகளை உடைய தாடையைக் கொண்டதாகும். முன்பக்கத் துடுப்புகள் மூலம் தண்ணீரைப் பின்னுக்குத் தள்ளியவாறு கடலில் வேகமாக முன்னால் நகர்கின்றன. பின்புற பக்க வாட்டில் இரு துடுப்புகளும் அமைந்துள்ளன.

இத் தனித்துவமான துடுப்பு அமைப்பும் இதற்குக் கடலில் நீந்த பேருதவியாக உதவுகிறது. வாயின் தாடை அமைப்பு யானையைப் போன்றுள்ளதால் இதற்கு யானை மீன் என்கிறார்கள். பேய்ச் சுறா, யானைச் சுறா, வெள்ளை மீன் என்ற வெவ்வேறு பெயர்களிலும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் அழைக்கப்படுகிறது. இவ்விரு நாடுகளிலும் அதிகமாக வாழ்வதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுவாகவே 200 முதல் 500 மீற்றர்வரை ஆழம் உள்ள இடத்தில் மணற்பாங்கான அடிப்புறத்தில் வாழ்கின்றன. பெண் இனம் முட்டையிட மட்டுமே ஆழமற்ற பகுதிக்கு வரும் போது மீனவர்களின் வலைகளில் சிக்கி விடுகின்றன.

பெண்கள் கையில் வைத்திருக்கும் மணி பர்ஸ் அல்லது செல்போன் கவர் போன்ற சிறிய தோல் பைகளை போன்ற தோல் கவர்களை உருவாக்கி அதில் முட்டையிட்டுச் செல்கின்றன. இந்த முட்டைகள் கடலில் மிதந்து செல்லும் போது சூரிய வெப்பத்தின் தன்மைக்கேற்ப குஞ்சுகளாகி விடுகின்றன.

எலும்புகளே இல்லாமல் மிருதுவான சதையைக் கொண்டிருக்கும் இவையும் சுறாக்களின் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். ஒரு வயதான மீன் 60 சென்ரி மீற்றர் முதல் 120 சென்ரி மீற்றர்வரை வளர்ந்திருக்கும். இந்த யானை மீனுக்கும், மனிதனுக்குமான ஜீனோம் தொடர்பு மிக நெருக்கமாக இருப்பதாகவும் கடல் உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக இந்த மீனைப் பற்றிய ஆராய்ச்சிகள் உலகம் முழுவதும் பல நாடுகளில் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் வாழும் சுத்தியல் சுறா எனும் ஒரு வகை மீனுக்கு இந்த யானை மீன் நெருங்கிய பங்காளியாகவும் இருக்கிறதாம். கடலுக்கு அடியில் இருக்கும் சங்குகளையும், சிப்பிகளையும் உண்டு உயிர் வாழும் இந்த உயிரினத்தின் வாயில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையிலான ஓர் அமைப்பின் மூலம் தேவையான இரையைப் பிடித்து உண்கின்றன.


TVS KING

TVS




முன்னேற்றத்திற்கு எப்போதும் கைக்கொடுத்து உதவும் TVS King உங்களுக்கு இப்போது வழங்கும் வெகுமதிகள்
ஒக்.02 முதல் 31 வரை நீங்கள் வாங்கும் ஒவ்வொரு TVS King முச்சக்கர வண்டியுடன்

முழு காப்புறுதியும் ஒரு றைஸ் குக்கரும் இலவசம்

உடனடி அழைப்பு:
0770 777888
பதிவுசெய்தல் இலவசம்

ரூ.5,500 பெறுமதியான
3 சேவை முறைகள் இலவசம்
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது



விற்பனைக்குப் பிற்பட்ட பராமரிப்பு சேவைகள்: 0777220550
TVS MOTOR CO. GENUINE
Tel: 0114 335673
நாடளாவிய இணையற்ற சேவையும் உதிரிப்பாக விற்பனை முகவர்களும்
Tel: 0114 605259
முதல் தரமான எரிபொருள் வினைத்திறனுடையது.

உடனடி அழைப்பு:
மேல் மாகாணம் - 0777867660
மேல் மாகாணம் (கம்பஹா மாவட்டம்) - 0771924523
மேற்கு மற்றும் சபரகமுவ மாகாணங்கள் - 0777768089
தென் மாகாணம் - 0777768041
வட மேல் மாகாணம் - 0777754484
வட மத்திய மாகாணம் - 0777444942/0779786614
மத்திய மாகாணம் - 0773296087
கிழக்கு மாகாணம் - 0777283094

TVS Lanka (Pvt) Ltd.
இல.757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14, இலங்கை.
தொலைபேசி: +94 11 4 605200
தொலைநகல்: +94 11 4 614909
இணையத்தளம்: www.tvslanka.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிச்சயமாகவே பணம் அனுப்புவதற்கு நம்பிக்கையானதொரு ஸ்தாபனம் வங்கியல்லாது வேறு எதுவாக இருக்கமுடியும்?



சம்பத் வங்கி சம்பத் மொபைல் cash சேவையினை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றது. எந்தவொரு கையடக்க தொலைபேசி மற்றும் CDMA தொலைபேசி வலையமைப்பின் ஊடாகவும் பணத்தினை பாதுகாப்பாகவும் நம்பிக்கையாகவும் பெற்றுக்கொள்ளவும் அனுப்பிடவும் முடியும். தினமும் 200,000/- ரூபாவினை அனுப்பமுடியும். பணம் அனுப்பியவுடன் சம்பத் வங்கி SMS மூலம் பணம் பெறுபவருக்கு தெரியப்படுத்தும்.

**Sampath Mobile Cash**

பணம் அனுப்ப நம்பிக்கையான முறை

## பணம் அனுப்பும் முறை



சம்பத் வங்கி கிளை மற்றும் எந்தவொரு கையடக்கத்தொலைபேசி அல்லது CDMA தொலைபேசி வலையமைப்பு மூலம்

## பணத்தை பெறும் முறை



நாடெங்கும் பரந்திருக்கும் சம்பத் வங்கி கிளைகள் மற்றும் சம்பத் ATM களினூடாக

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112 30 30 50 அல்லது அருகிலுள்ள சம்பத் வங்கிக்கு விஜயம் செய்யுங்கள். www.sampath.lk

සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசீர்வதிக்கப்பட்ட... **04**




கல்வித்துறையில் தேவை சீர்திருத்தம் **10**



திமிர் கொடுத்த சாபம் **05**

பொறுமையின் எல்லையில் **21**





ஈரான் அணு உலைகளை... **24**


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

01

உதயன் 14 ஒக்ரோபர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# "யாரிடமாவது சொன்னியேயானால் உன்னையும் புருஷனையும்கொல்லுவோம்"



பிரான்ஸிஸ் ஹரிஸன். பிபிஸியின் முன்னாள் வெளிநாட்டுச் செய்தியாளர். இலங்கையில் 2000 முதல் 2004 வரை பிபிஸி நிறுவனத்துக்காகப் பணியாற்றியவர். 46 வயது. பாகிஸ்தான், மலேசியா, பங்களாதேஷ், ஈரான் ஆகிய நாடுகளிலும் செய்தியாளராகப் பணி யாற்றியவர். இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டவர்களது கதைகள் அடங்கிய அவரது 'சாவுகளை இன்னும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற நூல் இந்த மாத ஆரம்பத்தில் லண்டனில் வெளியிடப்பட்டுள்ளது. இறுதிப் போரின் போதும் அதன் பின்னரும் கூட பாதிக்கப்பட்ட பலரது வாக்கு மூலங்களை நேரடியாகப் பதிவு செய்திருக்கிறார், அதிலிருந்து ஒரு கதையே இது.



தமிழில்: ரேணுபிரேம்

என்னிடம் இருந்ததெல்லாம் கிழக்கு லண்டனிலுள்ள ஒரு முகவரி மட்டுமே. அந்த நேர்காணலை, கோர்வைத் தொடரான சட்டவாளர்களும் மதகுரு ஒருவருமே ஏற்பாடு செய்திருந்தார்கள். இன்னும்கூட எனக்கு அந்தப் பெண்ணின் உண்மையான பெயர் தெரியாது. நிலத்துக்கு 'டெரஸ்' போடப்பட்ட வீட்டின், ஒடுக்கமான பின் அறை ஒன்றில் நாங்கள் அமர்ந்திருந்தோம். நான் அந்தப் பெண்ணுக்கு முன்பின் அறிமுகமில்லாத நபர். ஆனாலும், தன் கணவனிடமோ அம்மாவிடமோகூட இதற்கு முன்னர் எப்போதுமே சொல்லாத கதையை அவள் என்னிடம் சொல்லத் தொடங்கினாள். அதற்குப் பின்னர் என்னை அவள் மீண்டும் பார்க்க விரும்பவே இல்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

மணிமொழி, நான் அவளை அப்படித்தான் அழைக்கிறேன். இலங்கைத் தமிழர். பிரிட்டனில் அரசியல் அடைக்கலம் கோரியிருப்பவள். கொழும்பிலேயே வளர்ந்தாள். தமிழ்ப் புலிக் கிளர்ச்சியாளர்களுக்கும் சிங்களவர்களால் மேலாதிக்கம் செய்யப்படும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான போர்ப் பின்புலம் அவளது வாழ்க்கையின் ஆரம்பத்தில் தூரத்திலேயே இருந்தது.

அவளது குடும்பம் தமிழ் சிறுபான்மையினத்தைச் சேர்ந்தது. ஆனால், அவள் முரண்பாடு அதிகமான (சண்டைகள் நடந்த) பகுதிகளில் இருந்து வந்தவள் அல்லள். அதேநேரம், இத்தகைய சூழலில் ஒருவர் கொண்டிருக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடு அவளிடமும் இருந்தது.

2010ஆம் ஆண்டு மே மாதத்தின் ஒருநாளில் அவளது வாழ்க்கையே முற்றிலுமாக சிதைந்துபோனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது. அது நடந்த சமயத்தில் ஆயதங்கள் அடங்கிப் போய் இருந்தன. இலங்கை கிட்டத் தட்ட அமைதியாக இருந்தது. பொலிஸார் மணிமொழியின் வீட்டுக்கு வந்தார்கள். அவளது கணவனைத் தேடி அவர்கள் வந் திருந்தார்கள். அவரோ வேலைக் காகப் பயணப்பட்டிருந்தார்.

அவளது கணவர், விடுத லைப் புலிகளுடன் தொடர்பு பட்ட ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர். பொலிஸாருக்கு அவரை விசாரிக்க வேண்டியிருந்தது. அவர்கள் மணிமொழியை இழுத் துச் சென்று 'வெள்ளை வான்' ஒன்றினுள் தள்ளினார்கள். அவ ளது 16 மாதக் குழந்தை அவளது தாயாரிடம் தனித்து விடப்பட்டது.

பொலிஸார் அவளை அடித் தார்கள்; அவளிடம் விசாரணை நடத்தினார்கள். ஆனால், நள்ளி ரவுக்குப் பின்னர் நடந்த விடயம் அளவுக்கு பொலிஸார் அடித்த தையோ விசாரித்ததையோ அவள் ஒரு பொருட்டாகக் கொள்ளவே யில்லை.

சில சந்தேகநபர்களை அடை யாளம் காட்டுவதற்காக அவள் ஒரு குடிமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பின்னர் அறை ஒன்றுக்குள் தள்ளிப் பூட்டப்பட் டாள். அடுத்த அறையில் பொலி ஸார் தொடர்ந்து குடித்துக் கொண் டிருந்ததையும் சிங்களத்தில் பாடிக் கொண்டிருந்ததையும் அவள் கேட்டாள்.

கதிரை ஒன்றில் கைவிலங் கிட்டு பிணைத்துவிட்டு இரு பொலிஸார் மணிமொழியை வன்புணர்வு செய்தார்கள். அவள் அப்போது 40 நாள்கள் கர்ப்ப மாக இருந்தாள் என்று அவர்க ளுக்குத் தெரியாது. அவளுக்கு அதிக இரத்தப் போக்கு ஏற்பட் டது.

"நீ எதையாவது சொன்னால் அல்லது யாரிடமாவது சொன் னால் உன் கணவனைக் கொல் வோம்; உன்னையும் கொல்வோம். இங்கே எதுவுமே நடக்கவில்லை. புரிகிறதா உனக்கு!" அவர்கள் எச்சரித்தார்கள். அவளைக் கொண்டு வந்தது போலவே மீண்டும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே, பரவி யிருந்த இரத்தத்தை துடைப் பதற்கு துவாலைகளை மிகச் சாதாரணமாகக் கொண்டு வந்து கொடுத்தார்கள் சிங்களப் பெண் பொலிஸார். அவர்களுக்கு மணி மொழியின் நிலைமை ஆச்சரி யத்தைக் கொடுக்கவேயில்லை.

அந்தத் தடுப்பு அறையில் (செல்) மேலும் இரு இளம் பெண்களும் இருந்தார்கள். அவர் களும் இதே மாதிரியாக அவலப் பட்டிருந்தார்கள் என்பது தெளிவா கவே தெரிந்தது.

மணிமொழியின் கணவன் பொலிஸாரிடம் சரணடைந்த பின்னர் அவள் விடுவிக்கப்பட் டாள். பதிலுக்கு அவர்கள் அவ னைச் சித்திரவதை செய்தனர். மணிமொழி இரு தடவைகள் தற்கொலை செய்து கொள்வ தற்கு முயன்றிருக்கிறாள். ஆனால், குழந்தையைப் பார்த்ததும் அத னைக் கைவிட்டிருக்கிறாள். அவ ளுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை அவளது குடும்பம் உய்த்துணர்ந்து கொண்டது.

கற்பழிப்பு எனப்படும் பாலி யல் வன்புணர்வு பற்றிய தமிழ்ச் சமூகத்தின் மனவடு (அல்லது உளத்தாக்கம்) ஆழமானது; கடு மையானது. அதிலிருந்து ஒரு பெண் மீள்வதற்கு தற்கொலையே கௌரவமான ஒரே வழி என பொதுவாகக் கொள்ளப்படுவது அதிர்ச்சிகரமானது. கொடுமை யில் இருந்து தப்பிப் பிழைப்ப வர்களிடம் காணப்படும் இந்த வெட்கம் அவர்களுக்கு இரண்டா வது வகையான துன்புறுத்தலைத் தருகிறது.

லண்டனில் இருக்கும் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த யாராவது, தான் வன்புணர்வு செய்யப்பட்ட தைத் தெரிந்துகொண்டால், பின் னர் அவர்கள் தன்னைப் பற்றித் தான் கிசுகிசு கதைத்துக் கொண்டி ருப்பார்கள் என்று மிக மோசமா கப் பயந்து போயிருக்கிறார் மணி மொழி.

நான் தனியாக வந்தால் மட் டுமே என்னைச் சந்திப்பேன் என்று அவர் நிபந்தனை விதித்திருந்தார். அதனால் ஒரு பெண் மொழி பெயர்ப்பாளரைக்கூட அழைத்து வரவேண்டாம் என்று எனக்கு இறுக்கமான அறிவுறுத்தல் தரப் பட்டிருந்தது.

நாங்கள் பேசிக் கொண்டி ருந்தபோது, மணிமொழியின் கணவர் புத்திசாலித்தனமாகக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு இனிப்புப் பண்டங்கள் வாங்கி வருவதற்காக வெளியே சென்று விட்டார். நாங்கள் எது பற்றிப் பேசுவோம் என்பது அவருக்குத் தெரியும். இந்த விடயங்களை வெளிப்படுத்துவது என்று மணி மொழி எடுத்த முடிவுக்கு அவர் ஆதவளித்தார். ஆனால் அத்தகைய கணவனிடம்கூட மணிமொழி இதுபற்றி ஒருபோதும் பேசிய தில்லை.

இப்போதும், ஒவ்வொரு ஆண் மகனைப் பார்க்கும் போதும் தான் நடுங்கிச் சாகிறாள் என்று மணி மொழி கூறுகிறாள். தன் சொந்தக் கணவனின் தொடுகைகூட அவ ளுக்கு இப்போது வேண்டாத தாக இருக்கிறது.

லண்டனுக்கு மாணவர் நுழை விசைவு (விஸா) எடுத்து வருவ தற்காக மணிமொழியும் அவளது கணவனும் தம்மிடம் இருந்த எல்லாவற்றையும் விற்றுவிட் டார்கள். இவர்கள் இங்கே அரசி யல் அடைக்கலம் கோருகையில், அங்கே கொழும்பில் இவர்களது வீட்டுக்கு தொடர்ந்தும் இலங் கைப் பொலிஸார் சென்று கொண் டிருக்கிறார்கள். அவளது கணவ னைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்காக மணிமொழயின் வயதான மாமனாரைக்கூட அவர் கள் மூன்று மாத காலம் தடுப்பில் வைத்திருந்துள்ளார்கள்.

2009இல் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கையில் எந்த ஆபத்தும் இல்லை, அங்கு பாதுகாப்பாக இருக்கலாம் என இலங்கை அரசும் அதன் ஆதரவுச் சக்திகளும் வாதிட்டு வருகின் றன. அரசியல் அல்லது ஆயுதப் பிணக்கு குறித்த பின்புலம் உள் ளவர்களுக்கு மட்டுமே ஆபத்து உள்ளதாக அவர்கள் கூறுகின்ற னர். ஆனால், தமிழர்களுக்கு எதி ரான பரந்த வன்முறைகள் இலங் கையில் நிறுத்தப்படவேயில்லை என்பதை மணிமொழியின் கதை தெளிவாக்குகின்றது.

போர் முடிந்த சமயத்தில், கைகள் கட்டப்பட்ட, அரை நிர் வாணமான, மார்பகங்கள் வெளியே தெரியத்தக்க வகையில் இறந்த பெண்களின் படுபயங்கரமான ஒளிப்படங்கள் மற்றும் காணொ லிகள் இணையத்தளங்களில் காணப்பட்டன. அவை தமிழ்ப் பெண் போரளிகளினுடையவை. அவற்றில் சிப்பாய்களால் கூறப்ப டும் கருத்துக்கள், பாலியல் வன் முறைகள் நடந்துள்ளன என்று உறுதியாகப் பரிந்துரைக்கின்றன.

போரில் தோற்கடிக்கப்பட்ட பெண் போராளிகள்தான் வன்பு ணர்வுகளுக்கு உள்ளாக்கப்பட் டார்கள் என்றில்லை. மணி மொழி யைப் போன்ற குடும்பப் பெண் கள், அம்மம்மாமார், பெண் உத விப் பணியாளர்கள், மனிதாபி மானப் பணியாளர்களின் மனை விமார், பாதுகாப்பு என்னும் எதிர் பார்ப்புடன் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முயலும் பெண் கள் ஆகியோரும் இதேபோன்று வன்புணர்வுக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இதிலிருந்து தப்ப லண்டனை நோக்கி அவர்கள் பயணப்பட் டாலும்கூட துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் பாதுகாப்பாக இருப் பது மிகக் கடினமானதே. சட்ட நடவடிக்கைகளுக்கான ஆதாரங் கள் அவர்களிடம் இல்லாதபட் சத்தில் அவர்களின் புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படக் கூடும்.

அகதிகள் சபையின் அண்மைய ஆய்வின்படி, அதனுடைய செயல் திட்டங்களை நாடும் மூன்றில் ஒரு பெண் இலங்கையராகவே இருக்கிறாள். அதனடிப்படை யில், அவர்களில் கிட்டத்தட்ட எல்லோருமே துன்புறுத்தப்பட்டி ருக்கிறார்கள் அல்லது வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கி றார்கள் என்கிறது அகதிகள் சபை. ஆனால் அவர்களில் அரைவாசிப் பேரின் அரசியல் தஞ்சக் கோரிக் கைகள் லண்டனில் நிராகரிக் கப்படவே செய்கின்றன.

இவ்வாறு அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப் பப்படுபவர்கள் சித்திரவதைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை 'சித்திரவதையில் இருந்து விடு தலை' மற்றும் 'மனித உரிமை கள் கண்காணிப்பகம்' போன்ற அமைப்புக்கள் ஆவணப்படுத்தி யுள்ளன.

இதனால், பாதிக்கப்பட்ட பெண்கள் தாமும் இலங்கைக் குத் திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சத்துடன் நிலையற்ற வாழ்வையே இங்கு வாழ்கிறார் கள். தமது துயரக் கதைகளை அவர்கள் சட்டவாளர்கள் முன் னும் குடிவரவு அதிகாரிகள் முன் னும் திரும்பத் திரும்ப சொல் கிறார்கள். ஆனால் அவர்களின் குடும்பத்தினரிடமும் நண்பர் களிடமும் அவற்றை மறைத்து விடுகிறார்கள். சில பெண்கள் உளவள ஆலோசனை நிலையங் களுக்குச் செல்லக்கூட அஞ்சு கிறார்கள். அங்கு தன்னை எந்த வொரு தமிழ்ப் பெண்ணாவது கண்டு விட்டால் ஏன் தான் அங்கு வந்தார் என்பதை அவர் புரிந்து கொண்டு விடுவார் என்ற அச்சமே அதற்குக் காரணம்.

அது ஒரு மிகத் தனிமையான வாழ்வு.

> **"2009இல் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கையில் எந்த ஆபத்தும் இல்லை, அங்கு பாதுகாப்பாக இருக்கலாம் என இலங்கை அரசும் அதன் ஆதரவாளர்களும் வாதிட்டு வருகின்றார்கள். அரசியல் அல்லது ஆயுதப் பிணக்கு குறித்த பின்புலம் உள்ளவர் களுக்கு மட்டுமே ஆபத்து உள்ளதாக அவர் கள் கூறுகின்றனர். ஆனால், தமிழர்களுக்கு எதிரான பரந்த வன்முறைகள் இலங்கையில் நிறுத்தப்படவேயில்லை என்பதை மணிமொழியின் கதை தெளி வாக்குகின்றது."**

# முள்ளிவாய்க்கால் கொடுமைகள் பற்றி அடுத்த சந்ததி கேள்விப்பட்டால்....?

### பிரான்ஸிஸ் ஹரிஸனுடன் ஒரு சந்திப்பு

***"உங்கள் புத்தகத்துக்கு வரவேற்பு எப்படி?"***

"போரில் பங்கேற்ற இரு தரப்புகளிடம் இருந்தும் விமர்சனங்கள் வருகின்றன. ஆனால், உலகம் முழுவதும் பரந்து வாழும் இலங்கைத் தமிழர்களில் என் புத்தகத்தைப் படித்தவர்கள் இந்தக் கதைகளைக் கூறியதற்காக எனக்கு நன்றி கூறுகிறார்கள். லண்டனில் புத்தகம் வெளியிடப்பட்ட அன்று ஒரு தமிழ் மகன் என்னிடம் ஓடிவந்தார். அவரது கண்கள் குளமாகி இருந்தன. அவர் என்னை இறுக்க அணைத்து "நன்றி" என்றார். அழுதபடியே போய்விட்டார்."

***"2009இல் தமிழ்ப் புலிகளை சரணடைய வைப்பதற்கான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அது தோல்வியில் முடிவடைந்ததற்கான காரணம் என்ன?"***

"அது நோர்வேயின் முயற்சி. அதைப் பற்றி எனது புத்தகத்திலும் குறிப்பிட்டுள்ளேன். 2009இன் ஆரம் பத்தில் ஆயுதங்களைக் கீழே வைப்பதற்காக நோர்வே அனுசரணை வழங்கியது. அந்தத் திட்டத்தின்படி, சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் விடுதலைப் புலிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது, பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோரை சர்வதேச மேற்பார்வையின் கீழ் காவலில் வைப்பது போன்ற முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.

உண்மையில், 2009 ஏப்ரல், மே மாதங்களைவிட ஜனவரி மாதத்தில் இலங்கை அரசு மீது சர்வதேச சமூ கத்துக்கு பிடிமானம் அதிகம் இருந்தது. அப்போது எல்லாமும் முடிந்திருக்கவில்லை எனினும் போரை இராணுவம் வென்றிருந்தது. அந்தத் திட்டம் எந்த வகையிலும் இறுதி முடிவை எட்டவே இல்லை. ஆனால் சர்வதேச சமூகத்தின் பின்புல ஆதரவு அதற்கு இருந்தது. என்னுடைய புரிதலின்படி புலிகள் அந்தப் பேச் சிலிருந்து தீர்மானமாக வெளியேறிவிட்டார்கள். பதிலுக்கு சாவை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

என்னுடைய கருத்து என்னவென்றால், இது ஒரு தவறு. ஏனெனில், இணக்க ஏற்பாடு மூலமான சரண டைவு ஒருவேளை ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்கக்கூடும். அத்துடன் போரின் இறுதி யில் ஏற்பட்ட பல அத்துமீறல்கள், துஷ்பிரயோகங்களையும் தடுத்திருக்கக்கூடும்.

லட்சக்கணக்கான மக்களையும் வைத்துக் கொண்டு கடைசி ஆள்வரைக்கும் சண்டையிடுவது என்ற புலிகள் எடுத்த முடிவு, இலங்கை இராணுவத்தினர் தமது கடமைகளைப் புறந்தள்ளியமைக்கான நியாயமாக எந்தவகையிலும் அமைய முடியாது.

இந்த விடயங்களில் தர்ம ரீதியான சமன்பாடுகள் மிகச் சிக்கலானவை. உள் கள நிலைகளில் தங்கியி ருந்தவை."

***"தமிழ்ப் புலிகளுடன் சண்டை செய்கையில் இலங்கை இராணுவம் எல்லைகளை மீறிச் செயற் பட்டது என்று நினைக்கிறீர்களா? அத்தகைய தேவை ஏதாவது இருந்ததா என்ன?"***

"போர்க் குற்றங்களையும் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் சர்வதேச போர்ச் சட் டங்களை மீறிய குற்றங்களையும் புரிந்த குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை இராணுவம் இப்போது இலக்காகி உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு இதனைத் தெரிவித்துள்ளது. இது எல்லை மீறிச் சென்றது என்பதையும்விட அதிகமானது.

தமிழ்ப் புலிகளை அழிப்பது என்பது தவிர்க்க முடியாமல் தமிழ்ப் பொதுமக்களையும் அழிப்பதாக இருந் தது. அது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இப்போது, புலிகள் அகற்றப்பட்டு விட்டார்கள் என்பதால் "தீவிர வாதம்" முடிந்து விட்டது என இலங்கை அரசு நினைப்பதாகத் தோன்றுகிறது.

நீண்டகால முரண்பாட்டை (போரை) தோற்றுவித்த அடிப்படைக் காரணங்களைத் தீர்க்காமல் தோல்வி கண்டதற்கு அரசு மட்டுமே பொறுப்பு. அது இன்னமும் கனன்று கொண்டுதான் உள்ளது."

***"இந்தப் போரைத் தடுக்க இந்தியா எந்த வகையில் பங்களித்திருக்க முடியும்?"***

"இலங்கையில் இந்தியாவுக்குப் பெரும் செல்வாக்கும் ஆர்வமும் இருக்கிறது என்பதில் எனக்குச் சின்னச் சந்தேகம் இருக்கிறது. போரில் அப்பாவிப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுக் கொண்டி

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அளவுக்குமிஞ்சிய அமிர்தம்

## கொரெக்ஸ் தடை ஏன்? பரபரப்புத் தகவல்கள்

■ ஔண்யன், சுகந்தன்





கொரெக்ஸ், இருமலை நீக்கும் ஒரு திரவ நிவாரணி. ஆனால் அது மற்றைய இருமல் மருந்துகளைவிடவும் தனக்குள் ''கோடின் பொஸ்பேட்'' என்ற பதார்த்தத்தையும் கொண்டுள்ளது. (5மில்லிலீற்றர் கொரெக்ஸில் 10 மில்லிக்கிராம் கோடின் பொஸ்பேட் உண்டு) இருமலினால் ஏற்படும் வலியை நோயாளர்கள் உணராமல் இருப்பதற்கும், ஏனைய இருமல் நிவாரணிகளைவிட துரிதமாக செயற்படுவதற்கும் ''கோடின் பொஸ்பேட்'' உதவுகிறது. நரம்புகளின் விட்டத்தை சற்று, விரிவாக்கம் செய்யக்கூடிய வல்லமை இந்தக் கோடின் பொஸ்பேட்டுக்கு உண்டு.

உண்மையில் கோடின் பொஸ்பேட் ஒரு போதைப்பொருள். ஆனால் அது அளவோடு பயன்படுத்தப்படும்போது, மருந்தாகிறது. பாம்பின் விஷத்தை எப்படி அளவோடு பயன்படுத்தி அதே பாம்புக்கடிக்கு மருந்தாக மாற்றப்படுகிறதோ அதேபோன்று உடலுக்குத் தீமை தரக்கூடிய போதைப்பொருள்களும் குறிப்பிட்ட நிர்ணய அளவுப் பிரகாரம் நுகரப்படும்போது அவை நோய்களை நீக்கும் அருமருந்துகளாகின்றன. அந்த வகையிற்றான், கோடின் பொஸ்பேட்டும் கொரெக்ஸுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது.

ஆனால், அது இருமல் நிவாரணியாக சந்தைக்கு வந்தபின்னர் எப்படியோ அதற்குள் கோடின் போதைப் பொருள் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயம் போதைப் பிரியர்களுக்கு மணத்துவிட்டது. ஒரு போத்தல் (60 மில்லிலீற்றர்) கொரெக்ஸை குடித்தவுடன், நரம்பு மண்டலத்தின் துவாரங்கள் சட்டென பெரிதாகின்றன. இந்த விரிவாக்கத்துக்காகவே காத்திருந்ததுபோல குருதி 'குபுக்' என்று எல்லா இடங்களுக்கும் அதி விசையோடு, பாயத் தொடங்குகிறது. இவ்வாறு பாயும் குருதி, மூளைக்கும் சென்று விடுகிறது. வழமையான அளவைவிடவும், அதிகூடிய குருதியின் வருகை மூளையின் செயற்பாட்டை, தாறுமாறாக்கி, உணர்வுகளை குழப்பி, ஒரு மயக்க நிலைக்கு கொண்டு செல்கிறது. அதன்பின்னர் கொரெக்ஸை அப்படியே குடித்தவர் தன் கால்கள் தரையில் படுவதை உணரமுடியாது. ஒரு அந்தரத்தில், அவருக்கே உரித்தான இன்னொரு மாய உலகை கொரெக்ஸ் உருவாக்கி விட்டிருக்கும்.

ஆயினும் மெல்ல மெல்ல கொரெக்ஸின் வீரியம் விலகியவுடன், சொர்க்க பூமியில் (?) சஞ்சரித்த அந்த இளைஞன் தொப்பென நரகத்துக்குள் வீழ்ந்ததைப் போன்ற நிலைக்கு தள்ளப்படுவான். மீண்டும் சொர்க்கம் பற்றிய கனவுகளே அவன் நாடி நாளங்களை ஆக்கிரமித்து நிற்கும். ஒரு செக்கன்கூட ஒரு யுகமாக நீள்வதாகப்படும். கைகள் பரபரக்கும். மனம் ஒரு நிலையில் நில்லாமல், வெவ்வேறு எண்ணக் கிளைகளுக்கு தாவும் மந்தியாக மாறும். பதற்றம் அதிகரிக்கும். தீராத் தாகம் போல மீண்டும் கொரெக்ஸை குடிக்க வேண்டும் என்ற வெறி உண்டாகும். இத்தகைய உணர்வுகள், செயல்கள் எல்லாமே வழமையாக போதைப் பொருள்களுக்கு அடிமையான எல்லோருக்கும் ஏற்படுவதுதான். இழந்துபோன சொர்க்கத்தை மீண்டும் அடைவதற்காக காசைக் களவெடுத்தேனும் கொரெக்ஸை வாங்கிப் பருகச் சொல்லி மனம் உந்தித் தள்ளிக் கொண்டே இருக்கும். கடைசியில் கொரெக்ஸ் உள்ளே சென்ற பின்னர் தான், இந்த உணர்வுகள் எல்லாம் தொலைந்துபோக மீண்டும் திறக்கும் அவர்களுக்கான சொர்க்க வாசல்.

★★★

உண்மையில் அது நரகத்துக்கான வாசல்தான். வெளிப்பூச்சுக்கு வர்ணமயமான கனவுகளை அது சூடியிருக்கும். ஆனால் காலப்போக்கில் காலைச் சுற்றிய பாம்பாக அவர்களை விட்டகலாமல் வேதனைக்குள் தள்ளிக்கொண்டேயிருக்கும். உடல், உள ரீதியான பாதிப்புக்களை தந்துகொண்டிருக்கும். ஒரு கட்டத்தில் மிக மோசமாக போதையை ஆராதிப்போராக அவர்களை மாற்றி மற்றைய மனிதர்களின் நடத்தைகளிலிருந்து இவர்களின் பயணப் பாதையை வேறொரு திசைக்கு விலகச் செய்துவிடும். இந்த விலகல் மனப் பிறழ்வுகளை ஏற்படுத்தி, அவர்களை நிரந்தர நோயாளிகளாக்கிவிடும்.

★★★

கொரெக்ஸ் மருந்தை இளைஞர்கள் சிலர் போதைப்பொருளாகப் பயன்படுத்துவதற்கு நிறையக் காரணங்கள் உண்டு.

★மதுபானம், ஹெரோயின், புகைப் பொருள்கள் போன்ற ஏனைய போதைப் பொருள்களைப்போல கொரெக்ஸை உட்கொண்டால் அதனை மற்றவர்கள் இலகுவில் கண்டு பிடிக்கமுடியாது.

★வெட்கப்படாமல் ஒரு மருந்தை வாங்குகின்ற பாவனையில் நீண்டநேர போதையைத் தரக்கூடிய கொரெக்ஸை வாங்கிவிடலாம்.

★விலையும் வெகு குறைவு. ஆயிரக் கணக்கில் செலவிட்டு, ஹெரோயின் மூலம் பெறுகின்ற போதையை, வெறும் 240 ரூபாவைக் கொடுத்து, கொரெக்ஸை வாங்கி உட்கொள்வதன்மூலம் பெற்றுவிடலாம்.

★கொரெக்ஸை வாங்கிவந்து, எல்லோருக்கும் முன்னால்-குறிப்பாக பெற்றோர் முன்னால்கூட-அருந்தலாம். ஏனெனில் அவர்கள் எல்லோரும் தமது பிள்ளை சுகயீனத்துக்காக ஏதோ மருந்தைப் பருகுகிறான் என்றே எண்ணுவர்.

இவ்வாறு நிறைய வசதிகளை கொரெக்ஸ் கொண்டிருப்பதால், ஏனைய போதைப்பொருள்களை விடவும் இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் கொரெக்ஸுக்கு அடிமையாகத் தொடங்கினர்.

★★★

இலங்கையின் தலைநகர் கொழும்பில், கொரெக்ஸுக்கு இளைஞர்கள் பலர் அடிமையாகியிருப்பதாக சில வருடங்களாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் உலவத் தொடங்கியிருந்தன. ஆனால், அதனை அரசோ, சுகாதாரத் திணைக்களமோ பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இந்த அலட்சியத்துக்கு ஒருநாள் விழுந்தது அடி.

யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரி-சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் சமர் எப்படிப் பிரபலமோ, அப்படி கொழும்பிலும், நாலந்தா-ஆனந்தா கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டச் சமர் பிரசித்தம். இங்கு நிகழ்வதைப்போல அங்கும், மாணவர்கள் போட்டி நடைபெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னராகவே தத்தம் பாடசாலைக் கொடிகளை ஏந்தியவாறு, மேளதாளங்களுடன் வீதிகளில் இறங்கிவிடுவர். ஆட்டம் பாட்டங்களோடு, செல்லும் இந்த மாணவர் அணிகள் கடைகளில் நிதி வசூலிப்பிலும் இறங்குவது வழமை.

இந்த வருடம் மார்ச் மாதம் 09ஆம் திகதி இப்படி ஒரு மாணவர் அணி ஆடிப்பாடிக்கொண்டு, நிதி வசூலிப்பில் ஈடுபட்டிருந்தது. அவர்கள் கொழும்பு கொள்ளுப்பிட்டி, லிபேட்டி பிளாஸாவில் உள்ள மருந்தகம் ஒன்றுக்குச் சென்று ஆளுக்கொரு கொரெக்ஸ் போத்தல்களை வாங்கி நடு வீதியில் வைத்துக் குடித்து

(22ஆம் பக்கம் பார்க்க)

### சத்தியமாக இது உண்மை

**இடம் - யாழ்ப்பாணம்**

அவனுக்கு 30 வயது இருக்கும். வாட்ட சாட்டமாக இருந்தான். கையைப் பிசைந்தபடி நீண்டநேரமாக அந்தப் பார்மஸியில் மற்றவர்கள் மருந்துகளை வாங்கிச் செல்லும்வரை காத்திருந்தான்.

''தம்பி! கனநேரமா நிக்கிறீர்? என்ன வேணும்?''

கடைக்காரரின் குரல் கேட்டு நிமிர்ந்தான்.

''அண்ணை! ஒரு கொரெக்ஸ் வேணும்.'' கூறிவிட்டு காசை நீட்டினான். கடைக்காரர் அவன் கேட்டதைக் கொடுத்துவிட்டு மற்ற வாடிக்கையாளர்களின் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினார்.

அடுத்தநாள் காலை அதே வாட்டசாட்ட இளைஞன் அந்த மருந்தகத்துக்கு வந்தான். முகத்தில் ஒரு அவசரம் இருந்தது. ''அண்ணை! ஒரு கொரெக்ஸ்''. காசு கடைக்காரரின் கையுக்கும், கொரெக்ஸ் இளைஞனின் கையுக்கும் இடம்மாறின.

அன்று மாலை. மீண்டும் அதே பார்மஸிக்கு அதே இளைஞனின் வருகை. இந்தமுறை அவன் முகத்தில் ஒரு சோர்வு இருந்தது. உதடுகள் இயந்திரத்தனத்தோடு பின்வரும் வார்த்தைகளை உச்சரித்தன.

''அண்ணை ஒரு கொரெக்ஸ்'' இப்போது ஏனோ கடைக்காரரின் புருவம் உயர்ந்தது. 'என்னடா இவன், 24 மணித்தியாலத்துக்குள்ள 3 போத்தல் கொரெக்ஸ் வாங்குறானே' என்பதே அந்தப் புருவ உயர்த்தலுக்கு அர்த்தம். கடைக்காரர் அவனை மனதுக்குள் ஞாபகமாக வைத்துக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்துவந்த நாள்களில் குறித்த இளைஞன் காலையும் மாலையும் வேளை தவறாது அந்தப் பார்மஸிக்கு வருவதும், கொரெக்ஸ் போத்தல் ஒன்றை வாங்கிச் செல்வதும் தொடர் கதையாகிவிட்டது. ஏறக்குறைய ஒரு மாதத்துக்கு முன்னர் வாட்ட சாட்டமாக இருந்த அவன் இப்போது உருகத் தொடங்கியிருந்தான். கண்கள் உள்நோக்கி, குழி விழுந்திருந்தது. கன்னங்கள் ஒட்டியிருந்தன.

இந்த நிலையிற்றான் இம்மாதம் 10 ஆம் திகதி கொரெக்ஸ் மருந்தை தடை செய்வதாக அரசு அறிவித்தது. இந்த அறிவித்தல் வந்த அடுத்த நாள் காலையும் அந்த இளைஞன் குறித்த பார்மஸிக்கு வந்தான்.

''அண்ணை ஒரு கொரெக்ஸ்''

ஆனால் இந்தமுறை கடைக்காரர் கொடுக்கவில்லை. ''தம்பி! அதை விக்கக்கூடாது எண்டு ஓடர்''. சொல்லிவிட்டு அவர் தன் வேலையில் மூழ்கினார். கொஞ்சநேரம் நின்று பார்த்துவிட்டு, சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் அந்த இளைஞன். மீண்டும் மதியம் சரியத் தொடங்கிய பொழுதில் வியர்வையில் குளித்தபடி அந்த இளைஞன் வந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

''அண்ணை! எல்லாப் பார்மஸியிலையும் கேட்டுப் பார்த்திட்டன். ஒருத்தரும் கொரெக்ஸ் தாறாங்கள் இல்லை. உங்கடை கால்ல விழுந்தெண்டாலும் கும்புடுறன். எனக்கு இண்டைக்கு மட்டுமாவது ஒரு கொரெக்ஸ் தாங்கோ.'' இதைச் சொல்லி முடிப்பதற்கிடையில் அவன் பெருங் குரலெடுத்து விக்கி விக்கி அழவும் தொடங்கி விட்டான். அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த கடைக்காரருக்கு போதும் போதும் என்றாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வதிக்கப்பட்ட

# காடைத்தனங்கள்

சந்திரசேகரஆஷாத்

இலங்கை மண்டலத்திலுள்ள எமது பிதாவே உமது நாமம் வெவ்வேறாக உமது ராஜ்யம் எங்கும் விரிவதாக! உமது சிந்தனை எங்கும் ஓங்குவதாக! தங்கள் சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் தங்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் கருத்து வெளியிடுபவர்களையும் அநியாயங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களையும் சட்டத்தையும் நீதியையும் நிலை நிறுத்தப் பாடுபவர்களையும் வெட்டவும் சுட்டும் கழிவு எண்ணெயால் அபிஷேசம் செய்யவும் தேவை ஏற்படின் கொலை செய்யவும், தாங்கள் எமக்கு வழங்கிய ஆசீர்வாதத்துக்காக உமக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

எல்லாம் வல்ல எமது ஆண்டவரே! பரந்த அளவில் விரிந்திருக்கும் தங்கள் உன்னத அதிகாரத்தை ஏற்க மறுத்து பிடிவாதமாக நீதியையும் நியாயங்களையும் நிலை நாட்ட முயலும் நீசர்களை வன்முறைகள் மூலம் அடக்கி வைக்க அல்லது அழித்துவிட எம்மை ஆசீர்வதியும். சில சம்பவங்கள் இடம்பெறும் போது தாங்கள் வெளியிடும் கருத்துக்கள் எம்மைச் சிறிது அச்சப்பட வைத்தபோதிலும் அவை எம்மைப் பாதுகாப்பதற்கான தேவ வசனங்கள் என்பதை உணர்ந்து பெருமை கொள்கிறோம்.

மகிமைக்கும் மகத்துவத்துக்கும் உரியவரே!

தங்கள் மன விருப்பங்களை நிறைவேற்றும் வல்லமையை எமக்குத் தந்தமைக்காகவும் எம்மைக் குற்றக் கூண்டில் நிறுத்தி விடாமல் காப்பதற்காகவும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தங்கள் புனிதமான காலடிகளில் சமர்ப்பிக்கிறோம்.

எல்லாம் வல்ல ஆண்டவரே!

உமது சாம்ராஜ்யம் வெல்வதாக! உங்கள் அதிகாரம் எங்கும் பரவுவதாக!

அதிகாரம் பெற்ற மும்மணிகளின் பேராலும் அரை அதிகாரம் கொண்ட நான்காவது மணியின் பேராலும் ஜெயவேவா.

இப்படியான ஒரு வழிபாடு எந்தத் தேவாலயத்தில் இடம்பெற்றது என்ற கேள்வி இதை வாசிக்கும் போதே நிச்சயமாக எழுந்திருக்கும்.

இதற்கு நாம் தரும் பதில் நிச்சயமாக எந்த ஒரு தேவாலயத்திலும் இப்படி ஒரு வழிபாடு நடைபெறவில்லை. ஆனால் சட்ட மீறல்களையும் அரசியல் காடைத்தனங்களையும் செய்யும் ஒரு சிலர் எப்படித் தங்கள் வழிபாடுகளையும் நடத்துவார்கள் என்ற ஒரு கற்பனையின் விளைவு தான் இந்த வழிபாடு.

எனினும் கற்பனைகள் என்பவை ஆகாயத்திலிருந்து கொட்டப்படுபவை அல்ல என்பதையும் உண்மைகள் மெருகுபடுத்தப்படும்போது உருவாவனவை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எப்படியிருப்பினும் இப்படியான ஒரு மாதிரி வழிபாட்டைப் படிக்கும் போது இலங்கையில் இடம்பெறும் சில வன்முறைச் சம்பவங்களும் இனம் தெரியாதவர்கள் என்ற பேரில் அப்படியான வன்முறைகளை நடத்தி விட்டு அதிகார மட்டத்திலான செல்லப்பிள்ளைகளாக சுதந்திரமாக உலா வருபவர்கள் நினைவுக்கு வரத் தவறமாட்டார்கள் என்பது மட்டும் ஆணித்தரமான உண்மை.

அண்மையில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் மஞ்சுள திலகரத்தின நட்ட நடு வீதியில் பட்டப் பகலில் தனது காரை விட்டு இழுத்திறக்கப்பட்டு தாக்கப்பட்டு படுகாயப்படுத்தப்பட்டு கொழும்பு



மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பாகப் பல தரப்பினராலும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன. ஜனாதிபதி உடனடியாகவே விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும்படி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஞாயிறு காரம்

அதேவேளையில் எதிர்க்கட்சிக் கூட்டமைப்பினர் இளம் சட்டத்தரணிகள் சங்கம் என்பன இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கும் அரசுக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளன. மனோகணேசனும் இதே குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இன்னொருபுறம் அமைச்சர் விமல் வீரவன்ச அரசுக்கும் நீதிச் சேவைக்குமிடையே முரண்பாடுகளை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு தீய சக்திகளின் சதி எனத் தெரிவித்துள்ளார். அதே வாய்ப்பாட்டை உயர்கல்வி அமைச்சர் என்.பி.திசநாயக்காவும் வெளியிட்டுள்ளார். விமல் வீரவன்சவும் எஸ்.பி.திசநாயக்காவும் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினாலென்ன, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டாலென்ன பங்களாதேஷில் பௌத்த விகாரைகள் தாக்கப்பட்டாலென்ன உடனடியாகவே வாயில் வருவது வெளிநாட்டுச் சதி என்ற வார்த்தைகள்தான். நாய்க்கு எங்கு அடி விழுந்தாலும் காலைத்தான் தூக்கிக் கொண்டு ஓடும். இவர்கள் தூக்கத்திலும் வெளிநாட்டுச் சதி எனப் புலம்பும் நிலை வந்துவிடும் போல் தெரிகிறது.

ஒரு வன்முறைச் சம்பவம் இடம்பெற்றால் செய்தவர்களை உடனடியாக அடையாளம் காண முடியாவிட்டால் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதைக் கொண்டும் அதற்குப் பின்னணியான காரணத்தைக் கொண்டும் வன்முறையாளர்கள் யார் என்பதை உணர முடியும்.

அந்த வகையில் அண்மைக் காலமாக நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதிச் சேவைக்குமிடையே ஒரு பெரும் பனிப்போர் நிலவுவதை நாடறியும். நீதிச் சேவைகளின் ஆணைக்குழுவின் பணிகளில் நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரிகள் தலையிடுவதாக ஏற்கனவே நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் பகிரங்கமாகவே வெளியிட்டிருந்தார். அதேவேளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி; மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தடையாயுள்ள சட்டங்கள் அகற்றப்பட வேண்டும் எனவும் மக்களால் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஒரு ஜனநாயக நாட்டில் நீதிச் சேவைகள் சுதந்திரமானவை என்பது சட்டபூர்வமானது மட்டுமன்றி காலம் காலமாகப் பின்பற்றப்படும் ஒரு மரபாகும். நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானம் அரசியலமைப்புக்குப் பொருத்தமில்லாவிடில் அதை இரத்துச் செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு உண்டு. நீதிமன்ற உத்தரவின் பேரில் பாகிஸ்தான் பிரதமர் பதவி விலகியதும் மாலைதீவு ஜனாதிபதி ஒரு நீதிபதியைப் பதவி நீக்கம் செய்தமையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாகும்.

இப்படியான ஒரு நிலையில் நிறைவேற்று அதிகாரம் நீதிச் சேவையில் தலையிடுமானால் சுதந்திரமான நீதி நிலை பெறமுடியுமா? இப்படியான ஒரு நிலையிலேயே நீதிச் சேவைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையே பனிப்போர் தொடர்ந்தது.

ஏற்கனவே மன்னார் நீதிபதியை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தொலைபேசி மூலம் மிரட்டியதாகத் தற்சமயம் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை முழுவதுமுள்ள சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதை மறந்துவிட முடியாது.

ஒரு மாணவனின் கொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட ஓர் அரசியல் கட்சியின் முன்னாள் வேட்பாளரைப் பிணையில் செல்ல அனுமதிக்க மறுத்த நீதிபதி ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டார். இது தொடர்பாகக் கேள்விகள் எழுப்பப்பட்ட போது அது ஒருவழமையான இடமாற்றம் எனக் கூறப்பட்டது.

இப்படியான பல சம்பவங்கள் நீதிச் சேவைக்குள் அரசியல் தலையீடுகள் மூலம் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகும் நிலை எழுந்ததாகப் பல தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதே கருத்தை இப்போ நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலர் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்.

இப்படியான கருத்தை வெளியிட்ட நிலைமையில் ஜனாதிபதி பதிலுக்கு நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை வலியுறுத்திய நிலையில் ஆணைக்குழுவின் செயலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த நிலையில் இத்தாக்குதலுக்கும் அரசுக்கும் தொடர்பு உண்டு என இளம் சட்டத்தரணிகள் சங்கமும் மனோ கணேசனும் வெளியிட்ட கருத்துக்களை மக்கள் நம்புவதில் என்ன தவறு இருக்க முடியும்.

அதே நாளில் யாழ்ப்பாணத்தில் முன்னணி சோஷலிசக் கட்சியின் உறுப்பினர் திமிது ஆட்டிகல மீது கழிவு ஒயில் ஊற்றப்பட்டு சாணம் வீசப்பட்டது.

இது தொடர்பாக ஆளடையாளங்கள், மோட்டார் சைக்கிள் இலக்கம் என்பன போன்ற ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்யப்பட்டும் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

ஏற்கனவே யாழ்.போதனா வைத்தியசாலையின் ஊழலை வெளியிட்ட வைத்திய நிபுணர் வீட்டுக்கும் கழிவு ஒயில் ஊற்றப்பட்டது. தெல்லிப்பழையில் நில அபகரிப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்திவிட்டுத் திரும்பிய மக்கள் இடைமறித்துத் தாக்கப்பட்டு கழிவு ஒயிலால் அபிஷேகம் செய்யப்பட்டனர்.

இவை தொடர்பாக இன்றுவரை எவருமே கைது செய்யப்படவில்லை. இவர்கள் எப்போதாவது கைது செய்யப்படுவார்கள் எனவும் மக்கள் நம்பவில்லை.

எனவே தென்னிலங்கையிலும் சரி, வடக்குக் கிழக்கிலும் சரி அதிகாரப் பீடத்துக்கு தலையாட்டவும் பாதம் பணியவும் மறுப்பவர்களையும் உரிமைகளுக்கும் நியாயத்துக்கும் குரல் கொடுப்பவர்களையும் நசுக்க ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட காடையர் கூட்டம் செயற்பட்டு வருகிறது என்பதே இப்போது ஜனநாயகவாதிகளுக்கு உள்ள அச்சமாகும்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் போர் முடிந்த கால கட்டத்திலும் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட காடைத்தனங்கள் தமிழ் மக்களுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டன.

அந்தக் காலத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் இந்தக் கடைத்தனத்தால் வேட்டையாடப்பட்டனர். இன்றுவரை இதை நடத்திய நபர்கள் எவரும் கைது செய்யப்படவுமில்லை. சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை.

அன்று அது ஜனநாயக விரோதச் செயல் என்பதையோ ஒரு சர்வாதிகாரத்தை நோக்கிய பயணம் என்பதையோ தென்னிலங்கை புரிந்து கொள்ளவில்லை.

பல சிங்கள ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும், காணாமல் போனபோதும் கூடத் தென்னிலங்கையில் பெரும் அதிர்வுகள் ஏற்படவில்லை.

ஆனால் அவையனைத்தும் விரிவடைந்து நிறைவேற்று அதிகாரத்தின் கீழான ஒரு சர்வாதிகாரம் உருவாக்கப்பட இந்த ஆசீர்வதிக்கப்பட்ட காடைத்தனம் பயன்படுவது இன்று தென்னிலங்கையாலும் உணரப்படுகிறது.

எனினும் இன்றைய போராட்டம் நாடாளுமன்றத்துக்கும் நீதித் துறைக்கும் இடையேயான ஓர் அதிகாரப் போட்டியாகவே சிங்கள மக்கள் முன் காண்பிக்கப்படுகிறது. ஆனால் நிறைவேற்று அதிகாரத்தின் பேரால் நாடாளுமன்றம் ஜனாதிபதியால் கட்டுப்படுத்தப்படுகிறது.

எனவே அந்த அடிப்படையில் மக்கள் நலன் என்ற பேரில் நீதித் துறை ஜனாதிபதியால் கட்டுப்படுத்தப்படவே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று ஜனநாயகத்தின் பல வரப்பிரசாதங்கள் இந்த நிறைவேற்று அதிகாரத்தின் பேரால் பறிக்கப்பட்டுவிட்டன. அதேபாதையில் இன்று நீதித்துறையின் மேலும் கைவைக்கப்படுகிறது.

ஆனால் அதற்கெதிராகக் குரல் கொடுப்பவர்கள் மீது இன்று ஆசீர்வதிக்கப்பட்ட காடைத் தனங்கள் ஏவிவிடப்படுகின்றன. சிங்கள மக்கள் இத்தகைய ஜனநாயகப் படுகொலைகளுக்கு எதிராக விழிப்படையும் போதே ஒரு நல்ல நிலைமை உருவாக முடியும். ஆனால் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற போலித் திரைகளால் இந்த அக்கிரமங்கள் மறைக்கப்படுகின்றன. அதை இன்னும் சிங்கள மக்கள் நம்புகின்றனர். எப்படியிருந்தபோதிலும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன என்பது ஒரு திருப்தியளிக்கும் நிலைமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிர் கொடுத்த சாபம்

விகோம்

"ஊட்டுக்குப் போகாம ராத்திரி புள்ளா காத்திருக்கோம் அண்ணே. ராத்திரி தூங்கவே இல்ல. இன்னிக்கு இது நேரம் வரைக்கும் இருக்கோம். ரிக்கெற்று குடுங்கிறாங்க இல்லண்ணே. இப்ப கொஞ்சம் முன்னுக்குத்தான் பொலிஸ் நம்மள தண்ணியால் அடிச்சு விரட்டினாங்க. மச்சு பாக்கணும் எண்ட தால அதையும் வேண்டிக்கிட்டு இங்கனேக்கேயே உங்காந்திருக்கம்".



இலங்கை அணியின் ஒவ்வொரு அசைவுக்கும் லட்சக் கணக்கில் சிங்கக் கொடிகள் எழுந்தாடின. காவற் கடமையில் நின்றவர்களும் தங்கள் பணியை மறந்திருந்தனர். உள்ளே போன எங்களுக்கு வலயங்களும் இல்லை. வகுப்புக்களுமில்லை.

கடந்த 6ஆம் திகதி காலை 9 மணிக்கு இந்த ஏக்கமான வசனங்களை பிரேமதாச மைதானத்துக்கு வெளிப்புறமாக இரவு பகலாகக் காத்திருந்த இளைஞர் குழு ஒன்றிடமிருந்து கேட்க முடிந்தது. அன்று அந்த வீதி கிரிக்கெட் ரசிகர்களின் ஆதிக்கத்தால் சற்று நேரம் முடங்கியிருந்தது. அதனைக் கலைக்கவே பொலிஸார் தண்ணீர் பீச்சி அந்தக் கூட்டத்தைக் கலைத்தனர். ரி –20 உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை மேற்கிந்தியத் தீவுகள் அணி மறுநாள் இரவு மோத இருந்த நிலையில் அதனைப் பார்ப்பதற்கான ரிக்கெட்டைப் பெறுவதற்கே இந்த நிலை ஏற்பட்டிருந்தது.

## இளசுகளின் கொண்டாட்டம்

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்தே கொழும்பு வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் அனைத்தும் சிங்கக் கொடியைக் காவிக்கொண்டே பறந்தன. மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும் சிங்கக் கொடியைப் பறக்க விட்டிருந்தனர். உட்புற வீதிகளில்இளைஞர்அணிகள்இலங்கை கிரிக்கெட் அணியினரின் உடைகளை அணிந்து – அவர்களின் வேடம் அணிந்து தாள வாத்தியங்களுடன் ஆடல் பாடல் கொண்டாட்டங்களுடன் வீதிகளை நிரம்பவைத்துக் கொண்டிருந்தனர்.

அன்றைய நாள் அவர்களுக்கு ஒரு கோலாகல கொண்டாட்ட நாளாக மாறியிருக்க மேற்கிந்தியத் தீவுகள் அணியை இலங்கை அணி இலகுவாக வென்று கிண்ணத்தைத் தனதாக்கிக்கொள்ளும் என்பதில் இவர்கள் சற்றேனும் மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. அந்த மகிழ்ச்சியே வீதியை நிரப்பிக் கொண்டிருந்தது.

மாலை நகர நகர மைதான வீதிகள் நிரம்பிக்கொண்டிருந்தன. ஏற்கனவே ரிக்கெட்டைப் பெற்றவர்கள் நுழைவாயிலைத் தேடி விரைந்தனர். ஆனாலும் வெளியில் கூட்டம் குறைந்தபாடில்லை. பொலிஸாரின் அடாவடிகளுக்கு மத்தியிலும் பெருங் கூட்டம் வெளியில் அலைந்து கொண்டிருந்தது.

அந்தக் கூட்டத்துக்குள் நாங்களும் நின்றிருந்தோம். காரணம் இறுதியாட்டத்தைப் பார்ப்பதற்கு ரிக்கெட்டை என்ன விலை கொடுத்தும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதால். ஒரு ஊகம். ஆட்டம் தொடங்கியதும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட டிக்கெட்டுக்கள் கூடிய விலையில் விற்பனைக்கு வரும் என்பது.

உண்மைதான். ஒரு ரிக்கெட்டின் விலை 8 ஆயிரத்திலிருந்து மெல்ல மெல்ல குறைய ஆரம்பித்தது.

மேற்கிந்தியத் தீவுகள் ஓட்ட வேகத்தை குறைத்து முதல் விக்கெட்டை இலங்கை கைப்பற்றிய நிலையில் ரிக்கெட்டின் விலை 1500 ரூபாவானது. ஆனாலும் ஓரிரண்டு ரிக்கெட்டுகளே. அவையும் வேறு வேறு வலயங்களுக்கு உரித்தானவையாக இருந்தன. அவற்றைக் கொண்டு குழுவாகச் சென்று ஆட்டத்தைப் பார்க்க முடியாது.

## மஹிந்தரும் வந்தார்

இலங்கை அணி விளையாடும் முக்கிய போட்டிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பார்வையிடச் சென்றால் அவர்கள் தோற்றுவிடுவார்கள் என்பது முன்னைய அனுபவம். இதனால் போட்டி ஆரம்பமாகி இறுதிநேரம் வரை ரி 20 உலகக் கிண்ண இறுதிப் போட்டியை பார்ப்பதாக மஹிந்த முடிவு செய்யவில்லை.

ஆனால் இந்த முறை மேற்கிந்தியத் தீவுகள் அணியில் அடித்துச் சாதிக்கக்கூடிய கெயில் 5.5 பந்துப் பரிமாற்றத்தில் இரண்டாவதாக ஆட்டமிழப்பு செய்யப்பட்ட ஆரவாரத்தோடு மஹிந்த மைதானத்தை வந்தடைந்தார். அதற்காக அரை மணித்தியாலத்துக்கு மேலாக ஒரு வீதி மூடப்பட்டிருந்தது.

இலங்கை அணி வென்றுவிடும் என்ற எண்ணம் ரசிகர்களுக்கு மட்டுமன்றி வெளியில் காவற் கடமையில் நின்றிருந்த பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கும் தோன்றிய நிலையில் கெடுபிடிகளும் குறைந்துபோயிற்று.

## கறுப்புச் சந்தை

கறுப்புச் சந்தையில் அதுவரை பேரம் பேசப்பட்ட ரிக்கெட்டுக்கள் மளமளவென விற்றுமுடிய இப்போது இடைத்தரகர்கள் ஓரிரு ரிக்கெட்டுக்களை வைத்து 'மச்சான் மச் பார்க்கப் போறியா! வா நான் கூட்டிற்றுப் போறன். எவ்வளவு தாறாய்.'' என்று தொடங்கிற்று.

எப்படியோ இறுதியாட்டத்தை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் அந்த நபரின் பேரத்துக்கு விலை போனோம்.

தலைக்கு 1500 கொடுத்து ஒருவாறு உள்நுழைந்த போது அரங்கம் முழுவதும் சிங்கக் கொடிகள் நிறைந்திருந்தன. இலங்கை அணியின் ஒவ்வொரு அசைவுக்கும் லட்சக் கணக்கில் சிங்கக் கொடிகள் எழுந்தாடின. காவற் கடமையில் நின்றவர்களும் தங்கள் பணியை மறந்திருந்தனர். உள்ளே போன எங்களுக்கு வலயங்களும் இல்லை. வகுப்புக்களும் இல்லை. எந்தப் பகுதியிலிருந்தும் ஆட்டத்தைப் பார்க்க முடிந்தது. வெளியில் ரிக்கெட்டுக்காக காத்திருந்த நிலைமை உள்ளே கட்டுப்பாடற்ற குதூகலம்.

'வன்னியில் அப்பாவி மக்கள் செத்தது உண்மை என்றால் இலங்கை அணி தோக்கும்' இது விடாப்பிடியாக நின்று இறுதியாட்டம் பார்க்கச் சென்ற எங்களது வாதம். இதை மைதானத்தில் பெரிதாகச் சொல்லியிருந்தால் அடித்தே கொண்றிருப்பார்கள். அதனால் கைதட்டி ஆரவாரம் செய்ததோடு மட்டும் நிறுத்திவிட்டோம்.

## வெறிச்சோடிய இருக்கைகள்.

இலங்கை அணியின் 7ஆவது இலக்கு வீழ்த்தப்பட்ட நிலையில் அரங்கத்தில் நிறைந்திருந்த தலைகள் நீங்கி கதிரைகள் தென்பட்டன. அடுத்தடுத்து இலக்குகள் சரிய சிங்கக்கொடிகளையும் காணவில்லை. பெரும் சனக் கூட்டத்தையும் காணவில்லை. பொலிஸார் மட்டும் ஆயிரக் கணக்கில் தயார்ப்படுத்தப்பட்டிருந்தனர். ஆட்டம் முடிவடைந்து அடுத்த கையோடு உள்ளக மைதானத்தில் சுற்றிவர பொலிஸ் பாதுகாப்பு. இலங்கை ரசிகர்கள் ஆத்திரமடைந்து மேற்கிந்திய வீரர்களை தாக்கிவிடாமல் இருக்க பொலிஸாரால் மைதானம் நிரப்பப்பட்டிருந்தது.

அடுத்தடுத்து இலங்கை அணியின் இலக்குகள் விழத் தொடங்கியதும் ஜனாதிபதி பக்கத்தில் இருந்தவருக்கும் சொல்லாமல் இறங்கி வந்த வழியால் மறைந்துவிட்டார். ஓரிரண்டு தடவைக்குப் பின்னர் அவர் கமராவுக்குள் அவர் அகப்படவேயில்லை. சொந்த மண்ணில் மண் கவ்விய இலங்கை அணியினர் சற்று நேரம் மைதானத்தில் நின்றுவிட்டு அவர்களும் கிளம்பிவிட மேற்கிந்தியத் தீவுகள் அணி மட்டும் ஆடல் பாடல்களுடன் அன்றைய மைதானத்தை அலங்கரித்தனர்.

## பிழைப்புக்கான நாள்கள்

"ரி– 20" உலகக் கிண்ணம் இலங்கையில் ஆரம்பித்த போது ஆடுகளங்களுக்கு அண்மையில் இருக்கும் பலருக்கு சில நாள்களில் உழைப்புக்கு நல்ல [illegible] முதியவர், சிறார்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி ரிக்கெட்டுக்களை கொள்வனவு செய்து விற்றும் வேடம் 'புனைதல்' தேசியக் கொடி விற்றல், உள்ளிட்ட தமது வியாபாரங்களை தொடங்கியிருந்தனர். யார் தோற்பது வெல்வது என்பது அவர்களுக்கு முக்கியமாக இருக்கவில்லை. இன்னும் இரண்டு நாள்களுக்கு ஆட்டம் நீடிக்காதா என்பதே கேள்வியாக இருந்தது.

பலரின் ஏக்கங்களோடு 'ரி –20' உலகக் கிண்ணத்தை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றிக் கொள்ள இப்போது இலங்கை கிரிக்கெட் அணிக்கு விமர்சனங்களும் நெருக்கடிகளுமே அதிகரித்திருக்கிறது.

அழிவுகளுக்கும் அநியாயங்களுக்கும் நடுவில் ஒரு சுதந்திர நாடு என்பதைக் காட்ட மஹிந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வெளிநாட்டுப் பிரதிநிதிளை அழைத்தல், வர்த்தகக் கண்காட்சியை நடத்துதல் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், என மூடிமறைக்க முயற்சி எடுத்து வரும் நிலையில் 'ரி– 20' களியாட்டமும் தோல்வியோடு முடிந்தாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

■ ராகவன் அல்பி

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

19

மாறாமல் நீண்டகாலம் நீடித்து இருப்பது எதுவுமில்லை. எம்மைச் சுற்றி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் எம்முடைய திறமைகளைத் தூண்டிவிடுவதாகவும் இருக்கலாம் அல்லது பயமுறுத்துவதாகவும் இருக்கலாம், நீங்கள் அதை எப்படி பார்க்கின்றீர்கள் என்பதைப் பொறுத்தது. சிறந்த மாற்றங்கள் என்பது மற்றவர்கள் உங்கள் மீது திணிக்காது, நீங்களே மாற வேண்டுமென நினைத்து மாற்றம் செய்து கொள்ளுவதுதான். அதுவே மகிழ்ச்சிக்குரியதுமாகும். ஏனெனில் அவைதான் உங்களை இலக்கின் அருகில் இட்டுச் செல்லும்.

மாற்றங்களைச் செய்து கொள்வது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால், செய்துதான் ஆகவேண்டும். அதுதான் வெற்றியின் இரகசியம். அதற்கு தடைகளைத் தாண்டவேண்டும். தடைகளைக் கண்டு சோர்ந்துவிட்டால் எல்லாமும் போய்விடும். ஒவ்வொரு தடையாகத்தாண்டி முன்னேற வேண்டும். தடைகளை வெற்றிகரமாகத் தாண்டுவதற்கான வழிகளை இந்த வாரம் பார்க்கலாம்.

**முயற்சியைக் கைவிடாதீர்கள்:** கடினமான விஷயங்களைச் சாதிப்பது என்பது எளிமையானதல்ல. நீங்கள் தடைகளை முன்னரே எதிர்பார்க்க வேண்டும். மேலும் தடைகளைத் தகர்த்துச் செல்லும் வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும். பெரும் தடையாக வைத்துக் கொள்ளாதீர்கள். சிறு சிறு தடைகளாக்கி ஒவ்வொன்றாகத் தாண்டுங்கள்.



**தவறுகளை ஒத்துக் கொள்ளுங்கள்:** தவறுகள் உங்களால் நேர்ந்ததென்றால், அதற்கான காரணங்களைக் கண்டறியுங்கள். அதற்கான தீர்வுகளையும் கண்டுபிடித்த பின் அதிலிருந்து வெளியே வந்துவிடுங்கள். செய்த தவறுக்காகத் தொடர்ந்து உங்களைத் தண்டித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நாம் அனைவருமே தவறு செய்பவர்கள்தான்.

**எதிர்நீச்சல் போடுங்கள்:** பாய்ந்து செல்லும் நீரோட்டத்தின் போக்கிலே செல்லாதீர்கள். மற்றவர்கள் கைவிட்டுவிட்ட போதிலும் நீங்கள் நீரோட்டத்துக்கு எதிராகச் செல்லுங்கள். செத்த மீன் மட்டும்தான் அலையின் போக்கில் செல்லும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**தயாராக இருங்கள்:** நமது வீடுகளையும் கார்களையும் காப்பீடு செய்து பாதுகாக்கின்றோம். அது போன்றுதான் நம் லட்சியங்களையும் பாதுகாக்க வேண்டும். எப்போதும் எதிர்பாராத சூழ்நிலைகளை நினைத்து மாற்றுத் திட்டம் ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும்.

**மன்னித்து மறந்து விடுங்கள்:** சில பேர் கோபங்களையும், மனவெறுப்புகளையும் நீண்ட காலமாக மனதில் வைத்துக்கொண்டிருப்பார்கள். வடுக்களை அவ்வளவு நாள்கள் வைத்திருக்காதீர்கள். உடனே மன்னித்து மறந்து விடுங்கள் மனக்காயம் தானாக ஆறிவிடும்.

**மாற்றுப் பாதையில் போதல்:** சில சமயங்களில் தடைகளானவை கடந்து செல்ல முடியாததாக இருக்கும். அவ்வாறு உங்களது பாதை அடைக்கப்பட்டிருக்கும்போது மாற்றுப் பாதை எங்கிருக்கிறது என்று பாருங்கள். உங்களின் பயணம் மதிப்புடையது என்றால் மாற்று வழியும் அதற்கு இருக்கும்.

**போதுமான நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்:** ஆறுமாத காலத்தில் நீங்கள் எந்த ஒரு பெரிய மாற்றத்துக்கும் ஏற்ப உங்களை மாற்றிக் கொள்ளமுடியும். அது போன்று பெரும் துயரத்திலிருந்தும் விடுபடமுடியும். அதனால் உங்கள் வாழ்வில் பெரும் அதிர்ச்சியூட்டுகின்ற சம்பவங்கள் நடக்கின்றபோதிலும் அதற்காக அந்தச் சமயத்தில் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்துவிடாதீர்கள்.

**நேர்மறையானதை எதிர்பாருங்கள்:** நம் அனுபவங்களின் தொகுப்புதான் நாம். மோசமான அனுபவத்தில்கூட ஒரு பாடம் இருக்கும். என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள். இதனால் கடினமான பாடத்தை மீண்டும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்காது.

**சிறுவயதிலேயே பல முயற்சிகளைச் செய்யுங்கள்:** இளம் வயதில் அனைவருமே தவறு செய்வோம். இளம் வயது என்பதால் செய்த தவறுகளிலிருந்து மீண்டுவரவும், மீண்டும் வாய்ப்புகளை உருவாக்கவும் நேரம் இருக்காது. வயதான காலத்தில் தவறு செய்தால் வாழ்க்கை மிகவும் சிரமமானதாகிவிடும்.

**சுற்றிப் பாருங்கள்:** உங்களுக்கு நேர்ந்தது போன்ற தடையை அதற்கு முன்னரே ஒருவர் சந்தித்திருக்க வாய்ப்பிருக்கிறது. அதனால் அருகிலிருப்பவர்களிடம் இதற்கான தீர்வுகளைத் தேடுங்கள்.

# நெஞ்சினால் பிழையிலாள்களே!

■ லோ.துஷிகரன்

சுவாமித்திர முனிவரோடு இராமனும் இலக்குமணனும் மிதிலை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றார்கள். மிதிலையை அண்மித்தபோது பொலிவிழந்த குடிலையும் அதனருகில் கல்லு மேட்டினையும் கண்டார்கள். அவர்கள் அதனருகே சென்றபோது இராமனது காலில் இருந்து எழுந்த தூசி அந்தக் கல்லின் மேல்பட்டதும் அந்தக் கல்லு அழகிய பெண்ணுருவம் பெற்று வணங்கி நின்றது.

"இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்;<br>
இனி இந்த உலகுக்கெல்லாம்<br>
உய்வண்ணம் அன்றி, மற்று ஓர்<br>
துயர் வண்ணம் உறுவது உண்டோ?<br>
மைவண்ணத்து அரக்கி போரில்<br>
மழைவண்ணத்து அண்ணலே! உன்<br>
கைவண்ணம் அங்கு கண்டேன் ,<br>
கால் வண்ணம் இங்கு கண்டேன்"

என இந்தக் காட்சியை விசுவாமித்திரர் கூறுவதாக கம்பன் பாடிப்புகழ்ந்தான் இந்த இராமனை.

இராமனது கால் தூசி பட்டு கல்லாய்க் கிடந்தது, பெண் உருவம் பெற்றது. அகலிகை என்னும் பெண்ணே. அவளது கணவன் கௌதம முனிவரது சாபத்தாலேயே அந்தப் பெண் கல்லாகிப் போனாள். இவளதுசாபவரலாறு கற்போர் மனதைச் சற்றுச் சங்கடப்படுத்தக் கூடியதே.

இளம்பராயத்தில் இருந்தே இந்திரன் அகலிகையை அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தவன். எனினும் அவனது கனவு பலிக்கவில்லை. கௌதம முனிவருக்கும் அகலிகைக்கும் திருமணம் நடந்தேறிவிட்டது. இதனால் இந்திரன் மிகவும் கவலையுற்றான். எனினும் அவன் தனது மனநிலையை மாற்றவில்லை. அகலிகையுடன் உறவு கொள்வதற்கு சந்தர்ப்பம் தேடி இருந்தான்.

ஒருநாள் இந்திரன் தந்திரமாக கௌதம முனிவரை, குடிலை விட்டு வெளியேறச் செய்தான். முனிவர் குடிலில் இருந்து வெளியேறியதும், இந்திரன் தனது உருவத்தை மாற்றி முனிவர் போன்ற தோற்றத்துடன் குடிலுக்குள் புகுந்தான். குடிலுக்குள் புகுந்தவன் உடனடியாகவே தனது இச்சையை நிறைவேற்றத் தலைப்பட்டான். கணவரது விருப்பத்தை நிறைவேற்றுவது மனைவியின் கடமையாகும் என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்ட அகலிகையும், முனிவர் தோற்றத்தில் வந்த இந்திரனின் இச்சைக்கு உடன்பட்டாள். உடலுறவில் ஈடுபட்டாள். வழமையாக கணவனுடனான உடலுறவில் இருந்து அன்றைய உறவில் வேறுபாட்டினை அகலிகை அப்போது உணர்ந்தாள். இந்திரனே மாறுவேடத்தில் கணவன் போல் உருமாறி வந்துள்ளான் என்பதை அகலிகையால் அறியமுடியவில்லை. ஆனால் மனம் தடுமாறியது. உறவின் வழி உணர்வு செல்லவில்லை. உடலுறவின் வேறுபாடு பற்றியே சிந்திக்கலானாள். இப்படியாக இவள் மனம் தடுமாறிக்கொண்டு இருந்த போது முனிவர் வந்துவிட்டார்.

இராமனது கால் தூசி பட்டு கல்லாய்க் கிடந்தது, பெண் உருவம் பெற்றது. அகலிகை என்னும் பெண்ணே. அவளது கணவன் கௌதம முனிவரது சாபத்தாலேயே அந்தப் பெண் கல்லாகிப் போனாள். இவளது சாப வரலாறு கற்போர் மனதைச் சற்றுச் சங் கடப்படுத்தக் கூடியதே

ஒரே உருவில் இருவரைக் கண்ட அகலிகை திகைத்துப் போனாள்.

பதறிய அகலிகைக்கு ஒன்றுமே புரியவில்லை. துடிதுடித்துப், பயந்து, ஏங்கி, நாணி நின்றாள். பழிச்சொல்லுக்கு ஆளாகப் போகிறேனே எனத் திகைத்தாள். யார் உண்மைக் கணவன் எனத் தெரியாது தடுமாறினாள். அப்போது முனிவர் வேடத்தில் வந்த இந்திரன் பூனை உருவங்கொண்டு ஓடத் தொடங்கினான். ஓடத் தொடங்கிய இந்திரனை முனிவர் தடுத்து சாபமிட்டார். நீ எதற்கு ஆசைப்பட்டாயோ அதே ஆயிரம் மாதர்குள்ள குறிகள் உனது உடம்பெல்லாம் உண்டாகட்டும்

(... பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்




21

பா.உண்மை

1834 தேர்லில். சங்கமன் மாவட்டத்திலிருந்து சட்ட மன்ற உறுப்பினராவதற்காக ஆபிரஹாம் லிங்கன் போட்டியிடுகிறார். பரப்புரைக் கூட்டம் நடக்கிறது. லிங்கன் மேடையில் எழுந்து நின்றார். பேச ஆரம்பித்தார்.

மருத்துவர் பேரட் அசுவாரசியமாகத்தான் முதலில் லிங்கனின் பேச்சைக் கேட்டார். சிறிது நேரம் ஆனதும் லிங்கனின் பேச்சில் இனம்புரியாத மந்திரம் ஏதோ இருப்பது போன்று பட்டது அவருக்கு. எல்லோரும் வெகு சிரத்தையாக லிங்கனின் பேச்சை ரசித்துக் கேட்பதையும் கவனித்தார். மேலும் சிறிது நேரம் போனது. லிங்கனின் உணர்ச்சிப் பிரவாகமான பேச்சில் தம்மை அறியாமலேயே ஆழ்ந்து போனார் மருத்துவர்.

மேலும் சிறிது நேரம் ஆனதும் லிங்கனின் பேச்சுக்கு அவரும் மற்றவர்களைப் போலவே அவ்வப்போது உற்சாகக் குரல் எழுப்பினார். கைதட்டினார், நெக்குருகினார், தழுதழுத்தார். சுருக்கமாகச் சொல்ல வேண்டும்மென்றால் மருத்துவர் லிங்கனின் பேச்சில் கரைந்து காணாமல் போனார்.

லிங்கன் பேசி முடிந்ததும் இடி இடித்ததுபோல் கரவொலி எழுந்தது. பேரட்டின் கைகளும் கரவொலியை எழுப்பிக் கொண்டிருந்தன. ஹெர்ன்டன் கேட்டார். ''இப்ப என்ன சொல்றீங்க?''

''நான் சொன்னதை அப்படியே மறந்திடுங்கள். யாரைவிடவும் இவருக்கு அதிகமான சமாச்சாரங்கள் தெரிஞ்சிருக்கும். இந்தத் தேர்தல்ல நின்று வெல்வதற்கு இவரைவிடப் பொருத்தமான ஆள் வேற யாரும் இருக்க முடியாது'' - என்று அடித்துச் சொன்னார் மருத்துவர்.

அந்தத் தேர்தலில் ஆபிரஹாம் லிங்கன் 1,376 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தேர்தலில் வெற்றி பெற்றதும் லிங்கன் செய்த முதல் வேலை, ஸ்மூட் என்பவரை சந்தித்ததுதான்.

ஆபிரஹாம், ஆஃபட்டின் கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது பழக்கமானவர் ஸ்மூட். ஆபிரஹாமின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர்.

''ஆபிரஹாம்! என்ன திடீரென்று இந்தப் பக்கம்?''

''எனக்கு அவசரமாகக் கொஞ்சம் காசு வேணும்''

''எவ்வளவு''

''200 டொலர்''

''ஏன்''

''தேர்தலில் வென்றுவிட்டேன். சட்டமன்றத்துக்கு அணிந்து செல்ல நல்ல உடுப்பு எதுவும் இல்லை. சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும் கடனைத் திருப்பி கொடுத்து விடுகிறேன்''

★

1834 சட்டமன்றத் தேர்தலின் மூலமாகத்தான் அரசியல் தலைவர்களுடன் லிங்கனுக்குப் பழக்கம் ஏற்பட்டது. அந்தத் தேர்தல் பரப்புரையின் போதுதான், வழக்கறிஞரும் சட்டமன்ற உறுப்பினருமான ஸ்டூவர்ட்டுடன் லிங்கனுக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

ஸ்டூவர்ட், சட்டம் பயின்றவர். 1828ஆம் ஆண்டிலிருந்து ஸ்பிரிங்க்ஃபீடில் இருக்கும் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். லிங்கனைவிட அவருக்கு இரண்டு வயது அதிகம். 1832ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 'விக்' கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரானவர்.

ஸ்டூவர்ட், ஏற்கெனவே லிங்கனின் மனதில் கனன்று கொண்டிருந்த வழக்கறிஞராகும் ஆசையை ஊதி பெரிதாக்கினார்.

1834ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், சங்கமன் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்தெடுக்கப்பட்டவர்கள் நான்கு பேர். 'விக்' கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் மூன்று பேர்? ஆபிரஹாம் லிங்கன், ஜான் டாசன், ஸ்டூவர்ட். ஜனநாயகக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் வில்லியம் கார்பெண்டர்.

இல்லியான்ஸ் மாநிலத்தின் தலைநகரான வண்டாலியாவில் (vandalia) நடந்த சட்டமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ள நால்வரும் பயணமானார்கள். இல்லினாய்ஸ் மாநில சட்டமன்றத்தில் இரண்டு சபைகள் இருந்தன. பிரதிநிதிகள் சபை (பொதுச்சபை), செனற் சபை. பிரதிநிதிகள் சபையில் 55 உறுப்பினர்கள் இருந்தார்கள். செனற் சபையில் 26 செனட்டர்கள் இருந்தார்கள். பிரதிநிதிகள் சபையில் உறுப்பினர்களாக இருந்தவர்களில் பாதிப் பேர் விவசாயிகள்.

அந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், முக்கியமாக, இரண்டு சட்ட வரைபுகள் முன்வைக்கப்பட்டன. ஒன்று அரச வங்கி ஒன்றை உருவாக்குவது. மற்றொன்று இல்லியான்ஸ் - மிச்சிகன் கால்வாயை வெட்டி, அட்லாண்டிக் பெருங்கடலின் கரையோடு இணைப்பது. லிங்கன் இந்த இரு தீர்மானங்களுக்கும் ஆதரவு அளித்தார். அந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டதற்கு ஊதியமாகக் கிடைத்த தொகை 258 டொலர்கள். அந்த தொகையில் லிங்கன் செய்த முதற் செலவு, ஸ்மூட்டின் கடனை அடைத்தது.

★

1836, 1838, 1840ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களிலும் லிங்கன் வெற்றிபெற்றார். இரண்டாவது முறையாக அவர் 1836இல் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக, இல்லியான்ஸின் தலைநகரம் வண்டாலியாவில் இருந்து ஸ்பிரிங்ஃபீல்டுக்கு மாற்றப்பட்டது.

'விக்' கட்சி பணக்காரர்களின் கட்சி. ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த லிங்கன் ஜனநாயகக் கட்சியில் சேராமல் 'விக்' கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் இருந்தது. இல்லியான்ஸில் அரசியல் கட்சிகள் வர்க்க அடிப்படையில் இயங்கவில்லை. கொள்கை அடிப்படையில் இயங்கின. ஜனநாயக கட்சியின் தலைவர் ஜாக்சன். 'விக்' கட்சியின் தலைவர் ஹென்றி கிளே. கிளேயை லிங்கனுக்கு மிகவும் பிடிக்கும். அவருடைய கொள்கைகள் பிடிக்கும்.

அரச வங்கியின் மூலம் நாட்டின் இயற்கை வளங்களைப் பெருக்குவது, நாணயத்தின் மதிப்பை நிலை நிறுத்துவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடுவது, வளரும் தொழில்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதி வரி விதிப்பது என்பவை 'விக்' கட்சியின் கொள்கையில் சில முக்கியமான அம்சங்கள்.

இந்தக் கொள்கைகளைவிட லிங்கனை மிகவும் கவர்ந்த கொள்கை ஒன்று உண்டு. அடிமை முறையை ஒழிப்பது. அரசியல் கட்சிக் கொள்கை ரீதியாக வலுப்படாத காலகட்டத்தில் லிங்கன், கிளேவைத் தம் தலைவராக ஏற்றுக் கொண்டதற்கு இதுதான் முக்கிய காரணம்.

இந்தக் கொள்கைகளோடு லிங்கனும் அந்தத் தேர்தலின்போதே சுயமாகச் சில கொள்கைகளையும் வைத்திருந்தார். அரசு பொருளாதார விவகாரங்களில் தலையிடக்கூடாது என்ற கொள்கையை அவர் ஏற்க மறுத்தார். தனியார் தொழில்களை வளர்க்கவேண்டுமானால், அரசு விவசாயம், போக்குவரத்து ஆகிய துறைகளுக்கு தாராளமாக நிதி உதவி வழங்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

லிங்கன் சொன்னார் ''மனிதர்கள் தங்களால் தனிப்பட்ட முறையில் செய்து கொள்ள முடியாத வசதிகளை, வளர்ச்சிகளை அரசு முன்வந்து செய்து கொடுக்க வேண்டும்.'' லிங்கன் அரசியலுக்கு வந்தாலும் ஒரு சராசரி அரசியல்வாதியைப் போல அவர் அப்போதும் நடந்து கொண்டதில்லை.

(மீட்பர் வருவார்...)

-வீனா-

# அன்பால் நிரம்பும் அனுபவம்

கணவன்- மனைவி, காதலன்-காதலி, சகோதரன்-சகோதரி இந்த உறவுகள் தாண்டி ஆண்-பெண் உறவுக்கு என்ன பெயரும் பொருளும் இருக்கமுடியும்.

ஆண்-பெண் இருபாலாருக்கும் இடையில் இருக்கும் சராசரி மனித உறவுகள் கடந்த இன்னோர் தொடர்பு, நட்போ! நட்பின் விழுமியங்களும், தேவைகளும் கூட ஆங்காங்கே சில சமயங்களில் அற்ப ஆசைகளில் இடறி களங்கப்பட்டு சமூக நிந்தனையாய் மனித மனங்களை, வாழ்க்கையை பதம் பார்க்கிறது.

உள் மனக் குழப்பங்கள், உறவுகள் [illegible] உத்தரவாதமின்மை இதுவே மனிதர்[illegible] உறவுச் சிக்கல்களை உண்டு பண்ணுகிறதோ. சமூக ஒழுக்காற்று விழுமியங்கள் தடை போட்டாலும், அதீத அல்லது நியாயமான ஆசைகள் அணை மீறும் போது ஆண்-பெண் நட்பு என்பது அர்த்தமும் மாறி நிற்கிறது.

நட்புக்கு வரைவிலக்கணம் சொல்லத் தெரியாவிட்டாலும், அது குறித்த புரிதலும், ஆழமும் அறியப்படும் போதுதான் அதன் களங்கமில்லா அர்த்தம் மிளிர்கிறது. காதலில் நீ நானாய், நான் நீயாய் என்பார்கள். களங்கமற்ற ஆண்-பெண் நட்பில்தான் பால், திணை வழுக்கள் காணாமற் போகின்றன.

அங்கே காதல் இல்லை. காமம் இல்லை. ஆண்-பெண் என்னும் இயற்கையின் உடற்கூறுகள் தாண்டி என் நட்பே நீ நீயாய் இரு. நான் நானாகவே இருந்துவிடுகிறேன் என்று சொல்ல முடிகிறது. அதன்படி நடக்கமுடிகிறது.

நான் சிரித்தால் சிரிக்கவோ அல்லது அழுதால் என்னோடு சேர்ந்து மூக்கை உரிஞ்சவோ எனக்கு நட்பு தேவையில்லை. எனக்கு நல்ல வழிகாட்டல் தேவை. நான் வழி தவறினால் இடித்துரைக்க குருவாய் ஓர் நட்பு தேவை. அந்த நட்பு என்பது எனது இயல்புகளோடு என்னை ஏற்றுக்கொள்ளும் இன்னோர் இயல்பான சக [illegible] தன்னை [illegible] உயர்த்திக் காட்டாத உயர்ந்த பண்பு வேண்டும். அந்த மனிதனை உறவுகளின் பெயரால் இணைத்துக் கொள்ள இஷ்டமில்லை. பிறகு எப்படி என்று கேள்வியும் எழுகிறது. நட்பு என்பதே சரியென்று பதிலாய் தோன்றுகிறது.

எந்தவொரு உறவும் நட்பாக இருக்கமுடியாது என்பதும் வறட்டு வாதம். உறவே நட்பாய் அமைந்தால் அது வாழ்க்கையை இன்னும் அமைதிப்படுத்தும், ஆழப்படுத்தும்.

நிர்ப்பந்தங்கள் இல்லாத நட்பும் அன்பும் நிறைந்த இடம்தான் எப்போதுமே தெளிவான பளிங்கு போல் தனது சுயம் காட்டும். சக மனிதன் தன்னை உணரவும், தெரிந்துகொள்ளவும் கூட வழி காட்டும். அதற்கு யாரையும் எதற்குமே நிர்ப்பந்திக்க தெரியாது.

இதில் சிக்கல் என்னவென்றால், இந்த மனோபாவம் யாருக்கும் எளிதில் கைவரப் பெறுவதில்லை. சிலருக்கு இயல்பாகவும், சிலருக்கு வாழ்வின் அனுபவங்கள் மூலமும்தான் அந்த நிலை கைகூடுகிறது. அப்படிப்பட்டவர்களை துணையாகவோ, நட்பாகவோ அமையப் பெற்றவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நன்றாக யோசித்துப் பாருங்கள் இப்படி யாரையாவது வாழ்க்கையில் சந்தித்திருப்பீர்கள். ஆனால், உங்கள் அவசரப் புத்தியால் கோட்டை விட்டிருப்பீர்கள். புரியவில்லையா அவர்களுக்கு நாங்கள் ''இளிச்சவாயர்கள்'' என்று பட்டம் கொடுத்திருப்போம். நினைவிருக்கிறதா. சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

கல்விமுறையில் அதாவது அரசின் கல்விக் கொள்கையில் எங்கோ ஏதோ கோளாறு இருக்கிறது என்றுதானே நினைக்க வேண்டியிருக்கிறது

# கல்வித்துறையில் தேவை சீர்திருத்தம்

அசை போட ஒரு விடயம் 48

தனியார் வகுப்புக்குப் போகாத பிள்ளைகள் யாரும் இருக்கிறாங்களா? என்ற கேள்விக்குப் பெரும்பாலும் இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைக்கும். ரியூசனுக்குப் போனால்தான் பிள்ளைகளால் படிக்க முடியுமானால் பிறகு முறையான பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் எதற்கு? ஒன்றில் பாடசாலைகளில் பாடங்கள் ஒழுங்காகப் படிப்பிடிக்கப்படுவதில்லை. அல்லது பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடங்களை படிப்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லை. அதுவும் இல்லையென்றால் பாடங்களை உரிய காலத்தில் படிப்பித்து முடிக்க ஆசிரிய்களால்முடியாமல் இருக்கிறது. இவைகளுக்கும் மேலாக மாணவர்கள் பாடசாலைகளுக்குப் போவதென்பது ஒரு சம்பிரதாயமாகிவிட்டதாகவும் உண்மையான படிப்பை ரியுஷன் வகுப்பில்தான் கற்றுக் கொள்கிறார்கள் என்றும் கூட கூறப்படுகின்றது.



ராஷ்மி நிமெஷா குணவர்தன

ரியூஷன் வகுப்புக்குப் போகாமலே மனமிருந்தால்சாதிக்கவேண்டும் என்ற துணிச்சலும் இருந்தால் கல்வியில் சாதிக்க முடியும் என்பதை நிலைநாட்டியிருக்கும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவன் தனலிங்கம் ஜேவிட்சனை இந்த வேளையில் நாம் பாராட்ட வேண்டும்.

குடும்ப நிலை காரணமாக தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்ல முடியாததால் வகுப்பில் கற்பித்தவற்றை கிரகித்து பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றுள்ளதாக செய்தி. அந்தப் பாடசாலையில் இந்த மாணவன் மட்டுமே 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் மாணவனின் சூழ்நிலையும் கல்வியில் இருந்த ஆர்வமும் மட்டுமல்ல சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் அக்கறையும் வெளிப்படுகின்றது.

இம்மாதிரியான மாணவர்களையும் அக்கறையுள்ள ஆசிரியர்களையும் அதிகாரிகள் பாராட்டுவது ஒருபுறமிருக்க அவர்களுக்கு அவசியமான உதவிகளையும் வழங்குவதற்கு கல்வி அமைச்சு ஆவன செய்ய வேண்டும்.

கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்கு வசதிகளும் வாய்ப்புக்களும் தேவையென்றாலும் அதையும் மீறி முன்னேற முடியும் என்பதற்கு ஜேவிட்சனைப் போல அக்கறையுடன் செயற்பட்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டியுள்ள இன்னுமொரு பிள்ளை பற்றிய தகவலும் வந்திருக்கிறது.

இது தெரனியகல என்ற இடத்தைச் சேர்ந்த ராஷ்மி நிமெஷா குணவர்தன என்ற 10 வயதுச் சிறுமியைப் பற்றியது. ராஷ்மி நிமெஷாவுக்கு பிறக்கும்போதே இரண்டு கைளும் இல்லை. வலதுகாலும் இல்லை. தனது இடது காலுக்கும் விரல்களுக்கும் பயிற்சி கொடுத்து 5 ஆம் ஆண்டு பரீட்சைக்கும் தோற்றி 153 புள்ளிகள் பெற்று அசத்தியுள்ளார் அந்தச் சிறுமி. தெலுவ கனிஷ்ட பாடசாலையில் அவர் கல்விகற்கிறார். அந்தப் பாடசாலையில் கடந்த பத்து ஆண்டுகளில் இவர் மட்டும்தான் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். போட்டிப் பரீட்சைக்கு அவருடன் தோற்றிய ஏனைய 14 மாணவர்களும் தோற்றுப்போயுள்ளனர்.

எதுவானாலும் தனியார் கல்வி நிலையங்கள் என்பது அனேகமாக இலவசக் கல்வி முறை அறிமுகமானதன் பின்னரே பழக்கத்தில் வந்தது என்று சிலர் கூறுகிறார்கள்.

இலவசக் கல்வி முறையை விட பாடசாலைகளை தேசிய மயமாக்கியதன் பின்னரே ரியூஷன் முறை தலைதூக்கியதாகக் கூறுபவர்களும் உண்டு. பொதுவில் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதும் அவர்களைக் கல்வியில் மேம்படச் செய்வதும் பெற்றாருக்குப் பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது.

ரியூசனுக்குப் போகாமல் பிள்ளைகளால் பொதுப் பரீட்சைகளில் தோற்ற முடியாமல் இருக்கிறது. அப்படித் தோற்றினாலும் வெற்றிபெறமுடியாமல் இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்?

கல்விமுறையில் அதாவது அரசின் கல்விக் கொள்கையில் எங்கோ ஏதோ கோளாறு இருக்கிறது என்றுதானே நினைக்க வேண்டியிருக்கிறது.

இப்போதெல் லாம் ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் பெரும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். படித்தவர்கள், நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் கல்அறிவுக்குப் பொறுப்பானவர்கள் போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலையை உருவாக்கியிருப்பதற்கு அரசின் கொள்கைகள்தான் காரணம் என்பது குற்றச்சாட்டு.


சதாகாலமும் எதிர்காலச் சந்ததியினரின் மேம்பாட்டையே கருத்தில் கொண்டு செயற்படுவதாகக் கூறிக் கொள்ளும் தலைவர்கள், கல்வித்துறையில் உருவாகியுள்ள சீர்கேடுகளை உடனே சரிசெய்ய முயலவேண்டும்.

வீண்பிடிவாதங்களால் சிறார்களின் கல்வியைப் பாழடிக்கக் கூடாது என்பதை எல்லோரும் வற்புறுத்துகிறார்கள். இன்று கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை விரைவாகத் தீர்த்து வைக்க கல்வித்துறை அதிகாரிகளால் முடியாமல் இருக்கிறது. அரசும் தீவிரமாக இதில் தலையிட்டு ஒரு தீர்வைக் காண்பதாய் இல்லை.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்த்துவைக்க கல்வித்துறையில் சிறந்த அறிஞர்கள் அல்லது ஓய்வுபெற்ற நீதித்துறை பிரமுகர்கள் அல்லது இருதரப்பினரையும் கொண்ட நிபுணர் குழுவொன்றை அமைத்து ஆராயவும் அவர்களின் பரிந்துரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்தவும் அரசு ஆலோசிக்குமானால் தற்போதைய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளவும் எதிர்காலத்தில் கல்வித்துறை சீராகச் செயற்படவும் உதவியாக இருக்கும்.

கல்வித்துறையில் பெரும்பாலும் அரசியல்வாதிகளின் தலையீடுகளே பெரும் பிரச்சினைகளைக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். முதலில் அரசியல்வாதிகள் கல்வித்துறையில் அவசியமின்றி ஈடுபடுவதை முற்றாக ஒழிப்பது அவசியம்.

# யாழ்ப்பாணத்தில் திருமுறை படும் பாடு



**யாழ்ப்பாணம் இசைக்குப் பரிசு பெற்ற நாடு. இங்கே தேவாரத்திருமுறை பிழைக்கக் கூடாது. ஆலயக் குருக்களோ அல்லது பரிபாலன சபையினரோ இதைக் கவனத்திலெடுத்து பிழையைத் திருத்த வேண்டும். எப்படியாவது பாடிவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டால் துன்பந்தான் வருமே தவிர அமைதியும் நிம்மதியும் அணுகமாட்டாது.**

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் குறித்துப் பாடப்பெற்ற தேவாரத் திருமுறைகள் சைவசமயத்தவரால் பெரிதும் போற்றிப் பேணப்பட வேண்டும். ''மூவர் தமிழ்'' எனப் புகழ்ந்து பேசப்படும் தேவாரம் யாழ்ப்பாணத்தில் படும்பாடு சொல்லிமுடியாது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலேயே அமைந்துள்ள ஓர் ஆலயத்தில் வசந்தமண்டப் பூசையின் போது குருக்கள் தேவாரம் பாடுக என்று சொல்ல ஓர் அடியார் ஐந்து கரத்தனை என்று தொடங்கிப் பாடிப் பஞ்சபுராணம் ஓதினார். முதலிலே பாட வேண்டியது தேவாரம். அதை விடுத்து திருமந்திரத்தினைப் பாடினால் முறை பிழைதானே!

இவ்வாறு எமது சைவப் பாரம்பரியம் திசைமாறிப் போவதால் தான் எமக்கு விடிவுகாலம் வராதிருக்கிறது. ஆலயங்களில் தேவாரம் முறையாக ஓதப்பட வேண்டும். முறை தவறினால் துன்பந்தான். மாணிக்க வாசகர் கதை இதற்கு நல்ல உதாரணம்.


ஆகவே

யாழ்ப்பாணம் இசைக்குப் பரிசு பெற்ற நாடு. இங்கே தேவாரத் திருமுறை பிழைக்கக் கூடாது. ஆலயக் குருக்களோ அல்லது பரிபாலன சபையினரோ இதைக் கவனத்திலெடுத்து பிழையைத் திருத்த வேண்டும். எப்படியாவது பாடிவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டால் துன்பந்தான் வருமே தவிர அமைதியும் நிம்மதியும் அணுகமாட்டாது.

திருஞான சம்பந்தர் முதலாய நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்டுத் திருவாய் மலர்ந்தருளிய தேவாரம் பிழையின்றிப் பண்ணோடு ஓதப்பட வேண்டும். இது இன்றைய காலகட்டத்தில் ஆலயத்தில் தேவாரம் பாடுவோர்க்குச் சமர்ப்பணம். திருந்துவார்களா?

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழைக்கு ஒதுங்கியவள்

■ இ.றஜிகுமார்

மழையின் தாள கதியை ரசித்துக் கொண்டிருந்தான் அரவிந்தன். மழைக்கு யார் மீதோ கடுங்கோபம் போலும். மழை சுழற்றி சுழற்றி அறைந்தது. பெண்ணின் அழகு மாதிரி... நதியின் நடை மாதிரி...இவனுடைய கோபம் மாதிரி...

அரவிந்தனுக்குக் கூட இந்தப் பேய்க் காற்று போல - பெருமழை போலத்தான்- கோபம் பொங்கிக் கொண்டு வரும்.

பத்து வயதிலேயே ஒரு சமயம் அம்மா கோப்பியை கொண்டு கையில் சமர்ப்பித்தாள். இவனுக்கு இவனைப் போல சூடான கோப்பிதான் பிடிக்கும். அதனால் அன்றைக்கு அம்மாவுக்கு என்ன அவசரமோ, என்ன வேலையோ கொஞ்சம் ஆறிப்போய் விட்டிருந்த கோப்பியை கொடுத்தாள். இவனால் பொறுக்க முடியுமா என்ன? அந்த நிமிஷம் ஆரம்பித்த கத்தலில் கோப்பியை விட இவன் சூடாகிப் போனான்.

"வந்து... மழையும் காத்துமாய் இருக்கு... ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. காத்தும் மழையும் கொஞ்சமாவது குறையிற வரைக்கும் இங்கே இருந்துவிட்டு போக உங்கட அனுமதி வேணும்..." கெஞ்சும் பாவனையில் கேட்டாளே தவிர இவனின் பதிலை அவள் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை.

இருபது வயசில யாரோ ஒரு பெண்ணை யாரோ ஒரு இளைஞன் சேட்டை செய்தான் என்பதற்காக இடியாய் முழங்கி அவனைப் போட்டு புரட்டி எடுத்துவிட்டான். எங்கேயோ மரம் ஒன்று மளமளவென்று முறிந்து விழும் ஒலி கேட்டது. விழுந்த மரம் ஏதோ ஒரு வீட்டின் ஓட்டின் மீது விழுந்து ஓடுகள் சரியும் ஒலி கேட்க, காது கொடுத்து அடுத்த ஒலிக்காய்க் காத்திருந்த போதுதான் அது அவனின் காதில் விழுந்தது. டொக்கென்று ஒரு சின்ன ஒலி. தொடர்ந்து தடதட வென்று கதவு தட்டும் சத்தம்.

இவன் கோபித்துக்கொண்டு அம்மா- அப்பாவை விட்டு ஒதுங்கி வந்து ஆறு மாதங்களாகின்றன. இத்தனை காலம் இவன் எங்கிருக்கிறான் என்பது பற்றி அவர்கள் கவலை ஏதும் பட்டதாய்த் தெரியவில்லை....

கதவைத் தட்டுவது இவனின் அப்பாவாகவோ, அம்மாவாகவோ இருக்க முடியாது. மெல்ல எழுந்தான். நிதானமாய்த் தாழ்ப்பாள் நீக்கிக் கொஞ்சமே கொஞ்சமாய்க் கதவு திறந்து கீற்றாய் வந்த வெளிச்சத்தினிடையே எட்டிப் பார்க்க... ஒரு அழகிய புயல்போல் அந்த இளம் பெண் உள்ளே வந்தாள்.

புடவைத் தலைப்பிலிருந்து சின்ன அருவியாய் நீர் கொட்டிக் கொண்டிருந்தது. தலைமுடி புயலில் கன்னாபின்னா வென்று கலைந்து போயிருந்தது. திணறிக் கொண்டிருந்தவள் உள்ளே வந்து தன்னிச்சையாய்க் கதவைச் சாத்தினாள். முகத்தில் எந்தவிதப் பூச்சும் இல்லாமல் மழை சுத்தமாய்க் கழுவிவிட்டிருந்தாலும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அவள் ஓர் அழகிதான். ஜன்னல்கள் சாத்தியிருந்தாலும் ஏற்பட்ட அரை இருட்டிலும் அவளின் அழகு காந்தம் மாதிரி முழுக்கப் பரவியது.

முகத்தை ஏறிட்டுப் பார்த்த போது, அதிர்ச்சி அரவிந்தனைப் புரட்டிப் போட்டது. 'அட இவளா? இந்த ஏரியாவில் இவள் மிகப் பிரசித்தம் ஊரறிந்த அழகி. அழகுதான் இவளின் முதலீடு. ஊரில் பாதி ஆண் மகன்கள் இவளின் வாடிக்கையாளர்கள்.' இவன் எதுவும் கேட்கவில்லை. அதற்குள் இவனின் பார்வையும், முகபாவங்களும் அவளுக்கு எதையோ உணர்த்தியிருக்க வேண்டும்.

''வந்து... ஒரே மழையும் காத்துமாய் இருக்கு... ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. காத்தும் மழையும் கொஞ்சமாவது குறையிற வரைக்கும் இங்கே இருந்துவிட்டு போக உங்கட அனுமதி வேணும்...'' கெஞ்சும் பாவனையில் கேட்டாளே தவிர இவனின் பதிலை அவள் எதிர்பார்த்ததாய்த் தெரியவில்லை. கையில் வைத்திருந்த பெரிய தோல் பையைப் பக்கவாட்டில் வைத்தாள். அதன் மேல் பிரவுண் நிறத்தாலான கவர் ஒன்றை வைத்தாள். உள்ளே படமோ, என்னவோ இருக்க வேண்டும் என்று தோன்றியது. எல்லாம் நனைந்திருந்தன. சேலைத்தலைப்பை வோஸ் பேசினின் உள்ளே பிழிந்து சின்னஞ் சிறு நதி ஒன்றினைப் பிறப்பித்தாள். முகத்திலும் கைகளிலும் அழகிய கன்னத்திலும் இருந்த நீர் முத்துக்களை வழித்துப் பன்னீர் போலச் சிதறினாள். அவனுக்கு கோபம் ஏறியது.

''இதப் பார்... நீ என்ன மாதிரிப் பொம்பளை எண்டு எனக்குத் தெரியும். நீயெல்லாம் கால்வைக்கிற வீடில்லை இது. மரியாதையாய் போய்விடு''. உயர்ந்த குரலில் கூறினான்.

''மழையோட கொடுமை தாங்க முடியவில்லை. அதாலதான் இந்த வீட்டுக்க நுழைந்தேன். மற்றப்படி வேற உத்தேசம் ஏதுமில்லை. என்னால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது. சத்தியம் பண்றேன்''. அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. சொல்ல விரும்பவில்லை என்பதுதான் உண்மை. இது மாதிரிப் பொண்ணுக்கு ஒரு வேளை சாப்பாடு போட்ட குற்றத்துக்காகத்தான் அவன் அம்மாவுடன் சண்டை போட்டான். அந்த சண்டையின் விளைவாகத்தான் இப்படி பெட்டி படுக்கையுடன் தனியாய் வந்துவிட்டான்.

அம்மா கெஞ்சினாள் ''டேய் அவள் எப்பவோ அசிங்கத் தொழில் செய்தவளாய் இருக்கலாம். அன்று அவள் அழுகப் போற உடம்புதான் பெரிசுன்னு நினைச்சா... ஆனா இன்று அழுகாம இருக்கிற மனசை பெரிசா நினைக்கிறாள்...இப்ப ஊரே அவளை ஒதுக்கி வைச்சிருக்கு. ஒரு வேளை சாப்பாடு போடுறது குற்றமா?''.

''வேண்டாம் அவள் வயிற்றைக் கழுவ வேணுமெண்டால் பத்து பாத்திரம் தேய்ச்சிருக்கலாம். துணி துவைச்சிருக்கலாம்'' என்று அடுக்கிவிட்டு கிளம்பி வந்தவன்தான்.

இப்போது என்னடாவென்றால் இவனைத் தேடி ஒரு இவள். தலை உசிப்பி நிமிர்ந்து பார்த்தான். அவள் அதிக சௌகரியமாய்ச் சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். கண்கள் லேசாய் மேல் நோக்கிச் செருகியிருந்தன. ''என்னம்மா?'' காற்றின் மழையின் குரலை விட ஓங்கிக் கூவினான். பலன் இல்லை ஊஹீம்.

''எழுந்திரம்மா'' கண்கள் முழுவதுமாய் மூடிக்கொண்டிருந்தன. நடிக்கிறாளோ? சட்டென்று அவளை நெருங்கினான். மூச்சு விசில் சத்தம் போல் ஏறி இறங்கியது. உதடுகள் நடுக்கமாய் இணைந்து பிரிந்தன.

''த...தண்ணி....தண்....''

அவன் தண்ணீரை எடுத்து வருவதற்குள் அவள் செத்துப் போயிருந்தாள். அவன் அதிர்ச்சியிலும், பயத்திலும் மரமாய் நின்றான். சுதாரிப்பதற்கு ஒரு நிமிஷம் பிடித்தது. அதிர்ச்சியிலிருந்து மெல்ல மீண்டு அவள் கொண்டுவந்திருந்த கைப்பையையும் அதன் மேலிருந்த பிரவுண் கலர் கவரையும் பார்த்தான். கவரின் மேல் அச்சடித்திருந்த எழுத்துக்களைப் படித்த போது நடுங்கியது.

ஐயோ பாவம். இவளுக்கு புற்றுநோயா? விரல் நடுங்க பிரவுண் கவரைப் பிரித்துப் பார்த்தான். எக்ஸ்-ரே படம். நுரையீரல் பகுதி. இரவு முழுக்க அந்தப் பெண்ணின் பிணத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இரவு நகர நகர புயலுக்கு சலிப்பேற்பட்டு நகர்ந்து குறைந்தது. கொஞ்ச மேகங்கள் மிச்சமிருந்தாலும் புயலின் வேகம் சேதமாய் விளாசியிருந்தது.

முதல் முதலாய் பக்கத்து வீட்டு மாமிதான் எட்டிப்பார்த்தாள். ''என்னப்பா அரவிந்தா சூடா கோப்பி கொண்டு வரட்டுமா?'' என்றவாறு வந்தவள் அதைப் பார்த்தாள். விஷயம் மெல்லப் பரவியது. எல்லோரும் அரவிந்தனை ஒரு மாதிரிப் பார்த்தார்கள். சில சாமர்த்தியசாலிகள் அழகான யோசனையுடன் இவனை அணுகினார்கள்.

''ஏன்? பேசாமல் காதும் காதும் வச்சமாதிரி நேற்றே அவள் பிணத்தை அவள் வீட்டு வாசல்ல போட்டுட்டு வந்திருக்கலாமே.

இன்னொருவர் கிசுகிசு என்று இவனின் காதில் சொன்னார். ''அரவிந்தா ஆஸ்பத்திரியில கொண்டுபோய் போட்டுவிடு. அவங்கள் காம்பறாவில வைப்பாங்கள்''. ஆளாளுக்கு யோசனைகள்.

பாவம் அந்தப் பெண்ணுக்கு யாருமில்லை. உடல் பச்சென்று இருந்தவரை அவனவன் ரகசியமாய்ச் சொந்தம் கொண்டாடி விட்டுப் போக மட்டும் வந்தனர். அவர்களே இப்போது வேறு சுருதியில் பேசுகிறார்கள் என்பதுதான் வேதனை. பழைய அரவிந்தனைப் போல் அவனுக்கு கோபம் ஏனோ வரவில்லை.

''அழுகாம இருக்கிற மனசு முக்கியமடா...'' அம்மாவின் குரல் திரும்பத் திரும்ப அவனுள் ஒலித்தது.

புயலுக்கு பிந்திய அமைதி போலச் சொன்னான். ''அந்தப் பெண்ணுக்கு நான் கொள்ளி வைக்கப்போறன்'' எல்லோரும் வாயடைத்துப்போனார்கள். சின்னஞ்சிறு முணுமுணுப்புக்கள். சந்தேகப் பார்வைகள். நமக்கேன் வம்பு என்ற தோரணையில் கலைந்து போனார்கள்.

''அவர்கள் கிடக்கிறார்கள். உயிரோடிருக்கும் வரை இந்த உடம்பு ஆயிரம் பாவங்கள் செய்திருக்கலாம். அதற்காக அழுகவா விட முடியும்?'' வீட்டை வெளிப்பக்கம் பூட்டிக் கொண்டு தன்னுடைய மோதிரத்தை நகைக் கடையில் விற்று மேற்கொண்டு ஆக வேண்டியதைக் கவனிக்கப் புறப்பட்டான்.

கூடவே- இந்த சமாசாரங்கள் முடிந்த பிறகு அம்மா- அப்பாவிடம் திரும்பிப் போகும் உத்தேசமும் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ என் பரிதாபத்தைப் பார் ராமா!”

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

சபாவின் தலைவரையும் செயலாளரையும் விட்டு பொருளாளரோடு பலரும் சபாவைக் கொண்டு போய் அரசடிப்பிள்ளையாரோடு சேர்ந்துவிட்டார்கள். இப்போது அங்கு நிரந்தர மண்டபம் இருக்கிறது. சங்கீத வகுப்பும் நடக்கும்.

சென்னையில் சபாக்களில் விரிசல்கள் ஏற்பட்டாலும் சபாக்கள் வெவ்வேறாக இயங்குகின்றன. ஆண்டுதோறும் இசை விழாக்களை நடத்துகின்றன. ரசிக ரஞ்சன சபா பிரிந்து சென்றதும் செயலாளர் காசிலிங்கம் மற்றும் சில வித்துவான்களை அணுகி புதிதாக ஒரு சபாவை சீனிவாசக மாஸ்ரரைத் தலைவராகக் கொண்டு உருவாக்கினார். மாஸ்ரர் விரும்பாத போதிலும் செயலாளர் விடவில்லை. லலிதா கலாமன்றமோ சபாவோ என்ற பெயரில் புதிய சபா அமைந்தது என்று ஞாபகம். இதன் இசைவிழாவை வழமை போல பெருமாள் கோயில் முன்றிலில் பந்தல் போட்டு செயலாளர் ஏற்பாடு செய்தார். பொருளாளர் யார் என்பது நினைவில்லை. செயலாளர் வேறு சிலருடன் சங்கீத வித்துவான்கள் பக்கவாத்தியக் காரர்களிடம் சென்று விழாவில் கலந்து கொள்ளுமாறு கேட்டனர். சிலர் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்து பக்க வாத்தியத்தை விழாக்காரரே ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர். அங்கும் இங்கும் ஓடித் திரிந்தும் எடுத்த முயற்சிகளை முன்னைய ரசிக ரஞ்சன சபாக் காரர் தலையிட்டு தடுத்துக் கெடுத்தனர். சில நிகழ்ச்சிகள் நடைபெற முடியாமல் போயின.


பெரும் சங்கீத வித்துவான் சங்கீத ரெத்தினம் என்.சண்முகரெத்தினம் வாக்குறுதியளித்தபடி மேடைக்கு வந்துவிட்டார். வயலின் வித்துவானும் கத்துக்குட்டி; மிருதங்கம் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு சிறுபையனை மிருதங்கத்துடன் கொண்டு வந்து மேடையில் இருந்தினார்கள். சண்முகரத்தினம் நல்ல சாரீரம் மட்டுமல்ல நல்ல சரீரமுமுடையவர். பந்தலிலும் மண்டபத்திலும் நூறுபேர் இருந்திருப்பார்கள்.

இன்று அமரராகிவிட்ட அருமை நண்பன் கே.சி.பத்மநாபனும் நானும் கோயில் கதவுக்கும் படிகளுக்குமிடையே உட்கார்ந்திருந்தோம். சண்முகரெத்தினம் பாடத் தொடங்கினார். மிருதங்கம் முன் இருந்த சிறுவனைப் பார்த்தபடியே பாடினார். முதல் பாடல் நினைவில்லை. இரண்டாவது பாடல் ‘‘எந்துக்குராமா...’’ (எதுக்கப்பா ராமா) என்று பாடினார்.

முதல் பாடலும் இப்படித்தான் ஒரு தியாகராயர் கீர்த்தனை. நாங்களிருவரும் இரண்டாவது பாடலுக்கு சிறிது சத்தமாக சிரித்தோம். மூன்றாவது பாடல் ‘‘நா பரிதாபமும்...’’ என்று (என் பரிதாபத்தைப் பார் ராமா) தியாகராயர் கீர்த்தனைதான். நாங்கள் உரக்கவே சிரித்துவிட்டோம். சண்முகரெத்தினம் கச்சேரியை முடித்துக் கொண்டார்.

இந்த விழாவுக்குப் பின் இந்தப் புதிய சபா நீடித்து இயங்கியதாகத் தெரியவில்லை. நானும் யாழ்ப்பாணத்தை விட்டு என் அண்ணனோடு மட்டக்களப்புக்குப் போக வேண்டியேற்பட்டது.

கோயில்களின் ஆஸ்தான நாதஸ்வர தவில் வித்துவான்கள் நித்தியபூசைகளுக்கு வாசிப்பதுடன் திருவிழாக்களில் உபயகாரர்கள் ஏற்பாடு செய்யும் விசேட ஏறுபடி நிகழ்ச்சிகளிலும் வாசிப்பார்கள்.




திருவிழாக்களில் மக்களைத் திரட்டுவதற்காக நாதஸ்வரம், தவில் மட்டுமல்ல சின்னமேளம், சிகரம், கதாப்பிரசங்கம், வாணவேடிக்கை பின்னர் வில்லுப்பாட்டு, மெல்லிசை எனப் பல நிகழ்ச்சிகள் கோயில்களை ஆக்கிரமித்தன.

ஆனாலும் சில திருவிழாக்களை கண்டுகளிப்பதற்கென்றே சில கோயில்களில் மக்கள் திருவிழாக் காலத்தில் திரளுவார்கள். செங்கழுநீர்த்தொட்டித் திருவிழா, பூங்காவனத் திருவிழா, மாம்பழத் திருவிழா, சந்திர பூசைத் திருவிழா எனச் சில திருவிழாக்கள் பெயர் பெற்றவை.

இராவண சங்ஹாரத்திருவிழா வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலுக்குப் பெயர் பெற்ற திருவிழா. இதன் பின் நான்காம் திருவிழாவான ஆஞ்சநேயர் திருவிழா, மூன்றாம் திருவிழாவான கருடாழ்வார் திருவிழா, திருக்கல்யாணத் திருவிழாக்களும் பெயர் பெற்றவை.

இந்தத் திருவிழாக்களை சேணியச் செட்டிமார் அல்லாத பெரும் வர்த்தகர்களே சிறப்பாகச் செய்தனர். சில திருவிழாக்கள் விடிய விடிய நடந்து விடிந்த பின்னர்தான் முடிவடையும்.

இராவண சங்ஹாரம் பார்த்திருக்கிறீர்களா? வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு இராவணனை ஸ்ரீ இராமன் சங்ஹாரம் செய்யும் திருவிழா இரண்டு மூன்று நாள்கள் மிகச் சிறப்பாக நடைபெறுமாமம்.

இந்தத் திருவிழா கடைசியாக நடைபெற்ற போது தீவட்டி வெளிச்சத்தில் எதையோ சுமந்துகொண்டு ஆள்கள் அங்குமிங்கு ஓடியது இலேசான மங்கலாக என் நினைவில் இருக்கிறது.

(தொடரும்)

# பெயர்கள் தரும் பாதைகள்... 7

■ இ.சத்தியன், கொக்குவில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

14.
பட்டணத்தார் - ப
பிரகலாதன் - பி
பகவன், ஆதி, ஒளவை - ப
பாகிஸ்தான் - ப
பிரபாகரன் - பி
பாலசிங்கம் -
=P

15.
யப்பான் - ய
யாழ்ப்பாணம் - ய
யெயவர்த்தனா - ய
யெயா - ய
= ய

16.
கார்லோஸ் - க
கட்டார் - க
கேம்பிரிட்ஜ் - க
குபேரன் - கு
=K

= ப - இவர்கள் ஏனையோருக்கு அமைதி தருவார்களா?

= ய - இவர்கள் சந்தான விருத்தி உடையவர்களா?

= க - உலகின் முதன்மை பெற்ற பெயர் வழிகள்

17.
சத்தியவான் - ச
சாவித்திரி - ச
சுபாகரன் - சு
சுபாஸ் - சு
சுனில் - சு
=S

இவர்கள் ஒன்றிணைந்து வாழ முடியுமா?

17. A★
அமெரிக்கா - அ
அருணசலம் - அ
ஆறுமுகநாவலர் - அ
அப்துல்கலாம் - அ
அப்துல்கமித் - அ
அம்ஸ்ரோங் - அ

= அ - உலகின் திறமைசாலிகள்

18.

| A | B | C |
|---|---|---|
| மகேஸ் | மகேஸ்வரன் | மகேந்தி |
| சுரேஸ் | சுரேந்திரன் | சுரேந்தி |
| ராசேஸ் | ராசேந்திரன் | ராசேத்தி |
| கணேஸ் | | கணேசலிங்கம் |

குபேரன்
குசேலர்

18. A

பொன்னுத்துரை - ரை
வேலுப்பிள்ளை - ளை
உத்தமிபிள்ளை - ளை
அருமைத்துரை - ரை
கமலாம்பிகை - கை

இவர்கள் இறுதி காலத்தில் அதிக துன்பம் அனுபவிக்கிறார்களா?

சீனா - னா
இந்தியா - ந்
நடராசா - ந
நாகராசா - ரா

இவ்வெழுத்து உடையவர்கள் அதிக சந்தான விருத்தியுடையவர்களா?

19)
அரக்கன் - ர
கமக்காரன் - ர
ராணி - ர
றஞ்சி - ற
ராசாத்தி - ர
ராவணன் - ர

20)
சனீஸ்வரன் - னீ
அர்த்தநாரீஸ்வரர் - ரீ
பகீர்த்தனன் - கீ
தண்ணீர் - ணீ
சதீஸ் - தீ
தனீஸ் - னீ

21)
திரிசங்கு - திரி -சிறி
முருகன் - முரு
நளினி - ளினி
கருணாநிதி - நிதி
பத்மினி - மினி
தமிழினி - ழினி

22)
தாடகை - த
தமயந்தி - த
தாரை - த

TD நளமகாராசன் வாலி

23)
பரமேஸ்வரி
தங்கேஸ்வரி
புவனேஸ்வரி
மகேஸ்வரி

24)
கோடீஸ்
கோணேஸ்
கேதீஸ்
லோகேஸ்

25)
சிவகாமி
சித்தி - பிறவி
திலகவதி

சின்னத்தம்பி
சிவத்தம்பி
சின்னமணி

26) ★
டென்மார்க்
செல்லர்
செல்லம்மா
பெக்காம்
செகநாத்

27) திடீர் மரணம்★
தசரதன் -ன்
வீரப்பன் -ன்
ஒசாமாபின்லேடன் -ன்
கிருபானந்தவாரியார் -ர்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோன்மணியும் வாணியும்......

ஜீவகவழுதி, தனது மனோன்மணியின் விரகதாபத்தை விளங்கிக் கொள்ளாத நிலையில் அவளது தோழியான வாணிக்குப் புத்திமதி சொல்லவிழைகிறான். வாணிக்கும் அரண்மனை வளாகத்தில் பணிபுரியும் நடராஜன் என்பவனுக்கும் இடையில் காதல் அதுவும் பழகிய காதல் அல்ல; மனதால் விரும்பிய காதல் இந்த நடராஜனைப் பற்றிக் குடிலன் கூறிய வஞ்சகமொழியை வைத்து ஜீவகன், "வாணியே நடராஜன் பித்துப் பிடித்தவன்; அவனை மறந்துவிடு; குடிலன் மகன் பலதேவனை மணந்துகொள்" எனக் கேட்கிறான். மனோன்மணி தந்தையை எதிர்த்துப் பேசியறியாள். ஆனால் வாணி அப்படியல்லள்.

நாணம் நாவெழாது அடக்குமாயினும்
பேணியொரு மொழி பேசுவன்
நேசமில் வதுவை நாசகாரணமே என்று

அரசனிடம் கூறுகின்றாள். மேலும்

நின்ற காதலின் நிலைமை நினையின்
இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பாய் உருகி
ஒன்றாந் தன்மையன்றி ஒருவரால்
ஆக்கப்படுபொருள் ஆமோ?
வீக்கிய கழற்கால் வேந்தர் வேந்தே!

என்று கூறி "முடியாவிட்டால் என்றும் கன்னியாய் இருக்கவும் சம்மதம்" எனச் சொல்லி நிற்கையில், சுந்தர முனிவர் வருகிறார். ஜீவகன் அவரை வரவேற்கிறான். அவரிடம் தனது மகள் மனோன்மணி பற்றிய கவலையைக் கூறுகின்றான் ஜீவகன். அதுகேட்ட முனிவர்,

தாதா அன்பு போதா தாகும்
காலம் கன்னியர்க்கு உளதேனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்; தழைத்துப்
படர்கோடி பருவம் அணையில்,நட்ட
இடமது துறந்து நல் லின்பம் எய்த
அருகுள தருவை அவாவும் அடையின்
முருகவிழ் முகையும் சுவைதரு கனியும்
அகமகிழ்ந்து அளித்து மிக வளர்ந்து ஓங்கும்

எனச் சொன்னதோடு மனோன்மணியின் மனதில் இருந்த புருடோத்தமனைப் பற்றியும் சொல்லுகிறார்.

தரும நாடெனும் ஒருநா மங்கோள்
திருவாழ் கோடாம் சேரதே சத்துப்
புருடோத் தமனெனும் பெருவிலாப் புருடன்
நீங்கில் இல்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே

என மனோன்மணியாகிய பூங்கொடி படர்வதற்குப் புருடோத்தமன் என்னும் கொழுகொம்புதான் பொருத்தம் என்கிறார் முனிவர். மேலும் அந்தப் பொருத்தப் பாட்டை நிறைவேற்றி வைப்பதற்கு ஏற்றவன் வாணியின் காதலனாகிய நடராஜனே என்றும் கூறி முனிவர் முடிப்பதற்கு முன், குடிலனை அனுப்புவோம் என ஜீவகன் சொன்னான். அது முனிவருக்குப் பிடிக்கவில்லை; எப்படியோ மனோன்மணிக்குக் கடவுள்துணை உண்டு எனவாழ்த்தி விட்டுச் செல்கிறார் முனிவர்.

முனிவர் சென்றதும் குடிலன் கற்பனையில் ஆழ்ந்தான். "ஜீவகனை எப்படியோ மதுரையை விட்டு திருநெல்வேலிக்கு மாற்றி விட்டேன்; நாமே அரசு; நாமே யாவும். மனோன்மணி இப்போது யாரையும் விரும்பியிருக்கவில்லை; அவளது மனநிலை பருவத்தின் பாற்பட்டது. எனவே பலதேவனை அடிக்கடி அவளிடம் அனுப்பினால், என்றோ ஒருநாள் இணங்குவாள் தானே" என முடிவெடுக்கிறான்.

அப்பொழுது, சேவகன் ஒருவன் வந்து திருமுகம் ஒன்றைக் கொடுக்கிறான். அதை வாசித்து அறிந்ததும் குடிலன், "ஆம், இது முனிவர் திட்டந்தான். மணவினைகாலம் நெருங்கியது போலும். இங்கிருந்து அனுப்பும் தூதன் சொல் கேட்டதும் சேரன் போர் மேற்கொண்டு வருவான். ஜீவகவழுதியின் கதி என்னவாகும் எனப் பார்க்கலாம்" என நினைக்கிறான். ஜீவகனை நோக்கி "முனிவர், நடராஜனை தூது அனுப்பச் சொன்னார். அவர் அறிந்ததும் அவ்வளவுதான். மன்னா என் மகன் பலதேவனை அனுப்புவது சிறந்தது" என்று சொன்னதும் அதற்கு உடன்படுகிறான் ஜீவகன்.

அப்பொழுது குடிலன், மனோன்மணியின் விவாகம் பற்றித் தான் மகிழ்ச்சியடைவதாகக் காட்ட,

"இறைவா! இது கேட் டெனக்குள் இன்பம்
அறைவது எப்படி யான்? அநேக நாளாய்ப்
பலமுறை நினைந்த துண்டு இப்பரிசே"

என்கிறான்.



ஜீவகன் எதற்கும் ஆத்திரப்பட்டால், மனோன்மணிக்கு அது கேடாய் முடியும். அப்பொழுது அங்கே நாராயணன் வருகிறான். இவர்களுடைய திட்டங்களை அவதானிக்கிறான். அவன் "ஜீவகனுக்கு ஆஞ்சநேயர் மாதிரிக் குடிலன் இருக்கிறான். சுமித்திரை புத்திரனான இலக்குமணன் இராமனுக்கு அமைந்தது போலக் குடிலன் தன்னலமற்றவன்" என்று வஞ்சகப் புகழ்ச்சியாகச் சொல்கிறான். இவை கேட்ட ஜீவகன் நாராயணனை வெறுப்போடு பார்க்கிறான். "நடராஜனைப் போல் உனக்குப் பித்துப் பிடித்ததோ?" எனக் கேட்கிறான். அதற்கு நாராயணன்,

எனைவகை தேறியக் கண்ணும் வினைவகை
கோடிய மாந்தர் கோடியின் மேலாம்
(குறள் 514 இன் வழி நின்று)

எனச் சொல்லவும், ஜீவகன் "திருக்குறள் எதற்கும் இடந்தரும்; விடுவிடு" என்று ஏசுகிறான். மீண்டும் நாராயணன், "வெளுத்ததெல்லாம் பால் என நம்பும் மன்னனல்லவா நீங்கள்" என்று வெறுப்புடன் கூறிவிட்டு வெளியேறுகின்றான். நடராஜன், நாராயணனுக்கு நண்பன். அதனால் அவனைப் பற்றிக் குடிலன் கூறிய வார்த்தை நாராயணனுக்குப் பிடிக்கவில்லையென்பதை நாம் அறியலாம்.

ஒருநாள், அதிகாலை நடராஜன் ஒரு வெளியான இடத்தில் நின்று வாணியோடு பேசுவதுபோலத் தன்பாட்டில் பேசிக் கொண்டு இருக்க அந்தப் பக்கமாக பலதேவனும் தோழனும் வருகிறார்கள். அவர்கள் நடராஜன் நின்று 'வாணி' பற்றிப் பேசுவதைக் கேட்டதும், தாமும் "வாணி" எனக் குரல் எழுப்பினர். உ[illegible] நடராஜன் மறைந்துவிட்டான். அந்த இடத்தைக் கடந்து சென்ற பலதேவன் தனது தோழன் ஒருவனுடன் சேர நாட்டுக்குப் புருடோத்தமனிடம் தூதுபோவதை அறிந்துகொள்கிறான் நடராஜன்.

பின்னர், நாராயணனைச் சந்தித்த நடராஜன், பலதேவன் அந்த வழியால் சேரநாடு சென்றதைக் கூறுகின்றான். பலதேவனுக்கு வாணியை மணம் முடிக்கக் குடிலன் போட்ட திட்டத்தையும் வாணி சொன்ன மறுப்பையும் நாராயணன் கூறவே, "கொஞ்ச நேரம் முன்னதாக இந்தச் செய்தி தெரிந்தால் அந்த இடத்திலேயே பலதேவனை மாய்த்துவிட்டிருப்பேன்" என்கிறான் நடராஜன்.

இஃதிவ்வாறாக பலதேவன் சேரநாடு செல்லும் வேளையில் அங்கு புருடோத்தமன், மனோன்மணி நினைவாக,

"செவ்வரி படர்ந்த மைவழி
நெடுவழி
உழுவலோடு என்முகம்
நோக்க எழுங்கால்
என்நோக்கு எதிர்ப்படத்
தன்நோக்கு அகற்றி
கன்னம் சிவக்க
நின்றாள்"

எனக் கற்பனை செய்கிறான். இந்த இடத்தில்

யான்நோக்குங்காலை நிலன்
நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்
(குறள் 1094)

என்ற திருவள்ளுவரின் குறளைப் புலவர் எடுத்தாண்டிருப்பதைக் காண்போமாக.

**தூது சென்ற பலதேவன் :-** மன்னா! வாஞ்சி நாட்டிலே ஒரு நன்செய் நிலம்; அது சோழனுடையது. அதன் உரிமையை மீட்கவே ஜீவகன் மதுரையை விட்டு திருநெல்வேலியில் அரண்மனை கட்டினான்.

**புருடோத்தமன் :-** இப்போது நான் செய்வது என்ன?

பலதேவன் - உதியனும் செழியனும் தம்முள் போரிட்டால் யாரும் பிழைக்கமாட்டார். சமாதானமாக ஜீவகனுக்கு நாட்டை கொடுப்பது நல்லது. இது கேட்டுப் போகவே வந்தேன்.

**புருடோத்தமன்** - சொல்லி முடிந்ததா? இன்னும் சொல்ல இருக்கிறதா?

**பலதேவன்** - கொடுக்காவிட்டால் என்ன நடக்குமோ அறியேன். ஜீவகனுடன் போரிடுதல் உசிதம் இல்லை.

**புருடோத்தமன்** - ஏன்? சரி, நாளைக்கே நாம் அவ்விடம் வருவோம். அங்கே பார்க்கலாம். ஜீவகனிடம் சொல்வாய்.

பலதேவன்புறப்பட்டுப்போகிறான்.

புருடோத்தமன் தனது தளபதியிடம் நாளைக்கு நெல்லை போகப் படையை ஆயத்தஞ்செய்வாய் எனக் கட்டளை இடுகிறான்.

அதேபோல இங்கே ஜீவகனும் குடிலனும் போர் பற்றி மந்திராலோசனையில் மூழ்கி, குடிலனை அவனது மதியூகத்துக்காக ஜீவகன் புகழ்ந்து கூறி, புருடோத்தமனை ஒரு நாள் போரில் வெல்வோம் எனச் சொல்கிறான்.

வாணியின் முகதரிசனம் தனக்கு வெற்றிதரும் என எண்ணி [illegible] தயாராகிறான்.

அப்போது, மனோன்மணியும் வாணியும் தூக்கம் வராமல் உலாவித் திரிகின்றனர். நடராஜன், குடிலனின் தந்திரம் பற்றி முனிவரிடம் கூறிவிட்டான். அதனால் முனிவரது அறையில் ஒரே ஆரவாரம்.

மனோன்மணி, வாணியைப் பார்த்து ஒரு சரிதம் (கதை) கூறும்படி கேட்கவே, அவள் சிவகாமி சரிதம் பாடுகிறாள். மனோன்மணியும் வீணை மீட்டுகின்றாள்.

வாழிய நின் மலரடிகள் மௌனதவ முனிவ
மணமிரங்கி அருள்புரிந்தோர் வார்த்தை எனக் கீயில்
பாழடவி இதிற் சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வனையளித்த பலனுறுவை பெரிதே




(1)

ஏன்புருகப் பிணைந்த அன்றில் இணை சிறிது பிரிய
ஏங்கியுயிர் விடுப்பவர் போல் இடையிடயே கூவ
அன்பு நிலை யாரறிவார் என்பனபோல் மரங்கள்
அலர் மலர் கண் ணீரருவி அகமுடைந்து தூவ:
(8)

விந்தை நடப் பதுதெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடு பின் ஆட
இந்த வகை அந்தியை முன் ஏவியிரவென்னும்
இறைவியும் வந்திறுத்தனள் மற்(று) இளைஞர்
உயிர்வாட (9)

இனியும்நடக்கவழியுமிலை இனித்துயரும் இல்லை
இதுவே நம் இடம்மைந்த இக்கனலின் அருகே
பனிபொழியும் வழிநடந்த பனிப் பகல இருந்து
பலமூலம் இது புசிக்கில் பறக்கு உன(து)
இளைப்பே (15)

தம்நாவில் ஒரு விரலைத் தாண்ட அறியாமல்
சாகரமும் மலைபலவும் தாண்டியலை கின்றார்
என்னேயிம் மனிதர்மதி? என நகைத்து முனிவன்
இனிய கந்தம் முதல் அனந்த இனம் வகுத்து
அங்கிருந்தான் (16)

நண்பர் உற வினர்கள்தமை நாடி உற வாடல்
நறுநெய்யுறு குடத்தெறும்பு நண்ணல் என
எண்ணாய்
பெண்களாகக் காதல் எலாம் பேசும் முயற்கொம்பே
பெருங்கபடம் இடுகலனோடு பிறக்கும் அவர்
உடலம் (24)

என்னுடைய உயிர்த்துணைவர் எண்ணிய அருளில்
ஏதோசிற் சாயை உன திடத்திருத்தல் கண்டு
மன்னுதவ மாமுனிவ! மனத்துயரம் உன்பால்
வகுத்தாறி னேன்சிறிது மறுகாட்சியில்லை (46)

இனியிருந்து பெறும்பயனென் இவ்வழலே
கதியென்று
எரியுமழல் எதிரே நின்று இசைத்தமொழி முழுதும்
முனிசெவிற் புகமுனமே மூதுருவம் விளக்கி
முகமர்ந்தங்கு அவனெதிரே முந்திமொழி குளறி (47)

சிவகாமி யானுனது சிதம்பரனே என்னச்
செப்புமுனம் இருவரும் மற்றொருருவம் ஆனால்
எவர்தாமுன் அணைந்தனரென்று இதுகாறும்
அறியோம்
இருவரும் ஒன்று ஆயினர் என்றே அறையும் சுருதி
(48)

பரிந்துவந்து பார்வதியும் பாரதியும் கஞ்சப்
பார்க்கவியும் யார்க்கிதுபோல் வாய்க்கும்
எனவாழ்த்த
அருந்ததியும் அம்ம இஃது அருங்கதியென் றஞ்ச
ஆர்வமுல கர்கவென ஆரணங்கள் ஆர்த்த (49)

ஆழிபுடை சூழுலகம் யாவுநல மேவ
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவௌம் மூழ்க
பாழிலலை வேனுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தனம் நிரந்தரமும் வாழ்க (50)

என வாணி வீணை இசைத்துப் பாடியதும், மனோன்மணி வாணியைப் புகழ்ந்து வீணையின் இசையும் நின் தேனினும் இனிய குரலும் சேர்ந்து, எனது ஊனையும் உயிரையும் உருக்கி நின்றது எனக் கூறுகின்றாள்.

(சிவகாமி சரிதம், ஐம்பது பாடல்களாகக் கொண்டது. அவற்றுள் பதினொரு பாடல்களைப் பொருத்தமாகச் சேர்த்து சுருக்கமாகக் காட்டினோம். மாணவர் மிகுதிப் பாடல்களையும் கற்றுப் பயன்பெறுவார்களாக)

சிறிது சேர மௌனத்துக்குப் பின் மனோன்மணி வாணியிடம் அவளது காதலன் பற்றிக் கேட்கிறாள். அப்போது வாணி,

"ஒரு நாள் நாம் இருவரும் கடிநகர் கடந்து போய் ஒரு வயற்கரையில் ஏதேச்சையாய்ச் சந்தித்தோம். சிறிது நேரம் மௌனமாகப் பார்த்தார். பின்னர் ஒரு மலர் பறித்து வந்து அன்பாய் என்னிடம் தந்தார். நான் ஒரு புத்தியில்லாத பாவி. அந்த மலரை மணந்தும் பாராமல் கண்ணிலும் ஏற்றாமல் கூந்தலிற் சேர்க்காமல் ஓடும் நீரில் போட்டு விட்டேன். குறும்பாய் மெல்லச் சிரித்தேன். அவரும் சிரித்தார். ஏதோ சொல்ல முனைந்தார். ஆயினும் எனது தாய் அங்கு வந்து விட்டாள். என்னை ஏசினாள். நானோ செய்வதறியாது நிற்க, அவரும் மறுமொழி ஏதும் வழங்காது போய்விட்டார்" என்கிறாள். அதற்கு வாணி, "காந்தம், பெட்டியில் வைத்துப் பூட்டினாலும் வடக்கு நோக்கித்தான் அசைத்தாட்டும்" அது போல் உன் அன்பை யாராலும் தடுக்க முடியாது என வாணியைத் தேற்றுகிறாள். அப்போது மழை வருவதற்கான அறிகுறி தென்படவே வீட்டுக்குள் செல்கின்றனர்.

அந்த மாலை நேரம் முனிவர் ஆச்சிரமத்தில் ஏதோ ஆரவாரமாய் வேலை செய்வதுபோல் இருக்கிறது. கருணாகரர், நிஷ்டாபரன் என இருவர் போர் வந்தால் உயிர் அழிவு இருக்குந்தானே. போர் இல்லாவிட்டாலும் தினமும் எத்தனை உயிர்கள் இறக்கின்றன? உடல் அழிந்தால் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? சட்டி சுட்டது; கைவிட்டது என உடலை விட வேண்டியதுதானே? என ஒருவர் சொல்ல மற்றவர், எப்படியும் நான் இருக்கும்வரை நம் குருநாதரைக் காப்பாற்ற வேண்டும்.

இந்த மனோன்மணி கண்டு பேசிப் பழகாத புருடோத்தமனுக்காக ஏங்குகிறாளே. சுருங்கை வழியாக அவளைக் காப்பாற்ற வேண்டுமாம் என்று பலதும் பேசிக் கொண்டிருந்த போது சுந்தர முனிவரும் நடராஜனும் அங்கு வந்து உறங்குவதற்காக உங்களை இங்கே அனுப்பினன். இதுவரை கண்விழித்து ஏன் இருக்கிறீர்கள் என்று சொல்லி அந்த இருவரையும் உறங்கச் செய்கின்றனர்.



(தொடரும்)

மட்டுவில் நா.நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் ஜாதகத்தில்

## களஸ்த்திரஸ்தானம் ஏற்படுத்தும் தேவையற்ற அச்சங்கள்

*பிரம்மஸ்ரீ சண்முக தியானேஸ்வரசர்மா,*
ஜோதிடர், நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

ஒருவருடைய ஜாதகத்தில் லக்கினத்திலிருந்து 7 ஆவது வீடே களஸ்திரஸ்தானமாகும். உள்ளக்கிடக்கைகளை பரிமாறுவதற்கும், மனச் சுமைகளை இறக்கி வைப்பதற்கும் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒரு வாழ்க்கைத்துணை அவசியமே. ஒருவரது இறுதிக்காலத்தில் துணையாக இருப்பவர் முற்பிறவியில் தொடர்புபட்டவராகவே இருப்பார் என்று சில நூல்களும் கூறுகின்றன. உண்மையிலேயே இப்படி ஒரு உறவை இறைவன் படைக்காமலே இருந்திருந்தால், மனித வாழ்க்கையே சூனியமாகியிருக்கும். அன்பு, பாசம், ஈவு, இரக்கம் தன்னலமில்லாத பொதுநலம், சுயநலத்துடன் கூடிய பொதுநலம், இவை அனைத்தையும் உணர்த்துவது இந்த உறவுதான். ''நீயின்றி நானில்லை, நானின்றி நீயில்லை'' என்ற தத்துவத்தை போதனை செய்வது இந்த உறவே. இவற்றையெல்லாம் தெரிவிக்கும் 7 ஆம் வீடே இந்தக் களஸ்திரஸ்தானம் ஆகும்.

பொதுவாக திருமணப் பொருத்தம் பார்க்கும்போது, ஒரு பெண்ணினுடைய குணாம்சத்தை அல்லது அவள் தன் கணவருடனும் அவருடைய குடும்பத்தினருடனும் ஒத்துப்போகக் கூடிய தன்மையை உடையவளா என்பதை ஆண் பகுதியினர் ஆராய்வது கண்கூடு. ஏழாவது வீடு கணவன், மனைவியின் உறவை மட்டுமல்ல, அந்தப் பெண் ஏனையோருடனும் எவ்வாறு அன்புடன் பழகுவார் என்பதையும் தீர்மானிக்கும் வீடாகும். மாமனார், மாமியார், மைத்துனர், மைத்துனி ஆகியோருடன் அவருடைய உறவு எவ்வாறு அமையும் என்பதையும் குறிக்கும் வீடாகும். இந்த உறவுகளுடன் சிறப்பான உறவு அமைந்தால்தான் ஒரு பெண்ணினுடைய குடும்ப வாழ்க்கை சந்தோஷம் நிறைந்ததாக அமையும் என்று கூறமுடியும்.

அதனால்தான் ஒரு பெண்ணின் ஜாதகத்தில் ஏழாவது வீட்டைக் கவனமாகப் பரிசீலிக்க ஆண் பகுதியினர் முற்படுகிறார்கள். பொதுவாக ஒரு பெண்ணின் ஜாதகத்தில் 7 ஆம் வீட்டில் பாவக் கிரகங்கள் இருக்கக் கூடாது என்று அநேகமானவர்கள் சிந்திப்பதுண்டு. அது எதிர்மறையான விளைவுகளைத் தரும் என்று கருதுவதே அதற்கான காரணம் ஆகும். சூரியன், சனி, செவ்வாய், ராகு, கேது ஆகிய ஐந்து கிரகங்களையுமே பாவக் கிரகங்கள் என்கிறோம். இவை இருக்கும் நிலைகளை வைத்தே கிரக பாவம் கணக்கிடப்படுகின்றது என்பது வேறு விடயம். இருப்பினும் மேற்படி கிரகங்கள் எல்லாமே எப்போதும் எதிர்மறையான விளைவுகளைத்தான் தரும் என்று கருதிவிட முடியாது. அவை இருக்கின்ற இடத்தைப் பொறுத்து சிறப்பான பலன்களைக் கொடுப்பதுண்டு. சனிக்கிரகம் தத்துவ ஞானத்தை ஏற்படுத்தக் கூடிய கிரகம் செவ்வாய், உழைப்பதற்கு சிறப்பான உந்து சக்தியைக் கொடுக்கக் கூடிய கிரகம். ராகு கேதுக்கள் ஞான காரகனாகவும் மோட்சத்தைக் கொடுக்கின்ற கிரகங்களாகவும் கருதப்படுகின்றது. உயிர்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமானவர் சூரியபகவானே! இதுபோன்ற சக்திமிக்க கிரகங்களைப் பாவக்கிரகங்கள் என்று கருதி ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றின் அதிக வீரியம் காரணமாகச் சில தீவிர விளைவுகள் ஏற்படுவதாலேயே அவற்றைப் பாவக்கிரகங்கள் என்று கூறி ஒதுக்குகின்றோம். அல்லது பயம்கொள்கிறோம்.

இதனால்தான் ஒரு பெண்ணினுடைய ஜாதகத்தில் ஏழாவது வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்தால், உடனே அந்தப் பெண் மோசமான குண இயல்புகளை உடையவள், அவள் குடும்ப வாழ்க்கைக்கு சரியானவள் அல்ல என்ற முடிவுக்கும் பலர் வருகிறார்கள். அது தவறான கணிப்பாகும். கிரகத்தின் தன்மையை, நிலையை, பார்வை பலத்தை வைத்து அவளுக்கு இருக்கக் கூடிய குணங்களைப் பரிசீலனை செய்து முடிவுகளுக்கு வருவதே சிறந்தது.

உதாரணமாக ஒரு பெண்ணின் ஜாதகத்தில் 7 ஆவது... ஒருவருடனும் ஒத்துப் போகமாட்டாள். கோபம் நிறைந்தவள், கணவருடனும் ஒத்துப் போகமாட்டாள் என்ற கருத்துண்டு. ஆனால் அது எல்லா ஜாதகங்களுக்கும் ஏற்புடையதாக அமையாது. செவ்வாய் தோஷம் தராத செவ்வாயாக இருந்து குரு, ஆட்சி, உச்சம் பெற்று அல்லது 7 ஆம் வீட்டிலுள்ள செவ்வாய் மீது குரு பார்வை அவளுடைய ஜாதகத்தில் இருக்குமானால் சுய சிந்தனை உடையவளாகவும் கணவர் உட்பட அனைவருடனும் ஒத்துப் போகும் குணம் உடையவளாக அந்தப் பெண் இருப்பாள். அடுத்து அந்த ஜாதகத்தில் இனக் கவர்ச்சியை ஏற்படுத்துகின்ற சுபக்கிரகமான சுக்கிரபகவானும் பலம் பெறுமானால் கணவனுடன் சிறப்பான உறவுடன் வாழ்க்கை நடத்துவாள்.

அதேவேளை, 7 ஆவது வீட்டில் சனிபகவான் ஒரு பெண்ணினுடைய ஜாதகத்தில். இருந்தால் அவள் எடுத்தெறிந்து பேசுபவளாகவும் தான் நினைத்தபடியே எல்லாம் நடக்க வேண்டும் என்ற அகங்காரகுணம் கொண்டவளாகவும் இருப்பாள் என்று பயங்கொள்பவர்களும் இருக்கிறார்கள். இதுவும் எல்லாப் பெண்களின் ஜாதகங்களுக்கும் பொருத்தமாகாது. அந்தப் பெண்ணினுடைய ஜாகத்திலும் குரு பகவான் பலம் பெற்று அல்லது அவர் 7 ஆம் வீட்டைப் பார்க்கும் நிலையில் இருந்தால் அந்தப் பெண்ணிடம் ஒத்துப் போகின்ற குணம் இருக்கும்.

அதேபோன்று 7 ஆவது வீட்டில் ஒரு பெண்ணினுடைய ஜாதகத்தில் ராகு, கேதுக்கள் இருந்தாலும் பயங்கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ராகு இருந்தால் மன உறுதி படைத்தவளாகவும் கேது இருந்தால் ஆன்மிக விடயங்களில் அதிக நாட்டம் உடையவளாகவும் அந்தப் பெண் இருப்பாள். 7 ஆம் வீட்டைக் குரு பார்த்தாலும் அல்லது குரு பலம் பெற்றாலும் அந்தப் பெண்ணால் சிறப்புண்டு.

அதேவேளை 7 ஆம் வீட்டில் சூரியபகவான் இருந்தால் புகழ்பெறவேண்டும். அதற்காக உழைக்க வேண்டும் என்ற பிரயத்தனம் அந்தப் பெண்ணிடம் இருக்கும். இதற்கு அமைவாக 7 ஆம் வீட்டில் இருக்கும் ஆணினுடைய கிரகம் சமநிலை பேணுமானால் அந்தப் பெண்ணும் குடும்ப வாழ்க்கையில் ஒத்துப்போகும்.

அதேபோன்று பெண்ணின் ஜாகத்தில் உள்ள 7 ஆம் வீட்டை வைத்தே அவளுக்கு அமையும் கணவரின் தன்மையையும் அளவிட முடியும். கணவனின் ஜாதகத்திலுள்ள 7 ஆம் வீட்டின் தன்மையையும் வைத்தே 7 ஆம் வீட்டில் பாவக்கிரகம் அமைந்த ஜாதகப் பெண்ணின் வாழ்க்கைச் சிறப்பையும் தீர்மானிக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

அதேவேளை, ஒரு பெண்ணினுடைய ஜாதகத்தில் 7 ஆம் வீட்டில் பாவக்கிரகம் இருந்து அந்தக் கிரகம் நீசமடைந்து இருந்தால் அந்தப் பெண்ணின் திருமண வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்காது. அதேவேளை 7 ஆவது வீட்டுக்குரிய பாவக்கிரகம் உச்சம் பெற்றிருக்குமானால் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையும். 7 ஆவது வீட்டில் செவ்வாய் இருந்து ராகு, சனி போன்ற கிரகங்களின் பார்வை இருந்தால் அந்தப் பெண் கணவருடன் அடிக்கடி தர்க்கம் புரிந்து குடும்ப வாழ்க்கையைப் பாழாக்கிவிடுவாள்.

ஒரு பெண்ணினுடைய ஜாகத்தில் சுபக்கிரகங்களும் பாவக்கிரகங்களும் சேர்ந்து ஏழாவது வீட்டில் இருந்தால் கணவனைத் தவிர வேறு ஆண்கள் மீதும் மோகம் கொள்ள வாய்ப்பும் உண்டு. அவளுடைய ஜாதகத்தில் சுக்கிரன் பலம் பெற்று விளங்கினால் காமம் நிறைந்தவளாக இருப்பாள். அதனால்தான் ஆண், பெண் இருவருடைய ஜாதகங்களிலுமுள்ள சுக்கிரனை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது.

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் 7 ஆவது வீட்டில் சந்திரன் பலம்பெற்று இருந்தால் அமைதியான சுபாவமுடையவளாகவும் கலைகளில் நாட்டமுடையவளாகவும் குருவின் பார்வையும் இருக்குமானால் கல்வியில் ஈடுபாடு கொண்டவளாகவும் இருப்பாள். அழகான கணவரும் அமைவார்.

அதேபோன்று ஒரு பெண்ணுக்கு ஏழாம் வீட்டில் சுக்கிரபகவான் இருந்து அந்தச் சுக்கிரன் பாவக்கிரங்களால் சூழப்பட்டிருந்தால் திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சிக்குப் பங்கம் இருக்கவே செய்யும். அதேவேளை, குருவின் பார்வை 7 ஆம் வீட்டுக்கு இருக்குமானால் குழப்பங்கள் குறைந்து நிம்மதியான வாழ்க்கை ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு பெண்ணுக்கு 7 ஆம் வீட்டில் சுபக்கிரகம் இருந்து பலம் பெறுமானால் திருமணவாழ்க்கை சிறப்பாக அமையும். செல்வமும் செல்வாக்கும் கொண்ட ஒருவனை கணவனாக அடையும் பாக்கியமும் கிட்டும். அந்தப் பெண் நல்ல குணங்களைக் கொண்டவளாகவும் இருப்பாள்.

ஒரு பெண்ணினுடைய ஜாதகத்தில் ஜெனன லக்கினத்தைப் பார்ப்பதோடு சந்திர லக்கினத்தையும் பார்த்துப் பலனை உறுதி செய்ய வேண்டி இருக்கிறது. லக்கினத்துக்கு ஏழாவது வீட்டில் உள்ள குற்றம், குறைகளை சந்திர லக்கினத்துக்கு ஏழாவது வீடு சிறப்பாக அமையுமானால் நிவர்த்தி செய்யும். அந்தப் பெண்ணின் ஜாதகத்தில் சந்திர லக்கினத்துக்கு ஏழாவது வீட்டில் சுபக்கிரகம் அமையுமானால் அந்தப் பெண் வசதியான வாழ்க்கை வாழ்வாள்.

ஜெனன லக்கினத்துக்கு ஏழாவது வீட்டில் புதன் இருந்தால் அந்தப் பெண்ணின் கணவன் கல்விச் சிறப்புக்களை உடையவனாக இருப்பான். ஆனால் ஏழில் புதன் இருந்தால் கணவன் தாம்பத்திய நாட்டம் குறைந்தவனாக இருப்பான் என்ற கருத்தும் உண்டு. புதன் அலிக்கிரகம் என்பதால் மேற்படி கருதப்படுகிறது. ஏழில் புதனுடன் சனி சேருகின்ற போது புத்திரச் செல்வம் குறைவென்ற கருத்தும் பயமும் உண்டு. குருவின் பார்வை ஏழாம் வீட்டுக்கு இருக்குமானால் மேற்படி தாக்கங்கள் இருக்காது.

அதேவேளை கிரகங்களின் சேர்க்கை அல்லது அவை இருக்கும் இடங்கள் மட்டும் எல்லாவற்றையும் தீர்மானித்து விடுவதில்லை. ஜாதக அமைப்பில் உள்ள ஏனைய கிரகங்களின் நிலை ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு ஏற்படுகின்ற பார்வை, இவற்றைவிட தசாபுத்திகள் ஆகிய அனைத்து விடயங்களையும் கணக்கிலெடுத்துத் தான் பலன்களை முழுமையாக ஆராயமுடியும்

# எங்கோ...

அழகிய
ஊர்மனையை
நடந்து திரிந்த
தெருக்களை
இழந்து
அந்நிய தேசத்தில்
தெருநாயாய்....

அன்னையின்
ஒரு பிடி சோற்றுக்
கவளத்தைக் கூட
உண்ண முடியாமல்...

முன்பு நான்
ஏறி இறங்கிய
நாவல் மரம்
இப்ப இருக்கோ
இல்லையோ....

அன்று எங்கட
கிடுகுவேலிக்கு
வரும் காக்கையும்
எங்கையும் தப்பி
ஒட்டி இருக்கோணும்

எங்கட ஊர்
கடற்கரையில்
கால் நனைக்க
ஆசைதான்....

பாடித்திரிய
நண்பர்களோடு
கூடித்திரிய
ஆவல்தான்

முடியவில்லையே
எல்லா தேசமும்
சென்று வரும்
நிலாவுக்கும்
எங்கள் துயர்
புரியவில்லையே..



ஆ.முல்லைதிவ்வியன்

# என் நிலத்துக்கு ஒரு பாடல்

செந்தமிழ் நிலமே வற்றாத தமிழே
எழுக எழுக எழுகவே

கடல் அலை தாலாட்டும்
எங்கள் மண்ணே...
எழுக எழுக எழுகவே

கல்வி கலைகள் விளையாட்டு
பயின்று நாங்கள் மிளிர்ந்திடுவோம்
அறமும் வீரமும் நிலைத்திட
நாளும் இங்கு உழைத்திடுவோம்

செந்தமிழ் நிலமே வற்றாத தமிழே
எழுக எழுக எழுகவே

எங்கள் வினைகள் தீர்ந்திட
வீரப்புதல்வர்களை தந்தவளை
திருப்பாதங்கள்
தொழுதிடுவோம்
சாதியும் மதமும் மறந்துமே
ஒன்றாய்க் கூடி வாழ்ந்திடுவோம்


செந்தமிழ் நிலமே வற்றாத தமிழே
எழுக எழுக எழுகவே

வர்ணாம்பாள் ஆனந்தமயில்
ஆரம்பக் கல்வி (2 ஆம் வருடம்)
யா/ தேசியக் கல்வியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையைக் கடைப்பிடித்துப் பாருங்கள்.....!



அழகான உறவுகளுக்குள் சின்னச் சின்ன சண்டைகள் அல்லது மோதல்கள் இருந்தால் தான், அந்த உறவு சற்று விறுவிறுப்போடு, நீண்ட நாள்கள் மகிழ்ச்சியோடு ஒன்றாக இருக்க முடியும். ஆனால் அவ்வாறு சண்டைகள் வரும் போது, ஈகோ வந்துவிட்டால், அது அந்த உறவையே முறித்துவிடும். அதிலும் வாழ்க்கைத் துணை கோபப்படுபவராக இருந்தால், நிறைய பொறுமை அவசியம்.

அதிலும் தவறுகளை ஆண்கள் செய்துவிட்டால், அவர்கள் அந்தத் தவறை ஒப்புக் கொள்வார்கள். ஆனால் அதையே பெண்கள் செய்துவிட்டால், அதை அவ்வளவு சீக்கிரம் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆகவே ஆண்கள் கோபப்படும் போது பெண்கள் சற்று பொறுமையாக இருந்து, அவர்களைச் சமாதானப்படுத்த வேண்டும். அது எப்படியென்று படித்து பாருங்களேன்...

★ உங்கள் காதலன் கோபமாக இருக்கும்போது உங்களுடன் பேசத் தயாராக இருந்தால், அப்போது அவரிடம் அவர் கோபமாக இருப்பதற்கான காரணத்தை பற்றி கேட்டு தெரிந்து கொண்டோ அல்லது நீங்கள் தவறு செய்ததால் கோபப்பட்டால், அதனைப் பற்றித் தெளிவாக அவரிடம் பேசி, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இல்லை அவர்கள் பேசத் தயாராக இல்லையென்றால், அப்போது அவர்களுக்கு மெசேஜ் செய்து சமாதானப்படுத்த வேண்டும்.

★ நிறைய ஆண்கள் நீங்கள் தவறு செய்துவிட்டதால் கோபப்பட்டு விட்டு, அந்தக் கோபத்தைக் குறைக்க வேண்டுமென்றால், அதற்கு நீங்கள் சமாதானப்படுத்தி பேச வரும் போது, அந்தப் பேச்சை ஏற்க நீங்கள் ஏதேனும் ஆதாரம் காண்பிக்க வேண்டும். இல்லை நீங்கள் தவறு செய்யாமல், காதலன் கோபப்பட்டுவிட்டால், அந்த நேரம் நீங்களும் கோபப்படாமல், அந்த பிரச்சினையை அவர்களுக்கு பேசிப் புரிய வைக்க வேண்டும். அப்படியிருந்தும் நம்பவில்லையென்றால், நம்பிக்கை இல்லாத உறவு நிலைக்காது. மேலும் அவர்களுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருந்தால், அவர்கள் கோபமும், நிச்சயம் போய்விடும்.

★ சில ஆண்கள் கோபமாக இருக்கும் போது தனியாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அப்போது அவர்களைத் தொந்தரவு செய்யாமல் இருந்தால், அவர்கள் பிறகு யோசித்து புரிந்து கொண்டு, பின்னர் வந்து பேசுவார்கள். ஆனால் சிலருக்கு அத்தகைய இடைவெளி தேவைப்படாது. அப்போது அவர்களிடம் எந்த ஓர் ஈகோவும் இல்லாமல் பேச வேண்டும். இல்லையென்று விட்டுவிட்டால், அந்த உறவு எதையும் சரியாகத் தெரியாமல், பின்னர் முறிந்துவிடும்.

★ உங்கள் உறவுகள் நீடிக்க வேண்டுமென்றால், அனைவரிடமும் பொறுமையாக இருக்க வேண்டும். சில சமயங்களில் கோபத்தால் பாசமே மறைத்துவிடும். அந்த நேரத்தில் உறவு நீடிக்க வேண்டுமென்றால் பொறுமையாகத் தான், அவர்களை சமாதானப்படுத்தி, குளிர்மையாக்க வேண்டும். அதிலும் அவர்களுக்கு பிடித்த ஏதேனும் ஒரு செயலை அவர்கள் முன்பு செய்த, சிறு ஜோக்குகள் செய்தும் சமாதானப்படுத்தலாம்.

★ நீங்கள் தவறு செய்தால், அப்போது மறக்காமல் உங்கள் காதலனிடம் மன்னிப்பு கேளுங்கள். மன்னிப்பு கேட்பது என்பது பெரிய விடயம் அல்ல, அவ்வாறு தவறு செய்து விட்டு, ஈகோவால் அவர்களிடம் மன்னிப்பு கேட்க மறுத்தால், பின் பிரிவைத் தான் சந்திக்க நேரிடும்.

★ நீங்கள் தவறே செய்யாமல் இருக்கட்டும். இருந்தாலும் உங்கள் உறவு நிலைக்க, அந்தப் பொய்யை உண்மையாக்கி, ஒப்புக் கொள்ளுங்கள். அதுவே தவறு செய்திருந்தால், அந்தத் தவறை மறுக்காமல் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லையென்றால், அந்தப் பொய்யே அவர்களுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தி, உங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்திவிடும்.

ஆகவே மேற்கூறியவாறெல்லாம் சற்று நடந்து பாருங்கள். எல்லாம் நல்லதே நடக்கும்.

## அன்புள்ள அம்மாவுக்கு...

அம்மா
முகம் கூட அறியாத
உன்னை உச்சரிக்கிறேன்
எங்கிருக்கிறாய்?
என்னைப்பற்றி நீ
சிந்தித்திருப்பாயா?
என்னை இனி
எப்போதாவது
தேடுவாயா?

நான் உணர்கின்றேன்
இப்போது என் தேசத்தின்
கதறல்களை,
முதல் எழுத்தற்ற பெயர்கள்
உருவாகிக்கொண்டு
இருப்பதாய்
இனி என்னையும்பற்றி
உருகும்
இந்த உலகம்!
உன்னைப்
பொறுத்த வரை
உன் வயிற்றிலிருந்து
எடுத்த
அழுக்குக் காகிதமா நான்!
எப்படியாயினும் எனக்கு
நீயேதான் தாய்!

என்ன நிலை எனக்கு,
எண்ணுமளவுக்கு
அறிவுண்டோ
உனக்கு...
என்னை நாய்குதறுமே
உனக்கு பயமில்லையா?
உன்னைத் தேடியே நான்,
அழுது கொண்டிருக்கிறேன்

நீ என்னை
விட்டுச்சென்றபோது
என் கதறல் சத்தம்
உன்னை
ஒன்றும்
செய்யவில்லையா?
எனக்குப் புரிகிறது,
இப்போது
பிள்ளை பெறவிரும்பும்
பலருக்கு தாயாய்
இருக்கத் தகுதி
இருப்பதில்லை...

நீ பிள்ளையை
எதிர்பார்க்கவில்லை
ஆனால் எனக்கென்ற
தாயை நான்
எதிர்பார்த்திருக்கின்றேன்.


அ.சேவியர்
சுன்னாகம்.



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் ''திலகம்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



## கட்டுப்பாடுகள் விதிக்க காரணம் தான் என்ன?



சமுதாயத்தைப் பொறுத்தவரை எந்தத் தவறையும் ஆண்கள் செய்யலாம். ஆனால் பெண்கள் செய்யக் கூடாது என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒரு விதி. ஆனால் இதை பெண் அடிமைத்தனம் என்று எடுத்துக் கொள்வதை விட, ஆண் செய்யும் தவறால் சமுதாயத்தில் எந்த பெரும் சிக்கலும் உருவாகாது. ஆனால் அதே தவறைப் பெண் செய்யும் போது பல பிரச்சினைகள் உருவாகும் என்றே எடுத்துக் கொள்ளவேண்டும்.

திருமணத்திற்குப் பின்பு ஆண் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்தாலும் சமுதாயத்தில் இரண்டாம் தாரம் என்று பெயர் வைத்து விடுவார்கள். ஆனால் இதே ஒரு பெண் வேறு ஆணுடன் தொடர்பு கொண்டால், அது அந்த பெண்ணின். குடும்பத்தையே சீர் குலைத்து விடும்.

ஒரு ஆண் தனக்குப் பிடித்த பெண்ணை பெற்றோருக்குத் தெரியாமல் திருமணம் செய்து கொள்ளலாம். அதற்கு அவன் காதலித்த பெண்ணைக் கலியாணம் செய்திட்டான் என்று சொல்வார்கள். ஆனால், ஒரு பெண் இதைச் செய்தால் 'அவள் ஓடிப் போய்விட்டாள்' என்று கூறுவார்கள்.

இது போல ஒரு குடும்பத்தில் வாழும் பெண், தான் காதலிக்கும் ஆணை நம்பி வீட்டை விட்டு வெளியேறுவதால், அவள் வாழ்க்கை மட்டும் பாதிக்கப்படுவதில்லை, அந்தப் பெண்ணின் குடும்பத் தாரும் பல வழிகளில் பாதிக்கப்படுகிறார்கள்.

பெண் வீட்டை விட்டு ஓடுவதால் ஏற்படும் துக்கத்தை விட, அதனால் ஏற்படும் அவமானமே அவர்களை நிலை குலையச் செய்துவிடும். உற்றார், உறவினர்களுக்கும், அண்டை வீட்டாருக்கும், பெண் எங்கே என்று கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லமுடியாது தவிக்கும் பெற்றோரின் நிலை பரிதாபத்துக்குரியது.

உங்கள் பெண் எங்கே என்று கேட்பவர்களுக்கு எந்த பெற்றோரால், என் மகள் காதலித்தவனை திருமணம் செய்து கொண்டாள் என்று சொல்ல முடியும். கூனிக் குறுகி அவர்கள் நிற்பதைக் கண்டு கேள்வி கேட்டவர்களே புரிந்து கொண்டால்தான் உண்டு.

இந்த நிலையில், வீட்டை விட்டுச் செல்லும் பெண்ணுக்கு திருமணமாகாத சகோதரிகள் இருப்பின், அவர்களது வாழ்க்கை இன்னும் மோசமாகிறது. திருமணத்துக்காக மாப்பிள்ளை தேடும் போது கேட்கும் முதல் கேள்வி அவர்களது குடும்பத்தைப் பற்றியதுதான். அதில் இப்படி ஒரு சிக்கல் இருப்பின், மாப்பிள்ளை வீட்டார் சற்றுத் தயக்கம் காட்டத்தான் செய்வார்கள். அக்காள் இப்படி என்றால் தங்கை எப்படி இருப்பாளோ என்று வாய்விட்டு பேசுபவர்களும் உண்டு.

சமுதாயத்தின் ஆணி வேரே பெண் தான். இதனால்தான் ஆணிவேர் எந்த வகையில் தவறு செய்ய நேர்ந்தாலும், அதனால் பாதிக்கப்படுவது முழு மரமும்தான் என்று பயந்துதான் பெண்களுக்கு கட்டுப்பாடுகளை இந்தச் சமுதாயம் விதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













**சி.கபில்காந்தன்**, தரம்-5,
கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.




**த.அனுஜிற்றா**, தரம்-1,
புனித ஜோண் பொஸ்கோ வித்தி.



**எஸ். அனிருத்தன்**, தரம்-1,
மானிப்பாய் மகளிர் கல்லூரி

# என்னினமே பலமானது



**ஒரு** நாள் பூனை ஒன்று "நான் பூனைகளையெல்லாம் நண்பனாக வைத்திருக்கக் கூடாது. உலகிலேயே மிகவும் பலசாலியை எனது நண்பனாக்க வேண்டும்" என எண்ணிக் கொண்டது.

'சூரியன்தான் உலகிலேயே பலம் மிக்கவன், ஒளி தருபவன், வெப்பம் தருபவன் இவன் தானே பலசாலி. அவனை நான் நண்பனாக வைத்திருந்தால் நல்லது' என்று எண்ணிக் கொண்டு சூரியனிடம் சென்றது அந்தப் பூனை.

சூரியனிடம் சென்று "நான் உனது நண்பனாக இருக்க முடியுமா?" எனக் கேட்டது பூனை. முடியும் என்றது சூரியன். 'ஆனால் என்னை விடவும் பலமான ஒருவன் உள்ளான். அவன் என்னையே மறைத்திடுவான். அவன் என்னை விடப் பலமானவன். நீங்கள் அவனை நண்பனாக்கலாமே" என்றது சூரியன். 'அவன் யார்?" என்று கேட்டது பூனை. "அவன்தான் முகில். அவனை நண்பனாக வைத்திருந்தால் உனக்கு மிகவும் நல்லது பூனையாரே." என்றது சூரியன். 'அப்படியா சூரியனே உனக்கு மிகவும் நன்றி" என்றது பூனை.

பூனை முகிலைத் தேடிச் சென்றது. "முகிலே! முகிலே! எங்கே இருக்கின்றீர்கள்" என்றது பூனை. 'நான் இங்கே நிற்கிறேன்" என்றது முகில். "முகிலாரே முகிலாரே உம்மை எனது நண்பனாக வைத்திருக்க எனக்கு மிகவும் ஆசை" என்றது பூனை.

அதற்கு முகில் "என்னையே ஒருத்தன் கலைத்து விடுவான். ஆதலால் நீ அவனை நண்பனாக வைத்திருந்தால் உனக்கும் நல்லது; எனக்கும் நல்லது" என்றது "அவன் யார்" என்றது பூனை.

முகில் "அவன்தான் காற்று" என்றது. "அப்படியா நல்லது. நான் இதோ காற்றிடம் செல்கிறேன்" என்று கூறிச் சென்றது பூனை. பூனை காற்றிடம் சென்று "நான் உனது நண்பனாக இருக்க முடியுமா?" என்றது.

அதற்குக் காற்று "நீ எனது நண்பனாக இருப்பது எனக்கு மிகவும் விருப்பம். நான் பலமுடையவன்தான். ஆனால் என்னையே ஒருத்தன் தடுத்துவிடுவான். அவன் தான் மலை. அவனை நண்பனாக வைத்திரு" என்றது .

"சரி, அதுவும் நல்லது. நான் இப்பொழுதே மலையிடம் செல்கிறேன்" என்றது பூனை. பூனை மலையிடம் சென்று "மலையாரே, மலையாரே! நான் உங்களது நண்பனாக வர விரும்புகின்றேன்" என்றது. "நல்லது. நல்லது நீ எனது நண்பனாக வர எனக்கும் மிக மிக ஆசைதான். ஆனால் என்னையும் ஒருத்தன் தோற்கடிக்கிறான். அவன் என்னையே தோண்டி எனக்குள் ஒரு குகையை அமைத்துக் கொள்வான். அவன் என்னைவிடவும் பலசாலி அவன்தான் எலி" என்றது மலை. உடனே பூனை "ஆ... எலியா? அவனைக் கூப்பிடுங்கள் பார்ப்போம்" என்றது.

"எலியாரே! எலியாரே! இங்கே வாருங்கள். உங்களை ஒருவர் பார்க்க வந்துள்ளார்" என்று எலியைக் கூவி அழைத்தது மலை. மலையின் குரல் கேட்டு எலி ஓடி வந்தது. எனினும் பூனையைப் பார்த்த எலி, பயந்து நடுங்கியது. தலை தெறிக்க ஓடியது.

"உலகிலேயே பலசாலி எலி என்றார்கள் அது என்னைக் கண்டு இப்படி ஓடுகிறதே! அப்படியானால் உலகிலேயே பூனைகள் தான் பலம்பொருந்தியவை . இனி நான் பூனைகளோடு மட்டுமே நட்புக்கொள்வேன்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு, இருப்பிடம்நோக்கி ஓடியது பூனை.

நேச வித்யாசாகர்,
கிளிநொச்சி ம.வி.

# பச்சை கிளியக்கா



பச்சை பச்சை கிளியக்கா
பழங்கள் கேட்கும் கிளியக்கா
மெத்தப் பச்சை நிறத்தவளே
கொஞ்சும் வாய்தான் சிவந்தவளே

உச்சிக் கிளையில் இருக்கின்றாய்
உலுக்கி உலுக்கி ஆடுகின்றாய்
சும்மா பழங்களும் கொட்டைகளும்
சுருக்காய் நீயும் கொறிக்கின்றாய்

மோ.றுக்சிகா
சென்.ஜோண்பொஸ்கோ
(தரம்1)

# நகரங்களின் சிறப்பு பெயர்கள்


காஞ்சிபுரம் -
கோயில்களின் நகரம்
ஜெய்ப்பூர் -
இளஞ்சிவப்பு நகரம்
ஸ்கொட்லாந்து-
கருங்கடல்நகரம்
நியூயோர்க் -
மாடிக்கட்டட நகரம்
மும்பை- ஏழுதீவு நகரம்
மும்பை- இந்தியாவின்
நுழைவாயில்
பெங்களூர் -
இந்தியாவின்
பூந்தோட்டம்
சன்பிரான்ஸிஸ்கோ-
பொற்கதவு நகரம்
ரோமாபுரி -
முடிவில்லாத நகரம்
சிகாகோ-
புயலடிக்கும் நகரம்
ஒக்ஸ்போர்ட்- கனவுக்
கோபுரங்களின் காற்று
நகரம்
கல்கத்தா -
அரண்மனை நகரம்
கொடைக்கானல் -
மலைகளின் இளவரசி
கண்டி -
பஞ்ச மலை நகரம்
பெங்களூர் -
ஆசியாவின் சிலிக்கன்
பள்ளத்தாக்கு
ஜெருஸலேம் -
அமைதி நகரம்
காஷ்மீர் -
இந்தியாவின்
சுவிட்சர்லாந்து
ஏழு கோபுரப்பட்டணம் -
மாமல்லபுரம்
அமிர்தராஜ் -
பொற்கோயில்நகரம்



காஞ்சி



நியூயோர்க்



ஜெருசலேம்



ரோம்

தெ. தனுஷிகா,
தரம்-8ஏ,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## விடை தெரியுமா? 181

### உங்களுக்கும் பரிசில்கள்

1. நீந்தத் தெரியாத விலங்கு எது?
2. 'குடிமக்கள் காப்பியம்' என அழைக்கப்படுவது எது?
3. இலங்கையில் பிரதமரது உத்தியோக பூர்வ வதிவிடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
4. காந்தியடிகளின் தந்தை, தாயார் பெயர் என்ன?
5. சீனாவின் தலைநகரம் எது?

### விடைகள் 178

1. தொல்காப்பியம்
2. ஆல்பட்றால்
3. துருக்கி
4. நீலோற்பலம்
5. ஒக்டோபர் - 01

### வெற்றி பெற்றோர் விவரம் (179)

* ந.சஜீவன், தரம்- 7டி, வவுனியா தமிழ் மத்திய ம.வி.
* உ.சனாதனன், தரம்- 5, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
* செ.விஜித்தா, தரம் -8, கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.
* வி.மதனிகா, தரம் -9டி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* தே.கிருஷாந்தினி, தரம்-8ஏ, யாழ்.இந்து மகளிர் கல்லூரி
* சி.ஹரிகரன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 20.10.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் 'சிறுவர்கதிர்', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாதி, நிறம், பால், மதம், தேசம் போன்ற வேறுபாடுகளின்றி சிறுவர்களின் உரிமைகளை மேலோங்கச் செய்ய வேண்டும். சுதந்திரத்துடனும், சுயகௌரவத்துடனும், சுகமாகவும் அவர்கள் வாழக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாதுகாவலர் சிறுவர்களுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் அன்பையும் அளித்திட வேண்டும்.

# அன்பும் ஆதரவும் சிறுவர்களுக்கு அவசியம்

அருணா தருமலிங்கம்
வந்தாறு மூலை

இந்த உலகின் எதிர்காலச் சிற்பிகளாகத் தோன்றவிருக்கும் சிறுவர்கள் தொடர்பான எண்ணக் கருவானது, இன்றைய நாள்களில் சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஏலவே சிறுவர் பாதுகாப்பு, அவர்களது உரிமை பற்றிய சட்டங்களும் புதிய வடிவம் பெற்றுள்ளன என்பதும் நிதர்சனமாகும். ஆரோக்கியமான சூழ்நிலையில் வாழுகின்ற சிறுவர்களே எதிர்கால நற்பிரஜைகளாக உருவாகலாம். எனவே அவர்களை வழிநடத்தி, பாதுகாத்து சமூகத்தை அவர்களிடம் ஒப்படைப்பதற்கேற்ற பாத்திரங்களாக உருவாக்க வேண்டியது பெற்றோர், பாதுகாவலர், ஆசிரியர்களின் தலையாய பொறுப்பாகும். எனவே சிறுவர் உரிமைகள் பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உர்ஜிதமாகும்.

சிறுவர் உரிமைகள் என்றால் என்ன? உலகெங்கும் வாழுகின்ற சிறுவர்கள் தங்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளவும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உள்ள உரிமைகளைக் குறிக்கும் எனலாம். சர்வதேசமெங்கும் வாழ்ந்து வருகின்ற சிறுவர்கள் குறிப்பாக இயற்கை அனர்த்தம், உள்நாட்டு யுத்தம், பஞ்சம் போன்றவை ஏற்படும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். இவ்வாறு பாதிப்புக்கு உள்ளாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை 1949 ஆம் ஆண்டு இருபதாம் திகதி சிறுவர்கள் உரிமை சாஸனத்தைப் பிரகடனப்படுத்தியது. இதன் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையே சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பாக உருவாகியுள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. இனி சிறுவர்கள் தொடர்பாக ஐ.நா.சபை வெளியிட்ட அம்சங்கள் எவை என்பதையும் சிறிது ஆராய்வோம்.

சாதி, நிறம், பால், மதம், தேசம் போன்ற வேறுபாடுகளின்றி சிறுவர்களின் உரிமைகளை மேலோங்கச் செய்ய வேண்டும். சுதந்திரத்துடனும், சுயகௌரவத்துடனும், சுகமாகவும் அவர்கள் வாழக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பிறந்தநாள் போன்ற முக்கிய தினங்களில் பெருவிழா கொண்டாடக் கூடியதாக இருக்க வேண்டும். சமுதாயப் பாதுகாப்பு சத்துணவு வீடமைப்பு, விளையாட்டுக்கள், மருத்துவ பரிசோதனைகள் போன்றவற்றை அவ்வப்போது தவறாது வழங்க வேண்டும். அங்கவீனமான சிறுவர்களுக்கு விசேட கல்வியும் பாதுகாப்பும் நல்க வேண்டும். பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர் சிறுவர்களுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் அன்பையும் அளித்திட வேண்டும். சிறுவர்களுக்கு வேண்டிய இலவசக் கல்வி, விளையாட்டு வசதிகளில் ஈடுபடச் செய்து அவர்களது ஆக்கத்திறனை வெளிக்கொணர சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். துஷ்டர்களினால் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற கொடூரம், பாலியல் பிரயோகம், பழிவாங்குதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு வழங்குதல் அவசியம். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக மேலே குறிப்பிட்ட சிறுவர் உரிமைகள் அற்ற நிலையில் தற்பொழுது உலகெங்கும் 10 கோடி சிறார்கள் பெற்றோர்களால் கை விடப்பட்ட நிலையில் பரிதவிப்பதையும் காணமுடிகின்றது. இந்த நிலைக்குள்ளான சிறுவர்களில் அனேகம் பேர் கொள்ளை, களவு, சட்டவிரோத செயற்பாடுகள், பாலியல் இச்சைக்கு ஆளாகுதல் என்பவற்றில் அதிகம் ஈடுபடுவதாகவும் அறியமுடிகின்றது.

இவர்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிட உரிமையற்றவர்களாகவும் துன்பத்தில் வேதனைப்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றை சிறுவர் துஷ்பிரயோகம் எனவும் கொள்ளலாம். சிறுவர் உரிமை பேணுவதற்கு தடைக்கல்லாக அமையும் காரணிகள் சில உள்ளன. அவற்றில் முக்கியமானது பொருளாதாரத்தில் நலிவு ஏற்படுதல் ஆகும். சர்வதேச நாடுகள் சிலவற்றில் பொருளாதாரம் வளர்ச்சி அடையாமல் இருப்பதாலும், சனத்தொகைப் பெருக்கம், இயற்கை அனர்த்தம் காரணமாக உணவு உற்பத்தியில் வீழ்ச்சி காணப்படுவதாலும் சிறுவர்கள் இலகுவில் பாதிப்புக்குள்ளாகின்றனர். வறுமை காரணமாக உணவு பெறமுடியாமலும், கல்வி, சுகாதர்ரம் என்பவற்றை உரியமுறையில் பெற முடியாமலும் அல்லலுறுகின்றனர். இது மட்டுமா? வறுமையின் நிமிர்த்தம் சிறுவர்கள் உடல் உளரீதியாக பாதிப்புக்குள்ளாகின்றனர். அவர்களை வீட்டு வேலைக்கு அமர்த்துதல், விபசாரத்தில் ஈடுபடுத்துதல் போன்ற தீய பழக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். பெற்றோர்கள், பாதுகாவலர்கள் போன்றோரின் அன்பு, ஆதரவு, பாதுகாப்பு கிடைக்காத பட்சத்தில் அவர்கள் உளரீதியாக பாதிப்பு அடைகின்றனர்.

பல்லினமக்கள் வாழுகின்ற நாடுகளில் அவ்வப்போது போர் ஏற்படுவது சகஜம் போர் உக்கிரமடையும் வேளையில் சிறுவர்களே அதிகம் பாதிப்படைகின்றனர். ஐ.நாவின் சிறுவர் போராளிகளைக் கண்காணிக்கும் விசேட பிரதிநிதியாக ராதிகா குமாரசுவாமி கடமையாற்றுகின்றார். ராதிகாவின் கூற்றின் பிரகாரம் உலகெங்கிலும் சுமார் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் போர்நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனராம்.

பொதுவாக மூன்றாம் மண்டல நாடுகளில் ஆயுதம் ஏந்துதல், இயற்கை சீற்றங்கள், பொருளாதார சீர்குலைவு போன்றவற்றால் கணிசமான மக்கள் அகதிகளாகவும், இடம்பெயர்ந்தும் வாழ வேண்டிய துரதிர்ஷ்ட நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக பெற்றோர், பாதுகாவலரை இழந்து வீதியோரச் சிறுவர்களாக மாறியுள்ளமை மனவருத்தம் ஏற்படுத்தக் கூடிய விடயமாகும்.

ஊட்டச்சத்து குறைவான உணவை சிறுவர்களுக்கு ஊட்டுவது சிறுவர் உரிமையைப் பாதிக்கின்றது. ஐ.நாவின் 'யூனிசெப்' வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் சர்வதேசமெங்கிலும் பதினைந்து வயதுக்குட்பட்ட எழுபத்தைந்து மில்லியன் சிறுவர்கள் மந்த புத்தியினாலும் சுமார் இரண்டு மில்லியன் குழந்தைகள் அங்கவீனர்களாகவும் உருவாகியுள்ளனராம். ஆகவே எதிர்கால சந்ததியினரை வழிநடத்திச் செல்லும் தலைவர்களாக மாறவிருக்கும் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படாது இருக்க வேண்டுமென்பதை நலன் விரும்பிகளும், புத்திஜீவிகளும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# ஆட்டிப் படைக்கிறது பணம்

அ.பகீரதன்



மனித நாகரிகத்தில் ஒருவனிடம் இருக்கும் பொருள் அல்லது பண்டம் மற்றவனுக்குத் தேவைப்பட்டபோதுதான் பண்டமாற்று என்ற அலகு தோன்றியது.

பண்டமாற்றின் பரிணாம வளர்ச்சிதான் பணம் என்பதன் அளவுகோல். அடிப்படையில் பணம், கொடுக்கல் வாங்கலின் அளவு கோலாக மட்டுமே இருந்தது. உலகம் விரிந்து, மனித மனங்கள் சுருங்கிய போதுதான் பணத்துக்கு புதிய முகம் பழக்கத்துக்கு வந்தது. காலப் போக்கில் பணம் வெறும் பண்டங்களின் அளவு கோலாக மட்டுமல்லாமல் மனித, சமூக, வாழ்வியலின் அளவு கோலாகவும் மாறி விஸ்வரூபம் எடுத்தது.

நவீன உலகம் பணத்தை மட்டுமே முன் நிறுத்திய உலகமாக மாறி, மனிதர்களை அலைக்களித்துக் கொண்டே இருக்கிறது. பணத்தின் தேவை கோபுரமாக உயர்ந்து, தனி மனிதர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டேயிருக்கிறது. பாவம் மனிதன் என்ன செய்வான்?

இன்றைய புதிய சமூகம் பணத்தின் அடிப்படையில் இயங்கும் சமூகமாக மாறி, பணமே தனிமனித உறவுகளை தீர்மானிக்கும் கொடூரம் நடந்து கொண்டிருக்கிறது.

பணக்காரர்களாக வாழவேண்டும் என்னும் மனோநிலை முறுக்கேறி பணத்தை மட்டுமே இலக்காக நோக்கி மனிதன் அலையும் அபாயம் நீண்டுகொண்டே போகிறது.

தேவைக்காகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்னும் வாழ்க்கை முறை தேய்ந்து பணமே வாழ்வாக மாறி எல்லோர் மனங்களையும் கிழித்துப் போட்டுக்கொண்டிருக்கிறது.

பணத்தின் அவசியத்தையும் தாண்டி, சமூக அந்தஸ்துக்காகப் பணம் தேடும் இயந்திரமாக மனிதன் அலைந்து கொண்டேயிருக்கிறான். தன் சமூக கௌரவத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும், சமூக அந்தஸ்தை காப்பாற்றிக்கொள்ளவும் தினமும் மனிதன் போராடிக் கொண்டேயிருக்கிறான்.

நாம் காரணமில்லாமல் ஓடிக் கொண்டே இருக்கிறோம், இன்னும் மிகவேகமாக ஓட வேண்டும் என்றும் ஆசைப்படுகிறோம். ஓடவேண்டும் என்பது வாழ்வின் நியதி. வெற்றியடைய வேண்டும் என்பதும் எல்லோருக்குமான பொதுவிதி.

ஆனால் எதற்காக நாம் ஓடவேண்டும் என்னும் கேள்விக்குச் சரியான பதில் இல்லாமல், இலக்கை சரிவர தீர்மானிக்காமல் நாம் ஓடுவதுதான் விநோதமாக உள்ளது.

பணம் மிகப்பெரிய பலமாக மாறியுள்ளது; பணம் படைத்தவன் சர்வ வல்லமை பொருந்திய மன்னனாக மதிக்கப்படுகிறான். அதற்காக நாம் வெறும் பணம் தின்னும் பேய்களாக வாழ்ந்து முடித்துவிட முடியாது.

நாம் ஏற்க மறுத்தாலும், பணத்தின் அடிப்படையில்தான் இன்றைய சமூகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. பணம்தான் பாசத்தையே அளவிடுகின்றது. பணம்தான் உறவுகளுக்கு வலுச்சேர்க்கிறது. பணம்தான் திறமைகளையே அளவுகோலிடுகிறது.

புனிதமான கணவன், மனைவி உறவே பணத்தின் அளவுகோலால்தான் தீர்மானிக்கப்படுகிறது. பணம் மிகப் பிரதானமானது. ஆனால் இன்னொருபுறம் வாழ்க்கை ஒன்று இருக்கிறது. வாழ்க்கைக்குப் பல வேறு முகங்கள் இருக்கின்றன.

அன்பு, அரவணைப்பு, நட்பு, சமூகசேவை, விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு என்று வாழ்க்கைக்கான முகங்கள் பல்வேறு. வாழ்வாங்கு வாழ வேண்டிய வாழ்வை பணத் தேவைக்காக ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? வெறும் சுய கௌரவத்தை நிலைநிறுத்தி தன் குழந்தைகளுக்கும் அடுத்த சந்ததிக்கும் பிழையான முன்னோடியாக வாழ்ந்து கெடமுடியாது. பணத்தை மட்டுமே நோக்கிய இந்த வாழ்வுமுறை அருவருக்கத்தக்கது. எல்லோருக்குமே பணம் மிக அவசியமாக இருந்தாலும், ஓர் சமூகத்தில் எல்லோரும் பணக்காரர்களாகி விடமுடியாது. எனவே பணத்தை மட்டுமே நோக்கிய பயணம் திசை திருப்பப்பட வேண்டும். இவை அறிவுசார்ந்த, திறைமை சார்ந்த, தேவை சார்ந்த, சமூக நலம் சார்ந்த பயணமாக மாற்றப்பட வேண்டும்.

என்றோ ஒருநாள் நாம் ஜெயித்து விடுவோம் என்னும் நம்பிக்கை வலுவானதுதான். ஆனால் என்றோ ஒருநாள் நாம் பணக்காரர் ஆகிவிடுவோம் என்கின்ற எண்ணத்தில் எம்மை நாமே சீரழிப்பது அறிவுடமையன்று. எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்காமல், எமது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாமல், எமது திறமைகளை வளர்த்துக் கொள்ளாமல், நாம் தேய்ந்து கட்டெறும்பாவது நல்லதல்ல. நம்நலம், பிறர்நலம், சமூகநலம் என்கின்ற முக்கோணப் பரிணாமத்தில் நாம் நகரவேண்டும். வெறும் பணத்துக்கான வாழ்வு என்பதை மாற்றி, தேவைக்கான வாழ்வு, தேடலுக்கான வாழ்வு என்று நாம் உயர வேண்டும்.

வெறும் பணக்காரர் என்பதையும் தாண்டி நாம் வாழ்க்கையில் வெற்றியாளர்களாகவும், செயற்கரிய சாதனை செய்பவர்களாகவும், ஆரோக்கியமான நல்ல உறவுகளை வளர்த்துக்கொள்ளும் மனிதாபிமானிகளாகவும் வளரவேண்டும்.

ஒரு குரல்வளம் உள்ளவன் பாடகனாகவும், கற்பனைத் திறன் உள்ளவன் ஒரு இயக்குநராகவும், சேவையுள்ளம் கொண்டவன் சேவையாளனாகவும், தந்திரமும் உழைப்பும் உள்ளவன் வர்த்தகனாகவும் வர, வளர, ஆசைப்பட வேண்டும். தவிர, எல்லோருமே வெறும் பணக்காரர்களாக வரவேண்டும் என்பது எம்மை நாமே பிழையான பாதையில் செலுத்திக் கொள்வதாக முடிந்துவிடும்.

உயிர்வாழ்தல் என்பது மனிதனுக்கு கிடைத்த மிகப் பெரிய வரம். இந்த வரம், பணம் தேடும் ஆர்வத்தாலோ அல்லது மற்றவருக்கு போட்டியாக ஓடவேண்டும் என்னும் அநாவசியமற்ற மனோ நிலையாலோ சாபமாக மாறிவிடக்கூடாது.

சரியான பாதையைத் தேர்ந்து எடுத்தல், திட்டமிடல், ஓய்வுடன் கடினமாக உழைத்தல், வேகமாக ஓடுதல் என்பதே இன்றைய தேவை. அதுவே சரியான பாதை. நேற்று சரியான பாதையை தேர்ந்து எடுத்தவர்கள்தான் இன்றைய வெற்றியாளர்கள், சாதனையாளர்கள், பணக்காரர்களும் கூட. சிந்தியுங்கள்! இன்றே விதையுங்கள்! அறுவடைக்கு காத்திருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 236

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | ■ | 5 |
| | ■ | 6 | | | ■ | 7 | |
| 8 | 9 | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | 12 | | | |
| ■ | | ■ | 13 | | | | ■ |
| 14 | | 15 | ■ | 16 | | ■ | 17 |
| | ■ | 18 | | ■ | 19 | 20 | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1.நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் ஆகியன
6.சிவபூசையில் இது புகக் கூடாதே
7.இது அறுபத்தி நான்காமே
8. மனத் தடுமாற்றம்
10. நீர்வீழ்ச்சி
11. அளவுக்கு அதிகம்
12. ஆடை நெய்வதற்கு நூல் தருவது
13. சேர்ந்து
14. பெரிய வீடு
16. சிறை செய்தல்
18. மழை வெய்யிலுக்குப் பிடிப்பது
19. மெல்லிய இரும்புப் பட்டம்
21. குதிரை
22. ஒரு மலர்

### மேலிருந்து கீழ்

1. ஐந்தாம் திதி
2. எல்லாம்
3. ஒரு நட்சத்திரம்
4. கம்பு
5. எல்லாம் நடப்பது இதன்படியே
7. ஒன்றின் பொருள்
9. பதறப்படு
10. குடித்தல்
12. மரத்தில் அரிந்து எடுக்கப்படுவது
14. நெஞ்சு
15. கரம் கூப்பு
17. நடுதல்
20. தற்போதைய யுகம்

✱ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

✱ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 234 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அவகாசம் (5) சாதி (7) கரைதல் (8) சாதனை (9) கலியுகம் (11) காபன் (13) வடி (15) ரதி (16) மதித்தல் (18) பணி (19) தலைவி (20) பால் (21) ஆல் (22) விவிலியம் (23) சாம்

**மேலிருந்து கீழ்**

(1) அகங்காரம் (2) வரை (3) காதகன் (4) சல்லி (5) சாதம் (6) தினை (8) சாகடித்தல் (10) யுவதி (12) பதி (14) நால்விதம் (16) மணி (17) தலை (18) பல்லி (20) பாவி (21) ஆம்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 236**
**நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (24.10.2012 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.236இல்வெற்றி பெறுவோர்களது விவரம்28.10.2012 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 234 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**கு.குலநாயகி,**
இல.69, ஆனந்தநகர், கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**மா.வருணபாலன்,**
இல.42, தாமரை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**A. அர்ச்சனா,**
'ஸ்ரீரங்கம்' உடையார் லேன், ஊரெழு.

**4 ஆம் பரிசு**
**ச.ஹரிகரன்,**
மறவன்புலோ கிழக்கு, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
**செல்வி தபிதா ஜறின் ஜெயகுமாரன்**
தரம்-VI (D) யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

**திருமதி அ.ஸ்கொலஸ்ரிக்கா,**
இல.758, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

**க.உமாபிரகாஸ்,**
அன்புபுரம், முழங்காவில்.

**திருமதி சங்கீதா பிரதீபன்,**
யா/நவாலி மகா வித்தியாலயம், நவாலி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குத் தபால்மூலமாக அனுப்பிவைக்கப்படும்.*

## ஆராய்ச்சியின் பிடியில் இயற்கை....



மனிதா! மரங்களின் இலைகளை ரசி
மலர்களை நுகர், கனிகளைப் புசி
ஆணிவேரின் ஆழத்தை மட்டும் தேடாதே
அது பூமியின் பசுமையை அழித்துவிடும்

கடலின் பரப்பைப் பார்
அலையின் நுரையில் கால் நனை
மீன்களின் வகைகள் தேடு
கடலடியில் அணுப்பரிசோதனை
மட்டும் வேண்டாம்
அலையின் சீற்றம்
உன்னை அழித்துவிடும்

நீண்ட நீல வானத்தை ரசி
வானவில்லின் வர்ணத்தைக் கண்டு களி
நிலவொளியில் நின்றுபார்
உன் கண்டுபிடிப்பின் நச்சுவாயுவை
வளிமண்டலத்தில் கலக்காதே
சூரிய வெப்பம் உன்னை அழித்துவிடும்

வேற்றுக் கிரகம் செல்
நீர் உண்டா? நிலமுண்டா? தேடு
மரம் உண்டா? மனித இனம் உண்டா? தேடு
ஆனால் அங்காவது
சமாதானக் கொடியை
பறக்க விடு
கட்சிக் கொடிகள் தேவையில்லை
நாளை அவர்களும் தேர்தலில் குதிப்பர்
நாடாளுமன்றத்தில் ஆசனம் கேட்டு
உன் ஆராய்ச்சி நல்லது - ஆனால்
அவை புதுமையைத் தேடட்டும்
இயற்கையை சிதைக்க வேண்டாம்
ஆக்கட்டும்; அழிக்க வேண்டாம்!

அ.அஜந்தன், கந்தர்மடம்.

## போகும் பாதை எங்கே?



என்னை யாரென்று எனக்குத்
தெரியவில்லை
மனிதன் என்னும் பெயர் கொண்டு
உடம்பு என்னும் பிணத்தைக் காவிக் கொண்டு
நீண்ட பாதை நடுவே நெடுநாள் நடக்கிறேன்
போகும் பாதை எங்கும் பல
குன்றும் குழிகளும் - ஆனால்
அவற்றையெல்லாம் கண்டு
நான் அஞ்சுவதில்லை- ஏனென்றால்
நான் நடப்பதோ மரணமென்னும்
பெரிய குழியை நோக்கி....

தாவடியூர் தே.செல்வக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையும் உழைப்பை காப்பவர் யாரோ?

புலத்திலிருந்து ஒரு குரல்.....

ஏதாவது எழுத வேண்டும் என்று என் மனம் அடம்பிடித்துக் கொள்கின்றது. ஆனால் எழுத முடியவில்லை. எதை எழுதுவது? யாரும் அறிந்திராத உண்மைகள் பலதைத் தாங்கி நிற்கும் என் மனம் மௌனித்து இருப்பது கூட ஒருவகையில் துரோகம் தான் என்பதை என் மனச்சாட்சி கூறுகிறது.

ஒவ்வொரு முறையும் எழுத முனையும் என் எழுதுகோல், பின் தயங்கித் தயங்கித் தானாகவே ஓய்ந்து கொள்கின்றது. அப்படியாயின் 'சுயநலம்' எனக்குள் இடம்பிடித்து விட்டதா?

மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழ்ந்தவன். இப்போது என் உயிர்க் காப்புக்காகக் கடல் கடந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ வைத்தது விதி.

என்றாலும் இன்று என்னை விழிக்க வைத்தது ஒரேயொரு சிறிய சம்பவம்தான்.

குளியலறையிலிருந்து எனது மகள் "பல்லுத்தீட்டுவதற்கு பேஸ்ற் கொண்டு வாங்க.." என்று குரல் கொடுத்தாள். நானும் ''அங்க தானே இருக்கு...'' என்றேன். 'அது முடிஞ்சுது அப்பா'.. புதுசு தாங்கோ...'' என்றாள். ''எப்படி முடியும் இப்போது நான் பல்லுத் தீட்டியபோது இருந்துதே...'' புதிய பேஸ்றை எடுத்துக் கொண்டு சென்றேன் எங்கையம்மா பழைய பேஸ்ற்...

அதுக்க ஒண்டுமில்லையப்பா ''டஸ் பின்னுக்குள் போட்டிட்டன்'' அவள் சொல்லிவிட்டுப் புதிய பேஸ்றை உடைத்துப் பல்லுத் தீட்டத் தொடங்கினாள். நான் டஸ் பின்னுக்குள் கிடந்த பேஸ்றை எடுத்துக் கழுவிப் பத்திரமாக வைத்தேன். குறைந்தது 10 தடவையாவது பல்லுத் தீட்டக் கூடிய பேஸ்ற் அதற்குள் இருந்தது.

எனக்குள் அன்றைய நாளின் நினைவு ஓடிக் கொண்டு இருந்தது. குளித்துவிட்டு வெளியில் வந்த என் சின்ன மகளை இருத்தி வைத்து கதை சொன்னேன்.

''அப்பா, தலைவர் மாமாவுக்கு பாதுகாப்புப் பணியில கடமையாற்றிய காலம் அது. இப்படித்தான் ஒரு நாள் இப்ப நீங்கள் எறிஞ்சத விட மிகக் குறைவானதா கிட்டத்தட்ட முடிஞ்ச நிலையில்தான் அந்த பேஸ்ரை நான் தூக்கி 'டஸ்பின்னுக்க போட்டிட்டு, புது பேஸ்ர மாமாவுக்குக் கொடுத்தன்.

மாமா கேட்டார் ''நேற்று வைத்திருந்த பேஸ்ற் எங்க எண்டு...?'' ''அதுக்குள் ஒண்டுமில்ல, நான் டஸ்பின்னுக்க போட்டுட்டன்'' என்று சொன்னேன்.

மாமா எதுவும் பேசவில்லை. டஸ்பின்னுள் போட்ட பேஸ்ரை எடுத்துக் கழுவிப் போட்டு அதிலிருந்த பேஸ்றை எடுத்தே பல்லுத் தீட்டிக் கொண்டார். மிகுதியையும் பத்திரமாக எடுத்துச் சென்றார். அப்போது எனக்கு அவர் சொன்னது இதுதான்.

''தம்பி.... நாங்க பயன்படுத்திற ஒவ்வொரு பொருளிலும் மக்களின், உழைப்பும் வியர்வையும் கலந்திருக்கு... எந்தப் பொருளைப் பயன்படுத்தினாலும் அதை உணர்ந்து நாங்க செயற்பட வேணும்.'' அமைதியாய்ச் சொன்ன அந்தக் கருத்து இப்போதும் எனக்குள் ஆழமாயிருக்கு... நான் சொன்னபோது என் சின்னமகள் ''சொறியப்பா... நான் இனி இப்படிச் செய்ய மாட்டன்...''

அவள் என்னிடம் மன்னிப்புக் கேட்டாள். உடனே சுவாரஸ்சியமான இன்னொரு சம்பவத்தையும் நான் அவளுக்குச் சொல்லி வைத்தேன்.

''நாங்க இருந்த இடத்துக்குத் திடீரென எங்கட நிதிப் பொறுப்பாளர் வந்திட்டார். அவர் வயதானவர். அவரின்ர பெயரைச் சொல்லிப் பின்னால அப்பா என்று தான் சொல்லுவம். அவர் வந்திட்டா எங்களில பாதிப்பேருக்கு குலப்பன் வந்திடும். அவரின் கண்ணில எத்துப்படாம ஏதோ முக்கியமான வேலையில இருக்கிறமாதிரி அங்க மாறி இஞ்ச மாறியெண்டு ஓடிக் கொண்டே இருப்பம்.

கிச்சின், ஸ்ரோர் எண்டு மட்டுமல்ல எந்த இடத்துக்கு எப்ப நுழைவார் எண்டு தெரியாது. நான் தலைவர் மாமாவை விட்டு அகலாத மாதிரி அவருக்குப் பக்கத்திலேயே நின்றுவிட்டேன். அவர் உள்ள போய் கிணத்தடியில முகம் கழுவிப் போட்டு வந்தார். இண்டைக்கு ஒரு குறையும் இல்லப் போல கிடக்கு. மனசுக்குள் அப்பாடா என்று இருந்தது.

வந்தவர் திடீரென ''தம்பி... கிணத்தடியில 20 ரூபா கிடக்கு எடுத்திட்டு வா...?'' என்றார். நானும் விழுந்தடிச்சு ஓடினன். எப்படியாவது விரைவா எங்கட இடத்த விட்டு அவர அனுப்பி விட வேண்டும் என்ற ஆசை எனக்கு, கிணத்தடியில போய் காசு தேடிக் களைத்துப் போய் வந்திட்டன்.

''எங்க... காசக் காணேல்ல... எங்க இருக்கு??'' திரும்ப வந்து அவரிடம் கேட்டேன். இப்ப நான் கண்டிட்டு வந்தனான். வடிவாத்தேடிப்பாருங்கோ என்றுகூற திரும்பவும் வந்து வடிவாத் தேடிப் பார்த்தன். காணேல்ல... மீண்டும் போய் அவரிடம் நின்றேன். அவர் என்னோடு கிணற்றடிக்கு வந்தார்.

கிணற்றடியில் கிடந்த உரப் பையை எடுத்து எனது கையில் தந்தார். "உரப்பை ஒன்றின்ர பெறுமதி 20 ரூபா... அத இவ்வளவு அலட்சியமா எறிஞ்சிருக்கிறீங்கள்.... நீங்கள் போடுற உடுப்பில இருந்து சாப்பாட்டில இருந்து நீங்க பயன்படுத்திற ஒவ்வொரு பொருளுமே மக்களினுடையது என்பதை மறக்கக் கூடாது.'' என்றார்.

எனக்கு ஒரு பக்கம் சிரிப்பாக இருந்தாலும் மறுபக்கம் மக்கள் என்னும் விடயத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் புரிந்த போது நான் மகிழ்ந்துகொண்டேன்.

இந்தக் கதைகளை என் சின்ன மகளுக்குச் சொல்லிப் புரிய வைக்கலாம். ஆனால் புரிய வேண்டியவர்களுக்குக் கூற என்னால் முடியாது? எப்படிப் புரிய வைப்பது.

தொலைதூரம் போனாலும் என் தேசத்து நினைவுகளை விட்டு என்னால் வாழ முடியவில்லை.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்பதை நடைமுறை அரசொன்றைக் கட்டி எழுப்பி வாழ்ந்து காட்டியதைப் பார்த்தவர்கள் நாங்கள்.

''படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறும் உடையான் அரசரில் ஏது'' என்று வள்ளுவன் சொன்ன கூற்றின் ஆழத்தை நான் தலைவரிடம் கண்டேன்.

''சுட்டும் விரலால் சுட்டிக் காட்டு, எங்கே தலைவா தடையைக் காட்டு'' என தடைகளைத் தகர்த்தெறியும் கடல், தரை, வான் என உயிர்க்கொடை செய்யும் படைகள் இருந்தன. தலைமையை ஏற்ற குடிமக்கள் இருந்தார்கள்.

நல்ல உணவு வளம் இருந்தது. வல்ல தளபதிகள் இருந்தார்கள். உலக நாடுகளை நட்பாக்கிக் கொள்ளும் தரம் இருந்தது. காடும் கடலும் மலையும் மட்டுமல்ல மனோபலம்மிக்க போராளிகளும் அரண்களாக இருந்தார்கள்.

சட்டமிருந்தது, நீதியிருந்தது, காவல் இருந்தது. பொருண்மியம் இருந்தது ஏன் கல்வி, கலைகள், பண்பாடு என எல்லாவற்றிலும் உயர்வு தெரிந்தது.

கள்வர் பயம் இருக்கவில்லை, கழுகுகளின் பார்வை பிள்ளைகளில் பட்டுவிடாது பொத்திப் பொத்தி வளர்க்கத் தேவையிருக்கவில்லை. தப்புச் செய்வதற்கு எல்லோரும் அஞ்சினார்கள். பெண்கள் தற்துணிவோடு நிமிர்ந்து நின்றார்கள்.

அது ஒரு அழகிய பொற்காலம். இப்போது தலைகீழாகி விட்டது. கொலை, கொள்ளை, களவு, பாலியல் வக்ரம் எனக் கேட்கவே சகிக்க முடியாத செய்திகளை அறிகின்ற போது இரத்தம் கொதிக்கின்றது. மக்களின் உழைப்பில் இராஜபோகம் அனுபவிப்பவர்கள் யாருமே மக்களின் நடைமுறை அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைப்பவர்களாகத் தெரியவில்லை.

பதவிகளில் இருப்பவர்கள் தங்கள் கதிரைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக உழைக்கின்றார்களே தவிர மனித நேயத்தோடு மக்களுக்கான பணியைச் செய்பவர்களாக இல்லை என்பதே வேதனைக்குரிய விடயம்.

# உடல், உள அமைதியை தேடி.........

மருத்துவர்நி.தர்ஷனோதயன்
வைத்திய அதிகாரி,
மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை
மன்னார்.

எமது உடலையும் உள்ளத்தையும் அமைதிப்படுத்தி ஒரு தளர்வான நிலையிலே வைத்திருப்பதற்கு சாந்த வழிமுறைகள் உதவுகின்றன. எமது உடலும் மனமும் அநேகமான சந்தர்ப்பங்களில் ஒரே விதமாகவே தொழிற்படுகின்றன. அதாவது உடல், மனம் என்கின்ற இரண்டிலே ஒன்று இறுக்கமாக வந்தால் மற்றையதும் இறுக்கமாகி விடும். ஒன்று இறுக்கமாகவும் மற்றையது தளர்வாகவும் இருப்பதில்லை. அதே போல உடல், மனம் என்கின்ற இரண்டில் ஒன்று இறுக்கமற்ற தளர்வு நிலையை அடையுமானால் மற்றையதும் தளர்வான நிலையை அடைந்துவிடும். இதுவே சாந்த வழிமுறைகள் பலவற்றின் அடிப்படைத் தத்துவமாக இருக்கிறது.

எமது வாழ்க்கையில் சில வேளைகளில் நாம் நெருக்கீடாக உணர்ந்து கொள்கிறோம். அவ்வாறான நெருக்கீட்டு நிலைமைகளில் எங்கள் உடலிலும் உள்ளத்திலும் பலவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. நெருக்கீடான சூழலில் ஒருவர் நித்திரைக் குறைபாடு, பசியின்மை போன்றவற்றை அனுபவிப்பார். இந்த வேளையில் பயம், அந்தரம், எச்சரிக்கை உணர்வு போன்றன மனதிலே ஏற்படும். நெஞ்சுப் படபடப்பு, பரபரப்பு, மூச்சு வாங்குதல், தசைகளில் இறுக்கம் போன்றவை உடலிலே ஏற்படும். நெருக்கீடான சந்தர்ப்பங்களின் போது எம்மில் ஏற்படும் இத்தகைய உடல், உள மாற்றங்கள் அவ்வாறான சந்தர்ப்பங்களை எதி[illegible] உதவுகின்றன. அந்த [illegible] அந்த மாற்றங்கள் எமக்குப் பயன் உள்ளவையே.

ஆனால் எம்மில் ஏற்படும் இத்தகைய மாற்றங்கள் அளவு மீறிப் போகும் போதும், எம்மில் இந்த மாற்றங்கள் தொடரும் பொழுதும் இவை நமக்கு பாதிப்பானவையாக அமைகின்றன. இந்த மாற்றங்கள் அளவுக்கு மீறி ஏற்படும் போது எம்மால் நெருக்கடி வேளைகளில் செம்மையாகச் செயற்பட முடியாது போகின்றது. உதாரணமாக சடுதியான நெருக்கீடான சந்தர்ப்பங்களின் போது எம்மில் ஏற்படும் உளச் செயற்பாட்டு மாற்றங்கள் எல்லை மீறிப் போவதாலேயே கை, கால்களை அசைக்க முடியாது போவதும் வாய்பேச முடியாது போவதும் போன்ற நிலை ஏற்படுகின்றது. இவை எமக்கு பாதகமானவையாக அமைந்து சூழ்நிலைகளை சமாளிக்க முடியாது போகின்றது.

அதேபோல ஒரு சந்தர்ப்பம் நடந்து பல காலங்களின் பின்பும் எம்மில் அதனால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புத் தொடர்ந்து இருக்குமானால், நாம் எமது சாதாரணமான நாளாந்த வாழ்க்கையை வாழ்வதற்கும், ஏனைய நெருக்கீடுகளின் போது திறமையாக ஒரு சமநிலையுடன் நடந்து கொள்வதற்கும் முடியாது போய் [illegible] படுத்தும் இத்தகைய நிலைகளை தவிர்த்துக் கொள்வதற்கு பல் வேறு வழிமுறைகள் உள்ளன. உளவளத்துணை, மருந்துகளின் பாவனை என்பவற்றோடு முக்கியமாக பயன் தரும் ஒரு முறையாக சாந்த வழிமுறைகள் அமைந்திருக்கின்றன.

நாங்கள்சாதாரண வாழ்க்கையில் மிப் பின்பற்றி எமது உடல், உள இறுக்கங்களில் இருந்து விடுபடுகிறோம்.

1.ஓர் இடத்தில் அமைதியாக இருத்தல்

2.போதியளவு ஓய்வு எடுத்தல்

3. தேவையான அளவு நித்திரை கொள்ளுதல்

4. மென்மையான இசையை நயத்தல்

5.இயற்கையை இரசித்தல்

6. காலாற நடத்தல்

7. உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்

8. தசைகளைப் பிடித்து விடுதல்

9. நண்பர்களோடு அளவளாவுதல்

10. கோயில் போன்ற வழிபாட்டு இடங்களுக்குச் சென்று வழிபடுதல்

11. கலைகளில் ஈடுபாடு கொள்ளுதல் போன்றன பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் சில வழிமுறைகளாகும்.

ஆயினும் நெருக்கீடுகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் பொழுது அதனால் ஏற்படும் உடல், உள விளைவுகள் கூடும் பொழுது அல்லது நிலைக்கும் பொழுது பின்வரும் சாந்த வழிகள் மிகுந்த பலனைத் தருகின்றன.

★தியானம்

★மந்திர உச்சாடனம்

★சுவாசப் பயிற்சி

★தசைத் தளர்வுப் பயிற்சி

இந்த வழிமுறைகளைப் பயிற்சி செய்யும் பொழுது , சில பொதுவான விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

**இடம்**- அமைதியான, காற்றோட்டமாக, குழப்பங்கள் ஏற்படாத ஒரு இடமாக இருக்க வேண்டும்.

**நேரம்**-ஒரு நாளிலே காலையிலும் மாலையிலும் என இரண்டு தடவைகள் பயிற்சி செய்வது நல்லது. ஒவ்வொரு தடவையும் குறைந்தது அரை மணித்தியால அளவேனும் பயிற்சி செய்தல் மிகவும் நல்லது.

**உடை**-இறுக்கம் இல்லாமலும், தளர்வாகவும் இருத்தல் வேண்டும். பருத்தி ஆடைகள் அணிவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

**உணவு**-சாந்த முறைகளில் பயிற்சி செய்யும் பொழுது, இரைப்பையினுள் (stomack) மிகக் குறைவான உணவு அல்லது உணவு இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

சாந்த வழிகளில் முதலாவதாக கூறப்படும் ''தியானம்'' பற்றி பாகம் 02 இல் விரிவாகப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகர்சிங் கலையின் முன்னோடியாகத் திகழ்பவர் இசைஞானக் கலாபமணி செ.இராசா

வயாவிளான் தவமைந்தன்

செவ்வியல் இசைத்துறையின் அரங்கியல் முறையில் பிரதான இசையாளர், துணை இசையாளர் என்னும் வகிபாகங்களிலேயே தமது திறன்களைக் கலைஞர்கள் ஆற்றுப்படுத்தி வருகின்றனர். குரலிசையரங்கில் வயலின், மிருதங்கம் என்பன பிரதான பக்கவாத்தியங்களாகவும் கஞ்சிரா, கடம், முகர்சிங் என்பன உப பக்கவாத்தியங்களாகவும் கருதப்படும். இவற்றுள் முகர்சிங் என்னும் கருவியானது உள்ளங்கையினுள் அடங்கி விடும் சிறிய அளவுடையதாகவும் மிகவும் இனிமையான நாதத்தை உடையதாகவும் இசையரங்குகளை மெருகேற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

ஈழத்தின் இசைக்கலை வரலாற்றில் முகர்சிங் கருவிக் கலையின் முன்னோடிகளுள் ஒருவராகவும் இக்கருவியைத் தனது சொந்த முயற்சியிலேயே உருவாக்கி ஏனைய கலைஞர்களுக்கும் உவந்தளித்து வருகின்ற ஆற்றலுடையவராகவும் செவ்விசை, பக்தியிசை, மெல்லிசை போன்ற அனைத்து இசையாளர்களது அரங்குகளையும் தனது கருவியின் இன்னோசையால் சிறப்பித்துக் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசைப்பணியாற்றி வருகின்ற ஒருவராகவும் விளங்கி வருபவர் லயவாரிதி செ.இராசா.


மறைந்த செல்லத்துரை - இராசா தம்பதியரின் மகனாக 27.11.1949இல் மல்லாகத்தில் இவர் பிறந்தார். மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் கல்வி கற்ற இவர் சிறு வயதிலேயே இசையார்வம் உடையவராக விளங்கி வந்தார். அந்தக் காலத்தில் காவடி, கூத்து போன்ற நிகழ்வுகளில் மத்தளம் வாசித்துப் புகழ் பெற்றிருந்த தனது பேரனாரான மத்தள வைத்திலிங்கத்தின் வாசிப்பு முறைகளால் கவரப்பட்ட இவர் பேரனின் மறைவுக்குப் பின்னர் மிருதங்கக் கலையை வரன்முறையாகக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார்.

தெல்லிப்பழை பாலர் ஞானோதயா சபையில் 1969இல் இணைந்து அங்கே மிருதங்கக் கலையைக் கற்பித்து வந்த சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவிடம் வரன்முறையாக அக்கலையைக் கற்கத் தொடங்கினார். விரைவாகவும் நுட்பமாகவும் மிருதங்கக் கலையைக் கற்றுத் தெளிந்த இவர் 02.05.1973அன்று குருவின் ஆசீர்வாதத்துடனும் குருவை உருவாக்கிய மிருதங்கப் பேராசான் சங்கீதபூஷணம் ஏ.எஸ்.இராமநாதனின் நேரடியான வாழ்த்துடனும் மல்லாகம் காளிகோயில் முன்றிலில் எண்ணற்ற இரசிகர்கள் முன்னிலையில் இனிதே அரங்கேற்றம் கண்டார்.

அதன் பின்னர் ஏராளமான இசைக் கச்சேரிகளில் மிருதங்கக் கருவியை இசைத்து வந்த இவர் முகர்சிங் என்னும் கருவியில் பயிற்சிகளை மேற்கொண்டு அக்கருவியை அழகுடனும் இனிமையுடனும் இசைக்கும் தனித்துவமான கலைஞனாகத் தன்னை வளப்படுத்திக் கொண்டார். அந்தக் காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களே இக்கருவியின் கலைஞர்களாக இருந்தமையால் இவரது இசைப்பணியும் விரிவுபட்டு கலையை முழுநேரத் தொழிலாகக் கொண்ட ஓய்வற்ற இசையாளனாக யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் புகழ்பெற்று வந்தார்.

பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை, நல்லூர் பிச்சையப்பா, என்.கே.பத்மநாபன், செ.சிதம்பரநாதன் வீ.கே.பஞ்சமூர்த்தி போன்ற நாதஸ்வரக் கெஞ்சிற் கச்சேரிகளிலும் சங்கீதபூஷணம் எல்.திலகநாயகம் போல், சங்கீதபூஷணம் சி.பத்மலிங்கம், சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன், சங்கீதபூஷணம் கே.ஆர்.நடராசா, சங்கீதபூஷணம் வீ.கே.நடராசா சங்கீதரத்தினம் மா.ஸ்ரீரங்கநாதன், சங்கீதவித்துவான் கே.இராமநாதன் இசைஞானதிலகம் உ.இராதாகிருஷ்ணன், மருத்துவர் கெங்காதரன் போன்ற செந்நெறி இசையாளர்களின் இசையரங்குகளிலும் பார்வதி சிவபாதம், மனோகரி சற்குருநாதன், நாகர்கோயில் விஜயன், கிருஷ்ணமூர்த்தி, கதிர்.சுந்தரலிங்கம் போன்றோரது பக்தியிசை நிகழ்வுகளிலும் முகர்சிங் வாத்தியத்தின் பெருமையையும் புகழையும் நிலைநிறுத்தி வந்தார்.

அரங்கிசைக் கலைஞராக மட்டுமல்லாமல் எண்ணற்ற இசை ஒலிப்பதிவுகளிலும் பணியாற்றிய இவர் சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கத்தால் வெளியிடப்பட்ட திருமுறைப்பாடல்கள் என்னும் தொகுதியிலும் தொடராக வெளியிடப்பட்டு வருகின்ற சந்நிதி வசந்தம் என்னும் பக்திப்பாடல் இறுவட்டிலும் முகர்சிங் இசைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



**64**

**சாதனைக் கலைஞரைச்**

சந்திப்போம் சிந்திப்போம்

கனதியான ஓசை கொண்ட அழுத்தமான வாசிப்பும் லயத்தில் தெளிவான நிதானமும் பாடலை அனுசரித்தும் தனியாவர்த்தனத்தின் போது கம்பீரமாகவும் சோர்வில்லாமலும் வாசிப்பதும் ஏனைய கலைஞர்களை மதிப்பளிக்கும் பக்குவமும் இளையோரை ஊக்கப்படுத்தும் இயல்பும் இவரது தனித்துவங்கள் ஆகும். எண்ணற்ற மிருதங்க அரங்கேற்றங்களில் முகர்சிங் இசைத்த இவர் பல நடன நிகழ்வுகளிலும் தனது திறன்களை வெளிப்படுத்தி வந்துள்ளார்.

எஸ்.சந்தானகிருஷ்ணன், ஐ.சிவபாதம், க.ப.சின்னராசா, மா.சிதம்பரநாதன், சி.மகேந்திரன், க.கண்ணதாசன் போன்ற மிருதங்கக் கலைஞர்களோடு துணைக் கலைஞராகப் பலநூற்றுக் கணக்கான அரங்குகளில் வாசித்த பட்டறிவு கொண்ட இவர் இக்கலையைத் தற்கால இளம் கலைஞர்களுக்குக் கற்பிப்பதில் ஆர்வமுடையவராகவும் விளங்கி வருகின்றார்.

எனது குருவான சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவிடம் பயபக்தியுடனும் பணிவுடனும் மிருதங்கக் கலையைப் பல ஆண்டுகளாக முறைப்படி கற்று எமது கிராமத்திலேயே அரங்கேற்றம் செய்த அந்தக் காலமும் எனது கடந்த காலக் கலைத்துறை நினைவுகளும் மறக்க முடியாதவை. மிருதங்கக் கலையை நல்ல குருவிடம் கற்றதனால் தாளநுட்பங்களும் லயஞானமும் ஜதிக்கோர்வைகளின் போக்கும் பக்கவாத்தியப் பண்பாடும் மனதில் நிறைந்திருந்தது.

முகர்சிங் கலைஞனாக நான் உருவாகிய போது எனக்கான வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் வந்து குவியத் தொடங்கின. ஏனெனில் அந்தக் காலத்தில் கொழும்புத்துறை யேமிசு என்பவரும் நானுமே இக் கருவியை இசைக்கக் கூடியவர்களாக இருந்தோம். அதனால் பாட்டுக் கச்சேரி, வாத்தியக் கச்சேரி, கெஞ்சிற் கச்சேரி, பக்திப்பாடல் நிகழ்வு போன்ற அனைத்துக்கும் வாசித்து வந்தேன்.

ஒரு காலத்தில் எந்த நிகழ்வுக்குச் செல்வது எதற்குச் செல்லாமல் விடுவது என்று தெரியாமல் திணறும் அளவிற்கு நிகழ்வுகள் என்னைத் தேடி வந்தன. பகலில் ஓய்வும் இரவில் இசைக்கச்சேரிகளுமாகத் திரிந்த என்போன்றோரால் தற்காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் வாழ்வளித்து வந்த எமது ஆலயத் திருவிழாக்களில் இசைக்கச்சேரிகள், திருமுறை ஓதல், இசைச்சொற்பொழிவு, வில்லிசை போன்ற நிகழ்வுகள் அருகி வருகின்றமை வேதனைக்குரியதே. அத்துடன் எமது மக்களின் இரசனையானது மாறி வருகின்றது என்னும் உண்மையையும் எவராலும் மறுக்க முடியாது என்று தனது கருத்துக்களை இவர் துணிவுடன் கூறுகின்றார்.

# அற்புதமான பிணிநீக்கி குப்பைமேனி

**குப்பைமேனி**
**வேறுபெயர்- பூனைவணங்கி, மேனி**
**தாவரவியற்பெயர்-**
Acalypha indica
**(அக்கலிபா இண்டிக்கா)**
**குடும்பம்** -Euphorbiaceae
**(யூபோபியேசியே)**
**சிங்களப்பெயர்- குப்பமேனிய**
**சமஸ்கிருதப்பெயர்-**
**அரிதமஞ்சரி/முக்தவர்சி**
**ஆங்கிலப்பெயர்-**
Indiam acalypha/ cat's struggle

இது பூண்டுவகை. பரவலாக எல்லா இடங்களிலும் காணப்படக் கூடியது. ஆண்டுத் தாவரம். தனி இலைகள். ஒன்றுவிட்ட இலை ஒழுங்கு. இலைகள் நீள்வட்டவடிவானவை. சிறிய பூந்துணர்.

குப்பைமேனியின் இலை, வேர், தண்டு போன்ற எல்லாப் பகுதியும் மருத்துவத்தில் பயன்படுகின்றன.

**சொறி சிரங்குக்கு**

குப்பைமேனி இலையைச் சிறிது உப்புடன் சேர்த்தரைத்து சொறி சிரங்கு மீது பூசி சிறிது நேரத்தின் பின் கழுவி வர குணமேற்படும்.



நலம் தரும் தெய்வீக மூலிகைகள்

குப்பைமேனி இலைச் சாற்றுக்குச் சமவளவு தேங்காய் எண்ணெய் சிறிது மஞ்சள் தூள் சேர்த்துச் சாறுவற்றும்வரை இளநெருப்பில் காய்ச்சி அந்த எண்ணெயைப் பூசி வந்தாலும் சொறி, சிரங்கு, கரப்பன் நாள்பட்ட புண்கள் என்பன மாறும்.

**தலைவலிக்கு**

குப்பைமேனி இலைச் சாற்றுடன் வேர்க்கொம்பை அரைத்து நெற்றியில் பற்றிட தலைவலி தணிவடையும்

**குடற்புழுவுக்கு**

குப்பைமேனி இலைச் சாற்றை 1-2 தேக்கரண்டி அளவில் காலையில் மட்டும் 3 நாள் பருகிவர குடற்புழு அழியும்.

**கரப்பனுக்கு**

குப்பைமேனி இலை அல்லது முழுப் பூண்டையும் எடுத்து மஞ்சளுடன் சேர்த்தரைத்துப் பூசி வரக் கரப்பன் மாறும்.

**மலச்சிக்கலுக்கு**

குப்பைமேனிப் பூண்டைக் குடிநீரிட்டுச் சிறிது உப்புச் சேர்த்துக் குடிக்க மலத்தை இளக்கி வெளியேற்றும்.

Dr.சே.சிவசண்முகராஜா M.D. (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்று

தானா



**எந்தவொரு மனிதனுக்கும் அவன் உலகின் எந்தவொரு மூலையில் பிறந்து வளர்ந்திருப்பினும் அவனுடன் உடனுறையும் அவனது தாய்மொழிப் பற்றுக் குறித்து எவராலும் குறைத்து மதிப்பிட இயலாது என்பது மறுக்கப்பட இயலாததொரு உண்மையே.**

மனிதப் பிறவி வாய்த்த சகலருக்கும், ஆண், பெண் என்ற பேதமின்றித் தத்தமது தாய்மொழி குறித்த பற்றும் ஈடுபாடும் இயற்கையாகவே அமைந்திருக்கும் என்பது நிச்சயமானதொன்று. அதுவோர் நியதியும் கூட.

தாய்மொழி மீதான பற்றும் ஈடுபாடும், சகலருக்கும் இருந்தாக வேண்டியது மிக அவசியமான வாழ்வியல் கோட்பாடொன்றாக வலியுறுத்தப்படுகிறது. மண் பற்றும், இனப்பற்றும் இவற்றுக்கு மேலதிகமான அம்சங்கள் என்பதுடன் பெற்றெடுத்த தாய் மீதான பற்றும், பாசமும், ஈடுபாடும் வலியுறுத்தல் என்ற வரையறைக்குள் உட்படாத உயிர்ப் பிணைப்பொன்றாகக் கொள்ளத்தக்கது.

இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப யுகத்தின் அதீத வளர்ச்சி காரணமாக பரந்து விரிந்த உலகு, இன்று உள்ளங்கையளவாகச் சுருங்கிவிட்டது. நாடுகள், அவற்றின் இனங்கள், மக்கள் நெருங்கிச் செயற்படும் அளவுக்குத் தொடர்பாடல் நவீனத்துவம் வழியேற்படுத்தி வைத்துள்ளது.

ஆயினும் எந்தவொரு மனிதனுக்கும் அவன் உலகின் எந்தவொரு மூலையில் பிறந்து வளர்ந்திருப்பினும், அவனுடன்உடனுறையும் அவனது தாய்மொழிப் பற்றுக் குறித்து எவராலும் குறைத்து மதிப்பிட இயலாது என்பது மறுக்கப்பட இயலாததொரு உண்மையே.

திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற முதுமொழிக்கேற்ப, இந்த நாட்டில் ஆயுதப் போராட்டம் முகிழ்வதற்கு முன்னரும், இனக்கலவரப் பாதிப்பு அனுபவம், சிங்கள பேரினவாத ஒதுக்கல் என்பவை காரணமாக மனம் வெறுத்து எம்மவர்களில் ஒரு சாரார் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர முன்னரும் எம்மவர்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் வாழ்க்கை வசதி மேம்பாட்டைக் குறியாகக் கொண்டு வருமானம் தேடி வெளிநாடுகள் சென்றமை ஈழத் தமிழர் வாழ்வியல் வரலாற்றின் ஒரு சில பக்கங்களை நிரப்பி வைத்ததுண்டு.

அந்த வகையில் பிற்காலத்தில் இவ்விதம் வெளிநாடுகளுக்குச் சென்றோரில் பெரும்பாலோர் 'புலம்பெயர்ந்தோர்' எனச் சுட்டப்படுவதற்குப் பதிலாக, 'சிங்களப் பேரினவாதத்தால் புலம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டோர்' என்ற வகைக்குள் அடக்கத்தக்கோரே.

சூழ்நிலை காரணமாக, பெற்ற தாயின் அரவணைப்பையும் அன்பையும் இழந்து, பிறந்த மண் மீதான பற்றைத் துறந்து, தம் இனத்தின் மீதான ஈடுபாட்டை மனதிலிருந்து விலக்கி வைத்து, மனதைக் கல்லாக்கிக் கொண்டு உயிர் வாழ்தலுக்காக எங்கோவோர் அந்நிய தேசத்துக்கு ஓடித் தப்பிப் பிழைத்துக் கொண்ட போதிலும், அவர்களது நெஞ்சில், பெரும்பாலோரின் இரத்தத்தில் தம் தாய்மொழியாம் தமிழ் மொழி குறித்த காதலும், தமது பிறந்த மண் மீதான பற்றும், தம் இனமாம் தமிழினம் மீதான பாசப்பிணைப்பும் ஊறிப் போய் உள்ளன; நீங்காது நிலைபெற்றுள்ளன என்பதை எவராலும் இலேசில் மறுத்துரைக்க முடியாது. இது எமது வாழ்வியலில் நாம் கண்டும், கேட்டும், நேரடியாக அனுபவித்தும் தெளிந்து கொண்டுள்ள யதார்த்த உண்மை.

இத்தனைக்கும், கடந்ததொரு காலகட்டத்தில் வெளிநாடுகளுக்கு ஓடித்தப்பிய எம்மவர்கள் தாம் சென்று குந்திய நாடுகளில் கொய்து எடுத்துக்கொள்ள அந்த நாடுகளின் மரங்களில் செடி, கொடிகளில் டொலர்களோ, பவுண்களோ, யூரோக்களோ பூத்துக் குலுங்கவில்லை. இயற்கையாகவே ஈழத்தமிழினத்துக்கு வாய்த்த சொத்தான கடின உழைப்பை, தாம் சென்று ஒதுக்கிய நாடுகளிலும் மூலதனமாக்கியே தத்தம் வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொண்டனர் அவர்கள்.

இருந்தபோதிலும் அவர்களது உடம்புடன் ஒட்டிப் பிறந்த மொழிப் பற்றும், மண் பற்றும், இனப்பற்றும் அவர்களது வாழ்வியலுடன் ஒட்டியே தொடர்ந்தது; இன்றும் தொடர்கிறது.

ஆனால் சுத்திச் சுத்தி இதற்குள்ளேயே எமது வாழ்க்கை வட்டத்தை மட்டுப்படுத்திக் கொண்ட நாம், எந்த அளவுக்கு எம்மொழி, நிலம், இனம் குறித்த எமது உணர்வுகளை கட்டிக்காத்து, அவற்றின் தனித்துவத்தைப் பேண முயற்சிக்கிறோம் என்பது இன்று கேள்விக் குறியாக ஆக நேர்ந்துள்ளது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் எம்மவர்கள் ஆர்வத்துடன் ஆங்கிலமொழி கற்று, அவர்களது நிர்வாகத்தில் உயர் பதவிகள் வகித்து தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தமை வரலாறு. அந்த வகையில் வேற்று மொழியெதனையும் கற்கக் கூடாதெனக் கட்டுப்படுத்துவது அழகல்ல. ஆனாலும் தாமாக விரும்பிக் கற்கும்போது அது திறமை வெளிப்பாடாக அமைகிறது. அதேசமயம் ''நீ கற்றுத் தானாக வேண்டும்'' என வற்புறுத்தித் திணிப்பது கௌரவத்துக்குச் சவால் விடுமொன்றாக அமையும். நம் நாட்டு மொழிப் பயன்பாடும் அத்தகையதே.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் நம்மவர்களில் சிலர் மற்றவர்களுடன் உரையாடும்போது இடையிடையே தமக்குத் தெரிந்த சிங்களத்தையும் எடுத்து விடுவதை அவதானிக்க முடிகிறது. தமக்கும் இந்த நாட்டின் பெரும்பான்மையினரின் மொழியான சிங்களம் தெரியும் என்பதை மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்வதில் அவர்களுக்கு ஒரு வித திருப்தி, பெருமை இருப்பதுபோல் தெரிகிறது. தமிழ் மொழி அறியாத, சிங்கள மொழி மட்டுமே பேசத் தெரிந்த ஒருவர், ஏதாவதொரு விவரம் தெரிந்துகொள்ள எம்மை அணுகினால், எம்மிடம் வினாவினால், அவரது மொழியைத் தெரிந்திருந்தால், சிங்கள மொழி புரியுமானால் அவரது சந்தேகத்தைத் தீர்த்து வைத்து உதவ வேண்டியது கடமையும், மனிதாபிமானமுமாகக் கொள்ளத்தக்கது. ஆனால் நம்மவர்கள் சிலர் தாம் பொறுக்கி வைத்துள்ள ஒன்றிரண்டு அரைகுறைச் சிங்களத்தை எம்மவர்கள் மீதே பிரயோகிப்பதைக் காண எரிச்சல்தான் வருகிறது. அவர்களது இப்போக்கு ஒரு புதுக் கலாசாரத்தின், 'பாஷனின்' ஆரம்பமாகவும் இருக்கலாம்.

பிரான்ஸ் நாட்டவர்கள் தமது தாய்மொழியாம் 'பிரெஞ்ச்' மொழி மீது பற்றும், கடும் அபிமானமும் கொண்டவர்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆங்கில மொழி தெரிந்தவர்கள். ஆயினும் வெளிநாடுகளிலிருந்து பிரான்ஸுக்குள் நுழையும் எவரும் ஆங்கில மொழியில் ஒரு பிரெஞ்ச் பிரஜையிடம் விவரம் எதனையும் கேட்டுப் பெற்றுக்கொள்ள இயலாதாம். ஆங்கிலம் தெரிந்திருந்தும், தனது அந்நிய மொழியான அம்மொழி தெரியுமென்பதை இலேசில் காட்டிக் கொள்ள மாட்டார்களாம். தமது தாய் மொழியான பிரெஞ்ச் மொழி மீது அந்த அளவுக்கு பற்றுக் கொண்டவர்கள் அவர்கள். அவர்களைப் பொறுத்தவரை தமது தாய்மொழியாம் பிரெஞ்ச் மொழியே தமக்குத் தாய், தந்தை, நாடு, இனம் என்பவற்றுக்கெல்லாம் மேலானது. அந்த அளவுக்கு அவர்களது தாய்மொழிப் பற்று புனிதமானது, சிறப்பு மிக்கது.

நாமும்தான் இருக்கிறோமே? தவறொன்றைச் செய்துவிட்டு பொலிஸ்காரரிடம் மாட்டிக் கொண்டாலும் நாலு வார்த்தை சிங்களத்தில் பேச முடியுமானால் ''ஒரு மாதிரிச் சமாளித்து விட்டேன்'' என்று பின்னர் நண்பர்கள், உறவினர்களிடம் பெருமை பேசிக் கொள்ள முடிகிறது. உறவினர் ஒருவரின் தேவைக்கு உதவும் விதத்தில், சிங்கள உயரதிகாரியொருவருடன் சிங்கள மொழியில் பேசி உதவும் இடைத்தரகராகி ''சிங்களத்தில் கதைத்ததால் அலுவலைச் சாதகமாக முடிக்க முடிந்தது'' என்று பெருமை பேசிக் கொள்ள முடிகிறது. இப்படிப் பற்பல விடயங்களில் சிங்களம் பேசத் தெரிந்திருப்பது கை உதவியாக அமைவது இன்று எமது வாழ்வியலின் ஓர் அங்கமாக ஆகிவருகிறது.

ஆதலால் நம்மவர்கள் ஏதோ தமக்குத் தெரிந்த, ஒன்றிரண்டு சிங்கள வார்த்தைகளைப் பேசிப் பழகட்டும். யார் கண்டது, அந்தப் பழக்கம் தரும் அனுபவம் பின்பொரு சமயம் சிங்களம் தெரியாமல் தடுமாற நேரும் எம்மவர்களுக்குச் சிலவேளை கைகொடுத்து உதவும் வாய்ப்பைக் கூட அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கக் கூடுமல்லவா?

ஆனால் ஒன்று மனதை இடறுகிறது. சிங்கள உச்சரிப்பில் ஒரு சிறு ஓசை வேறுபாடு கூட வேறுபாடான அர்த்தத்தைக் கொடுக்கவல்லது. அந்த வகையில் இந்தப் புதுப் ''பாஷன்'', 'தனக் கடாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்' என்ற கதையாக ஆகிவிடாமல் இருந்தால் சரிதான். ★

# நெஞ்சினால் பிழையிலாள்களே!

(... தொடர்ச்சி)

எனச் சபித்தார். உடனடியாக இந்திரனது உடம்பு முழுவதும் ஆயிரம் பெண் குறிகள் தோன்றிவிட்டன. பெண் குறிகளை உடம்பெல்லாம் கொண்ட இந்திரன் வெட்கிச் சென்றான். திருமணச் சடங்குகளில் மணவறைக்கு முன்பாக முட்கிழுவை வைத்து துணி சுற்றி வைப்பது இந்த அறிகுறியை நினைவுபடுத்துவதற்கே ஆகும்.

கௌதம முனிவர் அடுத்து மனைவி அகலிகைக்குச் சாபமிட்டார். விலைமகள் போல் நீ இருந்ததால் கல்லாகிப் போ எனச் சபித்தார். அறியாமல் செய்த தவறுக்கு ஏன் இப்படி ஒரு சாபம் என ஏங்கியவளுக்கு முனிவர் சாபவிமோசனம் வழங்கினார். இராமனது கால் தூசி பட்டு நீ சாபவிமோசனம் அடைவாய் என விமோசனம் வழங்கி அருளினார். ''நெஞ்சினால் பிழைப்பிலாள் நெடும் பழி பூண்டாள்'' என புலவர் அ.அருணகிரி இந்தக் காட்சியை அழகாகச் சொல்வார்.

அகலிகை மனதினால் தவறு விடவில்லை. கணவனது சொல்லுக்கு அவள் உடல் உடன்பட்டது. உறவின் போது மனம் உணர்வின் வழிச்சென்று அதை அனுபவிக்கவில்லை. அந்தக் கணப்பொழுதுகளில் அவள் மனம் உறவின் வேறுபாட்டிற்கான விடைதேடியே அலைந்தது. எனவே அவள் ''நெஞ்சினால் பிழைப்பிலாள்'' என்பது சரியே. அதனாற்றான் கற்பொழுக்கம் உடைய பெண்களாகப் பேசப்படும் பஞ்சகன்னியர்களில் ஒருவராக அகலிகை இடம்பிடித்துள்ளாள்.

இதேபோன்று எமது மண்ணிலே எத்தனையோ தமிழ் மகளிர், அகலிகை போன்று பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர். உருமாறிய வெறியர்களால் சிதைக்கப்பட்டுள்ளனர், ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். காலத்தின் கோலத்தினால், போரின் கோரப் பிடியினால், இயலாமையின் தாண்டவத்தினால் பலாத்காரத்திற்கு உட்பட்டிருக்கின்றனர். அவர்களும் உடலளவில் சிதைக்கப்பட்டாலும் மனதளவில் சிதையாதவர்கள். அகலிகை போன்று நெஞ்சினால் பிழை இல்லாதவர்கள் இந்திரன் போன்ற வெறியாட்டக்காரர்களாலேயே சிதைக்கப்பட்டு பின்னர் மன்னிக்கப்பட்டவர்கள். ஆனால் நேர்மையான வாழ்வளிக்க உரியவர்கள் தவறியுள்ளனர். இந்தக் காமுகர் உடல்களும் ஆயிரம் குறிகள் தோன்றத் தகுதி உடையவையே!

அகலிகை போன்ற இந்த அபலைப் பெண்களை வாழ்விக்க எப்போது இராமர்கள் வருவார்கள்! கௌதமர்களோ, கௌதமர்களுக்கு ஒப்பானவர்களோ மீண்டும் எப்போது வந்து ஏற்றுக் கொள்வார்கள்! எப்போது விமோசனம் பெறுவார்கள்! காலமாற்றம் பதில் கூறுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

14.10.2012 முதல் 20.10.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- பேச்சில் வசீகரமும், தத்துவமும் கலந்திருக்கும். இளைய சகோதரர் சில விடயங்களில் கருத்து வேறுபாடு கொள்வர். சமூக நிகழ்வுகளை அறிவதில் இருந்த ஆர்வம், உங்களுக்குக் குறையும். வீடு வாகனத்தில் கிடைக்கிற வசதி தொடர்ந்து சிறப்பாகக் கிடைக்கும். எதிரியின் தொந்தரவு இல்லாத சுமுக வாழ்வு முறை அமையும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும். நண்பர்களிடம் பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் முயற்சியால் தாராள பணவரவு பெறுவீர்கள். குடும்பப் பெண்கள், அன்றாடப் பணிகளை மன உவகையுடன் செய்து, நற்பெயர் பெறுவர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து நல்ல தர தேர்ச்சி அடைவர்.

**இடபம்**- எதிர்மனப்பாங்கு உள்ளவர்களை, உங்கள் பேச்சினால் வசீகரிப்பீர்கள். இளைய சகோதரர் திறமையுடன் செயற்பட்டு, வாழ்வில் முன்னேறுவர். தாய்வழி உறவினரின் அன்பு, பாசம் மனதுக்கு உற்சாகம் தரும். புத்திரர் படிப்பில் சிறந்து ஆசிரியர், பெற்றோரின் பாராட்டு பெறுவர். உடல், பிணி தொந்தரவு குறையும். வழக்கு விவகாரத்தில் அனுகூலமான தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் சார்ந்த வகையில், உங்கள் அணுகுமுறையால், நல்ல வளர்ச்சியும், உபரி பணவரவும் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பதவி, பொறுப்பு தேடி வரும். பணிபுரியும் பெண்கள், பதவி உயர்வு சலுகைப்பயன் பெறுவர்.

**மிதுனம்** - மனதில் மங்கல சிந்தனையும், செயல்களில் பரிமளிப்பும் உருவாகும். பணவரவை முக்கிய செலவுகளுக்குப் பயன்படுத்துவீர்கள். சமூகத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். புத்திரரின் பிடிவாதமான செயல், உங்கள் மனதைச் சஞ்சலப்படுத்தும். அவர்களைக் கண்டித்து, வழி நடத்துவதில் நிதானம் அவசியம். நிலுவை பணக்கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். நண்பர்களிடம் சுமுகமான நட்பு வளரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு அணுகாத நல்ல சூழ்நிலை வளரும். உபரி பணவரவு உண்டு. உத்தியோகத்தர் சிறந்த பணியால், நிர்வாகத்திடம் நன்மதிப்பு, வெகுமதி பெறுவர். மாணவர்கள், வெளிவட்டாரப் பழக்கத்தைக் குறைத்து, படிப்பதால் மட்டுமே தர தேர்ச்சி சீராகும்.

**கடகம்**- சமூகத்தின் பார்வை உங்கள் மீது பதியும். நற்செயல்களுக்கான மதிப்பு, மரியாதை கிடைக்கும். புத்திரர் கவனக்குறைவான செயல்களினால், சிறியளவில் உடல் நலப்பாதிப்பு அடைவர். மருத்துவ சிகிச்சை நன்மை தரும். வியத்தகு அளவில் பணசேமிப்பு உருவாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதலாகப் பணிபுரிவீர்கள். உரியவர்களை அணுகுவதால், அரசு தொடர்பான உதவி எளிதில் கிடைக்கும், பெண்கள், குடும்பப் பெருமையை வளர்க்கும் விதத்தில் பொறுமையுடன் நடந்து கொள்வர். மாணவர்கள், புதிய நடைமுறை பின்பற்றி படிப்பில் உயர்ந்த தேர்ச்சி பெறுவர்.

**சிங்கம்** உடல் நலம் பலம் பெற்று, பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பணவரவுகளை உழைப்பின் உயர்வால் அதிகம் பெறுவீர்கள். இடம், பொருள் அறிந்து பேசுவதால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். வீடு, வாகனத்தில் பெறுகிற வசதியை சரியாக பயன்படுத்துவது போதுமானதாகும். உங்கள் வாழ்வியல் நடைமுறையின் உயர்வு கண்டு, எதிரி வியந்து விலகுவர். இல்லறத்துணை, உங்கள் எண்ணங்களை பிரதிபலிக்கும் விதமாக செயல்களை மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை சமயோசித செயலால் சரி செய்வீர்கள். பணவரவு சீராகும்.

**கன்னி**-மனதில் உருவான தாழ்வு எண்ணங்களை விலக்கி, நல்லவர்களின் ஆலோசனைப் படி செயற்படுவீர்கள். உங்களை அவமதித்துப் பேசுபவரிடம் எதிர்வாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. எதிரி சமயம் பார்த்து அவமானப்படுத்தக் காத்திருப்பர். அவர்களிடம் விலகிப்போவதால் காலம், பணவிரயம் என்பவற்றைத் தவிர்க்கலாம். தொழில் வியாபாரத்தில் சிறிது பின் தங்குகிற கிரக நிலை உள்ளது வாடிக்கையாளர்களுக்கு சலுகை வழங்குவதால் வளர்ச்சி நிலை சீராகும். அரசியல்வாதிகள் வழக்கு விவகாரங் களில் வெற்றி காண்பர். மாணவர்கள், ஆன்மிக பக்தியுடன் படித்து படிப்பில் நல்லதர தேர்ச்சியை அடைவர்.

**துலாம்**-மனதில் குழப்பமும், செயலில் மந்தகதியும் இருக்கும். உறவினர்களிடம் தேவையற்ற விடயங்களில் விவாதத்தைத் தவிர்க்கவும். இளையசகோதரர், உங்களிடம் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். எதிரியின் கெடு செயலைச் சமாளிக்க, சிறியளவில் பணம் செலவாகும். தொழில், வியாபாரத்தில் வார பிற்பகுதியில் வளர்ச்சியும், பண வருமானமும் அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலை நிர்ப்பந்தம் தருவதால், நடப்புப் பணிகளை விரைவாக நிறைவேற்றுவர். மாணவர்கள், உறவினர்களின் செயல்களில் அதிருப்தி கொள்ளாமல் படிப்பதால் மட்டுமே திட்டமிட்ட தேர்ச்சி கிடைக்கும்.

**விருச்சிகம்**- வாழ்வில் குறுக்கிடும் தடைகளை உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை, உதவியினால் சரி செய்வீர்கள். உழைப்பின் மூலம் பணவரவு அதிகம் பெறக் கிடைக்கிற வாய்ப்புக்களைப் பயன்படுத்துவீர்கள். சமூக நிகழ்வுகளின் எதிர்மறை சூழ்நிலைகண்டு விலகுவீர்கள். சிலர் உங்களுக்கு உதவுவதுபோல மறைமுக இடையூறு செய்வர். கவனம் தேவை. ஊட்டம் தரும் உணவு உடல் நலம் பலம்பெற உதவும். இல்லறத்துணையின் கருத்தை மதித்து நடந்து, குடும்பத்தை மகிழ்ச்சி வழியில் கொண்டு செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாக்க, கூடுதல் மூலதனம் தேவைப்படும். அரசுவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு** -ஆரம்பிக்கும் நற்செயல் அத்தனையும் வெற்றி பெறும். அளவுடன் பேசி ஆதாய நற்பலன் பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு ஆதரவாக நடந்து மகிழ்ச்சிகர வாழ்வை உருவாக்குவர். தாயின் தேவையை பூர்த்திசெய்து கூடுதல் அன்பைப் பெறுவீர்கள். எதிரித்தனமாக நடந்தவர், அதிர்ஷ்டகாற்று உங்கள் பக்கம் இருப்பதால், சிலர் உதவியுடன் நன்மை பெற விரும்புவர். கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் புதிய பரிமாணமும், உபரி பணவரவும் கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும் மாணவர்கள், உடல்நலம் பாதுகாப்பதால் படிப்பில் ஆர்வமும், தேர்ச்சி விகிதமும் அதிகரிக்கும்.

**மகரம்** -உங்களைச் சுற்றி நடக்கும் விடயங்கள், மனதுக்கு ஏற்புடையதாக இருக்கும். புத்திரர், உங்கள் சொல்படி கேட்டு நடந்து படிப்பு, திறமையில் முன்னேற்றம் அடைவர். எதிரியின் தீய செயல், பலமிழந்து போகும். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். நண்பர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு சரியாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெறத் தேவையான மாற்றங்களைச் செய்வீர்கள். பணி புரியும் பெண்கள், உத்வேகமுடன் செயற்பட்டு இலக்கை நிறைவேற்றுவர். பதவி உயர்வு, சலுகைப் பயன் கிடைக்கும். மாணவர்கள், ஒருமுகத் தன்மையுடன் படித்து, கூடுதல் மதிப்பெண் பெறுவர்.

**கும்பம்** - பொறுமைக் குணமும், நல்ல செயல்களையும் பின்பற்றுவதால், சிரமமான பலன்களை பெரிதும் தவிர்க்கலாம்.சொத்தின் பேரில், நம்பகத்தன்மை குறைவானவர்களிடம் பணக்கடன் பெறக் கூடாது. இல்லறத்துணை ஒன்றுமில்லாத விடயங்களில் கூட, குறை கண்டுபிடிக்கிற சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம்பெற, கூடுதல் உழைப்பு உதவும். பணவரவுக்கேற்ப செலவைத் திட்டமிட வேண்டும். பணிபுரியும் பெண்கள், கவனக் குறைவான செயலால் நிர்வாகத்தின் கண்டிப்பைப் பெறுவர். மாணவர்கள், லட்சியத்துடன் படிப்பதால் மட்டுமே தேர்ச்சி வீதம் சீராகும்.

**மீனம்**-பேச்சிலும், பிறருக்கு உதவுவதிலும் நிதானமான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். பூர்வீக சொத்து பராமரிப்பில், நம்பகமானவர்களுக்கு இடம் கொடுப்பது நல்லது.. வழக்கு விவகாரம் தொடர்பான சமரசப் பேச்சுக்களை, தாமதப்படுத்தி மேற்கொள்ளலாம். இல்லறத்துணையின் அன்பைப் பெறும் வகையில் செயல்களை அமைத்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஏற்படும் குளறுபடியைச் சரி செய்ய, தெய்வ அருள் பலம் துணை நிற்கும். மாணவர்கள், பிடிவாத குணத்தைத் தவிர்த்து பெற்றோரிடம் இணக்கமும், படிப்பில் ஆர்வமும் கொள்வர். தேர்ச்சி வீதம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீர் இழந்து நிற்கிறோம்



கூடி வாழ்ந்தோம்
கோடி நன்மை பெற்றோம் - இன்று
ஓடி ஓடி அகதியாய்
தேடிப் பெற்ற செல்வமெல்லாம்
தொலைத்து நிற்கிறோம் - கனவுகள்
கலைந்து நிற்கிறோம்
வாடி நிற்கிறோம் - நாம்
வதங்கி நிற்கிறோம்

பேர் பெற்றோம் - நாம்
பெருங்கலை கற்றோம்
சீர்பெற்று சிறப்புடனே
சிந்தையில் மகிழ்வுடனே
பார் மீது வாழ்ந்தோம்
பண்பாக வாழ்ந்தோம் - இன்று
போர் என்னும் அரக்கன்


புயலெனவே நம் வாழ்வில் புகுந்ததால்
சீர் இழந்தோம் சிறப்பிழந்தோம்
சிந்தையில் கலக்கம்- கொண்டோம்
வேர் இழந்த விருட்சமென
வெதும்பின கண்ணீர் ததும்பி
பார் மீது பாச உறவுகள் பிரிந்து
பரிதவித்தே புண்பட்டு நிற்கின்றோம்

செ.சசிகலா, ஸ்ரீநிலை ஆசிரியர்,
ஆரம்பக் கல்வித்துறை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.

## இறுதி ஊர்வலம்.....

அந்தோ பார் கோடி ரூபாய் செலவில்
இறுதி ஊர்வலம் தயாராகின்றது
அவள், இறுதிப் படுக்கைக்கு
முப்பது நாற்பதாயிரம்
விலைபேசி பல நிறம் பார்த்து
இறுதிப் பெட்டி தயாராயிற்று
அவள் மனை, நூறடி பந்தல் தாங்கி
ஐந்து குலத்தவர் இருக்க
இருக்கை முதலாய் பற்பல
அவள் இறுதிச் சடங்கில்
வந்திருப்போர் குரல் அறுந்து போகாது
அழுது புலம்ப விதம் விதமாய்
சோடா முதலிய குளிர்பானங்கள்
துடக்காகி விடும் என்பதால்
எதிர்வீட்டில் உபசாரம்
மெத்தப் பெருமையாய் நடக்குது
நல்ல குல ஐயர் பார்த்து
பஞ்சமி முதலானவை கணித்து
அதற்கேற்ற ஆசாரம் செய்து
சுற்றத்தார் உற்றத்தார் குழுமி நின்று நீராட்டி
புத்தாடை அணிவித்து
புது மணவாட்டி கோலம் போட்டு
நடக்கிறது இறுதி அலங்காரம்
ஊர்சுற்ற பறைதொட்டு பான்ட் இசையுடன்
சீனத்துடன் கோர்வை வெடிகளும்
முள்ளிவாய்க்கால் வெடிச்சத்தங்களாய்
வீதி எங்கும் ஒலி எழுப்ப அலங்கார காத்தவில்
அவள் இறுதி ஊர்வலம் ஊர்கிறது
இதுநாள் வரையில்
கோடிப்புறத்தில் அழுக்கு ஒற்றைத்
துணியுடன் கிழிந்த பாயில்
ஓட்டைக் கூரை ஊடு ஒளி வெள்ளம் பாய்ச்சும்
கதிர்களுடன் பசிக்காக
போராடிக்கிடந்த அந்தக் கிழவிக்கு
இப்படியொருநாள் கிடைக்குமென்று
அவளே நினைத்திருக்கமாட்டாள்.

- மலரவன்





"தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அந்தத் தீர்வு விரைவாக எட்டப்படவேண்டும் என்பதிலும் நாம் கவனமாக இருக்கிறோம். இதற்காக இலங்கைக்கு முழு அழுத்தங்களை வழங்கிவருகிறோம். இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா தெளிவாக இருக்கிறது"

# பொறுமையின் எல்லையில் இந்தியா

■ அதிரன்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக் குழுவினருக்குமிடையே இடம்பெற்ற முக்கிய சந்திப்பு இலங்கைத் தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையையும் புதுத்தெம்பையும் ஊட்டியுள்ள அதேநேரம் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியிலும் கடும்போக்குடைய சிங்கள இனவாத சக்திகள் மத்தியிலும் பெரும் கிலேசத்தையும் ஆத்திரத்தையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள் இன்று எதிர்கொண்டு வரும் மிகமோசமான நெருக்கடி, மீள்குடியமர்வுப் பிரச்சினைகள், இராணுவப் பிரசன்னம், நில அபகரிப்பு என்பன குறித்து இந்தியாவின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கு இந்தச் சந்திப்பை வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்கு பயன்படுத்திக்கொண்டமை எதிர்காலத்தில் பல்வேறு நம்பிக்கை தரும் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அரசின் விசேட அழைப்பின் பேரில் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, பொன்.செல்வராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்த விசேட சந்திப்புகளில் கலந்துகொண்டு இலங்கைத் தமிழர்களின் இன்றைய துயரநிலை குறித்து தெளிவாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்பு மிகவும் பயன்மிக்கதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் இருந்ததாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே இடம்பெற்ற சந்திப்புக்கள் போல இல்லாமல் இந்தச் சந்திப்பு மிக முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது. இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா கொண்டுள்ள அக்கறை இந்தச் சந்திப்பில் முற்று முழுதாக வெளிப்படுத்தப்பட்டதாக சம்பந்தன் மேலும் கூறியிருக்கிறார். அதிலும் முக்கியமாக இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா இணைந்து பணியாற்ற விரும்புவதாக பிரதமர் மன்மோகன்வெளியிட்ட கோரிக்கை முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பிரதமரின் இந்தக் கோரிக்கைக்குக் கூட்டமைப்பினரும் இணக்கத்தை வெளியிட்டமை எதிர்காலத்தில் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பும் இந்தியாவும் கூட்டாகச் செயற்படப்போகும் நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. இதுவரை இலங்கை அரசுக்குத் தீர்வை வழங்குமாறு அழுத்தத்தைக் கொடுப்பதாகவும் அதற்கான ஆலோசனைகளை வழங்குவதாகவும் தெரிவித்து வந்த இந்திய அரசு இப்போது தீர்வை எட்டுவதற்குக் கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்ற முன்வந்திருப்பது வரவேற்புக்குரியதுடன் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா கொண்டுள்ள தீவிர அக்கறையையும் வெளிக்காட்டுகிறது எனலாம். இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது இரு தரப்பும் இணைந்து பணியாற்ற காணப்பட்ட இணக்கம் குறித்து இலங்கை அரசுக்கும் தெரியப்படுத்துமாறு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பிரதமர் மன்மோகனிடம் கேட்டுக்கொண்டமை தீர்வு காண்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அமைவதுடன் இலங்கை அரசை எச்சரிக்கும் ஒரு நிகழ்வாகவும் அமையும் என அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

***"தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அந்தத் தீர்வு விரைவாக எட்டப்பட வேண்டும் என்பதிலும் நாம் கவனமாக இருக்கிறோம். இதற்காக இலங்கைக்கு முழு அழுத்தங்களை வழங்கிவருகிறோம். இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா தெளிவாக இருக்கிறது"*** என்று இந்தியப் பிரதமர் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டதாக சம்பந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

மன்மோகன் சிங்குடனான இந்தச் சந்திப்புக் குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுத் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். சந்திப்பின் ஆரம்பத்தில் தமக்கு என்றுமே இல்லாதவாறு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டதாகவும் பேச்சு முடிவடைந்ததும் பிரதமர் செயலக வாசல்வரை வந்து மன்மோகன் சிங் தங்களை வழி அனுப்பி வைத்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். பிரதமரின் இந்தச் செயற்பாடு இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் அவர் கொண்டுள்ள அதிக அக்கறையையும் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான மிகுந்த மரியாதையையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது எனவும் குறிப்பிட்டார். இந்தச் சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்,

"இந்தச் சந்திப்பின் போது இலங்கை அரசினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டும் என்ற கோரிக்கை எதனையும் பிரதமர் மன்மோகன்சிங் எம்மிடம் விடுக்கவில்லை. தெரிவுக் குழு குறித்துக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை இந்தியப் பிரதமருக்கு விளக்கினோம். ஏற்கனவே இணக்கம் காணப்பட்டதைப் போல முதலில் அரசு- கூட்டமைப்பு இடையேயான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப்பாடுகளை தெரிவுக்குழுவுக்குக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு செயற்பட அரசு முன்வந்தால் தெரிவுக் குழு பற்றி பரிசீலிப்பதற்குக் கூட்டமைப்பு தயாராகவே உள்ளது. அதனை விட்டு உடனடியாக தெரிவுக்குழுவுக்கு வருமாறு இலங்கை அரசு கூறுவதை ஏற்க முடியாது. அரசை நம்புவதற்கு கூட்டமைப்பு தயாரில்லை. ஏனெனில் ஏற்கனவே பேச்சின்போது எட்டப்பட்ட பல முடிவுகள் இன்னும் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் தெரிவுக்குழுவுக்குச் சென்று மீண்டும் ஏமாறுவதற்கு கூட்டமைப்பு தயாரில்லை. அத்துடன் தமிழ் மக்களைத் தொடர்ந்து நெருக்கடிக்குள் தள்ளவும் கூட்டமைப்பு விரும்பவில்லை. அரசிடம் இருந்து ஓர் உறுதியான செயற்திட்டம் கிடைத்தால் மட்டுமே தெரிவுக்குழு பற்றி பரிசீலிக்கப்படும்" என்று இந்தியப் பிரதமரிடம் தெளிவாகச் சுட்டிக்காட்டியதாகக் கூறியிருக்கிறார்.

மீளக்குடியமர்வு எனக் கூறி அரசு [illegible] சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த இவ்வாறான மோசமான செயற்பாடுகளை அரசு மேற்கொள்வது, அத்துடன் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் குடியிருப்புகள் விடுவிக்கப்படாமல் உள்ளமை, தமிழ் மக்களின் காணிகள் படையினரால் அபகரிக்கப்படுகின்றமை ஆகிய விடயங்களையும் கூட்டமைப்பு இந்தியப் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை குறித்தும் இந்தச் சந்திப்பில் பேசினோம் என்று சம்பந்தன் தெரிவித்தார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை அடுத்து இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும் கூட்டமைப்பின் குழுவினர் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இந்தச் சந்திப்பில் ஒரு மிக முக்கிய விடயம் ஆராயப்பட்டிருக்கிறது. அதாவது இந்திய அகதி முகாம்களிலுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் குறித்து இதில் அதிகம் பேசப்பட்டிருக்கிறது. இதன் போது கூட்டமைப்பு இந்திய மத்திய அரசிடம் ஒரு கோரிக்கையையும் முன்வைத்திருக்கிறது. ஈழ அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதானால் அதற்கான ஒரு செயற்றிட்டத்தை இந்தியா வகுக்க வேண்டும். அவர்கள் இங்கு வருவதானால் அவர்களுக்கான பொருளாதாரம், பாதுகாப்பு, இல்லிட வசதிகள் அனைத்தையும் இந்தியா பொறுப்பெடுக்க வேண்டும். அவர்களை இங்கு கொண்டு வருவதற்கு முன்னர் அவர்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்படும் என்ற ஒரு விசேட அறிவித்தலையும் விடுக்க வேண்டும். அவ்வாறானதொரு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்ட பின்பே அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். இதனையே கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதனை ஒரு நல்ல விடயம் எனக் கூறி வரவேற்ற மேனன் அது குறித்து இந்திய மத்திய அரசு மற்றும் தமிழக அரசு ஆகியவற்றுடன் பேசி ஒரு சாதகமான முடிவை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்.

பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்திப்பதற்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவையும் கூட்டமைப்பின் தூதுக்குழு சந்தித்திருந்தது. இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கூட்டமைப்பினரிடம் தெரிவித்த கருத்து இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா கொண்டுள்ள அதிதீவிர தன்மையை வெளிக்காட்டுகிறது. "இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமாறு இலங்கை அரசுக்கு எங்களாலான முழு அழுத்தங்களையும் வழங்கி வருகிறோம். இது குறித்து வெளிவிவகார அமைச்சு எமது அதிகாரிகளும் இலங்கைக்குத் தொடர் அழுத்தங்களை பிரயோகிக்கிறார்கள். ஆயினும் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இந்தியாவின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு" என்று சற்றுச் சூடாக இலங்கை அரசை கண்டித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார். இந்தச் சூடான கருத்து இலங்கை மீது இப்போது இந்தியா கொண்டுள்ள கடும் அதிருப்தியான - இக்கட்டான நிலைமையை எடுத்துக் காட்டுகிறது என அரசியல் தலைவர்களும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். இலங்கை அரச தரப்பின் மூத்த அமைச்சரான திஸ்ஸ விதாரணவும் இதனைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். கூட்டமைப்பின் இந்தியப் பயணம் அரசியல் தீர்வில் இந்தியா கொண்டுள்ள அதிக அக்கறையையே எடுத்துக் காட்டுகிறது எனத் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பின் இந்தப் பயணம் மூலம் இலங்கை அரசுக்கு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இந்தியாவைச் சமாளித்து தீர்வை இழுத்தடிக்கும் சித்து விளையாட்டை காட்டமுடியாத நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருக்கிறது. அத்துடன் சிங்களப் பேரினவாத சக்திகளையும் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் கடும் கோபத்துக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியிருக்கிறது. தமிழர் பிரச்சினையில் இந்தியா இவ்வாறு அதிக அக்கறை எடுத்து செயற்படுவதாக காட்டியிருக்கும் ஈடுபாடு குறித்து பலரும் பலவாறு பேசிக் கொள்கிறார்கள். ஆயினும் கூட்டமைப்புக்குக் கொடுத்த உறுதிமொழிகளை இந்திய அரசு இலகுவில் மீறிவிடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை எதிர்காலத்தில் இந்தியா எப்படி கையாளப் போகிறது என்பது போகப் போகத் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தபோது, இந்தியாவில் அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அது சொல்லிய செய்தி என்னவென்றால், போர் வலயத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தியா உன்னிப்பாகக் கவனிக்கவேயில்லை என்பதுதான். புலிகளுக்குப் பின்னரான இலங்கையின் எதிர்காலம் பற்றியே அவர்களின் கவனம் குவிந்திருந்தது. இந்தக் கொலைகளின் போது இந்தியா கண்ணை மூடிக் கொண்டிருந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது.

இந்தியா மட்டும் அதனைச் செய்யவில்லை. பல மேற்கு நாடுகளும் கூட அதேபோன்றே நடந்துகொண்டன. இப்போதாவது, சிறுபான்மைத் தமிழர்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வகையிலும் அவர்களுக்கு நீதியை வழங்கக் கூடிய வகையிலும் இலங்கை மீது இந்தியா கூடுதல் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு.''

*''போரில் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளை இலங்கை போதியளவில் செய்கின்றதா?''*

''2009இல் போரின்போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றன என்பதை தெற்கில் இருக்கும் பெரும்பான்மையான இலங்கையர்கள் மறுக்கின்றனர். அதேசமயத்தில் விடுதலைப் புலிகள் தமது சொந்த மக்கள் மீதே மேற்கொண்ட துன்புறுத்தல்களை தமிழர்கள் பலரும் மறுக்கிறார்கள். குறிப்பாகத் தோல்வி நிச்சயம் என்றாகிய போதும் பதின்ம வயதினரைக் கட்டாயமாக ஆள்சேர்ப்புச் செய்தது போன்றவை.

நான் நினைக்கிறேன், இது மிகப் பெருமளவில் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் விடயம் என்று. உணர்வுகளில் இருந்து விடுபடுதல் என்பது மிகக் கடினமானது.

இந்த முரண்பாடு பற்றி தமிழர்களும் சிங்களவர்களும் இவ்வாறு வெவ்வேறான பக்கங்களை வைத்திருக்கும் போது அவர்களால் எந்தவொரு பொதுத் தளத்தையும் கண்டடைய முடியாது என்பது பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன்.

மறுவாழ்வைப் பொறுத்த வரையில், போரில் தப்பிப் பிழைத்த ஆயிரக்கணக்கானவர்கள் தென் இந்தியா மற்றும் தென்கிழக்காசியா வழியாக ஆயிரக்கணக்கானவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள். அவர்களில் சிலர் லண்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா என்று சென்றுவிட்டார்கள். ஆனால் பலர் சிக்கிக் கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு வெளிநாடுகளில் உத்தியோகபூர்வமான மறுவாழ்வுத் திட்டங்கள் ஏதும் கிடையாது. அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகள்கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

நாட்டிலேயே இருப்பவர்களைப் பொறுத்தவரையில், போரில் இறந்தவர்களுக்கு பகிரங்கமாக சமயச் சடங்குகளை நடத்தக்கூட அனுமதியில்லை என்று வருகின்ற செய்திகள் குறித்து நான் கவலைப்படுகின்றேன். பாதிக்கப்பட்டவர்களின் மனச்சோர்வை நீக்குவதற்கான உளவளத்துணைகூட இப்போது அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

முள்ளிவாய்க்கால் வரைக்கும் பயணித்த மக்கள் சிதைக்கப்பட்டிருக்கிறார்கள், அழிக்கப்பட்டிருக்கிறார்கள், முறிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் இரவுகளில் தூங்க முடியவில்லை. அளவுக்கதிகமானோர் இறந்துபோகத் தாம் மட்டும் தப்பிக் கொண்டோமே என்ற குற்றஉணர்வு அவர்களைக் கொல்கிறது. அவர்களுக்கு உளவள உதவிகள் தேவை. பாதுகாப்பு, வேலை, வீடுகள் என்பனவும் தேவையாக இருக்கின்றன.''

*''போர்க் குற்றங்கள் பற்றிய ஐ.நா. விசாரணை ஏதாவது விளைவுகளைத் தரும் என்று நினைக்கிறீர்களா?''*

''2011இல் வெளியிடப்பட்ட ஐ.நாவின் அறிக்கையை நீங்கள் கருதிக் கேட்டிருந்தீர்களானால், அது, ஒரு மிகச் சிறந்த பதிவுக்கான ஆவணம். அத்துடன் உதவியும் இருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பில் வாக்களிப்பதற்கு அந்த அறிக்கை உந்தியிருக்கிறது. ஆனால், இது போதுமா என்று என்னைக் கேட்டால், இல்லை! நிச்சயமாக இல்லை.

இலங்கை மீது மேலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்காலில் நடந்தது, இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய இரத்தக் களரி. ஆனால் அதற்குப் பொறுப்பானவர்கள் இன்னும் தப்பியே வருகிறார்கள். இப்போது வரைக்கும் யாரும் அதனைப் பொருட்படுத்தவில்லை. கவலைப்படவுமில்லை.''

*''உங்களைப் பொறுத்த வரை உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை என்ன?''*

''இறந்தவர்களின் சரியான எண்ணிக்கை ஒருவரிடமும் இல்லை. செய்மதிகள், சமூக வலைத்தளங்கள், தடய அறிவியல் துறைகள் எல்லாம் இருக்கும் இந்தக் காலத்திலேயே அந்தச் சரியான எண்ணிக்கை தெரியவில்லை என்பது அதிர்ச்சிகரமான உண்மை. மனிதர்களின் இழப்பை நாம் சும்மா ஒரு 10,000 அளவில் இருக்கும் என்று ஒரு பருமட்டுக்குக் கணிக்க இயலாது.

என்னுடைய புத்தகம் வெளியிடப்பட்ட வெள்ளிக்கிழமையன்று அதில் கலந்துகொண்டிருந்த, ஐ.நா. நிபுணர் குழு உறுப்பினர்களில் ஒருவரான யஸ்மின் சூகா, இறந்தவர்களின் எண்ணிக்கை 75,000 எட்டும் என்று சொன்னார்.

ஐ.நா. அறிக்கை 40,000 பேர் கொல்லப்பட்டார்கள் என்று நம்பமாகத் தெரியவந்ததைக் குறிப்பிட்டுள்ளது. இலங்கையின் சொந்தக் கணக்கெடுப்பிலேயே தவறிப் போயுள்ள 147,000 பேர் எங்கே என்று மன்னார் ஆயர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

எனவே, சொல்லப்படுகின்ற இந்த எண்ணிக்கைகளிடையே பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. நிச்சயம் அது பல ஆயிரக் கணக்கில் இருக்கும். மிக நிச்சயமாக செர்பேனிக்கா படுகொலைகள் (1995 பொஸ்னிய போரில் நடந்த கொடுமை) மற்றும் சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் போரில் கொல்லப்பட்டவர்களைவிடவும் அதிகம்.''

*''இந்தப் பிரச்சினை உலகின் போதிய கவனத்தைப் பெற்றிருக்கிறதா? நீதியை நிலைநாட்டுவதற்கு சர்வதேச சமூகம் என்ன வகிபாகத்தை வகிக்க முடியும்?''*

''சர்வதேச ரீதியில் இது மறக்கப்பட்டுவிட்ட பிரச்சினை. தமிழர்கள் மட்டுமே ஐரோப்பாவில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஏனைய யாரும் அது பற்றி அலட்டிக் கொள்வதில்லை. பரந்தளவிலான ஆதரவு இயக்கம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தவறிவிட்டது.

என்ன நடந்தது என்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். நான் சொல்லக் கூடியதெல்லாம், ஐ.நாவின் அறிக்கையைப் படியுங்கள், எனது புத்தகத்தை வாசியுங்கள், சனல்-4 தொலைக்காட்சியின் 'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' ஆவணப்படத்தைப் பாருங்கள் என்பதைத்தான். கூடவே இலங்கை அரசின் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கையையும் வாசியுங்கள். அதன் பின்னர் நீங்களே ஒரு முடிவுக்கு வாருங்கள்.

தனிப்பட்ட ரீதியில், இந்தப் பிரச்சினை தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற ஐ.நா. நிபுணர் குழுவின் கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். உண்மையை நிலைநாட்டவும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவும் உள்ள ஒரே வழி அதுதான்.''

*''இலங்கையில் தமிழர் பிரச்சினை மீண்டும் எழுச்சிபெற ஏதாவது வாய்ப்பு உண்டா?''*

''ஆம். ஆனால் உடனடியாக இல்லை. நான் எனது புத்தகத்துக்காக நேர்கண்ட எந்தவொரு புலி உறுப்பினரும் இப்போதே சண்டையிட வேண்டும் என்று விரும்பவில்லை. அவர்களில் யாராவது ஒருவர் மீண்டும் ஆயுத மோதலை உருவாக்குவார் என்பது சந்தேகம் தான். ஆனால், தமிழ்ச் சமூகத்தை ஆற்றுப்படுத்த இலங்கை அரசு தவறுமாக இருந்தால் (இப்போதும் பிரச்சினைக்கான காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன) இந்தப் பிரச்சினை மற்றொரு தலைமுறையில் மீண்டும் எழும். அப்படி நினைக்கக்கூடததாக இருந்தாலும் அது மிகப் பயங்கரமானதாக இருக்கும்.

சிறுவனாக இருந்தபோது, தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் பற்றிக் கேள்விப்பட்டே பிரபாகரன் உணர்ச்சிவசப்பட்டு ஆயுதங்களைத் தூக்கினார் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

அப்படி, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றவைகள் பற்றிய கதைகளைக் கேள்விப்பட்டால் அடுத்த தலைமுறைக் குழந்தை ஒன்று எப்படிச் சிந்திக்கும் என்று உங்களால் நினைத்துப்பார்க்க முடியுமா? பழிவாங்குதலும் வன்முறையும் மீண்டும் மீண்டும் நிகழ்வதை நிறுத்த வேண்டும். ஆனால் அது நடப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

*''தங்களுடைய பிடிவாதப் போக்கைக் கைவிட்டு தமிழர்களும் சிங்களவர்களும் முன்னேறினால் அவர்களுக்கிடையில் நல்லிணக்கம் சாத்தியப்படுமா?''*

''முதலில் குறைந்தளவு உண்மையாவது இல்லாமல் ஒரு நல்லிணக்கம் வர முடியாது. நிகழ்ந்த எந்த ஒரு தவறுக்காகவும் எல்லாத் தரப்புக்களுமே நேர்மையாக அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் என்ன நடக்கிறது இப்போது? அதற்கு எதிர்மாறானதுதானே! இதற்கு முன்னர் எப்போதும் இருந்திராத வகையில் வேற்றுமைதான் வளர்கிறது.''

# அளவுக்குமிஞ்சிய...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு கும்மாளம் அடிக்கத் தொடங்கினர். மாணவர்கள் கைகளில் கொரெக்ஸ் போத்தல்கள் இருப்பதைக் கண்டவர்கள் சிலருக்கு ஏனோ பொறிதட்ட, உடனேயே பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இந்தத் தகவலைப் பொலிஸார் அவ்வளவு 'சீரியஸாக' எடுத்துக் கொள்ளாவிட்டாலும், எதற்கும் ஒரு முறை போய்ப் பார்ப்போம் என்ற நினைப்போடு, அங்கு வந்தனர். அவர்கள் வந்தபின்னர், மாணவர்கள் குறித்த பார்மஸிக்கு செல்வதும் கொரெக்ஸை வாங்குவதும் குடிப்பதும் தொடர்ந்துகொண்டே இருந்தது. ஒரு கட்டத்தில் பார்மஸிக்குள் அதிரடியாகப் பாய்ந்த பொலிஸாருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்தப் பார்மஸியில் மற்றைய மருந்துகள் காணமல் போயிருக்க கடை முழுவதும் உள்ள தட்டுகளில் கொரெக்ஸ் மருந்துப் போத்தல்களும் 'தெர்மடோல்' என்ற மாத்திரைகளும் நிறைந்து கிடந்தன. பொலிஸாரைக் கண்டவுடன் பார்மஸி உரிமையாளருக்கு உதறல் எடுத்தது. இந்த உதறல் பொலிஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்த, கடுமையான தொனியில் அவரை விசாரிக்கத் தொடங்கினர்.

அந்த பார்மஸி உரிமையாளர் அளித்த வாக்குமூலம் இதுதான்.

''வழமையாக 'பிக்-மட்ச்' நடக்கும் காலங்களில் மாணவர்கள் இப்படி அதிகளவில் கொரெக்ஸ் மருந்தை வாங்கி பயன்படுத்துவார்கள். இதனால் பிக்-மட்ச் பருவகாலத்தில் பெரும்பாலான மருந்தகங்கள் மற்றைய மருந்துகளைவிடவும் கொரெக்ஸையே அதிகமாக கொள்வனவுசெய்து, விற்கின்றன. கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 300 முதல் 500 வரையிலான கொரெக்ஸ் போத்தல்கள் ஒவ்வொரு பார்மஸியிலும் இந்த பிக்-மட்ச் காலங்களில் விற்பனையாகும்''.

அதேபோல கடந்தவாரமளவில் கொரெக்ஸை அளவுக்கதிகமாக உட்கொண்டதால் அறுவர் உயிரிழந்ததாக சில தகவல்கள் கசிந்துள்ளன. இதற்குப் பின்னர்தான் சுகாதார அமைச்சு விழித்துக்கொண்டது. உடனடியாகவே ''வைத்தியரின் பரிந்துரையின்றி கொரெக்ஸ், கொரெக்ஸ் டி மருந்து வகைகளை விற்பனை செய்யக்கூடாது'' என்று கண்டிப்பான கட்டளையைப் பிறப்பித்தது. ஆனாலும் கொரெக்ஸின் விற்பனை குறையவில்லை. தம்முடைய இலாப மீட்டலுக்காக மருந்தக உரிமையாளர்கள் வைத்தியரின் பரிந்துரைச் சிட்டை இல்லாவிட்டாலும் கொரக்ஸை விற்றுக்கொண்டே இருந்தார்கள்.

தொடர்ச்சியாக கொரெக்ஸ் பற்றிய மீளாய்வில் ஈடுபட்ட அரச மருத்துவ ஆய்வுப்பிரிவு, இறுதியில் இதனை தடைசெய்வதே ஒரே தீர்வாக இருக்கும் என்று தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு அளித்தது. அதன் அடிப்படையில்தான் இந்த மாதம் 10ஆம் திகதி முதல் கொரெக்ஸ், கொரெக்ஸ் டி ஆகிய மருந்து வகைகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், உடலுக்கு போதை ஊட்டக்கூடிய 'கோடின் பொஸ்பேட்' என்ற பதார்த்தம் கொரெக்ஸில் மட்டுமே உண்டு. ஆனால் கொரெக்ஸ் - டியில் இல்லை. இந்த வித்தியாசம் அநேகருக்குத் தெரிவதில்லை. கொரெக்ஸை விடவும் கொரெக்ஸ்-டி இலேயே அதிக போதை இருப்பதாக நம்பும் இளைஞர்களும் உண்டு. இதனால் கொரெக்ஸ் என்ற லேபிள் ஒட்டப்பட்ட பாணி மருந்து எதுவானாலும் அதனை கண்ணை மூடிக்கொண்டு வாங்கியிருக்கிறார்கள் இந்தப் போதை இளைஞர்கள்.

அதனால் தான் கொரெக்ஸுக்கு மட்டுமல்லாமல் கொரெக்ஸ்-டிக்கும் சேர்த்து தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் ஹெரோயின், அபின் போன்ற போதைப்பொருள்களுக்கு அடிமையான இளைஞர்கள், அவற்றை வாங்க காசில்லாத தருணங்களில் கொரெக்ஸை வாங்கி பயன்படுத்தி உள்ளனர் என்று கூறப்படுகிறது. அவர்களே பின்னர் தம்முடைய நண்பர்களுக்கும் கொரெக்ஸின் 'மலிவு விலைப் போதைத் தன்மை' பற்றி அறிமுகம் செய்ய, நாளடைவில் கொரெக்ஸ் பாவனை இளையோரிடையே பரவிவிட்டது.

**யாழ்ப்பாணத்துக்கு படையினரின் பரிசு**

கொரெக்ஸ் இருமல் பாணி மருந்து என்று மட்டுமே யாழ்ப்பாணத்தில் அறியப்பட்டிருந்தது. ஆயினும் இப்போது இங்கும் ஒரு தொகை இளைஞர்கள் கொரெக்ஸ்போதைக்கு அடிமையாக உள்ளனர். இந்த அதிர்ச்சித் தகவலை அனைவரும் தாங்கிக்கொள்ளவே வேண்டும். இவ்வாறு அடிமையான இளைஞர்களில் ஒருவரே இப்பத்தியில் குறிப்பிடப்பட்ட சம்பவத்தில் காலில் விழுந்து கெஞ்சி அழுது கொரெக்ஸ் வாங்கும் அளவுக்கு சென்றிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் -குறிப்பாக யாழ்.நகரில் உள்ள பெரிய மருந்தகங்களில் மற்றைய இருமல் நிவாரணிகளை விடவும் கொரெக்ஸே முன்னணி வகிக்கிறது.

''நாள் ஒன்றுக்கு சராசரியாக 40 தொடக்கம் 50 வரையாக கொரெக்ஸ் மற்றும் கொரெக்ஸ்-டி பாணி மருந்துகள் விற்பனையாகின்றது. இவ்வாறு கொரெக்ஸை வாங்க வருபவர்களில் அநேகர் மருத்துவரின் பரிந்துரைச் சிட்டை இன்றியே வருகின்றனர். நாங்களும் பாவம் பார்த்து மருத்துவரின் சிட்டை இல்லாமல் கொடுத்துவிடுவோம்.'' என்றார் ஒரு மருந்தக உரிமையாளர்.

இன்னொரு மருந்தக உரிமையாளர் வெளியிட்ட தகவல் ஒரு மருந்தாக இருந்த கொரெக்ஸ் இருமல் பாணியை யாழ்ப்பாணத்துக்கு ஒரு போதைப்பொருளாக அறிமுகப்படுத்தியது யார்? என்ற விடயத்தை அம்பலப்படுத்தியது.

''ஆமிக்காரர்கள் முதல் [illegible] [illegible] வாங்குவாங்கள். இப்ப அவங்களும் லேகியத்தை விட்டுட்டு கொரெக்ஸையே வாங்கிக்கொண்டு போறாங்கள், இல்லாட்டி ஆரும் பெடியளிட்டை வாங்கிக்கொண்டு வரச் சொல்லி அனுப்பிவிடுறாங்கள்.

இதைவிட றோட்டு வேலை, கட்டட வேலைக்கு வந்திருக்கிற சிங்கள ஆக்கள் பின்னேரங்களிலை வந்து ஆளுக்கொரு கொரெக்ஸ் போத்தல் வாங்கிக்கொண்டு போறாங்கள் '' இதுதான் அவர் சொன்ன தகவல் .

ஆக மொத்தத்தில் தென்னிலங்கையில் மையம் கொண்டிருந்த கொரெக்ஸ்ஸை போதையாகப் பயன்படுத்தும் பழக்கம், படையினர் மூலமும், தென்னிலங்கையில் இருந்து வந்துள்ள தொழிலாளர்கள் மூலமுமே யாழ்ப்பாணத்துக்கும் வந்திருக்கிறது. வந்த வேகத்திலேயே ஏராளமான இளைஞர்களையும் தன் வசப்படுத்தியும் இருக்கிறது.

நல்ல வேளையாக அரசு கொரெக்ஸ் மருந்துவகையை தடைசெய்து விட்டது. இருந்தும் இன்னும் சில மருந்தகங்களில் பின்கதவு வழியாக கொரெக்ஸ் விற்பனை நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

ஏனெனில் மருந்தகங்களில் தடைசெய்யப்பட்ட கொரெக்ஸ் விற்பனை ஆகிறதா ?இல்லையா? என்பதை கண்காணிப்பதற்குரிய ஆளணி வளம் சுகாதாரத் திணைக்களத்திடம் இல்லை. அத்துடன் இதற்குப் பொறுப்பானவராக உணவு மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியே இருக்கின்றார். எனினும் இந்தப் பதவியில் இருந்தவர் பயிற்சி ஒன்றுக்காக வேறு இடம் சென்றுவிட்டதால் அந்தப் பதவி நிலை நேற்றுமுன்தினம் வரை வெறுமையாகவே இருந்தது.

''நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதிதாக ஒருவர் பதவி ஏற்றுள்ளார். மருந்தகங்களில் கொரெக்ஸ் விற்பனை நடைபெறுகிறதா என்பதைக் கண்காணித்து அறிவிக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். அவ்வாறு ஏதேனும் மருந்தகங்களில் கொரெக்ஸ் விற்பது கண்டறியப்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஆனாலும் சில மருந்தகங்களுக்கு கொரெக்ஸை விநியோகிக்கும் விற்பனைப் பிரதிநிதிகள் ''கொரெக்ஸ் தடைசெய்யப்படவில்லை.தற்காலிகமாக அதன் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுத்து, மீளவும் விற்பனை ஆரம்பமாகும்'' என்று நம்பிக்கையோடு கூறிவருகிறார்கள். இதே கருத்தை கொரெக்ஸை தயாரிக்கும் நிறுவனமும் உத்தியோகபூர்வ விளம்பரம் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

ஆயினும் கொரெக்ஸ் மருந்தின் தயாரிப்பில் தவறில்லைத்தான். ஆயினும் அதனை மருந்து என்ற அளவை மீறி(ஒரு வேளைக்கு 5 மில்லிலீற்றர் மாத்திரம்) ஒரே தடவையில் முழுப் போத்தலில் உள்ள மருந்தைக் குடிக்கும் போதே அது இருமல் நிவாரணி என்ற நிலையை விடுத்து போதை என்ற பேருருக்கொள்கிறது.

தென்னிலங்கையில் இருந்து படைத்தரப்பால் கொண்டுவரப்பட்ட கொரெக்ஸை போதையாகப் பயன்படுத்தும் பழக்கம் திட்டமிட்டு தமிழ் இளையோரிடையே பரவலாக்கப்பட்டுள்ளது.

இது போன்று இன்னும் சில மாத்திரைகளும், போதைக்காக பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. எனவே தங்கள் பிள்ளைகள் மதுபானம், புகைத்தல், ஹெரோயின் போன்ற போதைவஸ்துக்கள் என்பவற்றை விடவும் இது போன்ற மருந்து வகைகளை தொடர்ச்சியாக பயன்படுத்துகிறார்களா என்பதையும் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறு கண்காணிக்காதவிடத்து மருந்தாகிய போதைகளுக்கு உங்கள் பிள்ளைகள் அடிமையாகும் நிலையை தங்கள் கண்முன்னே காணும் நிலை பெற்றோருக்கு ஏற்பட்டுவிடலாம். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சன்றோ.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

■ மருத்துவர் இ.சிவசங்கர்

# இரு நாடுகளாவதே இலங்கையின் அமைதிக்கு ஒரே வழி

இலங்கை தமிழ் சமூகத்தின் வரலாற்று நிலைப்பாட்டை அனுபவமாக எடுத்துக் கொள்வது இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் நன்மை பயப்பதுடன் இலங்கைத் தீவினதும், இந்தப் பிராந்தியத்தினதும் அமைதிக்கும் வழிவகுக்கும். இதை கண்டு கொள்ளாது எடுக்கப்படும் தந்திரோபாய நகர்வுகள் பிராந்திய அமைதியையோ, வேறு நாடுகளின் பாதுகாப்பையோ சாத்தியமாக்கப்போவதில்லை.

இலங்கைத் தீவின் நெடுங்கால வரலாற்றில் போர் ஓய்ந்த காலம் எதுவும் இருந்ததில்லை. காலணித்துவ ஆட்சிக் காலத்தில் மட்டுமே சுதேச மக்கள் தமக்கிடையே போரிட்டுக் கொள்ளவில்லை; போரிட்டுக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

பொது எதிரியாக ஐரோப்பிய ஆதிக்கவாதிகளை வெளியேற்றுவதில் தமிழ், சிங்கள தலைவர்கள் இணைந்து செயற்பட்டனர். எனினும் தமக்குள் நல்லிணக்கத்தை ஏற் படுத்த தமிழ்-சிங்களத் தலைவர்களும் மக்க ளும் எண்ணம் கொண்டிருக்கவில்லை. இதன் நிமித்தமே 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரதின விழா தமிழர் பிரதேசங்களில் புறக்கணிக்கப்பட்டது. இலங்கை தேசியக் கொடி தமிழர் பிரதேசத்தில் ஏற்றப்படவில்லை.

இந்தப் பின்னணியில் ஆரம்பமாகிய 'சுதந்திர' நாட்டின் வாழ்நிலை பத்து ஆண்டுகளுக்குள் பிளந்து சிதறியது. தனிச் சிங்கள சட்டத்துடன் ஏற்பட்ட இனக் கலவரமும், பண்டா-செல்வா ஒப்பந்த முறிவும் இனங்களுக்கிடையேயான பகைமையை தெளிவாக வெளிப்படுத்தின.

இரு மொழியாயின் ஒரு நாடு, ஒரு மொழியாயின் இரு நாடு'' என்ற பண்பட்ட சிங்கள தலைவரான கொல்வின் ஆர் டி சில்வாவின் கூற்றுக்கமைய அறுபதுகளின் ஆரம்ப காலத்திலேயே 'தமிழரசு' நிலைப்பாடு உருவாகி விட்டது. தமிழ் மக்களின் ஒன்றிணைந்த சத்தியாக்கிரகப் போராட்டமும், தமிழரசு தபால்தலை அச்சிட்டு சுயமான தபால் சேவை நடத்தியமையும் தமிழ் மக்களின் ஆற்றாமையை உறுதியாக உணர்த்தின.

இலங்கையின் தமிழ், சிங்கள இன முரண்பாட்டை விளங்கிக் கொள்வதில் ஏனைய இரு முக்கிய விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். ஒன்று காலணித்துவ ஆட்சியில் இருக்கும் போதே சிங்களவர், இஸ்லாமியர்களுக்கிடையில் ஏற்பட்ட பெரும் கலவரம்.

மற்றையது, முரண்பாடுகளோ, போராட்ட செயற்பாடுகளோ அற்று வாழ்ந்து வந்த மலையக வாழ் தமிழர்களை எமது நாட்டினராக ஏற்றுக் கொள்ள முடியாது என்ற சிங்களவரின் முடிவால், மலையகத் தமிழர் நாடற்றவர் ஆக்கப்பட்டமை.

இலங்கை வாழ் மக்களின் இனங்கள் இடையே சிங்களவர் மட்டும் ஏனைய அனைத்து சுதேச இன மக்களுடனும் இணக்கம் இன்றி நடந்து கொண்டனர் என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது. இத்தகைய வாழ்வுத் தன்மையை வெளிப்படுத்தி நின்ற சிங்களவர்களுடன் சேர்ந்து ஒரு நாட்டு இனமாகச் செயற்பட முடியாத யதார்த்த நிலையிலேயே தமிழர்கள் இருந்தார்கள். இதன் விளைவாகவே தனியான அமைதி வாழ்வை தேட முனைந்தனர். இலங்கைத் தமிழர்கள் தனி நாட்டில் தனி இனமாக வாழும் போது மட்டுமே அமைதியான வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைப்பாடு சிங்களவர்களின் செயற்பாடுகளால் ஏற்பட்டது. இதன் விளைவாகத் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்கான போராட்டம் தொடங்கப்பட்டது.

இந்திய சுதந்திர போராட்டத்தில் மகாத்மா காந்தியும், சுபாஸ் சந்திரபோஸும் சமாந்தரமாக அகிம்சை மற்றும் ஆயுதப் போராட்டங்களை நடத்தியதைப் போன்றே, தமிழ் ஈழத்தின் சுதந்திர போராட்டமும் வடிவம் பெற்றது. எனினும் இந்தியப் போராட்டம் வெற்றி பெற்றது. ஈழத்தமிழர் போராட்டம் வெற்றியை எட்டாமலே நிற்கின்றது. இதனால் தமிழர் தரப்பினரிடையே கடந்த சில ஆண்டுகள் மீள் பார்வைக்கான காலமாக அமைந்திருந்தன. இதில் சுதந்திர போராட்ட செயற்பாடுகளின் குறைபாடுகள், பலவீனங்கள் கருத்து பரிமாற்றத்திற்கூடாக இனங்காணப்படுகின்றன. அடுத்த நகர்வு தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

### மொழி அடையாளம்

மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு மொழித்திறனே காரணமாகின்றது. மொழித் திறன் ஊடாக மனித இனம் தனது அனுபவங்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தக் கூடியதாக இருந்தது. மொழியின் உதவியி னால் மனித இனம் முன்னேறியது. மொழித் திறன் அற்றதால் தனது முந்தைய சந்ததியின் அனுபவத்தை உள்வாங்காத விலங்குகள் முன்னேற முடியவில்லை.

இதனூடாக நாம் கண்டுகொள்வது என்ன? எமது முந்தைய சந்ததியின் அனுபவத்தை எமது வாழ்வின் முடிவுகளுக்கு பயன்படுத்தினாலேயே முன்னேற்றம் சாத்தியம். ஒவ்வொரு சந்ததியும், தாம் அனுபவப் பட்டே முடிவெடுக்க முன்வருவோம் என்றால் விலங்கின வாழ்வாகிய செக்கு மாட்டு நிலை தான் ஏற்படும். நாம் முன்னேற்றப் பாதையில் முன்னகர வேண்டுமாயின் எமது முந்தைய சந்ததியின் அனுபவங்களை எமது முடிவெடுத்தலில் பயன்படுத்த வேண்டும். சந்ததிகள் ஊடாக தொடர்ச்சி அறாது தொடர்ந்தாலே இனம் முன்னகரும். அத்துடன் எமது கடந்த கால அனுபவமும் பயன்படுத்தப்பட வேண்டும்.

### சிங்களத் தலைவர்களின் தொடரும் நிலைப்பாடு

சிங்கள பௌத்த அடையாளமே சிங்கள தலைவர்களுக்கு உரியதாகின்றது. கிறிஸ்தவ சிங்களவர் ஒருவர் சிங்களவர்களின் தலைவராக வரமுடியாது. அதனாலேயே கிறிஸ்தவ சிங்களவராகிய பண்டாரநாயக்கா பௌத்த மதத்துக்கு மாறினார். அரசியலில் பிரவேசித்தார்.

சிங்களத் தலைவர்களாலேயே போற்றப் பட்டு மதிக்கப்பட்ட சேர் பொன்.இராமநாதன் அன்றைய காலத்தில் இஸ்லாமியர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சிங்களவர்களைப் பாதுகாத்தார். அதன் நிமித்தம் சேர் பொன்.இராமநாதனைக் குதிரை வண்டியில் வைத்து சிங்களத் தலைவர்கள் இழுத்து வந்து தமது நன்றியையும், மதிப்பையும் வெளிப்படுத்தினர். ஆயினும் சேர் பொன். இராமநாதன் சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தேசிய தலைவராக முடியவில்லை.

'இலங்கையின் காந்தி' எனப் போற்றப் பட்ட எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் பண்பின் நிமித்தம் பல சிங்களவர்கள் அவர் மீது கண்ணியமான மதிப்பு வைத்திருந்தனர். ஆனாலும் செல்வநாயகத்தை தேசிய தலைவராக ஏற்றுக்கொள்ளவோ அவரினால் நியாயம் என்று கருதப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவோ சிங்களவர்கள் முன்வரவில்லை. மாறாக தமிழரின் நியாயமான தேவைகளை செல்வநாயகம் முன்வைத்த போது சிங்களத் தலைவர்கள் எள்ளி நகையாடினர்.

சேர் பொன். இராமநாதனும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் சிங்கள மக்களால் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அத்துடன் அவர்களின் கருத்துக்களும் சிங்களவர்களால் செவிமடுக்கப்படவில்லை.

இதன் தெளிவு என்னவெனில் பௌத்த சிங்களம் என்பதற்கு அப்பால் இலங்கை தேசியமாக செயற்பட சிங்களவர்கள் முன்வந்ததில்லை என்பதே. அது அவர்களால் முடியவில்லை.

கடந்த மூன்று தசாப்தகாலப் போரால் சிங்கள சமூகமும் மோசமான உச்சக்கட்ட பாதிப்பைப் பெற்றது. ஆயினும் அத்தகைய தமது அழிவைத் தடுப்பதற்காகவேனும் பௌத்த சிங்களத்துக்கு வெளியே வர அவர்கள் மறுத்து விட்டனர்.

சந்ததிகள் பல கடந்த இந்த வரலாற்று அனுபவங்களின்படி சிங்களவர்கள், இலங்கை வாழ் அனைத்து இனங்களையும் உள்ளடக்கிய இலங்கைத் தேசியம் என்ற நிலைக்கு வர முடியாது என்பதே உண்மை. இந்த வரலாற்று அனுபவத்தை எமது அறிவாக்கி, தமிழின பாதுகாப்பு முடிவெடுத்தலில் பயன்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதே தமிழ்த் தலைவர்கள் மனிதர்கள் என்ற அம்சத்துடன் செயற்பட்டவர்களாவர். அனுபவங்களைப் பயன்படுத்தாத நகர்வுகள் விலங்குத் தன்மைக்கு ஒப்பானவை ஆகும்.

### தமிழர் விடயத்தில் தற்போதைய சர்வதேசத்தின் அக்கறை

இலங்கைப் பிரச்சினையில் சர்வதேசம் எனும் பதம் குறிப்பாக குறிப்பது இந்தியா, அமெரிக்கா மற்றும் சில மேற்கு நாடுகளை ஆகும்.இலங்கைத் தமிழர் விடயங்களில் அக்கறை உள்ளதாக இவை காட்டுகின்றன. ஆனால் இத்தகைய "அக்கறை காட்டும்" செயற் பாடுகள் தத்தமது நாட்டு நலன் சார்ந்த சர்வதேச இராஜதந்திரம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே! இலங்கை பௌத்த சிங்கள அரசு இந்திய, அமெரிக்க நலன் சார்ந்ததாக செயற்படுமாயின், அப்பொழுது இந்தியா, அமெரிக்காவின் இலங்கைத் தமிழர் மீதான ''அக்கறை காட்டும்'' செயற்பாடுகள் நின்றுவிடும். இறுதிப் போர் என்று கூறப்படுகின்ற (அதுதான் இறுதிப் போரா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும்) செயற்பாட்டில் இந்தியாவும், அமெரிக்காவும் எடுத்த நிலைப்பாடு தத்தமது நாட்டு நலன் சார்ந்ததாகவே அமைந்தது தெளிவு.

மேற்கூறிய தெளிவை இலங்கைத் தமிழர் விடயத்தில் செயற்படும் தமிழர் பிரதிநிதிகள் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும். எமது முடிவுகள், செயற்பாடுகள் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கானதாக இருக்க வேண்டும். அதை விடுத்து இந்தியா, அமெரிக்க நாடுகளின் பாதுகாப்புக்கானதாக அமைய முடியாது.

இந்தியா, அமெரிக்கா போன்றவையும் அனுபவ விடயத்தை அறிவாக்கி கொள்ள வேண்டும். அது தமிழர்களின் செயற்பாடுகளைத் தீர்மானிப்பவர்கள் ஒட்டுமொத்த தமிழ் சமூகமே அன்றி, ஒரு சில இனங்காணப்பட்ட தமிழர்கள் அல்லர் என்பதே அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் முடிவுகள் எடுத்த போது அது வரலாற்றில் தமிழர்களின் முடிவாக ஒரு போதும் ஆகவில்லை.

தமிழர்கள் தமது திசையில் தெளிவாகவும், உறுதியாகவும் இருந்து, தம் திசைக்குரிய செயற்பாடுகளை முன்னகர்த்தி, புதிய தமிழ்த் தலைவர்களைத் தோற்றுவித்தார்கள். பழைய தலைவர்கள் உதிரிகளாக்கப்பட்டனர். இதனாலேயே ''தந்தை செல்வா தமிழ் தலைவர்கள் திசைமாறினாலும் தமிழ் மக்கள் திசைமாற மாட்டார்கள்'' என்ற முடிந்த முடிவை கூறினார்.

இன்று தமிழர்களின் திசையில் தமிழ்க் கூட்டமைப்பினர் பயணிப்பதாலேயே கூட்டமைப்பினர் தமிழர்களின் தலைவர்களாக இருக்கின்றனர். என்று தமிழ் கூட்டமைப்பினர் தமிழரின் திசையிலிருந்து மாறுகிறார்களோ அன்று அவர்களும் உதிரிகளாவர். தமிழ் மக்கள் தம் திசையில் தொடர்ந்து சென்று புதிய தமிழ் தலைவர்களாய் உருவெடுப்பர். அதற்கு ஒரு போதும் அவர்கள் பின்நிற்கப் போவதில்லை.

மேற்கூறிய இலங்கைத் தமிழ் சமூகத்தின் வரலாற்று நிலைப்பாட்டை அனுபவமாக எடுத்துக் கொள்வது இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் நன்மை பயப்பதுடன் இலங்கைத் தீவினதும், இந்தப் பிராந்தியத்தினதும் அமைதிக்கும் வழிவகுக்கும். இதை கண்டு கொள்ளாது எடுக்கப்படும் தந்திரோபாய நகர்வுகள் பிராந்திய அமைதியையோ, வேறு நாடுகளின் பாதுகாப்பையோ சாத்தியமாக்கப் போவதில்லை. இது இலங்கை வாழ் தமிழர்களின் இருப்பு சார்ந்த விடயமாதலால், இலங்கை தமிழர்களிடமும் திசை மாற்றம் சாத்தியமில்லை.

இவற்றிலிருந்து வரக்கூடிய துணிவுகளாவன

✱ இலங்கை பௌத்த சிங்களவர் ஏனைய இலங்கை தீவு வாழ் இனங்களுடன் ஒன்றிணைந்து இலங்கை தேசியமாக ஒருபோதும் விரிவடைய முடியாது.

✱ இது தமிழரின் இருப்பு சார்ந்த விடயமாதலால் தமிழர்களும் தமது பயணத்தைத் திசைமாற்றப் போவதில்லை.

✱தனிப்பட்ட தமிழ்த்தலைவர்கள் திசைமாறினால் அவர்கள் சமூகத்தால் உதிரிகளாக்கப்பட்டு புதிய தலைவர்கள் உருவாக்கப்பட்டு முன்னகர்வு தொடரும்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறை காட்டும் செயற்பாடுகளில் உள்ளோர் இந்த அனுபவங்களைத் தத்தமது செயற்பாடுகளுக்கு பயன்படுத்தினால் தத்தமது கால, சக்தி விரயத்தை தடுப்பதுடன் தத்தமது நாட்டு பாதுகாப்புக்கும், பிராந்திய உறுதிப்பாட்டுக்கும் நிலையான அமைதிக்கும் பங்களிக்கலாம்.

சிங்களத் தலைவர்கள் குறித்த விடயங்களை சிங்கள மக்களுக்கு தெளிவு படுத்துவது சிங்களவர்களுக்கும் நன்மை பயக்கும். இலங்கை எனும் ஒரே நாட்டில் சிங்களவர், தமிழர்கள் ஒன்றிணைந்து வாழ முடியாது விட்டாலும், சிங்கள நாடு, தமிழ்நாடு எனப் பிரிந்து இலங்கை தீவில் ஒற்றுமையாக வாழமுடியும்.

சிங்களவர்கள் தமிழர்களை ஏற்றுக்கொள்ள முடியாது போனாலும், பௌத்தர்கள், சைவத்தை ஏற்றுக்கொள்கின்றனர். அடிப்படையில் பௌத்த சிங்கள, சைவ தமிழ் கலாசாரம் ஒன்றேயாகும். இந்த நிலையில் சமூக குரோதத்துக்கு ஏதுக்கள் இல்லை.

சிங்களவர்களின் பாதுகாப்பின்மைசார் பயவுணர்வே முரண்பாட்டு செயற்பாடுகளுக்கு அடிப்படை. தமிழர் பிரதேசங்கள் சிங்களவர்களின் வாழ்வியல் பண்புக்கு அமைவானதாக இருந்திருந்தால் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழர் பிரதேசத்தை நோக்கிய சிங்களவர்களின் குடியேற்ற நகர்வுகள் ஏற்பட்டிருக்கும்.

இலங்கைத் தீவின் புவியியல் தன்மையை கண்டு கொண்டால் வளமான பிரதேசங்களே சிங்களப் பிரதேசமாகவும், வளம் குன்றிய பிரதேசமே தமிழர் பிரதேசமாகவும் காணப்படுகின்றன. இதனாலேயே சிங்களப் பிரதேசங்களில் தமிழர்களின் இயல்பான பரம்பல் காணப்பட்டாலும், தமிழர் பிரதேசத்தில் சிங்களவர்களின் இயல்பான பரம்பல் காணப்படவில்லை.

தமிழர்கள் தனியாக பிரிந்து நாடமைத்தால் தமிழர்கள் வளமான பிரதேசத்தில் வாழும் வாய்ப்பை இழப்பர். சிங்களவர்களுக்கு இழப்பு எதுவுமில்லை, வளமான பிரதேசம் சிங்களவர்களுக்கு தனித்துரிமையாகின்றது.

இதனுடன் சேர்த்து கஷ்டப் பிரதேசங்களாகிய தமிழர் பிரதேசத்துக்கு தொழில் நிர்வாக நிமித்தமான விருப்பமற்ற கட்டாய வரவிலிருந்து சிங்களவர் தப்பித்துக்கொள்வர். இலங்கை ஒரே நாடாக இருக்கும் பட்சத்தில் இயல்பாகவே முயற்சியுடைய, கஷ்டத்தைத் தாங்கக் கூடிய தமிழர் முன்னுக்கு வருவது நீண்ட காலத்தில் தவிர்க்கப்படமுடியாதது ஆகிவிடும்.

சிங்களவர்களின் அர்த்தமுள்ள பாதுகாப்பின்மை உணர்வே இக் குழப்பத்துக்குக் காரணம். பிரிந்து இருத்தல் தீவில் அமைதியை உறுதி செய்யும். இரு இனமும் இருநாடாகி வளர்ந்து வாழலாம்.

அமைதியும், சந்தோஷமுமே வாழ்வின் தேடலாகின்றது. அத் தேடலின் அமைதியையும் சந்தோசத்தையும் இழத்தல் முட்டாள் தனமானது. இதனுடன் அயலவர்களை துன்பத்திலாழ்த்துவது பௌத்த அகிம்சைக்கும் முரணானது. அடுத்தவருக்கு இம்சை கொடுத்து நாம் சந்தோசத்தைப் பெறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரெங்கன்

# ஈரான் அணு உலைகளை தகர்த்தழிக்க இஸ்ரேல்- யுஎஸ் கூட்டு நடவடிக்கை

## இரகசியப் பேச்சு இடம்பெறுவதாகத் தகவல்

* போர் விமானங்கள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்த யோசனை
* இஸ்ரேல் தேர்தல் முன்னகர்த்தப்படுவதன் இரகசியம்
* அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் எச்சரிக்கை
* பாக் வீரச் சிறுமிக்கு ஒபாமா இரங்கல்
* பங்களாதேஷ் பௌத்த கோயில் இடிப்புக்கான சூத்திரதாரி பிடிபட்டார்
* தக்காளி சாப்பிடுங்கள் பக்கவாதம் வராது.

உலக நடப்புகள் ஒரு பார்வை



ஈரானிய அணு உலைகளை ஒரு சில மணி நேரத்தில் தாக்கி அழித்துவிடுவது தொடர்பாக அமெரிக்காவும் இஸ்ரேலும் இரகசிய பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும் அவ்வாறு செய்யப்படின் ஈரானின் அணு ஆயுத கனவு பல ஆண்டுகள் பின் தள்ளப்பட்டுவிடும் வாய்ப்பிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க அதிபர் தேர்தல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவிருப்பதாலும் இஸ்ரேலில் பொதுத்தேர்தல் அடுத்த வருடம் முன்பகுதியில் நடைபெற இருப்பதாலும் அவ்வாறான ஒரு தாக்குதலை உடனடியாக நடத்துவதற்கு இரு நாடுகளும் உடன்படும் சாத்தியமில்லை. அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுற்று இஸ்ரேலில் இப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு அதிக பலத்துடன் அரசு அமைக்கும் பட்சத்தில் அடுத்த வருடம் நடுப் பகுதியில் அல்லது அதற்குச் சற்று முன்னதாக ஈரான் மீதான நடவடிக்கை எடுக்கப்படுவது சாத்தியம் என்கிறார்கள் சர்வதேச அவதானிகள்.

ஈரான் மீது கூட்டு விமானத் தாக்குதல் ஒன்றை நடத்துவது பற்றி இஸ்ரேலும் அமெரிக்காவும் ஆலோசித்து வருவதாக நம்பகரமான வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஈரானின் அணு ஆய்வு நிலைகள் மீது குண்டு வீசும் விமானங்கள் மற்றும் ஆளில்லா ஆய்வு விமானங்கள் மூலம் இந்தத் தாக்குதலை நடத்தவது பற்றி இரு நாடுகளும் ஆராய்ந்து வருவதாக வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அவ்வாறான ஒரு தாக்குதல் ஒரு சில தினங்கள் மட்டுமே நடத்தப்படும். சில சமயம் ஒரு சில மணித்தியாலங்களில் முடிவடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலானது பொது மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையிலேயே நடத்தப்படும். அதன் மூலம் ஈரானின் அணு ஆய்வுத் திட்டத்தைப் பல ஆண்டுகள் பின் தள்ளிவிட முடியும் என்றும் கருதப்படுகின்றது.

இந்தத் தாக்குதலானது பேர்சியன் வளைகுடாவை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் சிரியா, ஈராக், லெபனான் ஆகியவை அமைதி முயற்சிகளை மீண்டும் வலுவுடன் ஆரம்பிக்க உதவியாய் இருப்பதுடன் அந்தப் பிதேசத்தில் அமெரிக்காவின் மேல் எழுச்சியை பல ஆண்டுகளுக்கு வலுப்படுத்தும் என்ற வகையில் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் தெளிவான செய்தி ஒன்றை வழங்குவதாகவும் இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. இஸ்ரேலால் முன்னின்று நடத்தப்படவிருக்கும் இந்தத் தாக்குதலுக்கு வெளியில் இருந்தும் நட்பு நாடுகளின் ஆதரவு எதிர்பார்க்கப்படுகின்றது.

### முன்கூட்டியே தேர்தல்

இதற்கிடையில் ஈரானுடன் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையில் இஸ்ரேலுக்கு முன்கூட்டியே தேர்தலை நடத்தி முடிக்க இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தீர்மானித்திருக்கிறார்.

நாட்டின் எதிர்காலத்துக்குப் பெரும் சவாலாக இருக்கும் பன்முகப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு நாடு மிக விரைவாக தேர்தலுக்கு முகம் கொடுத்தாக வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் 19 ஆவது நாடாளுமன்றுக்கான பொதுத்தேர்தல் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நடைபெறவிருந்தது. ஆனால் தமது சிக்கன வரவு செலவுத் திட்டத்துக்கு கூட்டணிக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனதால் தேர்தலை முன்கூட்டியே நடத்தவதற்குப் பிரதமர் முடிவு செய்துள்ளார். இன்னும் திகதி தீர்மானிக்கப்படவில்லை.

### அமெரிக்க வெளியுறவு அமைச்சரின் எச்சரிக்கை

அணுப் பரிசோதனைகள் தொடர்பாக சர்வதேசத்தை ஈரான் இன்னமும் வெளிப்படையாகத் திருப்திகொள்ளச் செய்யாமையால் மேற்கொண்டும் அந்த நாட்டின் மீது பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகளை இறுக்குவதற்கு மேற்கு நாடுகள் ஆலோசித்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்காவும் ஐ.நா வும் நடைமுறைப்படுத்தியுள்ள தடைகள் ஈரான் மீது குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

புதிய தடைகள் அமுலுக்கு வந்த ஒரு வாரத்தில் ஈரானிய றியாலின் மதிப்பு 40 வீதம் வீழ்ச்சியுற்றிருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு அமெரிக்கா விடுத்துள்ள மிகப் பிந்திய எச்சரிக்கையில் சர்வதேச நாடுகள் கொண்டுள்ள கவலையை ஈரான் விரைந்து தீர்த்து வைக்காவிட்டால் மேற்கொண்டும் தண்டனைக்குரிய பொருளாதார தடைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு செயலர் லியோன் பெனெட்டா அண்மையில் பெரு நகருக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பொதுமக்களுக்கான அணு சக்தி ஆய்வுகளிலேயே தாங்கள் ஈடுபட்டு வருவதாகவும் தமது திட்டம் எல்லாம் முற்றிலும் அமைதி நோக்கத்தை கொண்டவை என்றும் ஈரானியத் தலைவர்கள் கூறிவருவது தெரிந்ததே.

இந்தச் சிக்கலான விடயத்தை ஐயம் திரிபற தீர்த்துக் கொள்வதற்கு அந்த நாடு சர்வதேச நாடுகளுடன் ஆழமான பேச்சுகளில் ஈடுபடுவது அவசியம் என்று வலியுறுத்தினார் பெனெட்டா. தொடர்ந்தும் ஈரான் தவறு இழைக்குமானால் அதன் மீது மேற்கொள்ளும் தடைகளை விதிப்பதைத் தவிர சர்வதேச சமூகத்துக்கு வேறு வழியில்லை என்றார் அவர்.

### பாக்.வீரச் சிறுமி குணமடைகிறார்.

பாகிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக பேசி வந்தவரும் முஸ்லிம் சிறுமிகளின் கல்வி வளர்ச்சி பற்றி பேசிவந்தவருமான 14 வயதுச் சிறுமி மலாலா யூசூப்சாய் தலிபான்களால் தலையில் சுடப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

யூசூப்சாய் பாடசாலை விட்டு வெளியில் வந்தபோது தலையிலும் கழுத்திலும் சுடப்பட்டு காயமடைந்தார். வேறு இரு சிறுமிகளும் காயமடைந்தனர். சுவாத் சமவெளிப் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக 11 வயதிலிருந்தே இந்தப் பெண் செயற்பட்டு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. பாகிஸ்தானில் ஒரு வீரப்பெண்ணாக இந்தச் சிறுமி [illegible] [illegible] அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் தளபதி ஜெனரல் ஆஷ்பாக் கயானி மருத்துவமனைக்குச் சென்று யூசூப்சாயைப் பார்த்து ஆறுதல் கூறினார்.

அவர் தலையிலிருந்து துப்பாக்கி ரவைகளை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர். கடுமையான நிலையில் இருந்தும் அவர் சீர் பெற்று வருவதாக மருத்துவர்கள் கூறியுள்ளார்கள். சிறுமி சுடப்பட்டமையைச் சர்வதேச தலைவர்கள் கண்டித்திருக்கிறார்கள். அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இது ஒரு வெறுப்புக்குரிய செயல் என்று கண்டித்தார். ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனும் சிறுமி சுடப்பட்டமையைக் கண்டித்துள்ளார்.

சிறுமியைச் சிகிச்சைக்காக வேறு நாடு அனுப்புவது பற்றி யோசனை இருந்தாலும் இரண்டு மணி நேர அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையால் பிரயாணம் செய்யும் அளவுக்கு அவர் உடல் நிலை இல்லை. அடுத்த 48 மணிநேரத்தின் பின் அதுபற்றி முடிவு செய்யலாம் என்று டாக்டர் கூறியுள்ளார். சிறுமியின்சிகிச்சைக்கு சகல உதவிகளும் வழங்கத் தயாராய் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பௌத்த கோயில் தகர்ப்பு சூத்திரதாரி கைதானார்

கடந்த மாதம் பங்களாதேஷில் பௌத்தர்களுக்கு எதிராக நடத்தப்பட்டுள்ள வன்செயல்களின் போது 20 பௌத்த கோயில்கள் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளன. இந்த வன்செயல்கள் தொடர்பான முக்கிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

பௌத்தரான ஒருவரின் பேஸ்புக்கிலிருந்து இஸ்லாத்துக்கு மாறான சிலபடங்களை பதிவிறக்கம் செய்து அவற்றை முஸ்லிம்கள் மத்தியில் பரப்பியதாக சிட்கொங் நகரவாசியான 19 வயது அப்துல் முக்தாதிர் என்ற முஸ்லிமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒரு பெண் புனித குரான் நூலின் மீது நிற்பது போலவும் இன்னொரு படத்தில் புனித குரான் நூலின் ஒருபக்கம் கழிவறையில் வீசப்பட்டிருப்பது போலவும் படங்களில் காட்டப்பட்டுள்ளன என்று உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி முக்தாதீர் இந்தப் படங்களை மடிக் கணினி ஒன்றில் பதிவிறக்கம் செய்து அப்பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்குக் காட்டியிருக்கிறார். அதையடுத்து பௌத்தர்களுக்கு எதிரான வன்முறைகள் அப்பகுதியில் வெடித்துள்ளன.

கொக்ஸ் பஸார் மாவட்டத்தில் ஏமு நகரில் சுமார் 25 ஆயிரம் முஸ்லிம்கள் ஒன்றுகூடி பௌத்தர்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இருபதுக்கும் அதிகமான பௌத்த கோயில் இடித்து நொருக்கப்பட்டன; தீயிடப்பட்டன என்று கூறப்பட்டது. இப்பகுதியில் வாழும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பௌத்த சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்டுள்ள மிகமோசமான தாக்குதல் இதுவாகும் என்று பௌத்த பிரமுகர்கள் தெரிவித்தனர்.

### தக்காளி சாப்பிடுங்கள் பக்கவாதம் ஏற்படாது

தக்காளி சாப்பிடுவது திடீர் திடீரெனக் கைகால்கள் இயங்காமல் போகும் பக்கவாத நோயை பெருமளவில் குறைப்பதற்கு உதவியாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஆயிரம் மத்திய வயதினரான நபர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் பழங்கள், மரக்கறிகள் குறிப்பாக நிறையவும் தக்காளிப்பழங்கள் உணவில் சேர்த்துக் கொள்வது பக்கவாதத்தை ஓரங்கட்டுவதற்கு உதவும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

12 ஆண்டுகாலம் பினிஷ் ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த ஆய்வில் தமது இரத்தத்தில் உயர் மட்ட அளவில் லைகொபென் (lycopene) திரவம் கொண்டுள்ளவர்கள் பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு 55 சதவீதம் குறைவாகவே காணப்படுவர் என்று தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org